வெளியீடு 24-3-99 Issued 24-3-99

1080
99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை மே 15, 1998 - தொகுதி 53- எண் 2

**Wednesday, the 15th May, 1998—Volume 53 - No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George,**

**Chennai - 600 009**

[Price Rs. 3.00

D
V2M,31'N98
N98.53.2
219397

**15-5-1998**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. **தகவல் கோரல்—**

திருவாரூர் ராஜேந்திரன் கைது. 189-190

2. **விதி 110-ன் கீழ் அமைச்சரின் அறிக்கை—**

*13-5-1998* ஆம் நாள் வைக்கப்பட்ட மானியக் கோரிக்கை தொடர்பான கூடுதல் அறிவிப்புகள் குறித்து தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின் அறிக்கை 190-191

3. **கவன ஈர்ப்பு—**

(அ) உடற் கல்வியியல் கல்லூரி முதல்வர் தற்காலிகப் பணி நீக்கம் குறித்த பிரச்சினை 191-194

(ஆ) திருப்பனந்தாள் துணை மின் நிலையப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தம் 195-196

4. **அறிக்கைகள் அளித்தல்—**

பொது நிறுவனங்கள் குழு 197

5. **மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 32 - வீட்டு வசதி 197-201

(ஆ) கோரிக்கை எண் 33 - நகர்ப்பகுதி வளர்ச்சி 201-203

(இ) கோரிக்கை எண் 21 - மீனளம் 304-306

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி | 197, 247, 252-253, 270-271, 273, 274-275, 277-278, 285-301 |
| *மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் | 203-204, 235-237, 279-285 |
| திரு. வி.கே. லட்சுமணன் | 207-215 |
| *திரு. செங்கை சிவம் | 215-223 |
| திரு. ஜி. பழனிசாமி | 223-231 |
| திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் | 232-235, 237-238 |
| *திரு. டி. மணி | 238-245 |
| திரு. மீ.அ. வைதியலிங்கம் | 245-250 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 251-256 |
| திரு. இரா. மதிவாணன் | 256-259 |
| திரு. இரா. பெர்னார்டு | 259-264 |
| *திரு. பி. வெங்கடசாமி | 264-269 |
| திரு. ஜி.கே. மணி | 269-277 |
| திரு. எ. தெய்வநாயகம் | 277-279 |

6. செய்யூர் அனல் மின் திட்டம் குறித்து மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கம்— 231-232

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 306

219397

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வைகாசி 1, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998 மே 15, வெள்ளிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு."

அமைச்சரவை என்பது, துணிவுடன் செயல்படுதல், குடிகளைப் பாதுகாத்தல், அறநூல்களைக் கற்றல், ஆவன செய்திட அறிதல், அயராத முயற்சி ஆகிய ஐந்தும் கொண்டதாக விளங்க வேண்டும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. தகவல் கோரல்

### திருவாரூர் ராஜேந்திரன் கைது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் அண்ணா தி.மு.க. மாவட்டச் செயலாளர் ராஜேந்திரன் கைது சம்பந்தமாகத் தீர்மானம் கொடுத்திருந்தேன்..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானம் இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள், உட்காருங்கள்.

[1998 மே 15

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கொலை வழக்கில் அவர் கைது செய்யப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல். பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த இளைஞர் அணிச் செயலாளரைக் கொலை செய்த வழக்கில் அவர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொலை மட்டுமல்ல, ஏற்கெனவே பல கொலைகள் செய்திருக்கிறார்....

(திரு. இரா. தாமரைக்கனி நின்று கொண்டே இருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, உங்களுக்கு நான் அனுமதியே கொடுக்கவில்லை. நீங்கள் இனிச் சொல்வது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி :** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு நான் அனுமதியே கொடுக்கவில்லை. உட்காருங்கள்.

## 2. விதி 110-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை.

### 13-5-1998 ஆம் நாள் வைக்கப்பட்ட மானியக் கோரிக்கை தொடர்பான கூடுதல் அறிவிப்புகள் குறித்து தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்து அறநிலையத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையை அளிக்க அனுமதி வேண்டியுள்ளார்கள். அவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13-5-1998 ஆம் நாளன்று இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்போது, அவைமுன் வைக்கப்பட்ட அறிவிப்புக்களோடு மேலும் 3 அறிவிப்புகள் வைக்கப்படுகின்றன.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1998 மே 15] [முனைவர் மு. தமிழ்க்குடிமகன்]

(1) இந்து சமய அறநிலையத் துறையில் உள்ள 10 மண்டல இணை ஆணையர் அலுவலகங்களில் ரூபாய் 10 இலட்சம் செலவில் கணிப்பொறி வசதி செய்யப்படும்.

(2) தற்போது ஆண்டுதோறும் திருக்கோயில் திருப்பணிக்காக வழங்கிவரும் அரசு மானியம் ரூபாய் 45 இலட்சமானது, ரூபாய் 75 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

(3) தற்போது உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள், திருவாரூர், திருவானைக்காவல், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ளன. இந்த ஆண்டு, காஞ்சிபுரம், கும்பகோணம், கடலூர், சேலம், திருவண்ணாமலை ஆகிய 5 இடங்களிலும் இந்த மையங்கள் அமைக்கப்படும்.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) உடற் கல்வியியல் கல்லூரி முதல்வர் தற்காலிகப் பணி நீக்கம் குறித்த பிரச்சினை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ், திருவாளர்கள் சைதை கா. கிட்டு, செங்கை சிவம், ப. ரங்கநாதன் ஆகியோர் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்றார்கள். திரு. செங்கை சிவம்.

***திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை சைதாப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சிக் கல்லூரிக்குச் சொந்தமான நிலத்தின் ஒரு பகுதியைத் தனியாருக்கு மாற்றுவதைத் தடுத்த கல்லூரி முதல்வர் திருமதி இராஜசீலிஜான் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கியது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[பேராசிரியர் க. அன்பழகன்] [1998 மே 15

## அறிக்கை

சென்னை ஒய்.எம்.சி.ஏ. உடற் கல்வியியல் கல்லூரி ஒரு சிறுபான்மைக் கல்லூரியாகும். இந்திய ஒய்.எம்.சி.ஏ. தேசியக் குழுவின் நிர்வாகத்தின்கீழ் உள்ளது. இக்கல்லூரியின் முதல்வராக திருமதி இராஜசீலிஜான் 1-3-1994 முதல் பணியாற்றி வருகிறார். இவர் செயலராகவும் பணியாற்றி வந்தார். இவரது நியமனத்திற்கு சென்னைப் பல்கலைக்கழகம் தனது 28-7-1994 ஆம் தேதியிட்ட கடிதத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது. இவர் இக்கல்லூரியில் முதல்வராக 28-10-1995-ல் நிரந்தரமாக உட்படுத்தப்பட்டார். இவர் முதல்வராக நியமனம் செய்யப்பட்டதனை மறுபரிசீலனை செய்ய சென்னைப் பல்கலைக்கழகம் ஒரு குழுவினை நியமித்தது. இந்தக் குழுவினை எதிர்த்து திருமதி இராஜசீலிஜான், சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு எண் 2595/93-ன் மூலம் தடையாணை 25-02-1998-ல் பெற்றுள்ளார்.

புதுடெல்லி தேசிய ஒய்.எம்.சி.ஏ. கவுன்சில் தற்காலிகப் பொதுச் செயலர், அன்னாரது 1-4-1998-ம் நாளிட்ட கடிதத்தில் ஒய்.எம்.சி.ஏ. உடற் கல்வியியல் கல்லூரியின் செயலராக 1-4-1998 முதல் 31-5-1998 முடிய பொறுப்பேற்று நடத்த வேண்டுமெனத் தெரிவித்ததன்பேரில் திரு. இ.எஸ். டேனியல் குணாநிதி தற்போது கல்லூரி செயலராகப் பொறுப்பேற்றுள்ளார். முன்னாள் செயலர் திருமதி இராஜசீலிஜான் பதவிக் காலத்தில் கல்லூரியில் நிதி, நிர்வாகம் ஆகியவற்றில் சில குறைபாடுகள் காணப்பட்டதாகத் தெரிவித்து, அன்னார் முதல்வர் பதவியிலிருந்து 27-4-1998 முதல் கல்லூரி நிர்வாகக் குழுவின் செயலரால் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது. இந்நிலையில் 27-4-1998 அன்று திருமதி இராஜசீலிஜான் (முதல்வர், தற்காலிகப் பணிநீக்கத்தில் இருப்பவர்) என்பார் தற்காலிகப் பணிநீக்கத்தால் கோபமுற்று பொறுப்புக்களை ஒப்படைக்க மறுத்ததாகவும், அவரது சார்பாகச் சில மாணவர்கள் கோஷமிட்டதாகவும் தெரிய வந்தது. 28-4-1998 அன்று கல்லூரியில் அமைதியான சூழ்நிலை காணப்பட்டது. எவ்விதமான பதட்ட நிலையும் காணப்படவில்லை. கல்லூரியின் ஒரு பகுதியைத் தனியாருக்கு மாற்றுவது குறித்து எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென கல்லூரி நிர்வாகக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இக்கல்லூரிச் சொத்துக்களை பிறர் அபகரிக்க முயற்சிப்பதாகக் கூறப்பட்டதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.



1998 மே 15]

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு விவர அறிக்கையை இங்கே அவைமுன் வைத்துள்ளார். தெரிவித்தார்கள். அதிலே குறிப்பாக அதனுடைய செயலாளர் டேனியல் குணாநிதி என்பவர் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆவார். 1-1-1998-லே அவருடைய பதவிக் காலம் முடிவு அடைந்திருக்கிறது. இருந்தாலும் இந்தப் பதவியிலே அவருடைய காலம் முடிவு அடைந்த, இந்தக் காலகட்டத்தில், அதனுடைய முதல்வராக இருந்த, இராஜசீலிஜான் அவர்கள் நம்முடைய டபிள்யூ.சி.சி. கிருஸ்தவ பெண்கள் கல்லூரியிலே 35 ஆண்டுகாலம் பணியாற்றி, அதற்குப் பின்னாலே, அரசினுடைய வேண்டுகோளுக்கிணங்கத்தான் அவர்கள், ஒய்.எம்.சி.ஏ.வினுடைய முதல்வராகப் பணியேற்றார்கள். அவர் பதவிக் காலம் முடிவடைந்த இந்தக் கால கட்டத்தில் அவரைப் பதவி நீக்கம் செய்தது செல்லாது. குறிப்பாக 8-5-1998-ல் City Civil Court ஒரு தடையாணை விதித்திருக்கிறது. குணாநிதி அவர்கள் தொடர்ந்து இந்தப் பதவியிலே இருக்கமுடியாது என்றும் ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. குறிப்பாக இந்தக் கல்லூரி ஆசியாவிலேயே மிகப் பெரிய கல்லூரி. உலக அளவிலே இருக்கிற மாணவர்கள் இந்தக் கல்லூரியில் பயிலுகிறார்கள்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவாகக் கேளுங்கள்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிற மாபெரும் வரப்பிரசாதம். அது மட்டுமல்லாமல் இந்தக் கல்லூரியில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக சென்னை சைதாப்பேட்டையிலேகூட ஒரு வழக்கு இன்றைக்கு நிலுவையில் இருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டிருக்கின்ற அந்த குணாநிதிக்கு நீதிமன்றமே தடை விதித்திருக்கிறது. மற்றும் அதனுடைய முதல்வர் அவர்கள் இப்போது பதவியிலே இல்லை. இப்படிப்பட்ட காலகட்டத்தில் அரசு ஒரு தனி அலுவலரையோ அல்லது ஒரு குழுவையோ அமைத்து இந்தக் கல்லூரியை ஏற்று நடத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகக் கூறுவதாக இருந்தால், கல்லூரி முதல்வரை நீக்குவதற்கான தகுந்த அதிகாரம் பெறாத ஒரு குழு அவரை நீக்கியதாகவும், அதன் காரணமாக இந்தக் குழுவினுடைய

செயலாளராக, தற்காலிகமாக, டில்லி ஒய்.எம்.சி.ஏ. அமைப்பினால் நியமிக்கப்பட்ட ஒருவர் தொடர்ந்து நீடிக்கக் கூடாது என்று வழக்கு ஏற்பட்டு, அவர் நீடிப்பதற்கு ஒரு தடை விதிக்கப்பட்டுவிட்டது. இதற்கிடையில் அரசு, கல்வித் துறையினுடைய இணை இயக்குநர் ஒருவரைக்கொண்டு, அந்தக் கல்லூரியினுடைய அலுவலர்களுடைய ஊதியத்தை வழங்குகிற ஏற்பாட்டை 29-4-1998 முதல் நிறைவேற்றி வருகிறது. மேலும் பல குறைபாடுகள் ஏற்படக்கூடிய முறையில் டில்லியிலே உள்ள அந்த ஒய்.எம்.சி.ஏ.-க்கு நிலையான குழு அமைக்கப்படாமல், அதுவும் தற்காலிகமான ஒரு அமைப்பாக இருக்கிற காரணத்தால், அதனுடைய ஒப்புதலுக்கு உட்பட்டு, இந்த நிர்வாகத்தை ஏற்று குழு செயல்படுவது முறையல்ல என்ற அடிப்படையிலேயும் முதல்வரை நீக்கியது முறையானதாகத் தெரியாத காரணத்தாலும், இப்போது கல்லூரியினுடைய நிலங்களைத் தனிப்பட்ட சில அமைப்புகள் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவதாலும், கல்லூரித் துறை கல்வி இயக்குநர் அந்த உடற் கல்வியியல் கல்லூரியை நிர்வகிப்பதற்கு ஒரு தனி அலுவலரை நியமிக்க அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார். அந்தத் தனி அலுவலரை நியமிப்பது அரசினுடைய பரிசீலனையில் உள்ளது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் தனி அலுவலரை நியமிப்பதாக இன்றைக்குக் கூறியுள்ளார்கள். அதற்காக நானும் நம்முடைய சைதை தொகுதி எம்.எல்.ஏ. கிட்டு அவர்கள், புரசை தொகுதி எம்.எல்.ஏ. திரு. ப. ரங்கநாதன் அவர்கள் ஆகிய அனைவரின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பல நிலங்கள்—கடந்த காலத்தில் அண்ணா தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது தவறான முறையில் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. டி.டி. இராமச்சந்திரன் என்பவருக்கும் இந்த நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலங்கள் பல தனியாருக்கு ஒதுக்கப்பட்டிருப்பதால் அந்த நிலங்களையும் மீட்டு, இந்தக் கல்லூரிக்கே சொந்தமாக்குவதற்கு அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி அலுவலர் நியமிக்கப்பட்டு, விரைந்து அவரே இந்தக் குறைபாடுகளைப் பற்றி எல்லாம் தகுந்த விசாரணை நடத்தி, உரிய முடிவு எடுப்பதற்கு அரசுக்கு ஆலோசனை வழங்குவார்.





## (ஆ) திருப்பனந்தாள் துணை மின் நிலையப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் திரு. செ. இராமலிங்கம் அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்தை ஈர்க்கின்றார்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருப்பனந்தாளில் தொடங்கப்பட்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளதால் அப்பகுதியில் நிலவும் குறைந்த மின் அழுத்தம் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

திருப்பனந்தாள் 110/11 கே.வி. துணை மின் நிலையப் பணிகள் நடைபெறும்பொழுது திருமதி சபேதா பேகம் என்பவர் நீதிமன்றத்தில் பெற்ற தடை உத்தரவு காரணமாக, பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டவுடன் பணிகள் தொடரப்பட்டு வீரைவில் முடிக்கப்படும்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் வட்டம், திருப்பனந்தாளில் குறைந்த மின் அழுத்தம் காரணமாக 110/11 கிலோ வாட் மின் சக்தியுள்ள ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேலை துவங்கப்பட்டு ஏறத்தாழ பாதி வேலைகள் முடிந்த நிலையில் கும்பகோணம் Munsif கோர்ட்டில் திருமதி சபேதா பேகம் என்பவர் தற்காலிகத் தடை உத்தரவைப் பெற்றுள்ளார். இந்தத் துணை மின் நிலையம் அமைத்திட முறையாக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. எந்தத் தவறும் ஏற்படவில்லை. தற்காலிகத் தடை ஏறத்தாழ 1 ஆண்டு காலமாக நிலுவையிலே இருப்பது விசித்திரமாக

[திரு. செ. இராமலிங்கம்] [1998 மே 15

உள்ளது. இதற்கான காரணத்தை அறிந்து இத்தடையாணையை நீக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருப்பனந்தாளில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்திற்கு நான் சென்றிருந்தபோது நானே அந்தச் சூழ்நிலையை நேரில் பார்த்தேன். அப்போது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள்கூட நீதிமன்றத்திலே பெற்றிருக்கிற தடை உத்தரவை நீக்குவதற்காகத் தானும் முயற்சி செய்வதாகச் சொன்னார். எனவே, மாண்புமிகு உறுப்பினரும் முயற்சி செய்கிறார், அதோடு மின்சார வாரியத்தையும் உதவி செய்யச் சொல்லி அரசாங்கம் கேட்டுக் கொண்டு இருக்கிறது. எனவே, இருவருமாகச் சேர்ந்து விரைவிலே அந்தத் தடை உத்தரவைத் திரும்பப் பெறுவதற்கு ஏற்பாடு செய்வார்களேயானால் பணிகளை 6 மாத காலத்திலே மின்சார வாரியம் முடித்துத் தரும்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மின் நிலையத்திற்கு 5 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 1 ஏக்கர் நிலம் மட்டுமே இந்த வழக்கிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 4 ஏக்கர் நிலத்தில் இந்தத் துணை மின் நிலையத்தை அமைக்க முடியும். எனவே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் விநியோக உறுப்பினர், (Member, Distribution) மூலமாக இப்பகுதியிலுள்ள மிகக் குறைந்த மின் அழுத்தத்தைக் கவனத்தில் கொண்டு உடன் வேலையைத் துவங்க எஞ்சியுள்ள 4 ஏக்கரில் மின் நிலையத்தை அமைத்திட அரசு அறிவுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக வேலை தொடங்குவதாக இருந்தால் உடனடியாக வேறு இடத்திலே மீதி இருக்கக்கூடிய 4 ஏக்கர் நிலத்திலே அந்தப் பணிகளை மேற்கொள்ளச் சொல்லலாம். ஏற்கெனவே, பணிகள் ஆரம்பித்து நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில் தடையுத்தரவு பெற்றிருக்கிற காரணத்தினாலே மறுபடியும் முடிந்த பணிகளை அந்தப் பகுதிக்கு மாற்றுவது என்பது கடினம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையை மின்சார வாரியத்திடம் சொல்லி அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.



1998 மே 15]

## 4. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். குழுத் தலைவர் திரு. சி.டி. தண்டபாணி சார்பாக குழுவின் உறுப்பினர் திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 43 முதல் 45 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 32 வீட்டு வசதி**
**(ஆ) கோரிக்கை எண் 33 நகர்ப்பகுதி வளர்ச்சி**
**(இ) கோரிக்கை எண் 21 மீனளம்**

### (அ) கோரிக்கை எண் 32 - வீட்டு வசதி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 32 - வீட்டு வசதி, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 47,17,20,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2634, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாணியம்பாடி தாலுக்கா ஆலங்காயத்தில் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புப் பகுதி உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய *32* ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *47,17,20,000*-ல் ரூ. *100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *217*, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய *32* ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *47,17,20,000*-ல் ரூ. *100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2894*, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய *32* ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *47,17,20,000*-ல் ரூ. *100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3044*, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய *32* ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *47,17,20,000*-ல் ரூ. *100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1036*, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.



**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி நகரில் அரசு அலுவலர்களுக்கென அதிக அளவில் வாடகைக் குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய *32* ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *47,17,20,000*-ல் ரூ. *100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2503*, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறையில் வாழும் மிகவும் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய *32* ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *47,17,20,000*-ல் ரூ. *100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2347*, திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *628*, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1833*, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Honourable Speaker Sir, ``To discuss the need to allot developed House sites to the Industrial workers, Executives and others in Hosur constituency through HUDCO", I move—

``That the allocation of Rs. 47,17,20,000/- under Demand No. 32 Housing, be reduced by Rs. 100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1697*, திரு. ஜி. பழனிசாமி.

[1998 மே 15

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, நகரசபையாகவும் தாலுகா தலைநகரமாகவும் உள்ளதால் அங்கு அரசு ஊழியர்களுக்கு அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 47,17,20,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2591, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூத்தாநல்லூர் நகராட்சிப் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்டி பொதுமக்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க , நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 47,17,20,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3925, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசிபுரத்தில் வீட்டு வசதி வாரியம் மூலம் கட்டப்படும் வீடுகளின் பணிகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 47,17,20,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3606, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை வலாங்குளக்கரை அம்மன்குளத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி வீடுகளின் பணிகளைத் துரிதப்படுத்தி முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



1998 மே 15] [திரு. வி.கே. லட்சுமணன்]

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 47,17,20,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3597, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2039, திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை.

### (ஆ) கோரிக்கை எண் 33 - நகர்ப்பகுதி வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33 - நகர்ப்பகுதி வளர்ச்சி, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 10,38,66,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 216, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,38,66,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2884, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ஜி.கே. மணி] [1998 மே 15

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,38,66,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1968, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,38,66,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2963, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,38,66,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1039, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம் பவானி நகராட்சியில் மிக மோசமாக உள்ள குறுக்குச் சாலைகள், (வார்டுகளில் உள்ள சாலைகள்) சாக்கடைகள் சீர் செய்து செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,38,66,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2590, திரு. வை. சிவபுண்ணியம்.



1998 மே 15]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி, கூத்தாநல்லூர் நகராட்சிகளுக்கு வளர்ச்சித் திட்டத்தின் மூலம் அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,38,66,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2564, திரு. வி. அய்யலுசாமி, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள @ கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (இ) கோரிக்கை எண் 21 - மீனளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 21 - மீனளம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

@ 307 முதல் 369 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

[1998 மே 15

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 42,70,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2690, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் உள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு வீட்டுமனை தந்து வீடுகளை இலவசமாகக் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,70,36,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 231, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,70,36,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1548, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,70,36,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1262, திரு. ஐ. கணேசன்.



1998 மே 15]

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம் எடப்பாடி நகரிலுள்ள சர்வே எண் 344/1-ல் உள்ள பெரிய ஏரியை ஆழப்படுத்தி, நீர் இருப்பை நிலைப்படுத்தி, மீன் வளர்ப்பைத் தீவிரப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,70,36,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 989, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி ஒன்றியம், ஓடத்துறை ஏரி, சங்கரண்டாம்பாளையம் ஏரி, ஆகியவற்றில் மீன் பிடிப்பதன் மூலம் வருமானத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,70,36,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 637, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1812, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, "To discuss the need to encourage deep fishing in Tamil Nadu sea-shores to augment the income of fishermen", I move—

"That the allocation of Rs. 42,70,36,000/- under Demand No 21 - Fisheries, be reduced by Rs. 100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2476, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இலங்கைக் கடற்படையினரால் இன்னல்களுக்கு உள்ளாகும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. பி.ஆர். சுந்தரம்] [1998 மே 15

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,70,36,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1763, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,70,36,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3401, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,70,36,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3399, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மீனவர்களுக்கு வயதான காலத்தில் ஓய்வு ஊதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,70,36,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2224, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளவங்கோடு வட்டம் இரவிப்புத்தன்துறையில் மீனவர் குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



1998 மே 15] [திரு. டி. மணி]

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,70,36,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2614, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளங்களில் மீன் வளர்ப்பதற்கு முன்வரும் விவசாயிகளுக்குக் கடன் உதவி அளித்து மீன் வளத்தைப் பெருக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,70,36,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள @ கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளிலும் தங்கள் கருத்துக்களைச் சேர்த்துப் பேசலாம். முதலில் விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே வேலையின்மை காரணமாக நகரத்திலே தொழில்

@ 370 முதல் 395 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

செய்து பிழைப்பதற்காக நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் நகரங்களை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். எனவே நகரத்திலே வாழ்கிற மக்களுடைய எண்ணிக்கை உயர்ந்து கொண்டே போகிறது. ஆகையினால் நகரங்களிலே தனித்தனியாக வீடுகள் கட்டாமல் அடுக்கு மாடி வீடு கட்ட வேண்டிய ஒரு நிலைமை இப்போது ஏற்பட்டு இருக்கிறது. இந்த அடுக்கு மாடி வீடுகள் கட்டுவது கடந்த 15 ஆண்டு காலமாக சென்னையில் பெரிய அளவில் வளர்ந்து வந்திருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அடுக்கு மாடி வீடுகளுடைய பண்பாட்டில் ஒரு பெரிய தத்துவமே அடங்கியிருக்கிறது. அது என்னவென்று சொன்னால் எனக்கு மேலே இருக்கிற Ceiling இன்னொருவருக்கு following. எனக்கு வலது பக்கம் இருக்கிற சுவர் அடுத்து வீட்டுக்காரருக்கு இடது பக்கச் சுவர். அதுபோல எனக்குக் கீழே இருக்கிற following இன்னொருவருக்கு Ceiling ஆகவே, இந்த உலகத்திலே எதுவுமே நமக்குச் சொந்தம் இல்லை என்ற ஒரு மிகச் சிறந்த தத்துவத்தைச் சொல்லுவதாக இந்த அடுக்கு மாடி வீடுகளுடைய நிலைமை அமைந்திருக்கிறது.

முற்பகல் 9-50

1991 ஆம் ஆண்டு இந்த மன்றத்தில் நான் நுழைந்தபோது Apartment Regulation Act கொண்டுவர வேண்டும் என்று நான் பேசினேன். அன்று மட்டும் அல்ல, 1994 ஆம் ஆண்டு வரை மீண்டும், மீண்டும் பேசி 1996 ஆம் ஆண்டில் ஒரு சட்டம் வந்தது. அது என்னவென்று சொன்னால், Tamil Nadu Apartment Ownership Act என்பது ஆகும். ஆனால் அந்தச் சட்டமானது apartment-ல் குடியிருக்கிற பல்வேறு உறுப்பினர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து தங்களுடைய நன்மைக்காக, பொது இடங்களை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்பதைப் பற்றிச் சிந்திப்பதற்காகக் கொண்டுவரப்பட்டது. அதன் நிலைமை என்னவென்று சொன்னால் சென்னையில் ஏராளமான promoter-கள் வந்திருக்கிறார்கள். இந்த promoter-களுக்கு எந்தவிதமான விதியும் இல்லை. யார் வேண்டுமானாலும் promoter-களாக ஆகிக்கொள்ளலாம். ஆக இன்றைக்கு இந்த promoter-களுக்கும் அந்த apartment owner-களுக்கும் உள்ள உறவை நாம் பரிசீலிப்பதற்கு இந்தச் சட்டம் போதாது. இன்னும் ஒரு சட்டம் கொண்டுவர வேண்டும். அது என்ன சட்டம் என்று சொன்னால் Ownership Flat Act ஆகும். இந்த Ownership Flat Act என்பது அங்கே apartment-டில் குடியிருக்கிற மக்களுக்கும், அந்தப் promoter-களுக்கும் உள்ள உறவுகளை



நிர்ணயிக்கின்ற ஒரு சட்டம் ஆகும். இது இரண்டுமாகச் சேர்ந்திருந்தால் தான் இன்றைக்கு இந்த அடுக்கு மாடியில் குடியிருப்பவர்களுக்கு எல்லா வசதியும் கிடைக்க முடியும். promoter-கள் பல சமயங்களில் பணத்தைப் பெற்றுக்கொண்டு சரியான முறையில் வீடுகளைக் கட்டிக் கொடுப்பது இல்லை. இதனால் மக்கள் பல துன்பத்திற்கு ஆளாகிறார்கள். எனவே இந்தச் சட்டத்தையும் விரைவில் கொண்டு வரவேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் சென்னையில் பல இடங்களில் இந்த floor space index என்பது சாதாரணமான சுகாதார வாழ்க்கைக்கு அது 1.5 ஆக இருக்க வேண்டும் என்று பொறியியல் நிபுணர்கள் சொல்லுகிறார்கள். பம்பாய் போன்ற நகரங்களில் இது அப்படித்தான் இருக்கிறது. ஆக, சென்னையை எடுத்துக்கொண்டால் நுங்கம்பாக்கத்தில் இந்த floor space index என்பது 2.75 ஆக இருக்கிறது. ஆக, இது கூடக் கூட அங்கே நெரிசல் அதிகமாகும் என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். எனவே, சென்னையைப் பொறுத்தவரையில் இந்த floor space index or floor area ratio என்பது 1.5-க்குக் குறைவாகத்தான் இருக்கவேண்டும் என்று நான் உங்கள் மத்தியில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவையில் பத்திரிகையாளர்கள் 170 பேர் நீண்ட காலமாக நல்லமுறையில் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் தங்களுக்கு வீடு கட்ட இடம் வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையின் நகலை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன்.

சென்னையைப் போலவே கோவையிலும் ஒரு Press Club தொடங்கப்பட்டிருக்கிறது. அந்த Press Club-க்கு—சென்னையில் எப்படி இடம் அளிக்கப்பட்டதோ அதுபோல அங்கேயும்—இடம் அளிக்க வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு விஷயம். இந்த எம்.எல்.ஏக்களுக்கு அவர்கள் இருக்கிற தொகுதியில் ஓர் அலுவலகம் இருக்க வேண்டும் கண்டிப்பாக. அவர்களுடைய பதவிக் காலம் முடிந்ததும் பின்னால் வருகிற எம்.எல்.ஏ-க்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். சொல்லப்போனால்

[திரு. வி.கே. லட்சுமணன்] [1998 மே 15

அதைக் கட்டுவதற்கு இந்த எம்.எல்.ஏ. நிதியிலிருந்து அந்தப் பணத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன். ஆகவே அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று சொன்னால் 5 லட்சம் ரூபாயினை 'MLA constituency development fund'—லிருந்து எடுத்து அங்கே ஓர் அலுவலகம் கட்டிக்கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு அதைக் கனிவோடு பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நகர்ப்புற வளர்ச்சியைப் பொறுத்தவரையில் இப்போதுள்ள நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் பெரும்பாலும் கைவிடப்பட்டு விடும் என்று ஏற்கெனவே மைய அரசு முடிவு செய்துவிட்டது. இந்தச் சட்டம் இங்கே வந்த காலத்திலேகூட, கேரளாவிலும், அரியானாவிலும் இந்தச் சட்டம் கிடையாது. ஆகவே, தமிழ்நாட்டிலே, - நாம் வேடிக்கையாக, Ulcer Act என்று சொல்வது வழக்கம்—இந்த Act-ஆனது இங்கே இருந்ததாலே பெரிய பயன் விளைந்து விட்டதாக யாரும் சொல்லிவிட முடியாது. ஆகவே, நானும் இந்த Ulcer Act என்று சொல்லுகின்ற அந்த Act-ஐக் கைவிடுவது நல்லது என்றுதான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 9-55

சண்டிகர் என்பது, பஞ்சாபுக்கும், ஹரியானாவிற்கும், சேர்ந்த ஒரு தலைமையிடமாகும். அங்கே இந்த நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் இல்லாததனால் நல்ல வீடுகள், பெரிய வீடுகள், அழகான வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. நான் இங்கே அமைச்சரைக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், இனிமேல் நாம் கட்டுகிற வீடுகள் எல்லாம் யாக்ஷயர் எப்படிக் கட்டுகிறாரோ அதைப்போல அழகான வீடுகளாகக் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சென்னைக்குப் பக்கத்திலே "புதிய சென்னை" உருவாகப் போகிறது. பம்பாயிலே எப்படி New Bombay வந்ததோ, அதைப்போல, இங்கே 'புதிய சென்னையானது' நம்முடைய சாதாரணக் கட்டடங்களைப் போல அல்லாமல், சிறந்த கட்டடக் கலை நிபுணர்களை வைத்து அழகானக் கட்டடங்களாக, வலுவுள்ளக் கட்டடங்களாகக் கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1998 மே 15] [திரு. வி.கே. லட்சுமணன்]

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அதுமட்டுமல்லாமல், சென்னையைச் சுற்றிலும் இருக்கிற பகுதி வளர வேண்டும். அதுதான், CMDA (Chennai Metro Development Authority)-யினுடைய குறிக்கோள். அதற்காகத்தான், M.R.T.S. போட்டிருக்கிறோம். ஆக, இந்த M.R.T.S.-னுடைய Second phase-ஆனது, லஸ்ஸிலிருந்து வேளச்சேரி வரை போக வேண்டும். ஆனால், இண்டியன் எக்ஸ்பிரஸ் 22 ஆம் தேதி-என்று கருதுகிறேன்-வந்த பத்திரிகையிலே, "New M.R.T.S. proposal poses threat to University Research activity" என்று அங்கேயிருக்கிற துணைவேந்தர்களும், விஞ்ஞானிகளும், ஆராய்ச்சியாளர்களும் இந்த M.R.T.S.-னுடைய Second phase-ஆனது தரமணியிலே வரும் என்று சொன்னால், அந்தத் தரமணியில் இருக்கிற உயிரியல் ஆராய்ச்சி பாதிக்கப்படும்; அதனுடைய அதிர்வினாலே அங்கே ஆராய்ச்சி பாதிக்கப்படும், sound pollution இருக்கும் என்று மிகத் தெளிவாகச் சொல்லி, அதற்கு வேறு வழியிலே செல்ல வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அதையும் நாம் பரிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கோவை நகரத்திலே சங்கனூர்ப் பள்ளம் என்ற ஒரு பள்ளம் இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது) ஐந்து நிமிஷம் கொடுங்கள். அது ஓரமாக ஒவ்வொரு ஆண்டும் தன்னுடைய போக்கை மாற்றிக் கொண்டே இருக்கிறது. ஆகையினாலே, அந்தப் பள்ளத்தை மேம்படுத்துவதற்காக 18 கோடி ரூபாயிலே ஒரு திட்டம் இருக்கிறது. ஆனால் அது இதுவரையிலே அமல்படுத்தப்படவில்லை. அதை அமல்படுத்தி, வெள்ள அபாயத்திலேயிருந்து கோவையைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநகராட்சி எல்லைக்குள்ளே சாலைகள் என்று எடுத்துக் கொண்டால், பொதுப் பணித் துறை சாலை போட்டிருக்கிறது, நெடுஞ்சாலைத் துறை சாலை போட்டிருக்கிறது, அதேபோல தேசிய நெடுஞ்சாலைத் துறையின் சாலையும் இருக்கிறது. நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம்—இந்தச் சாலைகள் அத்தனையையும் மாநகராட்சியிடம் ஒப்படைத்துவிட்டு அவர்களுக்கு இந்தச் சாலையைப் பராமரிக்கக்கூடிய தொகையைக் கொடுத்துவிட்டால் அவர்கள் சீராகப் பராமரிப்பார்கள் என்று என்னுடைய கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இதைத் தவிர, அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகள் - unapproved lay-outs ஏராளமாக இருக்கின்றன. விலை குறைவாக இருக்குமென்று கருதி அவர்கள் அங்கே அந்த நிலத்தை வாங்கிவிட்டார்கள். ஆனால், அப்படி வாங்கியதற்குப் பின்னாலே அங்கே தண்ணீர் இல்லை, தெரு விளக்கு இல்லை, சாலை இல்லை என்று துன்பப்படுகிறார்கள். நான் இந்த அரசைப் பார்த்துக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், இதுபோன்ற அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளிலே குறைந்தபட்சம் தெரு விளக்கையாவது நீங்கள் வளர்ச்சிக் கட்டணத்தைக் கேட்காமல் அவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இதுபோன்ற அங்கீகரிக்கப்படாத மனைக் கட்டுகளிலே நிலம் வாங்கினால் அதைப் பதிவாளர் பதிவு செய்யக் கூடாது. இதற்கு ஒரு சட்டம் இயற்றினால் பின்னாலே யாருக்கும் இந்தத் தொல்லைகள் வராது. ஆக, எந்த நிலம் வாங்குவதனாலும், அது கண்டிப்பாக அங்கீகரிக்கப்பட்ட மனையாக இருந்தால்தான் வாங்க வேண்டும் என்ற நிலை ஏற்படும் என்று சொன்னால், இந்தப் பிரச்சினைகள் வருவதற்கு வாய்ப்பு இல்லை.

முற்பகல் 10-00

அதுமட்டுமல்லாமல், மாநகராட்சி எல்லைக்குள்ளே பொதுப் பணித் துறை பராமரிக்கின்ற பல இடங்கள் இருக்கின்றன. குறிப்பாக, Police quarters இருக்கிறது. அவையெல்லாம் பராமரிக்கப்படாத நிலையில் பழுதடைந்து இருக்கின்றன. நான் சொல்லிக்கொள்ள விரும்புவது எல்லாம், அவற்றைப் பராமரிக்க என்ன தொகை செலவாகுமோ, அதை மாநகராட்சிக்குக் கொடுத்து விட்டால், அவற்றை அது எளிதாகப் பராமரிக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவற்றை உடனடியாகப் பராமரிக்க வேண்டும் என்றுதான் Police Housing Corporation என்ற ஒன்று இருக்கிறது. அந்தப் பராமரிப்பை, அவர்களிடத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது ஒப்படைத்திருக்கிறார்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா மாநகராட்சிகளுக்கும் ஒரே மாதிரியான சட்டம்



இருக்குமென்று சொன்னால், அதனால் பல்வேறு பிரச்சினைகள் தவிர்க்கப்படும் என்று நான் கருதுகிறேன். தற்போது ஒவ்வொரு மாநகராட்சிக்கும் ஒவ்வொருவிதமான சட்டம் இருக்கிறது. ஆகவே, எல்லா மாநகராட்சிகளுக்கும் ஒரேவிதமான சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சி.ஐ.டி. நகர் வீட்டுவசதி வாரியக் குடியிருப்பில், குடியிருப்போர் நலச் சங்கத்தினர் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தக் குடியிருப்பிலே 56 வீடுகள் இதுவரை—1-8-1997-லிருந்து வீடுகள் சொந்தமாக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இதுகுறித்து அரசு வெளியிட்ட செய்தியில் கூறியிருப்பதாவது: குடிசைப் பகுதியில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில், 1970ஆம் ஆண்டு குடிசைமாற்று வாரியம் தமிழகத்தில் உருவாக்கப்பட்டது என்று கூறியுள்ளார்கள். ஆனால், 1956 ஆம் ஆண்டிலேயே, குடிசைப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், குடிசைகளை அகற்றி, Tenements கட்டித் தந்துள்ளார்கள். இந்த அரசு கட்டிய 50,150 வீடுகளும் மற்றும் 4,112 வீடுகளும் சகாய விலையில் சொந்தமாக்கப்பட்டன. ஆனால், 1956ஆம் ஆண்டில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களால், சி.ஐ.டி. நகரில் கட்டப்பட்ட வீடுகள் மட்டும் பல முயற்சிகள் செய்தும்—அவர்களுக்குச் சொந்தமாக்கப்படவில்லை. அவற்றைச் சொந்தமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Slum Improvement, Slum Clearance என்ற இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்து கொள்ள வேண்டும். பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய காலத்திலே நடைபெற்றது, Slum Improvement; குடிசைப் பகுதிகளைச் சீர்திருத்தம் செய்வது, மேம்பாட்டுத் திட்டங்களைச் செய்வது. குடிசைகளை அறவே அகற்றி, வீடுகள் கட்டுவது இந்தத் திட்டம் அல்ல. அப்படி ஒரு திட்டத்தை, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில், அப்போது அமைச்சராக இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்கள் முன்னின்று நடத்தி, பட்டினப்பாக்கத்தில் வீடுகள் கட்டப்பட்டன. ஆனால், அதிலே குடியேறுவதற்கு, ஏழை மக்கள் யாரும் தயாராக இல்லை. அதிக வாடகை செலுத்த வேண்டிய காரணத்தினால், குடியேற முடியாது என்று மறுத்து விட்டார்கள். எனவே, அப்படிப்பட்ட வீடுகள் எல்லாம்,

ஓரளவு வசதி படைத்த, நடுத்தர மக்களுக்கெல்லாம் அப்போது தரப்பட்டன. இன்று நாம் நடத்திக் கொண்டிருப்பது, Slum Improvement அல்ல; Slum Clearance. இருக்கின்ற குடிசைகளையெல்லாம் அகற்றிவிட்டு, அங்கே குடிசை மாற்று வாரிய வீடுகள், மாடி வீடுகளாகக் கட்டி, குறைந்த வாடகைக்கு, அதிலே ஏழையெளிய மக்களைக் குடியமர்த்துவது என்பது இந்தத் திட்டம். அது வேறு திட்டம்; இது வேறு திட்டம்

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களினால், ஊரக வீட்டுவசதித் திட்டத்தில், நலிந்த பிரிவினருக்கு வீடு கட்ட அளிக்கும் தொகையை 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், கட்டுமானப் பொருட்களின் ....

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 14 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இப்போது 45 ஆயிரம் பேருக்கு வழங்கப்படுகிறது. அதிக அளவிலே, பயனீட்டாளர்கள் பயன் பெறுவதற்காக வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டுமானப் பொருட்களின் விலை உயர்ந்துவிட்டதால், அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், L.I.G. பிரிவினருக்குக் கொடுக்கிற கடனை, 70 ஆயிரம் ரூபாயிலிருந்து, 1½ இலட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். M.I.G.-க்குக் கொடுக்கக்கூடிய கடனை ஒரு இலட்சத்து 20 ஆயிரத்திலிருந்து 2 இலட்சமாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வீட்டுவசதிச் சங்கம் விதிக்கின்ற வட்டி விகிதமானது மிக அதிகமாக இருக்கின்றது. H.D.F.C.-யிலே, L.I.C.-யிலே வாங்குகின்ற பணத்திற்கு 15.5 சதவீதம்தான் வட்டி. ஆனால், Society கொடுக்கின்ற பணத்திற்கு 17.5 சதவீதம் வட்டி வசூலிக்கப்படுகிறது. ஆகவே, இந்த வட்டியைக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



முற்பகல் 10-05

அதேபோல தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் வீடு கட்டக் கடன் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது இரண்டு பேருக்கும் ஒரு மோதலை உருவாக்கும். ஆகவே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் வீடு கட்டக் கடன் கொடுக்கத் தேவையில்லை என்ற நிலையை நாம் ஏற்படுத்த வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த Federation-க்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையும் சென்னைக்கு வரவேண்டியிருக்கிறது. எனவே, இதற்கு ஒரு Regional Officer-ஐ ஏற்படுத்தி அங்கே அவர்களுக்கு அலுவலகம், வாகனங்கள் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால் அது எளிதாக இருக்குமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, வீடு கட்டும் சங்கங்கள். அவர்கள் மற்றவர்களுக்கு (மணியடிக்கப்பெற்றது) - ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். - வீடுகள் கட்டுவதற்குப் பணம் கொடுக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு அலுவலகங்களே கிடையாது. ஆகவே, அவர்கள் அலுவலகம் கட்டிக்கொள்வதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி என் உரையை நிறைவு செய்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

***திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரிய மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு ஒரு சில கருத்துக்களை இந்த மானியத்தின் மீது எடுத்து வைக்க விரும்புகிறேன்.

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு வாடகை வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 1998-99-ல் 31.5 கோடி ரூபாய் செலவில் 1057 அடுக்குமாடி வீடுகள் கட்டுவதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில், வீடு கட்டுவதற்கு அவர்களுக்கு தற்போது 4 இலட்சம் ரூபாய் கடன் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள், அதை 5 இலட்சம் ரூபாயாக வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

சென்னை கோயம்பேட்டில், தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டுக் கிராமத்தின் பின் பகுதியிலே 5 ஏக்கர் நிலத்தில் 24.10 கோடி ரூபாயில் 384 வீடுகள் கட்டுவதற்குக் குடியிருப்புத் திட்டம் திட்டப்பட்டுள்ளது. அவற்றில் பெரும்பாலும் I.A.S., I.P.S. அதிகாரிகளுக்கு ஒதுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிட்லபாக்கம் பகுதியிலே C.M.D.A., T.N.U.D.P.-ன்கீழ், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு 2 ஆயிரம் மனைகள் போடும் திட்டம் உள்ளது. அதிலே குறைந்தது 80 சதவீதம் ஏழை எளிய மக்களுக்கே வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே என்னுடைய கருத்தை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

அதேபோல, வீட்டுவசதி இணையத்தின் மூலமாக, கூட்டுறவு Housing Society-இல் அடமானக் கடன்கள் வழங்கப்படுகின்றன. ஆனால், அதிலே காலதாமதம் ஏற்படுவதால், அவர்கள் நேரிடையாக மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறுவதற்கு அனுமதி வழங்க வேண்டும். அதைப்போல, ஹட்கோவில் நேரிடையாக அந்தக் கடன் உதவி பெறுவதற்கு, அதைப்போல National Housing Society இலும் நேரிடையாகப் பெறுவதற்கு நீங்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அரசு உத்தரவிட்டிருக்கிறது, ஒரு சதுர அடி கட்டுவதற்கு 425 ரூபாய்தான் வழங்குவது என்று. ஆனால் இப்போது ஒரு சதுர அடி வீடு கட்டுவதற்குக் குறைந்தது 700, 800 ரூபாய் செலவாகிறது. அந்த நிலையிருக்கின்ற காரணத்தினால் அதை நிச்சயம் 600 ரூபாயாக நீங்கள் உயர்த்தித்தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

வட்டி விகிதம் 16.5 சதவீதம் என்ற ஒரு நிலையிருக்கிறது. அதுமட்டுமல்ல, அரசே surcharge என்ற அளவில் அந்தக் கூட்டுறவு வங்கிகள், நலிந்த வங்கிகள் மீது 0.5 சதவீதம் போடுவதற்கான ஒரு சூழ்நிலையிருக்கிறது. ஆகவே, அந்த surcharge-ஐ ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 16.5 சதவீத வட்டி விகிதத்தில் குறைந்தது 0.5 சதவீதமாவது நீங்கள் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சிப் பகுதியில் அனுமதி இல்லாமல், பல கட்டடங்கள் பல ஆண்டு காலமாகக் கட்டப்பட்டுள்ளன. சென்னை



மாநகராட்சியினுடைய வணக்கத்திற்குரிய மேயர், தளபதி திரு. ஸ்டாலின் அவர்கள் ஒரு தீர்மானத்தை மாநகராட்சி மன்றத்தில் அதற்காக நிறைவேற்றியிருக்கிறார்கள். கட்டியவர்களிடம் ஒரு nominal fees வசூல் செய்துகொண்டு அவற்றை approve செய்து கொடுப்பது என்ற ஒரு சூழ்நிலையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 10-10*

அதைப்போல, நம்முடைய C.M.D.A.-வில் பல வழக்குகள், உயர் நீதிமன்றத்தால் stay வழங்கப்பட்டு, 2,000 fileகள் இப்போது தேங்கிக் கிடக்கின்றன; அப்படியே இருக்கின்றன. அதனாலே அரசுக்கும் எந்தவிதமான வருமானமும் கிடைக்காமல் இருக்கிறது. நான் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்த fileகளை உடனடியாக clear செய்து, Nominal Fees-மாநகராட்சிக்கு வசூல் செய்வதைப்போல - ஒரு Nominal Fees-ஐ நீங்கள் வசூலித்து அந்தக் கட்டடங்களுக்கு எல்லாம் approval கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தைப் பொறுத்தவரையில் இருக்கிற கோப்புகள் அனுமதி மறுக்கப்பட்டு, நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றத்தின் மூலமாகவும் அவர்களுக்கு விடிவு கிடைக்காத நிலையில், appeals என்ற முறையில், அவர்கள் மேல்முறையீடு செய்திருக்கிறார்கள். எனவே அவை எல்லாம் மறுக்கப்பட்டவை. ஆகவே, கோப்புகள் தேங்கிக் கிடக்கின்றன என்பது தவறான ஒன்றாகும். அவை மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவை மறுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அவர்கள் மேல்முறையீட்டுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றிற்கு எல்லாம் அனுமதி கொடுக்க முடியாத காரணத்தாலே அப்படியே இருக்கின்றன, அவ்வளவுதான்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து, பல எம்.எல்.ஏ.-க்கள் தமிழ்நாடு பூராவிலும் இருந்து இங்கே சென்னையிலே வந்திருக்கிறார்கள். பல எம்.எல்.ஏ.-க்கள் வீட்டுவசதியே இல்லாமல் இருக்கிறார்கள். நீங்கள் இங்கே M.L.A. Hostel இல் வசதி செய்து கொடுக்கிறீர்கள். மேலும் அங்கே வீடுகளும் கட்டிக்கொடுக்கப் போகிறீர்கள். 240 வீடுகளை

[திரு. செங்கை சிவம்] [1998 மே 15

அங்கே கட்டுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டிருக்கிறார்கள். நான் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், அவர்களுடைய தொகுதியிலேயே வீட்டுவசதி வாரியம் அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுத்து, மாதா மாதம் அதற்கான பணத்தைத் தவணை முறையிலே பிடித்தம் செய்துகொள்ள வேண்டும். இங்கே இருக்கிற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக (மேசையைத் தட்டும் ஒலி) நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) ஆமாம், பெரிய வீடாக இருந்தால் பரவாயில்லை, 2,000 சதுர அடி பரப்பளவிலாவது தொகுதியிலேயே கட்டிக்கொடுத்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் எல்லோரும் குறுக்கீடு செய்யாமல் திரு. செங்கை சிவத்தைப் பேசவிடுங்கள். திரு. செங்கை சிவம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து, தமிழகத்திலே 1971 முதல் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்ட திட்டம் அது. எப்போதெல்லாம் மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பதவி ஏற்கிறார்களோ அப்போதுதான் அந்த வாரியத்திற்கு நிதியுதவி செய்யப்பட்டு வீடுகள் கட்டிக்கொடுக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அந்த நிலையில் இந்தக் குடிசை மாற்று வாரியம் மிகச் சிறப்பாக, இந்த ஆண்டு 1998-99-ல் 30 கோடி ரூபாய் செலவிலே 3,000 வீடுகள் கட்டுவதற்கான திட்டம் தீட்டப்பட்டிருக்கின்றது. இதை நான் பெரிதும் வரவேற்கின்ற அதே சூழ்நிலையில், எங்களுடைய தொகுதியில் பெரம்பூர், புதிய திரு.வி.க. நகர், வாசுகி நகர், அன்னை சத்தியா நகர் ஆகிய பகுதிகளில் உடனடியாக வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இப்போது குடிசை வாரியத்தினுடைய பெரும்பாலான வீடுகளுக்கு, M.U.D.P., T.N.U.D.P. போன்ற நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களின்கீழ் பல improvements செய்திருக்கிறீர்கள். ஆனால், கோவில் நிலங்களைப் பொறுத்தவரையில், நான் நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், ஆயிரம் விளக்கு, சேப்பாக்கம்,



1998 மே 15] [திரு. செங்கை சிவம்]

அண்ணா நகர், பெரம்பூர் தொகுதி போன்றவற்றிலெல்லாம் கோவில் நிலங்களிலே பல ஆண்டுகாலமாக வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 1989-90 வரையில் அவற்றிற்குக் குடிசை மாற்று வாரியம் மூலமாக நீங்கள் நிலங்களை transfer செய்து பட்டா கொடுத்தீர்கள். L.C.S. வழங்கினீர்கள். ஆனால் 1991-ல் அண்ணா தி.மு.க. ஆட்சி வந்தவுடன் அதற்குத் தடை விதிக்கப்பட்டது. அந்தத் தடை இன்றையவரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கோவில் நிலங்களை, பல ஆண்டு காலமாக அந்தக் கோவில்களுக்கு உதவாமல் இருக்கின்ற அந்த நிலங்களை மக்களுக்கே, அதாவது குடிசை மாற்று வாரியத்திற்கு ஒப்படைத்து பணத்தை - நீங்கள் market value போடுகிறீர்கள் ...

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு தொடரைக் குறிப்பிட்டார், ஏதோ அந்த நிலங்கள் எல்லாம் கோவில்களுக்கு உதவாமல் இருப்பதைப்போல என்று. சென்னையில் எந்த நிலம் கோவிலுக்கு உதவாமல் இருக்கிறது என்பதை உறுப்பினர் திட்டவட்டமாகத் தெரிவிக்க வேண்டும். சென்னையிலே இருக்கிற நிலங்கள் அத்தனையுமே விலை மதிப்புள்ளவை. எனவே, உடனடியாக அவர்கள் கோவிலுக்கு அந்த நிலங்களை ஒப்படைத்து, கோவிலுக்கு உதவுகின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

முற்பகல் 10-15

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் எந்த நிலங்கள் என்று கேட்டார்கள். சேமத்தம்மன் ஆலயத்திற்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. அது உங்களுக்கும்கூட தெரியும். 60 ஆண்டு காலமாக வீடு கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். (குறுக்கீடு)

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்திற்கு வீட்டு வசதித் துறை அமைச்சர், அமைச்சராக இல்லை. பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்தான் அமைச்சராக இருக்கிறார்கள் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. எங்களுடைய சேமத்தம்மன் காலனி பகுதி, குறிப்பாக,

சேமத்தம்மன் ஆலயத்தினுடைய நிலங்களில் இப்போது 200 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதைப்போல, கண்ணபிரான் கோவில் தெரு, முனியப்ப நாயக்கன் தெரு ஆகிய தெருக்களிலும் பல ஆண்டுக் காலம் முன்பே வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. கடந்த 1989-90-ல் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பட்டா L.C.S. வழங்குகின்ற நேரத்தில்தான் நம்முடைய ஆட்சி கலைக்கப்பட்டது. அதனால்தான் அந்தத் திட்டம் அப்படியே இருக்கிறது. அதைத்தான் நான் அமைச்சர் அவர்களிடம் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் wakf board-ல்கூட நிலம் இருக்கிறது. அறநிலையத் துறை நிர்வாகத்தில் நிலம் இருக்கிறது. எனவே, அதை நீங்கள் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரயில்வேக்குச் சொந்தமான நிலமும் இருக்கிறது. அதுபோன்று சேப்பாக்கம், துறைமுகம், போன்ற பகுதிகளிலெல்லாம் இராணுவத்திற்குச் சொந்தமான நிலமும் இருக்கிறது. அங்கே வீடு கட்டவே முடியாது. ஆகவே, இவை பற்றியெல்லாம் நீங்கள் அந்தத் துறையோடு பேசவேண்டும். ஏற்கெனவே, ராம்விலாஸ் பஸ்வான் அவர்கள் இரயில்வே அமைச்சராக இருந்தபோது பேசப்பட்டது. மீண்டும் நீங்கள் வற்புறுத்தி அந்த மக்களுக்கு அங்கே நல்ல வீடுகள் கட்டித் தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைபோல. புரசைவாக்கம், பூங்கா நகர், பெரம்பூர் தொகுதி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் தொகுதி, கே.எம். கார்டன் ஆகிய பகுதிகளிலும் பெரம்பூர் பேரக்ஸ் ரோடு பகுதியிலும் மழைநீர் வடிகால் கால்வாய் இருக்கின்றது. அந்தக் கால்வாயில் தூர் இருப்பதால், மழைக் காலங்களில் கே.எம். கார்டனே தண்ணீரில் மிதக்கிறது. அதனால் என் பகுதியிலும் பாதிப்பு இருக்கிறது. பெரம்பூர், வியாசர்பாடி போன்ற பகுதிகளிலும் அந்தத் தண்ணீர் நேராகப் போய் வடக்கு பக்கிங்ஹாம் கால்வாயில் கலக்கிறது. நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை அழைத்துப் போய் காண்பித்தார்கள். நீங்களும் அழைத்துச் சென்று காண்பித்தீர்கள்.

அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கே.எம். கார்டன் பகுதி வரையில்தான் நீட்டிக்கப்பட்டது. அஷ்டபுஜம் ரோடு பகுதியில் அந்தப் பணி நீட்டிக்கப்படவில்லை. எங்கள் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு அப்படியே இருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்று கேட்டால்,



அதற்கு 3 கோடி ரூபாய் செலவாகிறது. இலட்ச ரூபாய் அளவிலே இருந்தால்தான் மாநகராட்சி செய்ய முடியும் என்ற நிலை இருக்கின்ற காரணத்தால் செய்ய முடியவில்லை. 3 கோடி ரூபாய் என்று அரசால் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னைக்கு 300 கோடி ரூபாயை ஒதுக்கி, மழைநீர்க் கால்வாயை அமைப்பதற்கு இந்த பட்ஜெட்டிலே உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், 3 கோடி ரூபாயை ஒதுக்கி இந்தத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டும்.

கே.எம். கார்டன் மக்கள் வசிக்கின்ற பகுதிகளிலுள்ள கால்வாய் மீது கட்டப்பட்ட வீடுகளுக்கு, அவர்களுக்காக 222 வீடுகள் தனியாக டோபிகானாவிலே கட்டப்பட்டிருக்கின்றன. அதிலே மக்கள் குடியேற முடியவில்லை. ஏற்கெனவே வீடு கட்டியிருப்பவர்களெல்லாம் இப்போது தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை நீக்குவதற்கான முயற்சியை குடிசைமாற்று வாரிய அமைச்சர் அவர்களும் மேற் கொண்டார்கள். ஏன் அந்தப் பணி நிறுத்தப்பட்டது? உடனடியாக அந்தக் குடிசைகளையெல்லாம் அகற்றிவிட்டு, 10,15 வீடுகள் வைத்து இருப்பவர்களுடைய வீடுகளை அகற்றிவிட்டு அந்த கே.எம்.கார்டன் ஏழை எளிய மக்கள், கால்வாய் மீது வீடு கட்டியிருப்பவர்களுக் கெல்லாம் வீடுகள் கட்டித் தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முக்கியமான பிரச்சினை, சென்னையை எதிர் நோக்கியுள்ள மிகப் பெரிய பிரச்சினை சென்னையிலே ஓடுகின்ற இரயில்கள் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடமும் வலியுறுத்தி வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். சென்னை கடற்கரையிலிருந்து தாம்பரம் புறநகர் வரை செல்கின்ற அந்தப் புறநகர் இரயில்கள் இப்போது 60 சதவீதம் பழுதடைந்து இருக்கிறது. அது Metre Gauge பாதையில் ஓடுகிறது. 60 சதவீதம் பழுதடைந்த அந்த இரயில்கள் எப்பொழுது நிற்குமோ என்ற சூழ்நிலை இருக்கிறது. இலட்சக்கணக்கான மக்கள் அதில் பிரயாணம் செய்கிறார்கள். அதற்கு வேண்டிய உதிரி பாகங்கள் பிரேக், என்ஜின்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சட்டமன்றத்திலே

அறிவித்திருக்கிறேன். தாம்பரம் வரை செல்கின்ற புறநகர் வண்டிகளை Broad Gauge வண்டிகளாக மாற்றுவதற்குத் தமிழக அரசு பாதித் தொகையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசு கேட்டு, அதற்கும் அனுமதி அளித்து 30 கோடி ரூபாயை இந்த பட்ஜெட்டிலேயே கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். நேற்றுகூட மத்திய அமைச்சரிடம் அதைப்பற்றிக் கலந்து பேசியிருக்கிறேன். இந்த ஆண்டே அது இணைக்கப்படும், சேர்க்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். ஆகவே அந்தப் பணி-அகலப் பாதையாக மாற்றுகின்ற பணி விரைவில் தொடங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

*முற்பகல் 10-20*

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சியிலேயிருந்து எழும்பூர் வரை அகலப் பாதையாக அதாவது Broad gauge-ஆக ஆக்கிவிட்டார்கள். அதேபோல் புறநகர் இரயில் பாதையையும் சென்னை கடற்கரையிலிருந்து தாம்பரம் வரை செல்லும் புறநகர் ரயில் பாதையையும் அகலப் பாதையாக ஆக்கினால்தான் நன்றாக இருக்கும். மும்பையை எடுத்துக் கொண்டால், கல்கத்தாவை எடுத்துக் கொண்டால், அங்கெல்லாம் மிக நல்ல முறையிலே ஓடிக் கொண்டிருக்கின்றன. மக்கள் தொகையிலே முக்கால் வாசிப்பேர் அந்த இரயில்களில்தான் பிரயாணம் செய்யக்கூடிய நிலை இருக்கிறது. அதனை நிறைவேற்றித் தருவதாக அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு மிக முக்கியமான விஷயம், எழும்பூர் இரயில் நிலையத்தையும், சென்ட்ரல் இரயில் நிலையத்தையும் இணைக்க வேண்டும். இதற்கான ஒரு கருத்துருவினை தென்னக இரயில்வே நிர்வாகம் தமிழக அரசுக்கு அனுப்பியிருக்கிறது. நிலம் கேட்டு அனுப்பியிருக்கிறது. அது குடிசை மாற்று வாரியத்திற்கும் தெரியும் என்று நினைக்கிறேன். அந்த நிலத்தை நீங்கள் கொடுத்துவிட்டால், அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுவிடும். அப்பொழுது, டெல்லியிலே இருக்கின்றவர்கள் நேரடியாகக் கன்னியாகுமரிக்குச் சென்றுவிடலாம். அதுபோன்று, விழுப்புரத்திலே இருக்கிறவர்கள் நேரடியாக டெல்லிக்குப் போக வேண்டுமானாலும்கூடப் போய்விடலாம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதனை இணைப்பதற்கான இடத்தினை-



மாநகராட்சியும், குடிசை மாற்று வாரியமும் தென்னக இரயில்வே அதிகாரிகளை அழைத்து இந்தத் திட்டம் குறித்துப் பலமுறை அவர்கள் வலியுறுத்திக் கூறியிருப்பதாகச் சொல்கிறார்கள்— அவர்களுக்கு வழங்கி, இந்தத் திட்டத்தைத் நிலைவேற்றுவதற்கான உடனடி ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) நன்றிதான் சொல்கிறேன். உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி, மீனளம் என்று மூன்று துறைகள். இந்த மூன்று துறைகள் மீதும் பேச வேண்டியிருப்பதால், மிகச் சுருக்கமாக நான் பேசுகின்றேன். பொதுவாக, வீட்டுவசதித் துறையிலே முன்னாள் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்ட வீடுகள், சுமார் 700 கோடி ரூபாய் மதிப்பிற்கு மேல் விற்பனை செய்யப்படாமல் இருக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. அதற்குக் காரணம், அந்த வீடுகள் கட்டப்படும்போது, சரியான இடத்தில் நிலங்களைத் தேர்வு செய்து கட்டப்படவில்லை. ஏரிகளில், ஏழை மக்களுக்குப் பயனளிக்காத வகையிலே அந்த வீடுகள் கட்டப்பட்டதனுடைய விளைவாக, அந்த வீடுகள் விற்பனையாகாமல் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. எனவே, அதுபோன்ற தவறு நடந்துவிடாமல், நம்முடைய அரசு நிலங்களைக் கையகப்படுத்தும்போது, மக்கள் வசிக்கக்கூடிய வகையிலே . . .

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் சுமார் 700 கோடி ரூபாய் அளவிற்கு விற்கப்படாமல் இருப்பதற்குக் காரணம், வீடு கட்டுவதற்குத் தேர்வு செய்த இடம் சரியில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்குக் காரணம், கடந்த இரண்டாண்டுகளாக, மக்கள் கையிலே பணம் கிடைக்காத காரணத்தினால், பணம் புரளாத காரணத்தினால், இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு பணம் எங்குமே கிடைக்காத காரணத்தினால் அந்த வீடுகளையெல்லாம் வாங்குவதற்கு ........

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் சொன்னதைப்போல,

[திரு. கு. பிச்சாண்டி] [1998 மே 15

பல இடங்களில் தேவையில்லாத இடங்களிலே அந்த வீடுகள் கட்டப்பட்டிருந்தன. ஆனால், இந்த ஆட்சி, பொறுப்பேற்றதற்குப்பிறகு, அந்த வீடுகளை விற்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு, பல பகுதிகளுக்கும் அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, 6,000 வீடுகளுக்கும் மேல் விற்றிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், கடந்த இரண்டாண்டுக் காலமாக மக்களுடைய தேவைகளைக் கருதி, வீடுகளைக் கட்டுவதற்குரிய இடங்களைத் தேர்வு செய்யும்போது, நல்ல இடங்களைத் தேர்வு செய்து, அங்கே வீடுகள் கட்டப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது, இதுபோன்ற தவறுகள் மீண்டும் நடந்து விடக்கூடாது. ஏரிகளிலே வீடுகள் கட்டப்படும்போது, வெள்ளக் காலங்களில் முற்றிலுமாக மூழ்கி விடுகின்றன. சாக்கடையும், தண்ணீரும் ஒன்றாகக் கலந்து விடுகின்ற மோசமான சூழ்நிலை ஏற்பட்டதனுடைய விளைவாக, பல்வேறு புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன.

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரும் இன்னொரு விஷயம், வீடு கட்ட யார் மனு செய்தாலும், அது உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் அனுமதி உண்டா, இல்லையா என்பதை உடனடியாகத் தெரிவிப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆறு மாதங்கள், ஒரு வருடம் கடந்தும்கூட அதற்கான பதில்கள் சரியாகக் கிடைக்காத காரணத்தினால் வீடு வேண்டி மனு செய்தவர்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். எனவே மனு செய்தவர்களுக்கு உடனடியாக அதற்கான பதில்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

பொருளாதாரத்திலே நலிவுற்ற மக்களுக்கு வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்று கட்டிக் கொடுக்கும் திட்டம் உண்மையிலேயே நல்ல திட்டம். நீண்டகாலப் பார்வையோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டிய திட்டம்தான். ஆனால் கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய மக்களுக்கு 12,000 ரூபாய்க்குக் கட்டப்படும் வீடுகளுக்கு ஒரு தொகையும்



1998 மே 15] [திரு. ஜி. பழனிசாமி]

கொடுத்துவிட்டு அஸ்திவாரம் வரையில் கட்டினால்தான் மீதிப் பணம் கொடுக்கமுடியும் என்று சொல்லக்கூடிய அந்த நிலைமையை நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். இல்லையென்று சொன்னால் அந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது. குறைந்தது மூன்றில் ஒரு பகுதியையாவது அவர்களுக்கு முதலிலேயே வழங்கி, அதற்குப் பின்னால், அவர்கள் ஓரளவிற்குக் கட்டடத்தைப் பூர்த்தி செய்தபிறகு, மீதிப் பணத்தை வழங்கி அந்த இடத்தில் அவர்கள் வசிப்பதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் கீழ் வீடு கட்டுபவர்களுக்கு அவர்களுடைய நிலப்பட்டாவை ஆய்வு செய்தவுடனே பணத்தை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். 3 சென்ட் நிலம் வைத்திருக்கக்கூடியவர்கள் 28,000 ரூபாயைக் கடனாகப் பெற்று அந்த இடத்திலே வீட்டைக் கட்டுகிறார்கள். அந்தக் கடனை அவர்கள் கட்டமுடியாததன் விளைவாக அந்தத் தொகை 92,000 ரூபாய் வரையிலே வட்டித் தொகையும் சேர்ந்து கிட்டத்தட்ட 3 மடங்கு, 4 மடங்காக உயர்ந்துவிடுகிறது. அவர்கள் குடியிருக்கும் அந்த 3 சென்ட் இடத்தை அப்படியே விற்றால்கூட 28,000 ரூபாய்கூட வராத சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு 50 ஆண்டுகளாகக் கட்டமுடியாததால் உயர்ந்திருக்கக்கூடிய அந்த வட்டித் தொகையைத் தள்ளுபடி செய்து அந்த அசலை மட்டும் பெறுவதற்கு உத்தரவை வழங்குவார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். இல்லையென்றால் அவர்களால் அந்தத் தொகையைக் கட்டவே முடியாது. நாங்கள் குடியிருக்கின்ற இடத்தின் மதிப்பு ஒரு இலட்சம் ரூபாய்கூட இருக்காது. ஆனால் நாங்கள் வாங்கிய கடன் தொகையைக் கட்டமுடியாததால் சேர்ந்திருக்கும் வட்டித் தொகை அதைவிட அதிகமாக இருக்கிறது. எனவே அதைக் குறைப்பதற்கு ஏதாவது முயற்சி எடுங்கள் என்று அதிகமான நபர்களிடமிருந்து கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே அரசு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நகர்ப்புற வளர்ச்சித் திட்டம். தற்போது வளர்ச்சி என்பது சென்னை, கோவை, மதுரை, சேலம் போன்ற நகரங்களில் மட்டுமல்லாமல் கிராமப்புறங்களில் இருக்கின்ற நகராட்சி, பேரூராட்சி போன்ற பகுதிகளில் கூட அனைத்து வசதிகளும் பெருகி வருகின்றன.

[திரு. ஜி. பழனிசாமி] [1998 மே 15

அந்தப் பகுதிகள்கூட வேகமாக வளர்ந்து வருகின்றன. விளைநிலங்கள் எல்லாம் இப்போது வீடுகளாக மாறிக் கொண்டு வருகின்றன. எனவே இந்தத் திட்டத்தில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

முதலில் நீங்கள் Master Plan-ஐக் கொண்டு வரவேண்டும். சாலைகளின் ஓரங்களில் நிறைய பேர்கள் கடைகளைக் கட்டிவிடுகிறார்கள், வீடுகளைக் கட்டிவிடுகிறார்கள். போக்குவரத்து நெரிசல் ஏற்பட்ட பின்னால் அவற்றை இடிக்க வேண்டும், அப்புறப்படுத்த வேண்டும் என்று சொல்லும்போது அவர்கள் Court-க்குச் சென்று வழக்குத் தொடுக்கின்ற நிலைமை இருக்கிறது. இன்றைக்கு ஒரு பேருந்து செல்கின்ற இடத்தில் நாளைக்கு 50 பேருந்துகள் செல்லக்கூடிய நிலைமைகள் இருப்பதை அறிந்து, இன்றைக்கு இருக்கும் மக்கட்தொகை நாளைக்கு பன்மடங்கு பெருகும் என்பதை அறிந்து வளர்ந்து வரும் நகரங்களில் அதற்கேற்றவாறு இப்போதே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நீங்கள் சாலை வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்று சொன்னால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இப்போதே எடுக்க வேண்டும். ஆனால் தமிழகத்தில் இதுபோன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இதுவரையில் எடுக்கப்படவில்லை. தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய பேரூராட்சி, நகராட்சி பகுதிகளில் வளர்ந்து வரும் இடங்களில் இதுபோன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள திருத்துறைப்பூண்டி நகரம் மிகப் பெரிய நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்ட பிறகுதான் இப்போதுதான் அந்த நகரத்தை நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சேர்த்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகர அமைப்பு முழுமைத் திட்டத்தின்கீழ் நகராட்சிகள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டு, இந்த ஆண்டு புதிதாகப் பேரூராட்சிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொளகிறேன். இந்த முழுமைத் திட்டத்தினகீழ் செய்யப்பட வேண்டிய சாலைகள், பல்வேறு இடங்களை ஒழுங்குபடுத்துகின்ற பணிகள் எல்லாம் தொடங்கப்பட்டுவிட்டன. திருத்துறைப்பூண்டி நகரம் இப்போதுதான் சேர்க்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 மே 15]

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீனளத் துறையைப்பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கடலோரப் பகுதி என்பது கிட்டத்தட்ட 1000 கி.மீட்டர் தூரம் வரை நம்முடைய மாநிலத்திலேயே இருக்கின்றது. இந்த மாநிலத்திலே எங்கும் இல்லாத அளவிற்கு கடல் வளங்கள் இருக்கின்றன. இத்தகைய கடல் வளங்களைப் பெற்றிருக்கக்கூடியதுதான் நம்முடைய தமிழ்நாடு.

முற்பகல் 10-30

1963 ஆம் ஆண்டு காமராஜர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் இந்த மீனளத் துறை தொடங்கப்பட்டது. கையில் துடுப்போடு கட்டுமரங்களில் மீன்பிடித்து வந்த மீனவ மக்கள், நாளடைவில் வர்த்தக ரீதியில் செயல்பட்டு இன்று மீனளத் துறை முன்னேற்றம் காணுகின்ற வகையிலே வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இதன் காரணமாக அன்னிய மூலதனம் தமிழகத்திற்கு அதிகமாகக் கிடைக்கின்ற வாய்ப்பும் ஏற்பட்டிருக்கிறது. 1963 ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்ட இந்த மீனளத் துறை சிறந்த முறையில் செயல்பட்டு இப்போது 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. 10 இலட்சம் மீனவர்கள் மீன்பிடித் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்றால், அதனுடைய துணைத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் 50 இலட்சம் பேர் இருப்பார்கள் என்று கருதுகிறேன். பிடிக்கப்பட்ட மீன்கள் கரைக்கு வந்தபின் அவற்றை விற்பனை செய்வதில் ஆண்களும் பெண்களும், நகரங்களிலும், கிராமங்களிலும் ஈடுபடுகிறார்கள். அப்படி இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் 50 இலட்சத்திற்கும் மேற்பட்டு இருப்பார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் நடந்த தொழிலாளர் நலத்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திலே தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். உழைக்கும் பாட்டாளிகளை ஒன்றுபடுத்தவும், அவர்களுடைய வாழ்க்கைக்கு உதவுவதற்கான திட்டங்களைக் கொண்டுவரவும் தொழிலாளர் நலத் துறை மானியத்திலே திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கிறன்றன. அதன் அடிப்படையில், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அவர்களுடைய நல்வாழ்வுக்கான திட்டங்களைத் திட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல நேரங்களில், மீனவர்கள் இரவு நேரங்களில்

[திரு. ஜி. பழனிசாமி] [1998 மே 15

சைக்கிள்களில் மீன் எடுத்துச் செல்லும்போது விபத்துக்குள்ளாகி இறந்து போகின்ற பரிதாபமான நிகழ்ச்சிகளையெல்லாம் நம்மால் காணமுடிகிறது. நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திலேதான் மீன்பிடித் தொழில் இடர்ப்பாடான நிலையில் இருக்கிறது. இயற்கைச் சீற்றங்கள் ஆண்டுதோறும் ஏற்படுகின்றன. வங்கக் கடலில் உருவாகும் புயல், மேற்குவங்கத்தையும், ஆந்திரத்தையும், இலங்கையையும் தாக்கக்கூடிய அளவுக்கு தமிழ்நாட்டின் கடல் எல்லையில் உருவாகிறது. அத்தகைய காலங்களில் நம்முடைய மீனவர்கள் கடல் கொந்தளிப்பிலே, புயல் காற்றிலே அகப்பட்டு திசைமாறிச் செல்லக்கூடிய அபாயகரமான நிலை ஆண்டுதோறும் ஏற்பட்டுவிடுகிறது. அதன் காரணமாக அவர்கள் பல்வேறு மாநிலங்களுக்கும், இலங்கைக்கும், ஆந்திர எல்லைக்கும் சென்றுவிடக்கூடிய நிலை ஏற்படுகிறது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், சென்னை கடற்கரை, கடலூர், கொள்ளிடம், கோடியக்கரை, நாகப்பட்டினம், அதிராமப் பட்டினம், தூத்துக்குடி, இராமேஸ்வரம் போன்ற பகுதிகளிலிருந்து படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லும்போது திசைமாறி இலங்கை எல்லைக்குள் சென்றுவிடுகிறார்கள். அப்படி அவர்கள் செல்லுகின்றபோது இலங்கை இராணுவத்தினர் நம்முடைய மீனவர்களைக் கடத்திச் சென்று துன்புறுத்துகின்ற துயரமான நிகழ்ச்சிகள் தொடர்ந்து ஆண்டுதோறும் நடந்து கொண்டிருக்கின்ற நிலையை நம்மால் பார்க்க முடிகிறது.

கச்சத் தீவுப் பிரச்சினை குறித்து 1974-ஆம் ஆண்டு இந்தியாவிற்கும் இலங்கைக்கும் ஏற்பட்டிருக்கின்ற ஒப்பந்த ஷரத்துக்களின்படி இந்திய அரசும், இலங்கை அரசும் சரியானபடி நடவடிக்கை எடுக்காததன் விளைவாக நூற்றுக்கணக்கான மீனவர்கள் தங்களுடைய படகுகளில் பிணமாக வந்துகொண்டிருக்கின்ற துயரக் காட்சி தமிழகத்தில் நடந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு கால கட்டத்திலும் இதைப்பற்றி நாம் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரும்போது, மாநில அரசு மத்திய அரசை அணுகுகிறது, கடிதம் எழுதுகிறது. (மணியடிக்கப்பெற்றது) மத்திய அரசு நடவடிக்கை எடுக்கிறோம் என்ற பதிலைத் தருகின்றதே தவிர, எந்த ஒரு பாதுகாப்பான நடவடிக்கைகயையும் எடுக்க முடியாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. கச்சத் தீவு பிரச்சினையில் நம்முடைய அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்று தெரியவில்லை. பிரதானமான நிதிநிலை அறிக்கையிலேகூட கச்சத் தீவுபற்றி ஒருவரிகூட



1998 மே 15] [திரு. ஜி. பழனிசாமி]

சொல்லப்படவில்லை. மீனவ மக்களின் பாதுகாப்புபற்றி ஒன்றும் சொல்லாமல் இருப்பது மீனவ மக்களை வஞ்சிக்கும் நிகழ்ச்சியாகும் என்பதை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, மீனவர் நலன் கருதி, கச்சத் தீவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக தமிழக அரசின் சார்பாக தனிச் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்து மத்திய அரசை அணுகி கச்சத் தீவை மீட்பதற்குண்டான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இல்லையென்றால், 1974-ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தை மீண்டும் பரிசீலனை செய்து நம்முடைய உரிமையை நீங்கள் நிலைநாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, நாகை மாவட்டத்தில், கொள்ளிடம், நாகப்பட்டினம், கோடியக்கரை, தொண்டியக்காடு வரை இருக்கக்கூடிய என்னுடைய தொகுதிக்குட்பட்டு இருக்கின்ற பகுதிகளில் மீனவ மக்கள் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாகப்பட்டினத்தில் இருக்கின்ற பழையனாறு, கோடியக்கரை ஆகிய இடங்களில் 'Jetty', என்ற படகு கட்டுகின்ற படகுத் துறை 1970-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஆனால் அது, நாளடைவிலே பலவீனப்பட்டு, முற்றிலுமாகச் செயல் இழந்த நிலையில் இருக்கிறது. அவ்விடத்தில் ஆயிரக்கணக்கான மீனவர்களுக்கு மீன் பிடிப்பதற்கான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 12 ஏக்கர் பரப்பிலே அந்தப் பயிற்சி நிலையம் அமைந்து இருக்கிறது. நாகப்பட்டினம், ஈச்சாங்குப்பம் போன்ற பகுதிகளில் இருக்கின்ற மீனவர்கள் மழை வெள்ளக் காலங்களில் அங்கே பக்கத்திலே இருக்கின்ற கருவாற்றிலே படகுகளைக் கரையிலே ஒதுக்குவார்கள். அங்குத் தூக்குப் பாலங்கள் இருந்தன. அவையெல்லாம் உடைந்துவிட்டன. இப்போது கான்கிரீட் பாலங்கள் அமைக்கப்பட்டு அங்கே படகுகள் உள்ளே வரமுடியாத ஒரு மோசமான நிலை இருக்கிறது. ஆகையினால் மீனவர்களாகப் பார்த்து அந்தப் படகுகளைச் சரி செய்யும் பணிகளை இப்போது செய்து கொண்டிருக்கின்றார்கள். எனவே, அந்தப் பாலங்களை உடனடியாகப் புனரமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

அதேபோல, சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளில் கிடைக்கக்கூடிய நல்ல மீன்கள் நாகப்பட்டினத்தில் கிடைக்கிறது என்று ஆய்வுகள் தெரிவித்துள்ளன. அய்வால் மீன், வெள்ளைவால் மீன்,

மார்ஸ் என்ற அய்யரல் மீன், கருவால் மீன், வெள்ளை சுறா மீன் போன்ற விலை உயர்ந்த மீன்கள் அந்தப் பகுதியிலே கிடைக்கின்றன. இவையெல்லாம் ஏற்றுமதிக்கும் கிடைக்கின்றன. மேலும் அதுபோல டைகர், சுறா, சிவப்புக் காளான் இதுபோன்ற நல்ல வகையான மீன்களும் அந்தப் பகுதியிலே கிடைக்கின்றன. இவை எல்லாம் வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாகின்றன. (மணியடிக்கப்பெற்றது) நல்ல மீன்கள் எல்லாம் கிடைக்கின்றன. நல்ல மீன்கள். இந்த மீன்கள் எல்லாம் உங்களுக்கு . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் அதிகமாகப் போனால் மீன்கள் எல்லாம் கருவாடாகிவிடும். (சிரிப்பு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று 5 Star Hotel களில் நண்டுகள் கிடைக்கின்றன. அந்த நண்டுகள் எல்லாம் விலை உயர்ந்த நண்டுகள். கிலோ 500 ரூபாய், 1000 ரூபாய் பெறுமான நண்டுகள், வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நண்டுகள் எல்லாம் அந்தப் பகுதியிலேதான் கிடைக்கின்றன. எனவே, அந்தப் பகுதி அதிக கிராக்கியுள்ள இடங்கள். ஆனால், அந்தப் பகுதியில் குடியிருக்கக்கூடிய மீனவர்களுக்கு சாலை வசதி, குடிநீர்வசதி, அதுபோல, குடியிருப்புகள் இவையெல்லாம் மிகவும் மோசமாக இருக்கின்றன. எவ்வளவோ திட்டங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்தில் 4000 வீடுகள் கட்டப்படும் என்றெல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டுதோறும் 2000 வீடுகள் புதுப்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் வரவேற்கிறேன். ஆனால் அந்த மீனவர்களுடைய வீடுகள் எப்படி இருக்கின்றன என்பதனைப் பார்க்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் நேரிடையாகச் சென்று அந்தப் பகுதிகளையெல்லாம் பார்க்க வேண்டும். ஆக, கடலோரமாகக் கட்டப்பட்டு இருக்கக்கூடிய வீடுகளில் எல்லாம் நான்கு சுவர்களும் அரிக்கப்பட்டு கூடுகள் மட்டும் மேலே இருக்கின்றன. எந்த நேரத்திலேயும் இடிந்து விழும் என்று சொல்லக்கூடிய அளவிற்கு மிகவும் மோசமாக இருக்கின்றன. அவர்களுக்கு, தரமான வீடுகளாகக் கட்ட வேண்டும். நல்ல சாலைகளை அமைத்துக் கொடுக்க வேண்டும். நல்ல குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டும். அங்கு அந்த மீனவ மக்களுடைய பள்ளிக்கூடங்கள் மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் முறையாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



இறுதியாக ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டம், உள்நாட்டு மீன்வளத்திற்கு ஓர் உதாரணமாக இருக்கிறது. பல கோடி ரூபாய் வரக்கூடிய அளவிற்கு இருக்கிறது. அங்கு விவசாயிகள் வேளாண்மையில்கூட அதிக கவனத்தைச் செலுத்தத் தயாராக இல்லை. இப்போது உள்நாட்டு மீனவர்கள் நல்ல இலாபம் கிடைக்கிறது என்பதனால் இதில் நாட்டம் கொள்கிறார்கள். அரசாங்கத் தரப்பிலிருந்து மீன்குஞ்சுகளை இலவசமாக வழங்குகிறார்கள். மானியத்திலேயும் வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அவை யாருக்கு வழங்கப்படுகின்றன, எங்கே வழங்கப்படுகின்றன, எந்த விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன என்பது தெரியவில்லை. அவையெல்லாம் முறையாக வளர்க்கக் கூடியவர்களுக்குப் போகவேண்டுமேயொழிய இடைத் தரகர்களுக்குப் போய்விடாமல் உண்மையாக மீன் உற்பத்தியில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு அவற்றை வழங்க வேண்டுமென்று கேட்டு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

## 6. செய்யூர் அனல் மின் திட்டம் குறித்து மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேரவையில் ஒரு விளக்கத்தை அளிப்பதற்காக அனுமதி கோரியிருக்கிறார்கள். அவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்.டி.பி.சி. செய்யூரில் 2000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய ஏற்கெனவே தேவையான தண்ணீர் கிடைக்காத காரணத்தினால் அந்தத் திட்டத்தை மத்திய அரசால் தொடர முடியவில்லை என்று இந்த அவையில் தொழில் மானியத்தின்போது 14-5-1998 அன்று மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசும்போது குறுக்கிட்டு நான் தெரிவித்தேன். இன்று கிடைத்துள்ள தகவலின்படி பாலாற்றிலிருந்து தண்ணீர் எடுத்து செய்யூரில் அமைக்க இருக்கும் அனல் மின் திட்டத்திற்குப் பயன்படுத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசும் அதற்கு ஒப்புதல் தந்துள்ளது. எனவே, என்.டி.பி.சி. மூலம் செய்யூரில் அமைக்க இருக்கும் அனல் மின் திட்டத்தில் முதல் கட்டமாக 1000 மெகாவாட் மின்சாரம் கி.பி. 2002-ல் உற்பத்தி ஆகும் என்பதை இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. க. வெங்கடேசன்.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மதுராந்தகம் தொகுதி மக்கள் சார்பாக நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன் . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்குக் காரணமானவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்படுகிறது.

## 5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைமீது விவாதம் தொடருகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான மீன்வளத் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்து, என்னுடைய சில கருத்துகளை இந்த மாமன்றத்தின்முன் வைக்கின்றேன்.

நமது மாநிலத்தில் கிட்டத்தட்ட 442 கடலோர மீனவ கிராமங்கள் உள்ளன. இவற்றிலே, என்னுடைய தொகுதியிலே ஏரிப்புறக் கரையிலே இருந்து தொடங்கி, கட்டுமாவடி வரை ஏறக்குறைய 22 மீனவ கிராமங்கள் உள்ளன. ஆண்டு ஒன்றுக்குக் கிட்டதட்ட 675 கோடி ரூபாயை அந்நியச் செலவாணியாகப் பெற்றுத் தருகின்ற மீனவ மக்களுக்கு இந்த அரசு அதிகச் சலுகைகளை வழங்கவில்லை. குறிப்பாக, எந்தவிதப் பாதுகாப்புமின்றி, பல்வேறு துயரங்களுக்கு இடையில் தமது குடும்பத்தைப் பாதுகாக்க, கடலுக்குச் சென்று உயிரைத் துச்சமாக நினைத்து மீன்பிடித் தொழிலை நடத்திக் கொண்டிருக்கின்ற மீனவர்களுக்கு அதிகச் சலுகைகளை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, ஓர் ஆண்டில், இந்த மீனவ மக்கள் மழை, புயல், வெள்ளக் காலங்களில் ஏறக்குறைய 6 மாத காலம் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல முடியாத நிலையில் இருக்கின்றார்கள். அந்த நேரத்திலே



அவர்கள் ஒருவேளை உணவுக்குக்கூடக் கஷ்டப்படுகின்ற நிலை இருக்கின்ற காரணத்தால், இந்த அரசு அவர்களுடைய நலனைக் கருத்திலே கொண்டு, கடற்கரைப் பகுதியிலே மீன்பிடிப்பவர்களுக்கான உபதொழிலை ஏற்படுத்தி, அந்த மீனவ மக்களுடைய வாழ்க்கையிலே ஒளிவிளக்கு ஏற்றி வைக்க வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முக்கியமான பிரச்சினை, ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லுகின்ற தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினருடைய தாக்குதலுக்கு உள்ளாகிறார்கள். பல்வேறு மீனவர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு அதிகப்படியான மீனவர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள். குறிப்பாக, கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லுகின்ற மீனவர்கள் ஒரு பக்கம் விபத்து பயத்திற்கும், இன்னொரு பக்கம் கடற்படையினர் தாக்குதல் பயத்திற்கும் ஆளாகி, இந்தத் தொழிலைச் செய்வதிலேயே ஒரு தொய்வான சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், இவற்றிற்கெல்லாம் ஒரு நிரந்தர முடிவு ஏற்படுத்துகின்ற வகையிலே, அவர்கள் சுதந்தரமாக மீன் பிடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையை எடுத்துச் சென்று, தமிழக மீனவர்களுடைய பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கடற்கரைப் பகுதிகளிலே இருக்கின்ற விசைப்படகு மீனவர்களுக்கு வழங்கப்படுகின்ற டீசல், மண்ணெண்ணெய் போன்ற பொருள்களுக்கு அதிகமான தட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மீனவர்கள் பயன்பெறுகின்ற வகையிலே, குறைந்த விலையிலே, அரசாங்கத்தின் மூலம் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தி, மீனவர்களுக்கு அந்தப் பொருட்கள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புயல் காலங்களில் மீன் பிடிக்கச் செல்லுகின்ற மீனவர்கள், மீன் துறை அலுவலர்களுடன் தொடர்பு கொள்வதற்கும், கடற்படையினருடன் தொடர்பு கொள்வதற்கும், அனைத்து மீனவப் படகுகளுக்கும் தொலைத் தொடர்பு வசதி ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் மூலம், வருடத்தில் மீன் பிடிக்க இயலாத 4 மாதங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகைக்கு, எட்டு மாதங்களில் மீனவர்கள்

மாதம் ஒன்றுக்கு செலுத்துகின்ற தொகையான ரூ. 45-க்குப் பதிலாக ரூ. 75/- ஆக மீனவர்களிடம் பெற்று, ரூ.1500/- வழங்க அரசு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, மீனவ கிராமங்களிலே இப்போது கல்வி மற்றும் சுகாதார வசதி போதுமானதாக இல்லை. ஆகவே, அங்கெல்லாம் ஆரம்பச் சுகாதார நிலையங்களையும், மீனவர் நலப் பள்ளிகளையும் மீன்வளத் துறையின் சார்பிலே ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுகொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ள மல்லிப்பட்டினம் மீன்பிடித் தளத்தில் ஏற்பட்டுள்ள பழுதை நீக்குவதற்கு, சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களும் ரூபாய் 17 இலட்சத்து 30 ஆயிரத்தை நிதியாக வழங்கியமைக்காக அந்தப் பகுதியிலே இருக்கின்ற மீனவ மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த நிதி ஆண்டிலே என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற சேதுபாவாசத்திரத்தில் ஒரு மீன்பிடித் தளம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு அங்கே ஏற்படுத்தினால், அந்தப் பகுதியிலே, கரும்பங்குடா, காரங்குடா, அம்மணிச்சத்திரம், செந்தலைப்பட்டினம் போன்ற கடற்கரைப் பகுதிகளிலே இருக்கின்ற மீனவ மக்கள் பயன்பெறுவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். நமது கடற்கரையில் பிடிக்கப்பெறுகின்ற மீன்களான இறால் போன்றவற்றை, கேரளா, ஆந்திரா ஆகிய பகுதிகளில் இருக்கின்றவர்கள் கொள்முதல் செய்து அதனைப் பதப்படுத்தி அந்நிய நாடுகளுக்கு அனுப்பி அந்நியச் செலாவணியைப் பெறுகின்றார்கள். ஆனால் நமது அரசு இதைச் செய்யாமல் இருக்கிறது. எனவே, தமிழக அரசு மீன்வளத் துறை மூலமாக, தமிழகத்திலே உற்பத்தியாகின்ற மீன்களை, இறால்களை அரசே கொள்முதல் செய்து அதைப் பதப்படுத்தி, அந்நிய நாடுகளுக்கு அனுப்பி அந்நியச் செலாவணி பெற்று, வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

எனது தொகுதியில் அமைந்துள்ள மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் அருகில் மீன்பிடித் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கி, அதன்மூலம் அந்தப் பகுதியில் மீன்பிடித் துறைமுகத்தில் உப பொருட்கள் தொழிற்சாலையையும் தொடங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் ஒரு கலங்கரை விளக்கம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீனவ மக்களுக்கு சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டத்தின் மூலமாக 4000 வீடுகள் வழங்கினார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு அதே அளவுதான் அறிவித்திருக்கிறார்கள். அதை இன்னும் கூடுதலாக்கி அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் சென்ற ஆண்டு மிகக் குறைந்த அளவில் வீடுகள் வழங்கப்பட்டன. எனது தொகுதியில் உள்ள சின்னமாவூர், ஏரிப்புறக்கரை, மந்திரிப்பட்டினம், சேதுபாவாசத்திரம், கணேசபுரம் போன்ற கிராமங்களில் அதிகப்படியான வீடுகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த வீடுகளைக் கட்டுவதற்கு ஒதுக்கப்படுகின்ற நிதி மிகக் குறைவாக இருக்கிறது, ஏறக்குறைய ரூ. 32,000 மட்டுமே ஒதுக்கியிருக்கின்ற காரணத்தால், ஒப்பந்தக்காரர்கள் ஆர்வத்தோடு இந்தப் பணியை எடுத்துச் செய்ய விரும்பாமல் இருக்கின்ற காரணத்தால், வீடுகள் எல்லாம், கட்டப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. எனவே, வீட்டுக்கான மதிப்பீட்டுத் தொகையை உயர்த்தி, அந்தப் பணிகளை விரைவிலே முடிப்பதற்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதியிலே இருக்கிற மீனவ மாணவர்களுக்குப் பயன்படுகின்ற வகையில் நவீன தொழில்நுட்ப விசைப் படகுகளை இயக்குவதற்கு தொழில்நுட்பப் பயிற்சிப் பள்ளியைப் பேராவூரணித் தொகுதியில் சேதுபாவாசத்திரத்திலாவது அல்லது மல்லிப்பட்டினத்திலாவது தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியில் இருக்கிற மீனவ மக்களுடைய வீடுகளுக்கு, சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் ஆகியும் இதுவரை மின்வசதி அளிக்கப்படாத இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே எனது தொகுதியில் இருக்கிற அனைத்து மீனவ கிராமங்களுக்கும், மீனவ மக்களுடைய வீடுகளுக்கும் மின்வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கட்டாயம் இந்தப் பொன்விழா ஆண்டில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத்

துணைத் தலைவர் அவர்களே, நமது அரசு, டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன், ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், ஒரு விளக்குடன் கூடிய வீடுகளே கட்டித்தரப்படுகின்றன. மேலும் மீனவ கிராமங்களுக்கு மின் வசதியை இந்த அரசு வழங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் நிவாரணத்தைப் பற்றிச் சொன்னார்கள். 45 ரூபாய் மீனவர்களிடமிருந்து பெற்று, மாநில அரசு 45 ரூபாய் வழங்கி மத்திய அரசு 45 ரூபாய் வழங்கி ஏற்படுத்தப்படுகிற நிதியிலிருந்து, புயலால், மழையால் மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்ற 4 மாதங்களுக்கு 1080 ரூபாய் வழங்கப்படுகிறது. மத்திய அரசு அந்தத் தொகையை நிறுத்தியபோதிலும்—முன்பு இருந்த அரசு அதை மீனவர்களுக்குத் தெரிவிக்காமல் அவர்களை ஏமாற்றிய நிலை இருந்தது—நமது அரசு ஆட்சிக்கு வந்தவுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு, மீனவர்கள் ஏமாற்றப்பட்டுவிடக்கூடாது என்ற எண்ணத்தில், மத்திய அரசு தர மறுத்தாலும், டாக்டர் கலைஞர் அரசு அதைத்தர ஒப்புக்கொண்டு மீனவர்களுக்கு வழங்கியுள்ளது. அந்தத் தொகையை மத்திய அரசு தர மறுத்தாலும் எப்படியாவது, மத்திய அரசிடம் வாதாடி வாங்கிவிடலாம் என்ற எண்ணத்தில், மீனவர்கள்மீது அக்கறை கொண்டு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்திக்கொண்டு வருகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், கச்சத் தீவு குறித்த பிரச்சினைபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். 1997 ஆம் ஆண்டு அந்த கச்சத் தீவு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டது. இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும், கச்சத் தீவுக்கு நமது மீனவர்கள் சென்று அங்கே உள்ள புனித அந்தோணியாரை வழிபடுவது, வலைகளைக் காய வைப்பது போன்றவற்றையெல்லாம் செய்து, அந்தத் தீவைப் பயன்படுத்திக் கொண்டுதான் வந்தார்கள். 1984-ஆம் ஆண்டு இலங்கை விடுதலைப் புலிகளுக்கும், சிங்களவர்களுக்கும் ஏற்பட்ட மோதல் காரணமாக நமது மீனவர்கள் அங்கே செல்ல முடியாத - பயத்தின் காரணமாகச் செல்ல முடியாத - சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, ஆட்சிப் பொறுப்பை ஏற்ற டாக்டர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு முறையும் மத்திய அரசைக் கலந்து கச்சத் தீவை மீட்பதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். இப்போதுகூட பாரதப்





பிரதமரைச் சந்தித்து அதைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த ஆண்டைச் சரியாகத் திருத்திச் செல்லுங்கள். 1997 ஆம் ஆண்டு என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மன்னிக்கவும், 1977... (குறுக்கீடு) 1984-ல் மோதல் ஏற்பட்டதால் மீனவர்கள் கச்சத்தீவுக்குச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டது என்று கூறினேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒப்படைக்கப்பட்டது, 1977 ஆம் ஆண்டு என்று சொல்லி இருக்கிறார்கள். திரு. சுந்தரம் உட்காருங்கள்.

**திரு எஸ். வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. தற்போது அரசு வழங்குகின்ற உதவித் தொகை ரூ. 1080; அதை ரூ. 1500 ஆக வரும் ஆண்டிலாவது உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், கடற்கரைப் பகுதியிலே இருக்கின்ற மீனவர்களுடைய சாலைகள் எல்லாம் இணைப்புச் சாலைகளாக 10 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட சாலைகளாகும்; அவை, தார்ச் சாலைகளாக இருந்தன; ஆனால், தற்போது போடப்படுகின்ற சாலைகள் எல்லாம் வெறும் கருங்கற்களாலான சாலைகளாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே இருக்கின்ற மீன்பிடிக்கலங்களுக்கும், மீன்பிடித் துறைமுகங்களுக்கும் வாகனங்கள் செல்வதற்குச் சிரமமாக இருக்கின்ற காரணத்தினால் இந்த நிதி ஆண்டில் மிக அதிகப்படியான கடற்கரை கிராமங்களில் உள்ள சாலைகளைத் தார்ச் சாலைகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. டி. மணி. (குறுக்கீடு) திரு. திருஞானசம்பந்தம், நீங்கள் 13 நிமிடம் பேசிவிட்டீர்கள்.

**திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:** மேலும், கடலாடித் தொகுதியில் இருக்கின்ற முகையூர்ப் பகுதி மீனவர்கள் அதிகமான அளவிலே இராமேஸ்வரத்திற்கு மீன் பிடிக்கச் செல்கின்றார்கள். அங்கே மீனவர்களிடையே போட்டி நிலவுகிறது. காரணம் அந்த முகையூர்ப் பகுதியிலே நாட்டுப் படகுகளையும் விசைப் படகுகளையும் நிறுத்துவதற்கான வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. அங்கு துறைமுகம் அமைப்பதற்கான வசதிகள் இருந்தாலும், அங்கு தடுப்புச் சுவர் ஏற்படுத்தாத காரணத்தினால், அங்குள்ள மீனவர்கள் எல்லாம் இராமேஸ்வரம் செல்ல வேண்டி இருக்கிறது. அங்கு இருக்கின்ற கடற்கரைப் பாதுகாவலர்களால் அவர்கள் சுட்டுக் கொல்லப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அந்த முகையூர்ப் பகுதியில் மீனவர்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே மீன்பிடிக் கலம் அமைத்து, தடுப்புச் சுவர் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு எனது தொகுதியிலே உள்ள மந்திரிப்பட்டினம், புதுப்பட்டினம் போன்ற பகுதிகளிலே மீனவ மக்களுக்குச் சமுதாயக் கூடமும், புயல் பாதுகாப்பு இல்லமும் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி, மீன்வளம் என்ற தலைப்பிலே சுருக்கமாகச் சில விவரங்களைச் சொல்ல இருக்கின்றேன். நகர்ப்புற வளர்ச்சி சம்பந்தமாக நம்முடைய தலைநகரில் உள்ள ஒரு பகுதியை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காந்தி நகரில் உள்ள வீடுகள் இந்தத் துறையின் மூலமாகக் கட்டப்பட்டவையா என்பது தெரியவில்லை; அங்குள்ள வீடுகளுக்கு ஆஸ்பெஸ்டாஸ் போட்டுக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், அந்த வீடுகள் கூவத்தின் கரையில் இருக்கின்றன...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காந்திநகர் இராணுவத்திற்குச் சொந்தமான நிலமாகும். அங்கு இருக்கிற குடியிருப்புகள் 1950. அவற்றிற்கு நம்முடைய முதல்வர் அவர்களுடைய நிதியிலிருந்து சுமார் 1 கோடியே 75 லட்சம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இராணுவத் துறைக்கு எழுதி, அந்த நிலம்



குடிசை மாற்று வாரியத்திற்கு வேண்டும் என்று கேட்டோம். அவர்கள் கொடுக்க மறுத்த காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சருடைய நிதியிலிருந்து அங்குள்ள வீடுகளுக்கு ஆஸ்பெஸ்டாஸ் போடப்பட்டு இருக்கிறது. மறுபடியும் அங்கு இருக்கின்ற மக்கள் எல்லாம் தங்கள் வீடுகளுக்குச் சுவர் எழுப்பித்தர வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். அதற்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு குடியிருப்புக்கு சுமார் 6 ஆயிரம் ரூபாய் வீதம், 2 கோடியே 69 இலட்சம் ரூபாய் ஒதுக்கி உள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

**திரு. டி. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு நன்றி. நான் ஒரு தகவலை மட்டும்தான் இதிலே சொல்ல விரும்புகிறேன். கூவத்தோடு சேர்ந்திருக்கிற பகுதி அது. அந்த ஆற்றில் ஓர் அடி தண்ணீர் உயர்ந்து வந்தால்கூட குடியிருப்புகளில் தண்ணீர் ஏறிவிடும். ஓரத்தில் வரும்போது பக்க சுவர் எழுப்பி அந்த சாக்கடைத் தண்ணீர் ஏறாமல் பாதுகாக்கப்படவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். இரண்டாவது, ஆஸ்பெஸ்டாஸ் கூரை போட்டிருக்கிறீர்கள். அது முழுமையாகப் போடப்படவில்லை. சுற்றுச் சுவர் கட்டப்படவில்லை. அதற்குள்ளே சாலை வசதிகள் இல்லை. மின் விளக்கு வசதியில்லை. பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை. இவற்றை சரி செய்யவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கு சாலை வசதி செய்துகொடுக்க மாநகராட்சி மன்றம் முடிவு செய்து மாநகர மேயர் அவர்களும் ஒத்துக்கொண்டு சாலைகள் போடப்பட்டுவிட்டன. 1956 வீடுகளில் 100 வீடுகளுக்குத்தான் நாம் வசதிகளைச் செய்யமுடியவில்லை. அதற்குக் காரணம் அங்கே ஏற்பட்ட தகராறுதான். ஆகவே விரைவில் அங்கும் சுவர் எழுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் 10 நாளைக்கு முன்பு நான் போய்ப் பார்த்ததில்தான் இந்தத் தகவலைச் சொல்கிறேன். இரண்டாவதாக நகரத்திற்குள் இருக்கக்கூடிய சி.ஐ.டி. நகரில் அரசாங்கத்திற்குச் சொந்தமான சமூகக் கூடம் முன்பு இருந்தது. ஆனால் இப்போது அங்கே இரண்டு கம்பு மட்டும்தான் இருக்கிறது.

[திரு. டி. மணி] [1998 மே 15

யார் யாரோ அதை ஆக்கிரமித்திருக்கிறார்கள். அதை அந்த ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து எடுத்து நல்ல ஒரு சமூகக் கூடத்தைக் கட்டி அந்தப் பகுதியில் வாழக்கூடியவர்களுக்கு திருமணங்கள் செய்வதற்கும் மற்ற மற்றக் காரியங்கள் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். மற்ற விவரங்களுக்கு நான் வரவில்லை. ஏனென்றால் நேரம் போதுமானதாக இல்லை.

மீன் வளத்துறை என்பது உணவுத்துறைக்குச் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படவேண்டும். ஏனென்றால் உணவில் அரிசிக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அதைப்போல உணவு என்ற அடிப்படையில்தான் இதனுடைய உற்பத்தியை நாம் பார்க்கவேண்டும். அந்த அடிப்படையில் ஒரு விரிவான கண்ணோட்டம் இந்தத் துறையில் உண்டா என்று எனக்குச் சந்தேகம் உள்ளது. அது சம்பந்தமான விளக்கக்குறிப்புகளை இங்கே பார்க்கும்போது அந்த அளவுக்கு விளக்கங்கள் இல்லை. எனவே அதில் கூடுதலாக அரசு கவனம் செலுத்த வேண்டும்.

இரண்டாவது, இது அந்நியச் செலவாணியைத் தேடித் தருகிற ஒரு முக்கியமான துறை. மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன இப்படி ஏற்றுமதி செய்வதில் இறால் பற்றிச் சொன்னார்கள். பெருவாரியான மீனவர்கள் எங்கே செல்கிறார்கள் என்றால் கோவா வரைக்கும் செல்கிறார்கள். சீசன் நேரத்தில் சுறா மீனைப் பிடிக்க கோவா செல்கிறார்கள். ஆனால் கோவாவுக்குப் போனால் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. முந்தைய ஆட்சிக் காலத்தில் எங்களுடைய பகுதியைச் சேர்ந்த வள்ளவிளையைச் சேர்ந்த 9 மீனவக் குடும்பங்கள் கோவாவுக்குச் சென்று மீன்பிடிக்கப் போனதில் அவர்களுடைய படகுகளை எல்லாம் உடைத்து அழித்து லட்சக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்படுத்தினார்கள். அரசாங்கத் துறையினுடைய எல்லாக் கதவுகளையும் தட்டிப் பார்த்தோம். எந்தப் பயனும் ஏற்படவில்லை. ஆகவே இனியாகிலும் இந்த அரசு அவர்களுக்குப் பாதுகாப்புத் தருகிற வகையில் படகோ, வலையோ மானியமாகக் கொடுக்கவேண்டும். அவர்களுக்குக் கடனாகக் கொடுத்தால் ஒன்றும் பண்ணமுடியாது. ஆகவே அந்த அடிப்படையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடைசி பகுதியில் இருக்கிற நீரோடியிலிருந்து சென்னை பகுதி வரை கடல் ஆக்கிரமிப்பு என்பது



1998 மே 15] [திரு. டி. மணி]

காலாகாலத்தில் ஏற்படக்கூடிய துரதிருஷ்டமான ஒரு நிகழ்ச்சி. குடிசைகள் எல்லாம் அடித்துச் செல்லப்படக்கூடிய நிகழ்ச்சிகள் அடிக்கடி நடக்கின்றன. கல்லைப் போடுவது, பாதுகாப்பது என்பது ஒருவித முறை. ஆனால் இந்தக் கடலில் கல்லைப் போடுவது என்ற விதிமுறை எந்த அளவுக்குப் பாதுகாப்பாக இருக்கிறது என்று தெரியவில்லை. அதனால் நிறைய பயன் உண்டா என்பது எல்லாம் சந்தேகத்திற்குரிய விஷயம். எனவே பொதுவாகச் சொல்லப்படுவது, அதிகப்படியான அலைகள் இருக்கக்கூடிய பகுதிகளைப் பார்த்து, கேரளாவில் செய்து இருப்பதுபோன்று தூண்டில் வளைவுகளை இங்கேயும் ஏற்படுத்துவது. அப்படிக் கட்டுவதுபோல் செய்தால் பாதுகாப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

1980-ல் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளையெல்லாம் பார்த்துச் சொன்னபோதுகூட கோடிக்கணக்கான பணம் செலவழியும், அதனால் சாத்தியமில்லை என்று சொல்லிவிட்டார்கள். அலைகள் அதிகமாக இருப்பதன் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய மீனவரைப் பொறுத்த வரையில் அந்த ஒரு மாதம் இரண்டு மாதம்தான், நவம்பர்-டிசம்பரில் தான் மீன் பிடிக்கமுடியும். அதன்பிறகு வெளியில் மீன் பிடிக்கப் போனால் தாக்குதலுக்குத்தான் ஆளாகிறார்கள். அவர்கள் எங்கே போகிறார்கள் என்றால், கேரளாவுக்குப் போகிறார்கள், ஆந்திராவுக்குப் போகிறார்கள், கோவாவுக்குப் போகிறார்கள். இன்னும் அதற்குப் பிறகு எந்த ஊரில் மீன் கிடைக்கும் என்று தேடித் திரிகின்ற ஒரு நிலை இருக்கிறது. ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் குறைந்தபட்சம் வள்ளவிளை அல்லது மார்த்தாண்டம் துறை, குளச்சல் தொகுதியில் ஒரு பகுதி அல்லது இனயம்புத்தன்துறை ஆகிய நான்கு பகுதிகளில் தூண்டில் வளைவு கட்டினால் மட்டும்தான் இந்த மழைக் காலங்களில் அலை வருகிற நேரங்களில் அவர்கள் தைரியமாக மீன் பிடிக்கச் செல்லமுடியும். அதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தில் மீன்பிடிக்கும் சிறிய கப்பல்கள் நான்கு இருக்கின்றன. பல இடங்களில் அதில் போய் மீன் பிடிக்கிறார்கள். அது இலாபமாக இருப்பதாகவும் துறையில் சொல்கிறார் கள். கிட்டத்தட்ட, கடந்த ஆண்டும் அதற்கு முந்தைய வருஷமும் 30 அல்லது 40 லட்சம் ரூபாய் இலாபம் என்று கூறியிருந்தார்கள். நான் இதிலே கேட்டுக் கொள்வது எல்லாம் இன்னும் சிறிய கப்பலைக்கூடப் புதிதாக இந்தத் துறை வாங்கவேண்டும். அதிலும் ஆஸ்திரேலியாவில்

வாங்கக்கூடிய கப்பல்தான் இந்த நவீன காலகட்டத்தில் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்த அடிப்படையில் ஒன்றிரண்டு கப்பல்களை வாங்கி இந்தத் துறையை இன்னும் அபிவிருத்தி செய்வது என்பது தேவையாகும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்ததாக, தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் 250-க்கு மேல் விசைப்படகுகள் இருக்கின்றன. துறைமுகத்திற்குள்ளேயிருந்து வெளியே வருகின்றபோது மீனவர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கிடைப்பதில்லை. அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

1997 ஆம் ஆண்டில் ஆரம்பித்த மீனவர் கல்லூரியிலிருந்து 270 மாணவர்கள் படித்து பட்டம் பெற்று வெளியில் வந்தார்கள். அதிலே 24 பேருக்கு மட்டும்தான் வேலை கிடைத்திருக்கிறது. மீதியுள்ளவர்களுக்கு வேலை கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. எனவே கிராமங்களிலே இருக்கக்கூடிய உள்நாட்டு மீன் வளத்தை அபிவிருத்தி செய்கின்றபோது அந்தப் பகுதிகளிலே இவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க முடியுமா என்பதைப்பற்றி அரசு யோசனை செய்ய வேண்டும். அப்படி பார்க்கின்றபோது பல கிராமங்களிலே பல இடங்கள் இருக்கின்றன. குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலே நான் 3 இடங்களைச் சொல்ல முடியும். பேச்சிப்பாறை நீர்த்தேக்கம், பெருஞ்சாணி, சிற்றாறு அணை-2 இந்தப் பகுதிகளிலே இலட்சக்கணக்கான ரூபாய் செலவிட்டு மீன் குஞ்சுகளைப் பாதுகாத்துக்கொண்டு அவை வளர்ந்ததற்குப் பின்னால் காயலிலே விடுவது வழக்கம். ஆனால் இப்போது 4 வருடங்களாக யாரும் கண்டுகொள்வதில்லை. எனவே, இதன்மூலமாக மீன் வளர்ச்சி என்பதிலும், மீன் உற்பத்தி என்பதிலும் பெருக்கம் ஏற்படுத்துவதற்கும் அதிலே இந்தப் படித்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க முடியுமா என்பதைப்பற்றியும் அரசு ஆராய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீனவக் கூட்டுறவு இணையம் மூலமாக 60 ரூபாய் பிரீமியமாக வசூல் செய்யப்பட்டு விபத்து ஏற்பட்டால் ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கும் திட்டம் ஏற்கெனவே இருக்கின்றது. ஆனால் உள்நாட்டு மீனவர்களுக்கு இதிலே சம்பந்தம் இல்லை. ஏனென்று சொன்னால் இந்த மீன்களை அவர்கள் சந்தைக் கடைகளுக்குக்



கொண்டு செல்கின்றார்கள். போகின்ற வேளையிலே ஏதாவது விபத்து வந்து போய்விட்டால் அவனுக்கு இதிலே சம்பந்தம் இல்லாமல் இருக்கின்றது. எனவே உள்நாட்டு மீனவர்களுக்கும்........

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுக் காப்புறுதித் திட்டத்தில் வருடத்திற்கு 60 ரூபாய் பிரீமியம் செலுத்தி உள்நாட்டு மீனவர்களும், கடல் மீனவர்களும் பங்கு பெறுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்ததற்கு நன்றி. அது உள்நாட்டு மீனவர்களுக்கும் முறையாகக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அதிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே நான் பிரத்தியேகமாகச் சொல்வதெல்லாம் தேங்காய்பட்டணத்திலே தாமிரபரணியாறு முடிகின்ற பகுதி, கடலிலே சங்கமம் ஆகின்ற பகுதி, நெல்லையிலே இருக்கின்ற தாமிரபரணியாறு சங்கமம் ஆகின்ற பகுதி, பழையாறு கடலில் போய்ச் சேருகின்ற பகுதி, இந்தப் பகுதிகளிலே மழைக் காலங்களிலே மண் மூடி விடுகின்றது. இந்த 3 பகுதிகளிலும் மண்ணை எடுப்பதற்குரிய நடவடிக்கைக்காக 30,000 ரூபாய் இந்தப் பகுதி மீனவர்களுக்கும் அந்தப்பகுதி கிராமவாசிகளுக்கும் கொடுக்கின்றார்கள். மீனவர்கள் அது போதுமானதாக இல்லை. அதை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்கிறார்கள்.

அடுத்து, தேங்காய்ப்பட்டணத்திற்கு அருகிலே, நீண்ட நாட்களாக, அதாவது 1977-லேயிருந்து ஒரு கோரிக்கையை வைத்து வருகின்றார்கள். மீன்பிடிப் படகுகளை வைப்பதற்கான ஒரு தங்கு தளம் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அதற்குரிய ஏற்பாட்டை இந்த அரசு செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், அதிலேயிருந்து 10 கிலோமீட்டர் வரையிலும் மேற்குப் பக்கமாகச் செல்வதற்கு அங்கே ஒரு வாய்க்கால் இருக்கின்றது. ஏ.வி.எம். கால்வாய். இந்தக் கால்வாயிலேகூட இந்தத் தங்கு தளத்தை அமைத்தால் இந்த மீன் பிடிப் படகுகளை ஒதுக்கிக் கொள்வதற்கும், பராமரிப்பதற்கும் மீன்களை துரிதமாக சந்தைக் கடைகளிலே கொண்டுவருவதற்குமான வாய்ப்புகள் வரும். அந்த அடிப்படையிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மீனவர்கள் விசைப்படகானாலும் சரி மற்ற கட்டுமரங்களானாலும் சரி, இப்போதெல்லாம் இயந்திரத்தைக் கொண்டுதான் ஓட்டுகின்றார்கள். அதற்கு டீசல், மண்ணெண்ணெய் இவற்றை மானிய விலையில் என்று சொல்வதைவிட என்னைப் பொறுத்தவரையில் பாதி விலையில் கொடுத்தால் மட்டும்தான் இந்த மீன்வர்களினுடைய எதிர்காலம் பாதுகாப்பாக இருக்கும். அந்த அடிப்படையிலே தமிழ்நாடு முழுவதிலும் இருக்கின்ற மீனவப் பொதுமக்களின் இயந்திரங்களுக்குத் தேவையான டீசல் மண்ணெண்ணெய் போன்றவற்றை அதிகமாக வழங்கி, அதைப் பாதி விலையில் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். கேரளாவிலே என்ன செய்கிறார்கள் என்றால் 250 லிட்டர் கொடுக்கிறார்கள். அந்த நிலையைக் கையாள்வது நல்லது என்பது என்னுடைய கருத்து.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருக்கின்ற மீன்பிடிப் படகுகளுக்கு வருடத்திற்கு ஒரு முறை licence பெற்றாக வேண்டும் என்ற ஒரு நிலை இருக்கிறது. அந்த நேரத்தில் மீனவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்று சொன்னால், சில நேரம் கோவாவிலே இருக்கிறார்கள். சில நேரம் கேரளாவினுடைய கடைசிப் பகுதியிலே இருக்கின்றார்கள். இல்லையென்று சொன்னால் ஆந்திராவிலே இருக்கின்றார்கள். அதாவது எங்கே உள்ளவர்கள்? கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ளவர்கள், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அந்த நேரத்திலே வந்து licence-ஐப் புதுப்பித்துக்கொள்ள வாய்ப்பில்லை. எனவே அதற்கு ஓர் ஒழுங்கான நடவடிக்கை எடுத்து ஏதாவது ஒரு மாதம் என்று நிர்ணயித்து அந்த மாதத்திலே வந்து கன்னியாகுமரி மாவட்டத்திலே அதைப் பதிவு செய்து கொள்வதற்கும் அல்லது licence-ஐப் புதுப்பித்துக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

*முற்பகல் 11-05*

அடுத்து, இன்னொன்று. விபத்துக் காலத்திலே அவர்களைக் கண்டறிவதற்கு விசைப்படகு, மோட்டார் படகு ஒன்று இருக்கின்றது. வேகமாகச் சென்று கண்டறிவதற்கான படகு என்று ஓர் ஏற்பாடு இருக்கிறது. சமீபத்திலே தூத்தூரிலேகூட மீன் பிடிக்கச் சென்றவர்கள் எங்கே போனார்கள்? மகாராஷ்டிரத்திற்குப் போனார்கள். மகாராஷ்டிரத்திற்குப் போன இடத்திலே 27-1-1998-லே காணாமல் போய்விட்டார்கள். ஒரு மாதமாகக் காணவில்லை. அந்தக் காணாமல்



சென்ற மீனவர்களைத் திரும்பக் கண்டுபிடிப்பதற்காக அந்தத் துறையோடு பல பேச்சுவார்த்தைகள் நடத்திப் பார்த்தேன். ஆனால் எந்தவிதமான நடவடிக்கைக்கும் அங்கே மாவட்டத்திலே இருக்கின்றவர்கள் தயாராக இல்லை. மீண்டும் கேரள மாநிலத்தோடு தொடர்பு கொண்டு, அதற்குப் பின்னால் நம்முடைய கப்பல் போக்குவரத்தைச் சார்ந்தவர்கள் கண்டறிந்து அவர்களைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்துவிட ஏற்பாடு செய்தார்கள். ஆனால் இந்தத் துறை ஏனென்று விசாரிக்கவில்லை. ஒரு வீட்டிலே 3 மீனவர்கள் - அவர்கள் எல்லாம் ஒரு மாதமாகப் பட்டினியாக இருந்தார்கள். குறைந்தபட்சம் ஒரு நல்ல வார்த்தை சொல்லி, அவர்கள் வரும் வரையில், செலவுக்கு பத்து ரூபாயாவது வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லக்கூடிய அந்த நல்ல தன்மைகூட இல்லாமல் இருக்கின்ற நிலை இருக்கின்றது. *(மணியடிக்கப்பெற்றது)* எனவே இந்த விபத்துக் காலங்களில் இந்த இடர்ப்பாடுகளைப் போக்குவதற்கு Speed Boat வைத்துத் தேடுவது என்ற சம்பிரதாயத்தை அங்கே ஏற்படுத்த வேண்டும். அந்த மாவட்டத்திலே ஒரு மையத்தை உருவாக்க வேண்டும். அந்த வகையிலே மீனவர்களுடைய இந்தக் குறைந்தபட்சக் கோரிக்கைகளை நம்முடைய தமிழக அரசு சரிவர அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டுமரத்திற்குப் பெருவாரியாக அல்பீசியா என்ற மரத்தைப் பயன்படுத்துகிறார்கள். அதற்கு இப்போது கிராக்கி இருப்பதால், கிடைப்பதில்லை. அதனால் பெருவாரியாக மானிய விலையிலே படகுகளைத் தந்து உதவ ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மீ. அ. வைதியலிங்கம்.

**திரு. மீ. அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மீன்வளத் துறை மானியங்கள்மீது ஒருசில கருத்துகளை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பை நல்கிய உங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 37 ஆண்டுகளாகத் தமிழகத்திலே நடைபெற்று இதுவரையிலே 3,50,027 குடியிருப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த வளர்ச்சித் திட்டத்தினுடைய

பயன்கள் எப்படி இருக்கின்றன என்று அளவுகோல் இட வேண்டுமென்றால், 1970-71ஆம் ஆண்டில் 4.83 கோடியாக இருந்த இந்த நிதி ஆதாரம், ஒதுக்கப்பட்ட நிதி, 1998-99-ல் 252 கோடியாக உயர்ந்து இருப்பதிலேயிருந்து இந்தத் திட்டம் எந்த அளவிற்குத் தமிழக மக்களுக்கு, நலிந்த பிரிவினருக்கு, நடுத்தர மக்களுக்கு, அரசு அலுவலர்களுக்குப் பயன் தந்திருக்கிறது என்பதற்கு இது ஓர் அளவுகோல் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அதுவும் கி.பி. 2011-ல் 175 இலட்சம் குடியிருப்புகள் கட்டப்பட உள்ளன என்றும் அதிலே 80 விழுக்காடுகள் நலிவுற்றோர், குறைந்த வருவாய்ப் பிரிவினர்கள் பயன்பெறுவார்கள் என்று சுட்டிக்காட்டி இருப்பதும் பாராட்டத்தக்கதாகும். வீட்டுவசதி வாரியம், அதைப்போல நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்காக காலி இடங்கள் மேம்பாடு, ஒரு பகுதியைப் பொது மக்களுக்கு ஒதுக்கீடு செய்துவிட்டு, எஞ்சிய பகுதியை, சாலை, கழிவுநீர், தெருவிளக்கு, பூங்காக்கள் போன்ற வசதிகளைச் செய்வதற்காக ஒதுக்குகிறார்கள். அப்படி ஒதுக்குகிறபோது, ஒவ்வொரு இடத்திலேயும் சாலை, பூங்காக்கள், கழிவுநீர், தெருவிளக்கு வசதிகளை உருவாக்கித் தருகிறபோது, அப்படி ஒதுக்குகிறபோது அவர்களுக்கு 40 மீட்டருக்கு ஒரு தெருவிளக்கு, மின்விளக்கு என்று அமைத்துத் தருகிறோம், 20 குடும்பத்திற்கு ஒரு குடிநீர்க் குழாய் அமைத்துத் தருகிறோம்; அது போதுமானதுதான். ஆனால், 10 குடும்பத்திற்கு ஒரு குளியலறை, 10 குடும்பத்திற்கு ஒரு கழிவறை என்பது போதுமானதாக இருக்காது என்கிற அடிப்படையில் அவற்றை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். பொது மக்கள் குறை கேட்பதற்காக, மண்டலங்கள்தோறும் அலுவலர்களை நியமிக்க முயற்சிப்பதாகச் சொல்லி இருப்பது பாராட்டுக்குரிய அம்சமாகும். அதைப்போலவே விற்பனை ஒப்பாவணங்கள்—இது மிக முக்கியமானது - 62,166 ஒப்பாவணங்கள் வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இவற்றிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. சில இடங்களிலே நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு இந்த மனைகள் ஒதுக்கப்படுகிறபோது—ஒரு குறிப்பிட்ட விலைக்கு மனைகள், வீடுகள் ஒதுக்குகிறோம்—அவர்கள் அந்தத் தொகையினைச் செலுத்தியதற்குப் பிறகும், அவர்களில் பல பேருக்கு இன்னும் உரிமை வழங்கப்படவில்லை; பட்டா வழங்கப்படவில்லை; ஆவணங்கள் தரப்படவில்லை என்று சொல்கிறபோது மாண்புமிகு அமைச்சரிடத்திலே அணுகினால்...



முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த இடங்கள் சம்பந்தமாக நீதிமன்றத்திலே வழக்குகள் இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு அந்த ஆவணங்களைக் கொடுக்க முடியாமல் இருக்கிறது. நீதிமன்ற வழக்குகள் முடிந்த பிறகு அவர்களுக்கு அவை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மீ. அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதற்காகத்தான் அமைச்சருடைய விளக்கத்திற்கு முன்பாகச் சொல்லிவிட வந்தேன். அவர்கள் அப்படி வழக்கு முடிந்ததற்குப் பின்னால், அரசு எந்தத் தொகை செலுத்த வேண்டும் என்று ஒப்பந்தம் செய்ததோ, அந்தத் தொகையைச் செலுத்தியதற்குப் பின்னால் வழக்கு மன்றத்திலே நில உரிமையாளர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பாகிவிட்ட காரணத்தால் இன்னும் பணத்தை இரட்டிப்பாகச் செலுத்தவேண்டும் என்று அரசு சொல்வதாகவும், அதைச் செலுத்த முடியாததோடு ஒரு குறிப்பிட்ட தொகை, அரசு நிர்ணயித்த தொகைக்குத்தான் நாங்கள் பெற்றோம், ஒப்பந்தம் செய்தோம் என்று குறிப்பிட்டு, அவர்களுடைய ஒப்பாவணங்களைக் கொடுக்கவேண்டும் என்று பொது மக்கள் விரும்புகிறார்கள்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வீடுகள் ஒதுக்கப்படும்போதே, இதிலே, பின்னாலே இதனால் ஏற்படும் விலைகளை ஏற்றுக்கொள்கிறோம் என்று அந்த ஒப்பந்த ஷரத்திலேயே அவர்கள் கையெழுத்திட்டுத்தான் அந்த வீட்டைப் பெறுகிறார்கள். ஆகவே, அது அவர்களைக் கட்டுப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மீ. அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப்படி அவர்களைக் கட்டுப்படுத்தும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். நானும் அதைப் புரிந்துவைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், பெறுகிறவர்கள் அத்தனை பேர்களும், ஒப்பந்தத்திலே கையெழுத்து இடுகிறபோது, அதை முழுமையாகப் படித்துப் பார்த்து, அதிலே ஏதாவது வந்தால், நீதி மன்றத்திலே தீர்ப்பு அவர்களுக்குச் சாதகமாகிவிட்டால், பணம் பெறவேண்டும் என்ற

[திரு. மீ.அ. வைதியலிங்கம்] [1998 மே 15

நம்பிக்கையோடு அல்லது தெரிந்துகொண்டு கையொப்பம் இடுகிறார்களா என்றால் இல்லை. அவர்கள் நடுத்தர மக்கள். அவர்கள் கிடைத்தால் போதும் என்று கையொப்பம் இடுகிறார்கள்; பெற்றுக்கொள்கிறார்கள்; விலையை ஒப்புக்கொள்கிறார்கள். பிறகு நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பின்னாலே அரசுக்கு இழப்பு ஏற்பட்டு, அதை இரட்டிப்பாகத் தரவேண்டும் என்று வருவதை அருள்கூர்ந்து மீண்டும் அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பட்டா அளிக்கிற விஷயங்களில், பல பேர்கள் கட்ட முடியாதவர்கள், நலிந்தவர்கள். அவர்கள், வட்டிக்கு வட்டி கட்டவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் பணம் கட்ட வேண்டும் என்றால், வட்டி 5,000 ரூபாய் என்று இருக்கிறது. அதைப்பற்றிக் கேட்கிறபோது, அதிகாரிகள்கூட சொல்கிறார்கள்; குடிசை மாற்று வாரியத்திலே கேட்கிறபோதுகூட சொல்கிறார்கள்; இது கடன் வாங்கித் தரப்பட்ட நிதி; வட்டி செலுத்தவேண்டும்; எப்படி வட்டி இல்லாமல் பெற்றுக்கொள்ள முடியும் என்று கேட்கிறார்கள். உண்மைதான். நாமும் அவர்களை இனிமேல் காலி செய்ய முடியாது. இந்த முதலீட்டையாவது வாங்கினால் இனிமேல் நாம் செலுத்துகிற வட்டியாவது குறையாதா என்பதை எண்ணிப் பார்த்து, அந்த மக்களைக் காலி செய்யவும் முடியாது, அவர்களிடத்திலே வட்டி வசூல் செய்ய முடியாது என்ற காரணத்தால், குறைந்தபட்சம் அசலை வசூல் செய்து கொண்டு, அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்தால், இந்த அரசுக்குப் பட்டா வழங்கிய பெருமையும் இருக்கும்; ஏழை எளியவர்கள் பயன் பெற்றதாகவும் இருக்கும் என்பதையும் தெரிவித்து மாண்புமிகு குடிசை மாற்று வாரியத் துறை அமைச்சர் அவர்களும், அதேபோல் வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களும், இதனை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்கள் வாடகை வீட்டுவசதித் திட்டத்தின் மூலமாக 30 கோடி நிதி உதவி பெற்று, வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் ஏற்பாடு செய்ய இருக்கிறது என்று சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அரசு அலுவலர்களுக்கு நாம் அளித்திருக்கிற வீடுகள் நிறைவானதாக இன்னும் முடிவுறவில்லை என்பதை நாம் இந்த நேரத்திலே ஒப்புக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.



1998 மே 15] [திரு. மீ.அ. வைதியலிங்கம்]

அதைப்போலவே, 1,61,860 குடும்பங்களுக்கு நில உரிமத்துடன் கூடிய குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் அமைக்கப்படுகின்றன. இதிலே குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் 2,04,565 குடும்பங்களுக்கு அமைக்கப்பட்டுள்ளது பாராட்டத்தக்கது. 1998-99 ஆம் ஆண்டில், இதனுடைய மூலதனச் செலவினம் ரூ.51.40 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்தத் துறை நல்லமுறையில் செயலாற்றுவதற்கு பாராட்டாக இது இருக்கிறது என்றால், மிகையாகாது. 1998 வரை, 63,468 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. அரசு இதிலே ரூ.92.90 கோடி மானியமாக வழங்கி இருக்கிறது. அப்படி வழங்கி கட்டப்பட்டு இருக்கிற வீடுகளுக்கு இடம் பார்க்கிறபோது, இப்போதுகூட இந்த ஆண்டு துரைப்பாக்கத்திலே 1,500 குடியிருப்புகள் அமைப்பதற்காக குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகத் திட்டம் தீட்டப்பட்டு அந்த இடம் தயார் நிலைக்கு ஆளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் இந்த அரசை, மாண்புமிகு அமைச்சர் அவர்களை அருள்கூர்ந்து கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் தேர்ந்தெடுத்து இருக்கிற இடம், தண்ணீர் தேங்கிக் கடலுக்குச் செல்கிற பகுதி. Water stagnated place என்று குறிப்பிடுவார்கள். அந்தப் பகுதியிலே 9 அடி, 10 அடி உயரத்திற்குத் தூக்கி, குடியிருப்புகளை அமைப்பதனுடைய விளைவாக ஏற்கெனவே குடியிருக்கிற மக்களை வெள்ளம் பாதிக்கிற அபாயம் ஏற்படுகிற காரணத்தால், அந்த இடத்திலே நீங்கள் அமைக்க இருக்கிற கால்வாய்களை 60 அடி அகலம் என்பதை 100 அடியாக அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, கிழக்குக் கடற்கரைச் சாலையையும், பழைய மகாபலிபுரம் சாலையையும், இணைக்கிற சாலை பக்கிங்காம் கால்வாயிலே இருக்கிற பாலம்; அது இரண்டே இரண்டு வழிகளைக் கொண்டதாக இருக்கிறது. மிகப் பெரிய வெள்ளம் வருகிறபோது, அந்த இரண்டு வழிகள் போதுமானதாக இல்லாமல் அந்தப் பகுதியிலே இருக்கிற சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், துரைப்பாக்கம் போன்ற கிராமங்கள் பெரும் வெள்ளச் சேதத்திற்கு ஆளாகின்றன. இப்போது 9 அடி, 10 அடி உயரம் தூக்குவதன் மூலமாக மிக அதிகமாக வெள்ளச் சேதம் ஏற்படும் என்ற காரணத்தால், இந்தத் திட்டத்தின் விளைவாகவே, இன்னும் இரண்டு வழிகளை அந்தப் பாலத்திலே உருவாக்கித் தருவதற்கு மாண்புமிகு குடிசை மாற்று வாரியத்தினுடைய அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த 4700 குடியிருப்புகளும் உருவாக்கப்படுகிறபோது 10-வது நிதிக் குழுவிலேயிருந்து அதற்காக 60 கோடி ஒதுக்கி இருப்பது பாராட்டுக்குரியதும், நன்றிக்குரியதுமாகும். அநேகமாக அந்தப் பகுதியில் பட்டா வழங்குவது சம்பந்தமாக ஏற்கெனவே நான் சுட்டிக்காட்டி இருக்கிறேன்.

முற்பகல் 11-15

நம்முடைய மீனளத் துறையின் மூலமாக நீலாங்கரையிலே ஓர் இறால் குஞ்சு பொரிப்புப் பிரிவு இயங்கி வருகிறது. அதிலே 1997-98ஆம் ஆண்டில் ரூ.13.98 லட்சம் இறால் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 5.581 லட்சம் வருவாய் வருவதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்த இடம் மிகச் சிறந்த வளம் மிக்க இடம் என்கிற காரணத்தாலே அதை விரிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊனமுற்றோருக்கும், இறப்பவர்களுக்கும் வழங்கும் தொகையை ரூ. 25,000-லிருந்து ரூ. 35,000-ஆக உயர்த்தியிருப்பதை நான் வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன்.

அதைப்போலவே பகுதி ஊனமுற்றவர்களுக்கும், நிரந்தரமாக ஊனமுற்றால் அவர்களுக்கும் முறையே ரூ. 12,500-லிருந்து ரூ. 17,500 என உயர்த்தியிருக்கிறீர்கள். அதுவும் பாராட்டுக்குரியது. மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் அவர்களையும் - மாண்புமிகு முதல்வர் அவர்களும் வீற்றிருக்கிறார்கள் - முதல்வர் அவர்களையும் கேட்டுக் கொள்வதெல்லாம் பனையூர்க்குப்பத்தில் ஏற்பட்ட பட்டாசு வெடிவிபத்தின் காரணமாக 13 பேருக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதியுதவி அளித்திருக்கிறார்கள். அந்தக் குப்பத்திலிருக்கின்ற 5 மீனவ வீடுகள் பெரும் சேதமடைந்து, அம்மக்கள் அந்த வீடுகளில் வாழமுடியாத நிலையை எய்தியிருக்கிறார்கள். அருள்கூர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மீனளத் துறையின் மூலமாவது அந்த வீடுகளையும் பழுது பார்த்துத் தருவதற்கு உத்தரவிடவேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டு, வாய்ப்பிற்கு நன்றிகூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்.





**திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறும் நிதிநிலை அறிக்கை கோரிக்கை எண் 32, 33, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மற்றும் மீனளம் குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நான் சார்ந்துள்ள இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக நன்றியினை உரித்தாக்கிக்கொள்கின்றேன்.

50-வது ஆண்டு சுதந்திரதினப் பொன்விழா ஆண்டில், சமத்துவபுரம் கண்ட சரித்திர நாயகனாக விளங்கும் தமிழக முதல்வர் அவர்கள், 2 ஆண்டுகளை முடித்து 3-வது ஆண்டு தொடக்கத்தில் நடைபெறும் இம்மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

5 ஆண்டுகளில் செய்ய முடியாத எண்ணற்ற நல்ல பல நலத் திட்டங்களை அனைவரும் பாராட்டும் வகையில் 2 ஆண்டுகளில் ஏழை எளிய மக்கள், அரசு அதிகாரிகள், அலுவலர்கள், வியாபாரிகள் அனைவரும் பாராட்டும் வகையில் இவ்வரசு செய்து பீடுநடை போடுகின்றது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1998-99ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கேட்டுக்கொண்டதற்கிணங்க, சென்னை மாநகரத்தை ஏ.1 வகை நகரம் எனவும், வீட்டு வாடகைப்படி வழங்குவதற்கு ஏ-வகை நகரம் எனவும் மத்திய அரசு வகைப்படுத்தியுள்ளதை வரவேற்று பாராட்டுகின்றேன்.

சமுதாயத்திலுள்ள நடுத்தர வருவாய் மற்றும் அதற்கு மேம்பட்டுள்ள வருவாயில் உள்ள மக்களின் வீட்டுவசதித் தேவையை நிறைவு செய்திட, ஏழைகள், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்கள், நலிவுற்றோர், குறைந்த வருவாயினர், நடுத்தர வருவாயினர், உயர் வருவாயினர் . என சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவு மக்களுடைய வீட்டு வசதித் தேவைகளை நிறைவு செய்திட வீட்டுவசதித் துறையின் மூலமாகத் தேர்வு செய்து இந்தத் துறை சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றது.

குடும்பத்திற்கு ஒரு வீடு, கூட்டுறவே நாட்டுயர்வு என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்ட இவ்வாரியம், இத்துறை, கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. கடந்த கால ஆட்சியிலே இங்கே முறையான தேர்தல் நடத்தப்பெறவில்லை. அங்கே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்

தேர்தல் வாக்குறுதி அளித்ததுபோல் உள்ளாட்சித் தேர்தலையும், கூட்டுறவுத் தேர்தலையும் முறையாக நடத்துவேன் என்று சொல்லியதற்கு இணங்க அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் முறையான கூட்டுறவுத் தேர்தலை நடத்தியிருக்கின்றது. அந்த அடிப்படையில் urban-rural-நகர்ப்புறப் பகுதி, கிராமப்புறப் பகுதி, என இங்கே, தேர்தல் முறையாக நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் 859 கூட்டுறவுச் சங்கங்கள், 185 வட்ட கூட்டுறவுச் சங்கங்கள், இங்கே வீடு கட்டும் முதன்மைச் சங்கங்களுக்கு தேர்தல் முறையாக நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றது. இச்சங்கங்களை எல்லாம் இணைத்துச் செயல்படும், Housing Federation என்ற இணையம் இங்கே சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. இந்த இணையத்திற்கு இதுவரை தேர்தல் நடத்தப்படவில்லை. மாண்புமிகு நம்முடைய பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் காலத்திலே இந்த இணையத்திற்குத் தேர்தல் நடத்தப்பட்டிருக்கின்றது. அதற்குப் பின்னால் இதுவரை தேர்தல் நடத்தப்பெறாமல், கடந்த 31-3-1998 அன்று தேனாம்பேட்டையில் நடைபெற்ற மாநில பொதுக் குழுக் கூட்டத்தில் இணையத்திற்கு உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டது. துறையைச் சார்ந்த அதிகாரிகளிடத்திலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் இந்தக் கோரிக்கை எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றது. உடனடியாக இந்த இணையத்திற்குத் தேர்தலை நடத்தி, முறையாக இச்சங்கங்கள் செயல்படுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமாய் இம்மாமன்றத்தின் வாயிலாக அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், உரிய அரசு அதிகாரிகளின்கீழ் செயல்படுகின்ற நிர்வாகமானது கோப்புகளை அனுப்புகின்ற நேரத்திலே காலதாமதம் செய்கின்றது. தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கங்களுக்கு, தலைவர்கள், இயக்குநர்கள், அங்கே செயல்படுகின்ற...

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது சங்கங்களுக்குத்தான் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன. கூட்டுறவு வங்கியாக இருந்தாலும், எல்லாவற்றிலும் இப்போது அனைத்து மேல்மட்டக் கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்துவதாகக் கூட்டுறவு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்





அறிவித்திருக்கிறார்கள். விரைவில் அவற்றிற்குத் தேர்தல் நடத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்போது நடக்கின்ற நிர்வாகத்திலே சில குறைபாடுகள் இருப்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அங்கே அனுப்பப் படுகின்ற கோப்புகள் உரிய அதிகாரிகளால் காலதாமதப்படுத்தப் படுகின்ற காரணத்தினாலே இந்த இணையத்திற்குத் தேர்தல் முறையாக நடத்தப்பட்டு தலைவர்கள், இயக்குநர்கள் வந்துவிட்டால், பணிகள் நல்லமுறையிலே துரிதமாக நடத்தப்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற கருத்தினை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இணையத்திற்கு பல்வேறு நிதி நிறுவனங்களிலிருந்து நிதி வழங்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு, முதன்மைச் சங்கங்களான சங்கங்களுக்கு கடன் வழங்கப்படுகின்ற நேரத்திலே 1 சதவிகிதம் இணையத்திற்கு எடுத்துக்கொண்டு 1/2 சதவிகிதம் மட்டும் முதன்மைச் சங்கங்களுக்கு நிதி வழங்கப்படுகின்றது. தயவுசெய்து இந்த நிதியை அதாவது 1/2 சதவிகிதம் என்பதை அதிகரித்துக் கொடுத்தால் மிக நன்றாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கின்றேன். அதேபோன்று end fee என்று வசூலிக்கப்படுகின்ற இந்தத் தொகையையும், இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கோப்புகள் அனுப்பப்படுவதிலே-உதாரணமாக, என்னுடைய தொகுதியிலே கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி, பள்ளப்பட்டியிலே, இதுவரை இந்தக் கூட்டுறவுச் சங்கம் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் எங்களுக்கு இரண்டு சங்கங்களுக்கு அங்கே அனுமதி கொடுத்திருக்கின்றார்கள். கடந்த 23-9-1997-லே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே வருகை தந்து இரண்டு கூட்டுறவுச் சங்கங்களைத் திறந்து வைத்திருக்கிறார்கள். அப்படி திறந்து வைக்கப்பட்ட இடத்திலே 365 உறுப்பினர்கள் அங்கே சேர்க்கப்பட்டு, கடந்த 10-10-1997, 27-10-1997 மற்றும் 5-12-1997 ஆகிய தேதிகளிலே 45 கோப்புகள் இணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. அனுப்பி வைக்கப்பட்ட பின்னர், 4 மாத காலத்திற்குப் பிறகு 23-2-1998-ல் 9 நபர்களுக்கு, 9 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய், அதற்குப் பின்னால் 4-4-1998-ல் 14 நபர்களுக்கு 9 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாயாக இரண்டு கட்டமாக பணம்

[திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்] [1998 மே 15

பெறப்பட்டிருக்கிறது. இன்னும் மீதமுள்ள 22 கோப்புகளுக்கும் பணம் வராமல் இருந்தது. மாநிலப் பொதுக் குழுவிலே எடுத்துச் சொன்னதற்கு இணங்கி, அமைச்சர் அவர்களின் துரித நடவடிக்கை காரணமாக மீண்டும் அந்தத் தொகை 7-4-1998-லும் 22-4-1998-லும் வழங்கப்பட்டிருக்கிறது. இதுதவிர, இன்னும் 12 கோப்புகள் தேக்கத்திலே இருக்கின்றன. இதிலே ஒரு சிறிய தவறு ஏற்பட்டிருக்கிறது. அதை இங்கே சுட்டிக்காட்டி, தமிழகத்திலே உள்ள அத்தனை வங்கிகளுக்கும், இதைத் திருத்தம் செய்து கொடுக்க வேண்டுமாய், இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உதாரணமாக, 7-4-1998-லே என்னுடைய சங்கத்திற்கு Cheque அனுப்பப்பட்டதாகத் தகவல் சொல்லியிருக்கிறார்கள். 14-4-1998 வரை அந்த Cheque வந்து சேரவில்லை. ஆனால், எங்களுக்கு D.D.யாக எடுத்துக் கொடுத்துவிடுங்கள் என்று சொன்னால், அந்தச் செலவை யார் ஏற்றுக்கொள்வது என்ற நிலையை உரிய அதிகாரிகள் கேள்வியாக எழுப்புகிறார்கள். ஆகவே, இதுபோன்று தமிழகத்திலுள்ள அத்தனை சங்கங்களுக்கும் உரிய பகுதியிலே ஒரு மாதம் ஆகியும் அந்த Cheque கிடைக்காமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை D.D.யாக எடுத்துக் கொடுத்தால் அந்தச் சங்கங்களுக்கு வசதியாக இருக்கும். இதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இப்படி வருகின்ற நேரத்திலே அதற்குரிய வட்டியை உரிய தேதியிலிருந்து அவர்கள் வசூல் செய்துவிடுகின்றார்கள். ஆனால், நாம் அங்கு செலுத்துகின்ற தொகையை, சங்கத்தின் மூலமாகச் செலுத்துகின்ற தொகையை, அனாமத்தாக வைத்துக்கொண்டு, இரண்டு வாரத்திற்குப் பின்னால் வரவு வைத்துக்கொள்கின்ற காரணத்தினால் கூடுதலாக வட்டியை முதன்மைச் சங்கத்திற்குச் செலுத்தும் சிரமத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இதனைத் தயவுசெய்து சரிசெய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இப்போது, வீடு கட்டுவதற்குக் கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கு ரூ.2 இலட்சம் தொகை ஒதுக்கப்பட்டு, கொடுக்கப்பட்டு வருகின்றது. கட்டுமானப் பணிகளும், சிமெண்ட், கூலி போன்றவையும் கூடுதலாக ஆகியிருக்கிற காரணத்தினால் இந்தத் தொகையை 3 லட்சம் ரூபாயாக உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, கிராமப்பகுதியிலே வீடு கட்ட ரூ. 60,000, ரூ. 80,000 என்று இருக்கின்ற நிதிநிலையை ரூ. 1 இலட்சம் 1½ லட்சம் வரை உயரத்தித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.



1998 மே 15] [திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்]

மேலும் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய சாதாரண மக்கள், நலிவுற்ற மக்களுக்காக மத்திய, மாநில அரசுகள் நிதி உதவியோடு வழங்கப்படுகிற தொகை ரூ. 14,000 முதல் ரூ. 16,000 வரையாகும். வழங்கப்படுகின்ற இந்தத் தொகையைக் கூடுதல் செய்து கொடுக்க வேண்டும். சாதாரணமாக இப்போது கிராமப் பகுதியிலே 35,000 ரூபாயிலே Group houseகள் கட்டப்படுகின்றன. 16,000 ரூபாயிலே எப்படி வீடுகளைக் கட்டி முடிக்க முடியும் என்ற நிலையை உணர்ந்து, தயவுசெய்து இந்தத் தொகையை உயர்த்தித்தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல புதிய சங்கங்களுக்கு நிதி ஒதுக்கப்படுகின்ற நேரத்திலே பழைய சங்கங்களுக்கு, நலிவுற்ற சங்கங்களாக இருக்கின்ற சங்கங்களிலிருந்து அங்கே செலுத்த வேண்டிய தொகை இணையத்திற்கு பாக்கியிருக்கிற காரணத்தினால் இவற்றைச் சரி செய்து புதிய சங்கங்களுக்கு நிதியை உடனடியாக வழங்கி சங்கங்கள் மேலும் வளரச் செய்வதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன். தமிழகத்தைப் பொறுத்தவரை ஏராளமான நலிவுற்ற சங்கங்கள் இங்கே இருந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சங்கங்களை மேலும் வலுப்படுத்துவதற்கு அந்தச் சங்கங்களுடைய பாக்கிகளை 50 ஆண்டுகள் ஆகியும் செலுத்தாமல் இருக்கின்றவர்களுக்கு அரசு ஒரு மானியத் தொகை கொடுத்து முதல்வர் அவர்களிடத்திலே கலந்து பேசி அவற்றைத் தள்ளுபடி செய்துவிட்டு மீண்டும் அந்தச் சங்கம் சிறந்த முறையிலே செயல்படுவதற்குரிய முறைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக, நாகர்கோவிலில் இருக்கக்கூடிய சங்கத்தில் அதிகப்படியாக அப்படிப்பட்ட ஆட்கள் இருக்கின்ற காரணத்தினால் அது தலைநிமிர முடியாமல் நலிவுற்று வருகின்றது. அதை முறைப்படுத்துவதற்குரிய முறைகளைச் செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று Housing Corporation என்ற ஒரு நிறுவனத்தை 25-3-1997-லே அரசு ஏற்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது. அதை இதுவரை செயல்படுத்தாமல் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் துரிதமாக நடத்துவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

அதேபோன்று மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. செங்கை சிவம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு

[திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்] [1998 மே 15

தொகுதியிலே வீடு கட்டுவதற்குரிய ஒரு கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். அதை நான் வலியுறுத்துகிறேன். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் கட்டப்படும் குடியிருப்புகளிலே சென்னையிலே கட்டப்படுகின்ற குடியிருப்புகளில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று ஒரு சதவிகிதத்தை ஒதுக்கிக் கொடுத்து சலுகை விலையிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மீனளத் துறையின் சார்பாக ஒரு சில கருத்துகளை இங்கே வைக்கிறேன். நாகூர், பாண்டிச்சேரி, நாகப்பட்டினம், செந்தூர் ஆகிய நாகைப் பகுதியில் உள்ள மீனவ கிராமங்களுக்கு மீனவ குடியிருப்புகள் கட்டித்தர வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, புவனகிரி தொகுதியிலே இருக்கின்ற முடைசல் ஓடைகிராமத்திலே மீன் விற்பனைக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அங்கே அதை செய்து கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நாகையில் மீன்பிடிப்புத் துறைமுகம் ஒன்று அமைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையும் ஆய்வு செய்து, அமைத்துக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டு, நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. மதிவாணன்.

**திரு. இரா. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான மீன்வளத் துறையிலே மீனவர்களுக்கு நல்ல திட்டங்களை அறிவித்து அதைச் செயல்படுத்துகின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒட்டுமொத்த மீனவ மக்கள் சார்பில் நன்றியையும் வணக்கத்தையும் கூறி, ஒருசில கருத்துகளை இந்த அவையில் வைக்க விரும்புகிறேன். 442 மீனவ கிராமங்களில் வசிக்கின்ற மீனவர்களுக்கு சிங்காரவேலர் வீடு கட்டும் திட்டத்தில் கடந்த ஆண்டு 4,000 வீடுகளும் அதற்கு ரூ. 12.8 கோடியும், வருகின்ற ஆண்டிலே 4,000 வீடுகள் கட்ட ரூ. 13.15 கோடியும் அதேபோன்று முந்தைய ஆண்டுகளிலே மீனவர்களுக்கு வீடு கட்டித் தந்த அந்த வீடுகளைப் பழுது பார்க்க ஒரு வீட்டிற்கு ரூ. 5,000 வீதம் நிதி உதவி வழங்கி அந்தத் திட்டத்தைச் சிறப்பாகச்



1998 மே 15] [திரு. இரா. மதிவாணன்]

செயல்படுத்தி வருகின்ற நம்முடைய அரசை மனதார மீனவ மக்களின் சார்பிலே பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பெயரிலே வீடு கட்டும் திட்டம் அறிவித்திருந்தாலும் என்னுடைய இராயபுரம் தொகுதியிலே, சிங்காரவேலர் பகுதியிலே, ஒரு பகுதியிலே 201 வீடுகளும் இன்னொரு பகுதியிலே 221 வீடுகளும் கட்டித்தர இந்த ஆண்டிலே பணத்தை ஒதுக்கித் தந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தொகுதி மக்களின் சார்பிலே பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆட்சியில் மீன்பிடிக்கின்ற இடத்தைத் தெரிந்து அதற்கேற்ப, கிட்டத்தட்ட 65,000 ரூபாய் மதிப்புள்ள மீன் பிடிக்கும் இடங்களைக் காட்டும் எக்கோ சென்டர் கருவி 50 பேர்களுக்கு, 25 விழுக்காடு மானியத்திலே வழங்க அரசு முன் வந்தது. அதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, திருவள்ளூர் மாவட்டத்திலே குறிப்பாக திருவொற்றியூர், எண்ணூர் பகுதியிலே தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் விஷத் தன்மை வாய்ந்த கழிவு நீர், கடலில் கலப்பதால் மீன் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டு மீனவர்கள் பெரிதும் அவதிக்கு உள்ளாகிறார்கள். ஆகவே, தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவைச் சரியாகச் சுத்தப்படுத்தும் சுத்திகரிப்பு வசதி இல்லாத தொழிற் சாலைகள்மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு விபத்து ஏற்படும் நேரங்களில் உடனடியாகத் தொடர்புகொள்வதற்கு **Walkie-Talkie** வழங்க ஆணை பிறப்பித்த நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் மீனவர் பங்காக ரூ. 360-ம், மத்திய அரசின் பங்காக 360-ம், மாநில அரசின் பங்காக ரூ. 360-ம் ஆக மொத்தம் ரூ. 1080 வழங்கி வருகிறோம். இந்தத் திட்டத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு 8.50 கோடி ரூபாய் ஒதுக்கித்தந்தார்கள். அதேபோல் நடப்பு ஆண்டிலும் ஒதுக்கித் தந்த நம்முடைய மாண்புமிகு

[திரு. இரா. மதிவாணன்] [1998 மே 15

முதலமைச்சர் அவர்களுக்கு ஒட்டுமொத்த மீனவர்கள் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குபடுத்த 5 ரோந்து படகுகள் வாங்க ரூபாய் 450 இலட்சம் ஒதுக்கி அந்தப் பணிகளை முடித்து அந்தப் படகுகளை இந்த ஆண்டு இயக்க ஏற்பாடு செய்த நம்முடைய மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு டீசல் மானியம் கேட்டு மீனவர்கள் சாலை மறியல் செய்யப்போவதாக அறிவித்தார்கள். டீசல் மானியத்தை உயர்த்தவேண்டும் என்று சென்னை விசைப் படகு உரிமையாளர்கள் நமது அரசுக்குக் கோரிக்கை வைத்தார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களும் பேச்சுவார்த்தை நடத்தியதன் அடிப்படையில் மீனவர்களுக்காகக் கேட்ட அந்த மானியத்தை நம்முடைய அன்புத் தலைவர் வழங்குவதாக அறிவித்தார்கள். வழங்குவதாக அறிவித்து இருந்தும், வேண்டும் என்றே திட்டமிட்டு, சாலை மறியல் என்று அறிவித்து, வேண்டும் என்றே பெரும் பணத்தைச் செலவிட்டு சென்னையில் சாலை மறியல் செய்தார்கள். அதேபோல் இது தொடர்பாகக் கடலூரில் இந்தச் சாலை மறியல் ஜாதிக் கலவரமாக ஏற்பட்டு மீனவர்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. ஆகவே இதுபோன்ற, கேட்ட கோரிக்கையை நிறைவேற்றிய பிறகும் சாலை மறியல், இடையூறுகள் செய்கின்ற சமூக விரோதிகளை, வருகின்ற கால கட்டத்தில் நமது அரசு கடுமையாகத் தண்டிக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஒருங்கிணைந்த மீனவர் மேம்பாட்டுத் திட்டத்தில் முதல் கட்டமாக இந்தத் திட்டத்திற்காக அரசு ரூபாய் 12.10 கோடி ஒதுக்கியிருக்கிறது. 31-3-1998 முடிய ரூபாய் 9.43 கோடி மதிப்புள்ள 1432 மீன்பிடிச் சாதனங்களான கட்டுமரம், வள்ளம் மற்றும் இயந்திரம், பிளைவுட் படகுகள், மீன்பிடி வலைகள் போன்ற மீன்பிடிச் சாதனங்களை கிட்டத்தட்ட 3500 மீனவர்களுக்கு வழங்க இந்த அரசு உத்தேசித்திருப்பதற்காக மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 மே 15] [திரு. இரா. மதிவாணன்]

குறிப்பாக, 1997 ஆம் ஆண்டு 187 மீனவ கிராமங்களுக்கு 1205 தெரு விளக்குகள் அமைக்க ரூபாய் 43.23 லட்சம் அரசு வழங்கியிருக்கிறது. அதேபோல் 1997-98 ஆம் ஆண்டு 165 மீனவ கிராமங்களில் 1188 தெரு விளக்குகளை அமைத்திட அரசு ரூபாய் 48.97 லட்சம் நிதி ஒதுக்கியிருக்கிறது. இந்தத் திட்டத்தில் நடப்பு ஆண்டில், 1998-99 ஆம் ஆண்டில் இதேபோல் விளக்கு வசதிகளைக் கிராமங்களுக்கு அமைத்துத் தந்த நமது அரசுக்கு மீனவ மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராயபுரம் பகுதியில் இருக்கின்ற மீன்பிடித் துறைமுகத்தில் Finger jetty அதாவது கை விரல் அமைப்புக் கொண்ட படகு கட்டும் தளத்தை இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ கட்டித்தர அரசு ஆவன செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டு, மீனவர்கள் கேட்காமலேயே, நல்ல பல சட்டங்களையும், திட்டங்களையும் கொண்டுவரும் இந்த அரசுக்கு குறிப்பாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீனவர்களின் ஒட்டுமொத்த சார்பில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைப் பணிவோடு தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன் நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. பொன்னார்டு.

**திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனித வாழ்வுக்கு கட்டாயமான உறைவிடம் கொடுக்கும் வீட்டு வசதி மானியம், அதேபோல் நாவுக்கு ருசி, பசிக்கு உணவு, உடலுக்கு ஊட்டச் சத்து, அதோடு அந்நியச் செலாவணியும் தருகின்ற மீனளம் ஆகிய இரு மானியங்களின்மீதும் பேசுகின்ற வாய்ப்பு தந்த தங்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அரசுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊமையன் கண்ட கனவாக 50 ஆண்டுகளாக இருந்த பல்வேறு திட்டங்களை மேல் மணக்குடி, கீழ் மணக்குடி இணைப்பு, பாலம், குளச்சல் துறைமுக மேம்பாடு, ஆசாரி பள்ளம் கண் மருத்துவமனை, அதே மருத்துவமனையைக் கல்லூரியாக மாற்றித்தர இருப்பது, ரப்பர் தொழிற்சாலை அமைத்துத் தர இருப்பது, சுய மரியாதைச் சுடர் பொதுவுடைமைப் பூங்கா என்று கருதப்பட்ட ஜீவா நினைவு மண்டபம், பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு நினைவு மண்டபம், திருவள்ளுவருக்குச் சிலை மற்றும் கடலோர இணைப்புச் சாலைகள் போன்ற பல்வேறு நலத் திட்டங்களை வழங்க முன் வந்துள்ள

மாண்புமிகு முதல்வரவர்களுக்கும், அனைத்துத் துறை அமைச்சர்களுக்கும், அதைச் செயல்படுத்தும் அரசு அதிகாரிகளுக்கும் என்னுடைய பணிவான நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

வருமானம் குறைந்த பல்வேறு பிரிவினருக்கு வீடு கட்ட அரசு சலுகைகள் பல வழங்கியிருப்பதைப் பாராட்டுகிறேன். அதேநேரத்திலே, அரசுக் குடியிருப்புகளில் வாடகைக்கு இருக்கிற அரசு ஊழியர்களில் பலர் அரசு வழங்கும் கடன்களைப் பெற்று வீடு கட்ட முடியாத நிலையில் தொடர்ந்து அங்கேயே குடியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு, அரசு ஊழியர்களுக்குப் பெரியார் நகரில் வீடு கட்டிக் கொடுக்க வசதி செய்து கொடுத்திருப்பதைப் போல, முன்னுரிமை அடிப்படையில் வீட்டு மனைகள் அளிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், அப்படிச் செய்தால், அவர்கள் ஓய்வு பெறும் போது கிடைக்கும் சேமிப்புத் தொகையைக் கொண்டு ஒரு சிறு வீடு கட்டிக் கொள்ள வசதியாக இருக்கும்.

மேலும், அரசுக் குடியிருப்புகளில் வசித்து வரும் அரசு ஊழியர்களுக்கு ஊதியக் குழுப் பரிந்துரைப்படி கிடைக்கும் பயன் கிடைக்க வாய்ப்பு இல்லை என்று சொல்கிறார்கள். ஏனென்றால், தற்போது வாடகை நிர்ணயிப்பின்படி ஏற்கெனவே அவர்கள் செலுத்துவதைப் போல, இரண்டு மடங்கிற்கு மேல். அதாவது ரூபாய் 500 வாடகை செலுத்துகிறவர்கள், இப்பொழுது 1100 ரூபாய் செலுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். எல்லோரையும்போல இவர்களும் பயன்பெறும் வகையில் குறைந்த வாடகை (Economic rent) நிர்ணயிக்க வேண்டுகிறேன்.

சிறு தொழில் செய்து வாழ்க்கை நடத்த, கிராமங்களிலேயிருந்து நகரங்களுக்கு வரும் ஏழை எளிய மக்களுக்குப் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதைக் கருத்திற்கொண்டு, சாலையோரங்களில் அவர்கள் குடியேறுவதைத் தவிர்க்க நகருக்கு வெளியே வீட்டு வசதி செய்து கொடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்களுக்கு ஆண்டுதோறும் 4 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுத்துப் பெருமை சேர்த்திருப்பதற்கு நன்றி கூறி, மேலும் அனைத்து



மீனவர்களுக்கும் கிடைக்கின்ற வகையில் வருகிற ஆண்டிலாவது மேலும் 2 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கக் கேட்டுக் கொள்வதோடு, ஒரு வீட்டிற்கு ஒதுக்கியிருக்கும் தொகை 32 ஆயிரத்தை 35 ஆயிரமாவது ஆகிக் கொடுக்க வேண்டுமென்று மிக்கப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர்களுடைய வீடுகளுக்கு, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் என்று பெயர் வைத்துச் சிறப்புச் செய்துள்ளார்கள். சிங்காரவேலர் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்று மீனவ மக்களுக்கே தெரியாதிருந்த நிலையில், மீனவ மக்களின் பகுத்தறிவாளர், பண்பாளர் சமூக நீதிக் காவலனாக விளங்கிய பொதுவுடைமைக் கருத்துடைய, சுய மரியாதைக் கருத்துடைய சிங்காரவேலரை நினைவுபடுத்தி, மீனவர்களுக்குத் தெரிவித்தமைக்கு நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு முதல்வரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர்கள் வாழ்விலும், வளத்திலும் மிகுந்த அக்கறை கொண்டு நம்முடைய முதல்வரவர்கள் தமிழ்நாடு முழுவதும் வாழ்கின்ற மீனவ மக்கள் அனைவரையும் கிருத்தவர்கள், இந்துக்கள் என்ற வேறுபாடின்றி மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் முன்னுரிமை வழங்கி சிறப்புச் செய்திருக்கிறார்கள். அதற்கு நெஞ்சார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக்கொள்வதோடு, குமரி மாவட்டத்தில் வாழ்கின்ற மீனவ கிருத்தவர்களும், நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை தாலுக்காவில் வாழ்கிற மீனவ கிருத்தவர்களும் இதில் விடுபட்டுப்போய் விட்டார்கள். அவர்கள் இந்தப் பலனைப் பெறுவதற்குப் பல்வேறு முயற்சிகளிலே ஈடுபடுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வரவர்களும், துறையைச் சார்ந்தவர்களும் தனிக் கவனம் செலுத்தி, வருகிற பள்ளியாண்டிலேயாவது இந்தச் சலுகையை அந்த மக்கள் பெறுகின்ற வகையில் உதவிட மெத்தப் பணிவன்போடு வேண்டுகிறேன்.

மீனவர்களுக்கு டீசலும், மண்ணெண்ணெயும் கேரள மாநிலத்தில் வழங்குவதைப்போல, மானியத்தில் வழங்கிச் சிறப்புச செய்ய வேண்டுகிறேன்.

60 வயதுக்கு உட்பட்டவர்கள் மீனவக் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கம் வகிக்கின்றபொழுது, வறட்சிக் காலத்தில், கருணை மிக்கத் தலைவருடைய ஆட்சியில் 1080 ரூபாய் பெறுகிறார்கள். சில மீனவர்கள் 70, 80 வயது அடைந்தாலும் மிக்கக் கட்டுக்கோப்பான உடல்

[திரு. இரா. பொன்னார்டு] [1998 மே 15

உழைப்புடன் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். அவர்களும் இந்தத் திட்டத்தில் பலன் பெறுகின்ற வகையில் வயது நிலையினை மாற்றியமைக்க அரசு முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மீனவக் கூட்டுறவுச் சங்கங்களில் மாதம் 60 ரூபாய் செலுத்தினால், அவர்களுக்கு எதிர்பாராத மரணம் ஏற்பட்டால் ஒரு இலட்சம் ரூபாய் நிதி கிடைக்கிறது. மீனை விற்கச் செல்லுகின்ற மகளிருக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று பணிவன்போடு வேண்டுகிறேன்.

வீடுகளைப் பழுது பார்க்க 5 ஆயிரம் ரூபாய் ஆண்டுதோறும் வழங்குவதை வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

மண்டபம், இராமேஸ்வரம், பாம்பன், குமரி மாவட்டம் போன்ற இடங்களில் மீனவப் படகு மீனவர்களுக்கும், கட்டுமரம் உள்ளவர்களுக்கும் அவ்வப்போது பல பிரச்சினைகள் உருவாகின்றன. அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க நல்லதொரு முடிவு எடுக்க, மீன்வளத் துறை அமைச்சரவர்களும், மாண்புமிகு முதல்வரவர்களும் இதிலே ஆலோசனை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி துறைமுகம் ஒரு சிறந்த துறைமுகம். அங்கே பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து போகிறார்கள். போதிய குடிநீர் இன்றி அவதிப்படுகின்ற நிலையில், அதை மாற்றி அமைக்க, அவர்களுக்கு உதவுகின்ற வகையில் சின்டெக்ஸ் தொட்டிகள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11.40

வீரபாண்டிப்பட்டணம், பல்வேறு பகுதிகளில் மீன்களைக் கொண்டு வந்து இறக்கி, நியாயமான விலை உரிய நேரத்திலே பெறுவதற்கு அங்கே ஒரு தளம் அமைத்துக் கொடுக்கின்ற முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். தூண்டில் வளைவு, பல்வேறு பகுதிகளில் குளச்சல் தொகுதியில் கோடிமனை, ராஜாத்திமங்கலம், கடியபட்டணம், முட்டம், பிள்ளைத்தோப்பு, மண்டைக்காடுபுதூர் அதுபோன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதிலும் வாய்ப்பான பகுதிகளில் அந்தத் தூண்டில் வளைவு ஏற்படுத்திக் கொடுத்து சிறப்புச் செய்ய வேண்டுமென்று மிக்கப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



1998 மே 15] [திரு. இரா. பொன்னார்டு]

குளச்சல் துறைமுகத்தை மேம்பாடு செய்வதற்காக மிகுந்த பாராட்டுதல்களைத் தெரிவிப்பதோடு, எதிர்காலத்தில் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அங்கே மீன்பிடித் துறைமுகத்தை அமைத்துக் கொடுப்பீர்களேயானால், மீன்வளம் பெருகவும், தொழில்வளம் உருவாகவும் பேருதவியாக இருக்கும். அதைச் செய்ய வேண்டுமென்று மெத்தப் பணிவோடு வேண்டுகிறேன்.

கச்சத்தீவுப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், பல ஆண்டுகளாக மீனவர்கள் தொல்லைக்கு ஆளாகிறார்கள். அவர்களுடைய உடைமைக்கும், உயிருக்கும் ஆபத்து வந்து அவதிப்படுகிறார்கள் என்பதை நமது அரசு நன்கு அறியும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை மத்திய அரசுக்கு விடுத்திருக்கிறார்கள். என்னுடைய பணிவான வேண்டுகோள், மத்திய அரசோடு தொடர்புகொண்டு, அந்தத் தீவை இருநாடுகளுக்கும் பொதுவான தீவாக ஆக்குகின்ற பெரு முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண வேண்டும். அவ்வாறு வெற்றி காணுவோமேயானால், அது மீனவ மக்களுக்குப் பேருதவியாக இருக்குமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முதல்வர் கலைஞர் அவர்களிடம் சட்டமன்ற உறுப்பினர்கள் எது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் கேட்கலாம். திருமறையில் ஒரு வாசகம் சொல்லப்பட்டிருக்கிறது. `ஆண்டவனிடம் அதாவது இறைவனிடம் நீ எது வேண்டுமானாலும் கேட்கலாம். ஆனால் எதை, எப்போது, எவ்வளவு' எங்கு வைத்துத் தர வேண்டும் என்பதை நான் அறிவேன், என்று ஒரு வாசகம் உள்ளது. அந்த அடிப்படையில் கருணை மிக்க அவரிடம் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிக்காக, மாவட்டத்திற்காக, மாநிலத்திற்காக எது வேண்டுமானாலும் கேட்கிறோம். ஆனால், அவர்கள் அதை ஆராய்ந்து, அலசி கருணையோடு அவர்களுடைய பங்கைச் செலுத்தித் தர வேண்டும், தருவார்கள் என்ற நம்பிக்கையில் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர் பகுதிகளில் காலங்காலமாக இருந்து வருகின்ற பிரச்சினையில் தனிக் கவனம் செலுத்திட வேண்டும்.

குளச்சலைப் பொறுத்தமட்டில் அங்கே தென்னை மட்டையிலிருந்து தும்புகள் எடுக்கப்படுகின்றன. அதுவும் அந்நியச் செலாவணி ஈட்டித் தருகிறது. அதை அங்கே பெருக்க வேண்டுமென்று

[திரு. இரா. பொன்னார்டு] [1998 மே 15

இந்த நேரத்திலே மிகுந்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த வாய்ப்பினை வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

***THIRU. B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, I thank you for giving me an opportunity to speak a few words on the Demands for Grants relating to Housing, Urban Development and Fisheries. The Housing Minister has attractively stated in the beginning itself in the Policy Note that the Government is going to provide house to each family in the State. Providing shelter is more important in Tamil Nadu State. In Tamil Nadu we could see only huts wherever we go. In other places, they put tiles. In Tamil Nadu only, we put தேங்காய் ஓலை. In other places, it is not so, because of climatic conditions, etc. This condition should be changed as lot of fire-accidents are taking place and so many poor people are suffering. I came to know from the Policy Note that lot of improvements have been made. At the same time, providing house to each family in the State through.......

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வெங்கடசாமி அவர்கள் இனிய மழலைத் தமிழில், இனிய தமிழில் பேசுகிறார்கள். ஆகவே, தமிழிலேயே அவர்கள் பேச வேண்டுமென்று ஆர்வத்தோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் ஆங்கிலத்தில் பேசினால் எங்களுக்கு வசதியாக இருக்கும். ஏனென்றால் சீக்கிரம் பேசி முடித்துவிடுவார்.

**திரு. பி. வெங்கடசாமி:** நான் தமிழிலேயே பேசுகிறேன். இந்த மாதிரி இருக்கும்போது எல்லோருக்கும் ஏழைகளுக்கும் வீடு கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்கு நம்முடைய Tamil Nadu Housing Board, Tamil Nadu Slum Clearance Board, Co-operative Housing Society, Co-operative Housing Federation...



1998 மே 15]

முற்பகல் 11-45

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடிக்கடி தீப்பற்றுவதை அறிந்து, இருக்கின்ற ஓலை வீடுகளுக்கெல்லாம், முதன் முதலாக 1998-99 ஆம் ஆண்டில் சுமார் 33 கோடியே மூன்று இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, சென்னையில் மட்டுமல்ல, சேலம், மதுரை, திருச்சி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளிலும் உள்ள 50,000 குடும்பங்களுக்குப் பயனளிக்கக்கூடிய வகையிலே, கல்நார்த் தகடு வேய்வதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. வெங்கடசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Tamil Nadu Slum Clearance Board ஆரம்பிக்கப்பட்டது மாண்புமிகு முதல்வர் அவர்களால்தான். அவர்கள் அதைப் பார்த்துத்தான் பண்ணுகிறார்கள். இருந்தாலும், ஸ்பீடு போதவில்லை, இன்னும் நிறைய வீடுகள் ஓலை வீடுகளாக இருக்கின்றன. அவற்றையும் மாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது work is going on. வேலை பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். நான் எம்.எல்.ஏ.-வாக இருக்கும்போதுதான் மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஆரம்பிக்கப் பட்டது. இன்னும் ஜாஸ்தி பண்ண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் ஆண்டுக்கு ஆயிரம் என்றுதான் இருந்தது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்தான் 1996-97-ல் 2,000 வீடுகள், 1997-98-ல் [illegible]000 வீடுகள், தற்போது 30 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து 3,000 வீடுகள் கட்ட உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் இப்படிப்பட்ட 50,000 குடும்பங்களுடைய வீடுகளுக்கு முதன்முதலாக கல்நார்த் தகடு வேய்கின்ற வகையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

**திரு. பி. வெங்கடசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Rural area-விலேகூட scheme இருக்கிறது. வீடுகளையெல்லாம் புதுப்பித்துக்கொள்வதற்கு 2,500 ரூபாய், 3,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதை ஜாஸ்தியாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். You must give more money. அதை நிவர்த்தி செய்வதற்கு, கொஞ்சம்

[திரு. பி. வெங்கடசாமி] [1998 மே 15

சீக்கிரமாக-scheme ஆரம்பிக்கப்பட்டுவிட்டது, scheme நன்றாக ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. அதை நல்லபடியாக, இன்னும் சீக்கிரமாக முடிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். 37 வருஷத்திற்கு முன்னாலே ஆரம்பிக்கப்பட்டது இந்த Housing Board. 37 வருஷங்களாக இதுவரை 3,50,027 Dwelling units உருவாக்கப் பட்டிருக்கின்றன. ரொம்ப சந்தோஷம். 252 கோடி ரூபாய் 1998-99-லே ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். உண்மையிலே சொல்லப்போனால் நன்றாக இருக்கின்றன. வீடுகள் எல்லாம் ஒன்றாக இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், ஒரு நாளைக்கு கர்நாடகாவிலேயிருந்து ஒரு மந்திரி எங்களுடைய ஊருக்கு வந்தார். அவர் என்னுடைய friend. வீட்டுக்கு வந்தார். ராயக்கோட்டை ரோட்டிலே நீங்கள் கட்டியிருக்கிற அந்த வீடுகளை எல்லாம் பார்த்துவிட்டு, என்ன இது இப்படி beautiful-லாக கட்டப்பட்டிருக்கிறதே, designs எல்லாம் நன்றாக இருக்கிறதே, என்று actual-ஆக கேட்டார். அந்தமாதிரி நம்முடைய தமிழ்நாடு Housing Board-லே கட்டியிருக்கிறார்கள். அவர் சொன்னார், 'நாங்கள்கூட அந்தமாதிரிக் கட்டலாம்' என்று. அந்த அளவிற்கு, அவர் சொல்கிற அளவிற்கு Tamil Nadu Housing Board has put up a very good design, நல்ல designs, புதுப்புது designs எல்லாம் பண்ணியிருக்கிறார்கள் அதை இன்னும் More attractive-ஆகப் பண்ணுவது நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ரா. சேதுநாதன் தலைமை)**

அதேமாதிரி site கொடுக்கிறீர்கள். அவர்களுக்கு எல்லாம் வீடு கட்டிக்கொள்வதற்கு நீங்கள் இப்போது site கொடுப்பதாகச் சொன்னீர்கள். முன்பெல்லாம் site கொடுப்பதில்லை. நீங்களும் கட்டிக் கொடுக்கிறீர்கள்: அவர்களும் கட்டிக்கொள்வதற்கு Housing Board-லே Developed plots கொடுக்கிறீர்கள். ரொம்பவும் சந்தோஷம். ஓசூரிலேகூட இந்தமாதிரி கொடுத்திருக்கிறீர்கள். ஓசூரிலே நிறைய இடங்களிலே கொடுத்திருக்கிறீர்கள். ஓசூரிலே கொடுத்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

``Hosur being an industrial town, heavy demand for housing is experienced. Considering this aspect, Tamil Nadu Housing Board has developed Neighbourhood Schemes in Hosur in different phases. To meet the present demand, a Neighbourhood under phase XV in Hosur is proposed to be developed in an extent of 52.87 hectares of land at a total



1998 மே 15] [திரு. பி. வெங்கடசாமி]

cost of Rs.16.59 Crores. இந்தமாதிரி L.I.G. சுமார் 767, M.I.G. 652, H.I.G. 362 மொத்தம் 1781 Developed Plots கொடுக்கிறீர்கள். ரொம்ப உகந்தது. இரண்டாவது, இந்தமாதிரி கட்டுவதிலே நீங்கள் பணம் போட வேண்டியதில்லை, அவர்களே பணம் போட்டுக் கொள்ளலாம், அவர்களுடைய பணத்தையும் use செய்து கொள்ளலாம். Bank-லிருந்து கடன் வாங்கியும் அவர்கள் பணத்தை நிறைய use செய்து கொள்ளலாம். I really appreciate this Scheme; it should be implemented in the entire State.

அதேமாதிரி, "Extension of Tamil Nadu Government Servants Rental Housing Scheme"-ல் வீடு கட்டிக் கொடுக்கிறீர்கள். நீங்கள் District level-லிலே கொடுக்கிறீர்கள். Taluk level-லிலேகூட, அங்கே வேலை செய்பவர்களுக்கும் நீங்கள் rented houses கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுமாதிரி போலீஸ்காரர்களுக்கென்று நான் சென்ற முறை மாண்புமிகு முதலமைச்சரிடம் கேட்டிருந்தேன். போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் வருகிறார்கள். அவர்கள் வந்தால் அவர்களுக்கு வீடு கொடுப்பதில்லை. அவர்களுக்குக் கொடுத்தால் என்ன, அவர்களுக்கும் கொடுக்கலாம். அவர்கள் ஓசூர் வந்தால் வீடே கிடைப்பதில்லை. ஆகவே, நாங்கள் வர முடியாது; வீடே இல்லை என்று சொல்கிறார்கள். அவர்களுக்கும் வாடகை அடிப்படையில் வீடு கொடுக்கலாம். ஓசூரில் நிறைய வீடுகள் இருக்கின்றன. ஏன் கொடுக்கக் கூடாது?

முற்பகல் 11-50

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, போலீஸ் வீட்டுவசதிக் கழகம் மூலமாக காவலர்களுக்கு வீடுகள் கட்டப்படுகின்றன. அதிலே இன்ஸ்பெக்டர்கள், டி.எஸ்.பி. அளவுக்குத்தான் வீட்டுவசதி வாரியத்தின் வீடுகள் வாடகைக்கு விடப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. வெங்கடசாமி:** போலீஸில்கூட சரியாகக் கட்டுவதில்லை. நான்கூட ஓசூர் போய்ப் பார்த்தேன். Police quarters அந்தக் காலத்தில் கட்டப்பட்டது. நான் போனபோது அடி விழுந்தது. 4½ அடிதான் கதவுகள் இருக்கின்றன. அதனாலே வீட்டுவசதி வாரியத்தில் எங்கே இடம் இருக்கிறதோ அங்கே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிறகு மாவட்டத் தலைநகரிலும் இதைச் செய்ய வேண்டும். மூன்றாவதாக, L.I.G., H.I.G.., Urban Co-operative Societies,

Co-operative Housing Societies, Rural Housing Scheme, Slum Clearance Board இதிலெல்லாம் நிறைய Scheme போட்டு கட்டுகிறார்கள். ஓசூரில் நிறைய தொழிற்சாலைகள் வந்துவிட்டன. தொழிற்சாலைகள் வந்துவிட்டதால் ஏழைகள் • கூலி வேலைக்குச் செல்கிறார்கள். அதனாலே அவர்களுக்கு குடிசைமாற்று வாரியம் வீடு கட்டிக் கொடுத்தால், மிகவும் உதவியாக இருக்கும்.

அதுபோன்று 'சமத்துவபுரம்'. கர்நாடகா, தமிழக எல்லையில் இருப்பதால், ஓசூர் மாதிரி நகரமாக இருக்கிறது. கர்நாடகாவிலிருந்து வரும்பொழுது ஓசூர் எப்படி இருக்கிறது என்று பார்க்கிறார்கள். ஓசூர் வேகமாக வளர்ந்து வருகின்றது. ஓசூரில் தொழிற்சாலை வருவதற்குக் காரணமே நம்முடைய கலைஞர் அவர்கள் முதலமைச்சராக முன்பு இருந்தபோதுதான் I Complex and II Complex என்று வந்தது. அதுபோன்று 'சமத்துவபுரம்' கட்டினால், கர்நாடகாவிலிருந்து வந்து பார்க்கின்றவர்களுக்கு பக்கத்திலே நன்றாக இருக்கிறது என்று தெரியும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. பி. வெங்கடசாமி:** மாற்றுத் தலைவர் அவர்களே, 2 நிமிடங்கள் கொடுங்கள். I have to speak on 'Fisheries' also. நான் மூன்று முறை எம்.எல்.ஏ.வாக இருந்து இருக்கிறேன். ஆனால் வீடு இருக்கின்றதா என்றால், இல்லை. என் அப்பா கட்டிய வீட்டில்தான் இருக்கிறேன். நிறைய எம்.எல்.ஏ.க்கள் வீடு இல்லாமல் இருக்கிறார்கள். தயவுசெய்து எல்லோருக்கும் வீடு கட்டிக்கொடுக்க வேண்டும். நமக்குக் கொடுப்பதில் என்ன தவறு இருக்கிறது? தவறு ஒன்றும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நாம் பணம் கொடுக்கிறோம். கட்டிக்கொடுங்கள். முன்னுரிமை கொடுங்கள். ஒன்றும் தவறில்லை. நிறையபேர் வீடில்லாமல் இருக்கிறார்கள். முதலமைச்சருக்கு அது தெரியாமல் இருக்கலாம். இல்லை, உங்களுக்குத் தெரியும். நிறைய பேர் வீடு இல்லாமல் இருக்கிறார்கள். Even most of the Ministers are not having their own houses in their constituencies, I know. எனவே, அதைக் கட்டிக்கொடுப்பதில் தவறு ஒன்றுமில்லை. அப்போதுதான், we can do our work efficiently. வசதிகள் செய்துகொடுத்தால்தான், எம்.எல்.ஏ.க்கள் பணிபுரிய முடியும். வசதிகள் இல்லையென்றால் நிச்சயமாக எதுவும் செய்ய முடியாது. நிறைய பேர் வந்து அறையில் உட்காருகிறார்கள். காலை 8-30 மணிக்குள் வந்தால்தான் பேரவைத் தலைவரைச் சந்திக்க முடியும். வீடு இல்லாததால், I have missed two or three times.



Regarding Fisheries department, I have given cut motions also. Deep Fishing வேண்டும். நான் நினைக்கிறேன், மீனவர்களுக்கு நிறைய பணம் கொடுக்க வேண்டுமென்று. காரணம், they are all very poor people. அவர்களுக்கு நிறைய வசதிகள் செய்து கொடுத்தால்தான் நல்லது.

அடுத்து, Marketing facilities செய்து கொடுக்க வேண்டும். Regarding Chennai City Development, the Honourable Minister has outlined very good schemes in the policy note like Koyambedu Textile Market Complex, Mofussil Bus Terminal, Development of New Chennai by 2025, Mass Rapid Transit System-phase-II. சென்னையில் செய்து இருக்கிறார்கள் அதுமாதிரி, more importance should be given to Madras City. Madras City is a Class-I City. எனவே, நிறைய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** இப்பொழுதே 12 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு.பி. வெங்கடசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, I will conclude my speech. தயவுசெய்து வீட்டுக்கு மட்டும் மறக்காமல் ஏதாவது செய்யவேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம், ஜெய் ஹிந்த்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** அடுத்து, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டுவசதித் துறை, நகர்ப்பகுதி வளர்ச்சி, மீனளத் துறை ஆகிய துறைகளின் மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களை மட்டும் சொல்வதற்கு வாய்ப்பினைக் கொடுத்த தங்களுக்கு நன்றியைச் சொல்லி கொள்கிறேன். இன்று ஒரு மனிதனுக்கு உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றும் அத்தியாவசியத் தேவையாக இருக்கின்றன. அந்த அடிப்படையில் இன்று சாதாரண அடித்தட்டிலே இருக்கக்கூடிய மக்களுக்கு மூன்று வேளை சீரான உணவு, கிழியாத ஆடை, ஒழுகாத வீடு கிடைக்கின்றதா என்று கேட்டால், நிறைய பேருக்கு அந்த நிலைமை இல்லாத நிலைதான் இருந்து

[திரு. ஜி.கே. மணி] [1998 மே 15

கொண்டிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிலையிலே, சாதாரண மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, நலிவுற்ற மக்களுக்குப் பயன்படக்கூடிய, மிக அத்தியாவசியத் தேவையாக இருக்கக்கூடிய துறைதான் நம்முடைய வீட்டுவசதித் துறையாகும். இந்தத் துறை இப்போது செயல்படுகின்றதைவிட, இன்னும் கூடுதலான நிதியாதாரங்களை ஒதுக்கி, இன்னும் வேகமாகச் செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிலும், நம்முடைய வீட்டுவசதி வாரியத்தைப் பொறுத்தவரையிலே, இரண்டு ஆண்டு காலமாக வீடுகள் ஒதுக்குவதிலே, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதிலே, முனைப்பாகச் செயல்படுகின்றதா என்று கேட்டால், இல்லை. நான் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. இதிலே குறைபாடுகள் இருக்கின்றன. அவை களையப்பட வேண்டும். இன்னும் வேகமாக இந்தத் துறை செயல்படுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தக்க அறிவுரைகளை வழங்கி, அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், இப்பொழுதுகூட இந்த வீடுகளை ஒதுக்குகின்ற நேரத்திலே, இடங்களைத் தேர்வு செய்து அங்கே வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டுகின்ற நேரத்திலே, எந்த அடிப்படையிலே இடங்களைத் தேர்வு செய்கின்றார்கள்; எப்படிப்பட்ட நகரங்களிலே வீடுகளைக் கட்டுகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம், எங்களுடைய பெண்ணாகரம் தொகுதியிலே, தாலுகாவினுடைய தலைநகரம்; ஒன்றியத்தினுடைய தலைநகரம்: அங்கே பள்ளிகள் இருக்கின்றன; வங்கிகள் இருக்கின்றன; எல்லா அரசுத் துறைகளின் அலுவலகங்களும் இருக்கின்றன. இதுவரையிலே அங்கே,....

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்களுக்கான வீடுகள் மாவட்டத் தலைநகரங்களிலும், கோட்டாட்சித் தலைவர் அலுவலகங்கள் இருக்கின்ற இடங்களிலுமேதான் இப்போது கட்டப்படுகின்றன. தேவையிருப்பின், அரசாங்க நிலத்தை ஒதுக்கினால், எல்லா தாலுகா தலைமை இடங்களிலும், வீடுகளைக் கட்டுவதற்கு இடம் இருந்தால், அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மாவட்டத்



1998 மே 15] [திரு. ஜி.கே. மணி]

தலைநகரங்களிலும், கோட்டத் தலைநகரங்களிலும் வீடுகள் கட்டப்படுகின்றன என்று. ஆனால், ஒருசில ஒன்றியத் தலைநகரங்களிலேகூட பல இடங்களில் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதை என்னால் நிருபிக்க முடியும். ஆகையினால், அந்த வகையிலே இருக்கின்றபோது....

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவை விலைக்கு விற்கப்படுகின்ற வீடுகள். அரசாங்க வீடுகள் எந்தப் பகுதியிலும் கட்டப்படும். விலைக்கு விற்கப்படுகின்ற வீடுகள் எங்கே நிலம் கிடைத்தாலும், அந்த இடத்திலே கட்டித் தரப்படும். அப்படித்தான் பேரூராட்சிப் பகுதியிலே கட்டப்பட்டிருக்கின்றன.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த அடிப்படையிலே, விலைக்கு விற்கப்படுகின்ற வீடுகளானாலும் சரி, அல்லது வாடகை வீடுகள் கட்டித் தரப்படும் திட்டத்திலும் சரி, அதனைத் தமிழ்நாடு முழுவதும் பரவலாக்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். இப்படி கிராமப்புறங்களிலும், தாலுகா அளவிலும் உள்ள வீட்டுவசதி சங்கத்தின் மூலம் கடன் பெற்று வீடுகளைக் கட்டுவதற்கு, அவற்றிற்கு நிதியாதாரங்களைக் குறைவாக ஒதுக்குகின்றீர்கள். என்னுடைய பெண்ணாகரம் வட்டத்திலேகூட, கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் இருக்கின்றது. அங்கே வீடுகளைக் கட்ட கடன் வேண்டி விண்ணப்பித்தவர்கள் இரண்டு ஆண்டு காலம், மூன்று ஆண்டு காலம் காத்திருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் போக்கக்கூடிய வகையிலே கிராமப்புறங்களை முன்னேற்றுவதற்கு....

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஓராண்டு காலம் தாமதமாகின்றது என்பதற்காக, பல்வேறு வங்கிகளிலே கடன்களைப் பெற்று, இதுவரை இல்லாத அளவிற்கு 183 கோடி ரூபாய் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக கடன்வசதி வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் 200 கோடி ரூபாய்க்கு மேல் வழங்கப்படவில்லை. இப்போது, தாமதமில்லாமல், பல வங்கிகளிலே கடன்களைப் பெற்று வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பகல் 12-00

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் பதில் அளித்ததற்கு நன்றி.

கிராமங்கள் முன்னேற வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். வீட்டுவசதித் துறையைப் பொறுத்தவரையில், நகரங்களுக்கு அது பெரிதும் பயன்படுகிறது. ஆனால், கிராமப்புறங்களிலே இந்தத் துறை முழுக்க முழுக்க பயன்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் நான் இவ்வாறு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அந்த வகையிலே, கிராமப்புறங்களிலே பயன்படக்கூடிய வகையிலே, ஒழுங்கான வீடுகள் வேண்டுமென்ற நிலையிலே, சாதாரண மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம். கிராமப்புற மக்களுக்கு அது பயன்படவேண்டும். அதிலும் குறிப்பாக ஒரு மனிதன் பிறக்கிறான், வாழ்கிறான்; அவனுடைய தாத்தா காலத்திலிருந்து, அவன் வாழ்கின்ற காலம், பிறகு அவன் மகன் வாழும் காலம் என இப்படி 3 தலைமுறைகளாகக்கூட, ஒழுங்கான வீட்டைப் பார்க்காத மக்கள் இந்த நாட்டிலே நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு concrete வீட்டை, சாதாரண சின்ன வீட்டைக்கூட கட்டிக்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது—சின்ன வீடு என்று சொன்னால், தவறாக நினைத்துக்கொள்ளக்கூடாது—கிராமப்புறத்திலே இருக்கக்கூடியவர்கள் அப்படி சிறிய வீடுகளையாவது கட்டிக்கொள்ளக் கூடியவகையிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கூரை வீடு, குடிசை வீடுகளையெல்லாம் அகற்றி—அந்த வீடுகள் எல்லாம் தீப்பிடித்து எரிந்து விடுகின்றன; அல்லது நான்காண்டுகள் அல்லது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை கூரைகளையெல்லாம் மாற்றி வேயக்கூடிய நிலை இருக்கிற காரணத்தினாலே, அந்தத் திட்டத்தை மாற்றி—ஒரு புதிய திட்டமாக, கிராமப்புறங்களிலே வாழக்கூடியவர்களுக்கு, பாதி அளவு மானியத்திலேயும் பாதி அளவு கடனாகவும் கொடுக்கக்கூடிய வகையிலே, கூரை வீடுகளே தமிழ்நாட்டில் இல்லாத ஒரு நிலையை உருவாக்குவதற்கு, குடிசைமாற்று வாரியத் திட்டத்தின்கீழ், கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அப்படி நீங்கள் வழங்கக்கூடிய தொகையைப் பத்தாண்டு காலம், 20 ஆண்டுகாலம் என நிர்ணயித்து, பாதி அளவிற்கு மானியமும் கொடுத்தால், அந்த மக்கள் அந்தப் பணத்தைத் திருப்பிச் செலுத்தி



விடுவார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைபோல், இங்கே நகரத்தைப் பொறுத்தவரையில், நில ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. அவ்வாறு ஆர்ஜிதம் செய்கையில் நல்ல தரமிக்க விளை நிலங்கள் எல்லாம் இப்போது ஆர்ஜிதம் செய்யப்படுகின்றன. அப்படிப்பட்ட நல்ல விளை நிலங்களை ஆர்ஜிதம் செய்வதை விட்டுவிட்டு, நகரத்தை ஒட்டியிருக்கக்கூடிய மேட்டு நிலப் பகுதியை, விலை குறைந்த நிலப்பகுதியை நீங்கள் ஆர்ஜிதம் செய்து, வீடுகளைக் கட்டிக் கொடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். நிலம் ஆர்ஜிதம் செய்யக்கூடிய நேரத்திலே, அடிமாட்டு விலை என்று சொல்வதுபோல, ஒரு ஏக்கருக்கு ரூ. 50 ஆயிரம், ரூ. 80 ஆயிரம், ரூ. 90 ஆயிரம் என்ற விலைகளிலே, விவசாயிகளுக்குத் தொகை வழங்கப்படுகிறது. ஆனால், market விலை என்னவென்று பார்த்தால் ஒரு ஏக்கர் விலை ரூ. 14 இலட்சம் என்று இருக்கிறது. ரூ. 90 ஆயிரம் தரப்படுகிற ஒரு ஏக்கர் நிலத்தின் விலை ரூ. 14 இலட்சம், ரூ. 15 இலட்சம் என்ற அளவுக்கு இருக்கிறது. இதற்குக்கூட உதாரணமாக ஒன்று சொல்ல வேண்டுமென்றால், வேலூர் தாலுகாவிலே, சத்துவாச்சாரி, அலமேலுமங்காபுரம் போன்ற இடங்களிலே 450 ஏக்கர் அளவிற்கு மேலே ஆர்ஜிதம் செய்யப்பட்டு, மீண்டும் அந்த நிலம் ஒரு சிலருக்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டது. இன்னும் 26 ஏக்கர் நிலம் ஒப்படைக்கப்படாமல் இருக்கிறது. மற்றவர்களுக்கெல்லாம் ஒப்படைத்தது போல, அவர்களுக்கும் அந்த நிலத்தை ஒப்படைக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துவாச்சாரியிலே அப்படி எந்த இடமும் விட்டுக் கொடுக்கப்படவில்லை. அங்கே தேவையான இடங்கள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. அதிலே வாரியத்தின் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சத்துவாச்சாரி, அலமேலுமங்காபுரம் ஆகிய இடங்களில் 450 ஏக்கர் நிலம் வீட்டுவசதி வாரியத்தினால் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்டது. சென்ற ஆட்சிக் காலத்திலே, 424 ஏக்கர் நிலத்திற்கு விலக்கு

அளிக்கப்பட்டுவிட்டது. எல்லோருமே தனித்தனியாக அவற்றிற்கு D.T.P. Approval வாங்கி, plotகளாகப் போட்டு விற்றுவிட்டார்கள். இப்போது இருப்பது 26 ஏக்கர் மட்டுமே. அதற்கு இப்போது 90 ஆயிரம் ரூபாய் compensation கொடுக்கிறார்கள். ஆனால், இப்போது அதனுடைய விலை ஏக்கருக்கு 14 இலட்சம் ரூபாய் எல்லோருமே விலக்கு வாங்கிக் கொண்டுபோய் விட்டார்கள். ஆனால், 26 ஏக்கரா நிலத்திற்குச் சொந்தக்காரர்களும், விலக்கு வாங்காமல், ஆனால், அவர்களும் D.T.P. Approval வாங்கி lay-out செய்து, plotகளையெல்லாம் விற்று விட்டார்கள். சிலபேர், விலக்கு அமைச்சரிடம் வாங்கியும்கூட, மீண்டும் அதை எடுத்துக் கொண்டார்கள். சிலபேர் என்று சொல்வது சிறு விவசாயிகள். அதனால்தான், நான் இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்திருக்கிறேன். அமைச்சரிடமும் கூறியிருக்கிறேன். அதாவது, 26 ஏக்கரிலே ஒரு scheme நடத்த முடியாது. ஆகவே, வேறு எங்கேயாவது பெரிய இடத்தைத் தேர்ந்தெடுத்து, 400 ஏக்கரா அளவிற்கு நிலத்தை தேர்ந்தெடுத்து, அந்த 26 ஏக்கராவை, மற்றவர்களுக்குக் கடந்த ஆட்சிக் காலத்திலே விலக்கு அளித்தமாதிரி, இவர்களுக்கும் விலக்களித்து வழங்க வேண்டுமென்கிற முறையிலேதான் நான் இந்த விவாதத்தை வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12-05

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆகவே இப்படி வீடுகளைக் கட்டி, வீடுகளை ஒதுக்குகிற நேரத்திலே சில இடங்களில் வீடுகளைப் பெறுவதற்கு யாரும் முன்வருவதில்லை. காரணம் என்னவென்று சொன்னால் வீட்டினுடைய விலை கூடுதலாக இருக்கிறது. அதேநேரத்தில் வீடுகளின் தரமும் மோசமாக இருக்கிறது. அந்த வீடுகள் நான்கைந்து ஆண்டுகள் ஆகிவிட்டால் இடிந்துவிடுமோ என்று அஞ்சக்கூடிய நிலையில் இருக்கின்றன. எனவே, அதிலே சரியான கவனம் செலுத்தி யார் அந்த வீடுகளைக் கட்ட contract எடுத்தாலும் அவர்கள் சரியாக வேலை செய்கின்றார்களா; அந்த வீடுகள் முறைப்படி கட்டப்பட்டிருக்கின்றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சத்துவாச்சாரியிலே மொத்தம் எடுத்தது 193 ஏக்கர். கடந்த ஆட்சியிலே விலக்கு அளித்தது வெறும் 36 ஏக்கருக்குத்தான். இப்போது 157 ஏக்கர் நிலம் வாரியத்திடம்தான் இருக்கின்றது. அதுபோல, 117



ஏக்கரில் கடந்த ஆட்சியில் விலக்கு அளித்தது 47 ஏக்கர் நிலத்திற்குத் தான். மீதமுள்ள நிலம் வாரியத்திடம்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** அமைச்சர்தான் விளக்கம் கொடுத்துவிட்டார்களே, உங்களுக்குச் சந்தேகம் ஏதாவது இருந்தால் தனியாகப் போய்க் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு clarification.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** சரி, கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சில பேருக்கு 4(1) Notice கொடுத்து, அது 6(1) ஆன பிறகுகூட அந்த time limit-ஐ exceed பண்ணி விலக்கு, R.D.O. Office-ல் அளிக்கப்பட்டிருக்கிறது. 450 ஏக்கரில் 26 ஏக்கருக்குத்தான் இன்னும் விலக்கு அளிக்கப்படவில்லை. வீட்டுவசதி வாரியத்திலிருந்து கொடுக்கப்பட்டிருக்கின்ற கணக்கு தவறான கணக்கு. எனவே அந்த 450 ஏக்கரில் நிறைய பேருக்கு விலக்கு அளிக்கப்பட்டாகிவிட்டது. எனவே மீதமுள்ளவர்களுக்கு நீங்கள் விலக்களிக்க பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கோரிக்கை வைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது தவறான கணக்கு அல்ல. வாரியத்திடம் இருக்கின்ற நிலங்களின் கணக்குகளைத்தான் நாங்கள் கொடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகள் ஒதுக்கீடு செய்வதில் முறைகேடுகள் நடப்பதாகச் சொல்கிறார்கள். சிலருக்கு விதிமுறைகள் பின்பற்றப்படுவதாகவும், சிலபேருக்கு விதிமுறைகளுக்கு மாறாக வழங்கப்படுவதாகவும் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதை நிருபிக்க வேண்டுமென்றால்கூட என்னால் நிருபிக்க முடியும். ஆகவே வரக்கூடிய கால கட்டங்களில் வீடுகளை ஒதுக்குவதில் அப்படி ஒரு தவறான அணுகுமுறை இல்லாமல்

[திரு. ஜி.கே. மணி] [1998 மே 15

ஒரே முறையிலே ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் கொடுத்தது ஐந்து நிமிடங்கள். விரைவில் உரையை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக மீனளத் துறையைப் பற்றிப் பேச விரும்புகிறேன். மீன் வளத்தில் மற்ற மாநிலங்களைவிட பிரசித்தி பெற்ற மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது. இயற்கை தந்த செல்வமாக நமக்கு அழகான கடற்கரை இங்கே அமைந்திருக்கிறது. இந்த கடலை நாம் பயன்படுத்தி மீன்பிடித்தலைப் பெருக்குவதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வகையிலே மீன் பிடித்தலைப் பெருக்குவதற்கு மேலும் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும். இப்போது இந்தத் துறைக்கு நிதியொதுக்கி இருப்பதை பற்றாக்குறையாக நான் கருதுகிறேன். எனவே கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல மீனவர்களுக்கு மானியத்துடன்கூடிய விசைப் படகுகள் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மீன் உற்பத்தியால் ஏற்றுமதி பெருகுகிறது. மீன் ஒரு சிறந்த உணவு. எல்லோரும் சாப்பிடக்கூடிய மீன் நாம் சாப்பிடுவதற்கும் பயன்படுகிறது. அந்நியச் செலாவணியைப் பெருக்குவதற்கும் பயன்படுகிறது. ஆகவே மீன்பிடித்தலைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு நிமிடத்தில் பேசி முடிப்பீர்கள் என்று பார்த்தால் நான்கு நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். விரைவில் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியிலே இருக்கும் தமிழர்களை வேண்டாதவர்கள் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே சிங்கள ராணுவம் மீனவர்களைச் சுட்டுக்கொல்கிறது, கடத்திச் செல்கிறது. இது தொடர்ந்தவண்ணம் இருந்து கொண்டிருக்கிறது. இதை எல்லாம் தடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். கிராமங்களில் நிறைய ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளில் மீன் குஞ்சுகளை விட்டு, வளர்த்து மீன் உற்பத்தியைப் பெருக்க வாய்ப்பு இருக்கிறது.



1998 மே 15] [திரு. ஜி.கே. மணி]

இந்தியாவிலேயே மேட்டூர் அணை மீன்தான் ருசி மிகுந்தது என்று சொல்வார்கள். ஆனால் அங்கே இருக்கும் மீனவர்கள் சாதாரண பரிசலை வைத்துக் கொண்டு மீன் பிடிக்கிறார்கள். தோல் அல்லது பிளாஸ்டிக் கவரை வைத்து மேலே தாரைப் பூசி அந்தப் பரிசலைச் செலுத்துகிறார்கள். அதனால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். சத்துவாச்சாரி பிரச்சினையைப் பேசிக் கொண்டிருப்பதற்கா உங்களுக்கு நான் அனுமதி கொடுத்தேன்? உட்காருங்கள். திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டு வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி மீனளம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். வீட்டுவசதி என்பது ஒரு மனிதனுக்கு அத்தியாவசிய வசதியாக இருந்துவருகிறது. ஏழையெளிய மக்கள், நடுத்தர மக்கள் வாழ வழிக்காட்டியாகவுள்ள துறை இந்தத் துறை.

மதுரையிலுள்ள எல்லீஸ் நகரைப் பற்றிச் சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன். மதுரை எல்லீஸ் நகரில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. 20 ஆண்டுகளில் அந்த வீடுகள் எல்லாம் ஆங்காங்கு இருக்கிற நடுத்தர வகுப்பினருக்குச் சொந்தமாக்கப்பட்டு அதற்குரிய தொகைகளை அவர்கள் கொடுத்துவிட்டார்கள். அப்படிப் பணம் கொடுத்தவர்களுக்குக் கூட Sale deed இன்னும் கொடுக்கப்படவில்லை. என்ன காரணம் என்று கேட்டால் அந்த வீடுகள் சம்பந்தமாகச் சிலர் தொடர்ந்த வழக்குகள் முடியாத நிலையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் வழக்குகள் எல்லாம் முடிந்துவிட்டன. இன்னும் Sale deed கொடுக்கப்படவில்லை. அந்த வீடுகள் அனைத்தும் மாநகராட்சியின்கீழ் வந்த பிறகும் குடிதண்ணீர், குழாய்கள் மூலமாக வருவது கிடையாது. லாரிகள் மூலம்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு, மூன்று தினங்களுக்கு ஒரு முறைதான் அங்கு குடிதண்ணீர் கொடுக்கப்படுகிறது.

முற்பகல் 12-10

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட பிறகு அவர்கள்தான்

[திரு. கு. பிச்சாண்டி] [1998 மே 15

தண்ணீர் வழங்க வேண்டும். ஆனால் வீட்டுவசதி வாரியம்தான் லாரிகள் மூலமாகத் தண்ணீர் கொடுத்துக்கொண்டிருக்கிறது. மாநகராட்சியிடம் தெரிவித்து விரைவிலே தண்ணீர் தரப்படுவதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அங்கே விளையாட்டு மைதானம், பொது நூலகம், மருத்துவமனை போன்ற வசதிகள் ஏதும் செய்து தரப்படவில்லை. அவற்றையும் செய்து தர வேண்டுகிறேன். கிட்டத்தட்ட 12 ஆயிரம் வாக்காளர்கள் அந்த எல்லீஸ் நகர்ப் பகுதியில் வாழ்கிறார்கள். எல்லீஸ் நகரில் வாழும் மக்கள் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். அவர்களுக்கு இந்த வசதிகளை எல்லாம் செய்து கொடுத்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே 20 முதல் 25 விழுக்காடு வீடுகள் விற்பனையாகாமல் இருக்கின்றன. அதாவது ஒதுக்கீடு செய்யப்படாமல் இருக்கின்றன. அந்த வீடுகள் எல்லாம் பழுதடைந்து, ஜன்னல் இல்லாமல், நிலை இல்லாமல், பாழடைந்து கிடக்கின்றன. அவற்றையெல்லாம் சரிசெய்து கொடுத்தால் அங்குள்ள மக்கள் அந்த வீடுகளைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு செய்து கொடுக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நமது சென்னை மாநகரில் திருவான்மியூர் பகுதியில் பத்திரிகையாளர்களுக்கு, 134 பேர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அதற்கான பணத்தைக் கட்டியிருக்கிறார்கள். கட்டுமானப் பணியில் சுணக்கம் ஏற்பட்டதன் காரணமாக, அவர்களுக்கு வட்டி போடப்பட்டு அந்த வட்டித்தொகையைக் கட்ட முடியாமல் அவர்கள் அவதிப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில்கொண்டு, வட்டியைத் தள்ளுபடி செய்து, அவர்கள் அந்த வீடுகளுக்குச் சென்று வாழ்வதற்கு வழிவகை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பனையேறும் தொழிலாளர்கள் ஓலைக் குடிசைகளில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு concrete வீடுகளை இலவசமாகக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1998 மே 15] [திரு. எ. தெய்வநாயகம்]

அடுத்து, 1956 ஆம் ஆண்டு சி.ஐ.டி. நகரில் காமராஜர் அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட 40 வீடுகள் இதுவரையில் குடியிருப்பவர்களுக்கு மாற்றித்தரப்படவில்லை. அவற்றைக் குடியிருப்போருக்கு மாற்றிக் கொடுக்க வேண்டுகிறேன்.

அடுத்து, முன்னாள் அமைச்சர் லூர்தம்மாள் அவர்கள் காலத்தில் உவரியில் கட்டப்பட்ட கடலரிப்புத் தடுப்புச் சுவர் உடைந்து 100-க்கும் மேற்பட்ட வீடுகளைக் கடல் கொண்டுவிட்டது. அந்த தடுப்புச் சுவரை மீண்டும் உடனடியாகக் கட்டித்தர வேண்டுகிறேன்.

அடுத்து, உவரி, கூத்தங்குடி, இருந்தகரை, பெருமணல், கூத்தப்பள்ளி ஆகிய கிராமங்களில் தூண்டில் வளை கட்டித்தர வேண்டுகிறேன்.

நமது மீனவர்களுக்கு கேரளாவில் கொடுப்பதுபோல மானிய விலையில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறை மானியக் கோரிக்கை எண் 21-ன் மீது நடைபெற்ற விவாதத்தின்போது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழகத்தில் மீனவர்களுக்குத் தற்போது அரசு அளித்து வரும் பல்வேறு சலுகைகள் குறித்துப் பாராட்டியும், அவர்களுடைய சமூகப் பொருளாதார ரீதியான மேம்பாட்டுக்கு உரிய வழிவகைகளைச் செய்திடவும் அரசுக்குப் பல்வேறு நல்ல ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்கள்.

தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற, மீனவ சமுதாயத்தை மேம்படுத்தும் பொருட்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1998-99 ஆம் ஆண்டுக்காக 42.70 கோடி ரூபாயை மீனவர்நலத் திட்டங்களுக்காகத் தந்து, இந்த மாமன்றத்தில் என்னை அந்த நல்ல திட்டங்களை அறிவிக்க வைத்தமைக்காக மீனவ சமுதாய மக்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1998-99-ஆம் ஆண்டில் மீனவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்று அறிவித்த நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு

[திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்] [1998 மே 15

மீனவ சமுதாய மக்களின் சார்பாக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் முதன் முதலாகக் குடிசை மாற்று வாரியத்தைக் கொண்டுவந்து குடிசைகளை எல்லாம் மாற்றி மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக்குக் கல் வீடுகளைக் கட்டிக் கொடுத்த டாக்டர் கலைஞர் அவர்கள் மீனவ சமுதாய மக்களுக்காகவும் முதன்முதலாக 1975 ஆம் ஆண்டிலேயே இலவச வீடுகளைக் கட்டித் தந்தார்கள். இப்போது கழக ஆட்சி பொறுப்பேற்றவுடன் சிந்தனைச் செல்வர் சிங்காரவேலர் அவர்களுடைய நினைவாக இலவச வீடுகளை ரூ.32 ஆயிரம் செலவில் கட்டித்தருவதாகச் சொல்லி, ஆண்டு ஒன்றுக்கு 4,000 வீடுகள் வீதம், இரண்டு ஆண்டுகளில் ஒரு விளக்குடன் கூடிய 8,000 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

பிற்பகல் 12-15

அது மட்டுமல்லாமல் இந்த ஆண்டு 4,000 வீடுகள் கட்டப்படவிருக்கின்றன. கடற்கரை ஓரங்களில் கட்டப்படுகின்ற அந்த வீடுகள் எல்லாம் விரைவில் பழுதடைந்துவிடுகின்றன என்ற எண்ணத்தினை மனதிலே கொண்ட நமது முதலமைச்சர் அவர்கள், இங்கே நமது உறுப்பினர்கள் எல்லாம் கோரிக்கைகளை வைக்கும் முன்பே, நாங்கள் நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து இது போன்ற நல்லத் திட்டங்களுக்கு எல்லாம் மேலும் சில சலுகைகளை அதிகமாகத் தரவேண்டுமென்று கேட்டவுடன், இந்தத் துறைக்கு அதிகமான நிதியினைத் தந்து எங்களுக்கு உதவியிருக்கின் றார்கள் என்பதை நன்றியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டிலிருந்து மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்திற்கு இங்கே பேசிய நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. பெர்னார்டு அவர்கள் 35,000 ரூபாய் வழங்க வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் நமது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் அதனை ரூ.37,000/-ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் தொடரும் திட்டங்களாக, இணைப்புச் சாலைகள், தெருவிளக்குகள், பழுதடைந்த வீடுகளைப் பழுது பார்க்கும் திட்டம் மற்றும் சேமிப்பு நிவாரணங்கள் போன்றவை எல்லாம்



1998 மே 15] [திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்]

தொடரப்படுகின்றன. மேலும் கலங்கரைவிளக்காக இருக்கிற நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், மீனவர்கள் இரவிலும், அதாவது நள்ளிரவிலும் சென்று மீன்பிடித்துவிட்டுத் திரும்பும்போது மீனவ கிராமங்கள் எல்லாம் இருளில் மூழ்கி இருக்கின்றன என்பதனை மனதிலே கொண்டு சோடியம் விளக்குகளை அமைக்கும் திட்டத்தினை நமக்குத் தந்திருக்கிறார்கள். அதன்படி 120 விளக்குகள், அதாவது 12 கடலோர மாவட்டங்களில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 5 கிராமங்களைத் தேர்வு செய்து ஒவ்வொரு கிராமத்திற்கும் இரண்டு சோடியம் விளக்குகளை வழங்குவதற்காக நமது முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். இதன் வாயிலாக, மீனவர்கள் மீன்களை எந்த நேரத்திலும் கரைக்குக் கொண்டு வர சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, கடலில் கூடுதலாக மீன் இருக்கும் இடங்களைக் கண்டறியவும், மீனவர்கள் வழிகளை ஒழுங்காகக் கண்டறியவும் Fish Finder என்ற ஒரு கருவியை, ரூ.65,000 விலையுள்ள அந்தக் கருவியை, 25 சதவிகித மானிய விலையில் 50 மீனவர்களுக்கு வழங்க நமது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அரசு ஒப்புதல் தந்துள்ளது.

மீனவர்களின் கட்டுமரங்கள் இரண்டு ஆண்டு காலத்திலேயே பழுதடைந்து விடுகிற காரணத்தினால் அடிக்கடி மரத்தை மாற்ற வேண்டிய சூழ்நிலை இருப்பதால் கண்ணாடி இழையிலான கட்டுமரங்கள் பழுதடைய முடியாது என்ற காரணத்தினால் இந்த நிதிநிலை அறிக்கையில் நமது முதலமைச்சர் அவர்கள் 50,000 ரூபாய் விலையுள்ள கண்ணாடி இழைக் கட்டுமரத்திற்கு ரூ.5,000 மானியமாக வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். ஆனால் நேற்று நமது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களைச் சந்தித்துக் கேட்ட போது ரூ.50,000 விலையுள்ள அந்தக் கண்ணாடி இழைக் கட்டுமரத்திற்கு 25,000 ரூபாய் மானியமாக வழங்க முன்வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது 100 மீனவர்களுக்கு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் அவர்கள் பேசும்போது விபத்துக் காப்புறுதித் திட்டம் பற்றிக் குறிப்பிட்டார்கள். மீனவர்கள் விபத்தில் இறக்கும்போது, விபத்துக் காப்புறுதித் திட்டத்தில் மீனவர்கள் பிரிமியம் செலுத்தாமல், தமிழக அரசும் மத்திய அரசும், தலா ரூ. 6 வீதம் செலுத்தி மீனவர்களுக்கு ரூ.35,000 வீதம் அந்தத் தொகை

[திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்] [1998 மே 15

வழங்கப்பட்டு வந்தது. ஆனால் சென்ற முறை, 25-3-1997 அன்று, நமது முதலமைச்சர் அவர்கள் மீனவர்களுக்குத் தனியொரு திட்டமாக ரூ.15,000/-ஐச் சேர்த்து ரூ.50,000 ஆக வழங்கியிருக்கிறார்கள். இந்தத் திட்டமானது மீனவர்கள் விபத்தில் இறக்கும்போது அவர்களுக்கு ரூ.50,000 ஆக வழங்கிச் செயல்பட்டு கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் ரூ.60-ஐ வருடத்திற்குச் செலுத்தி, உள்நாட்டு மீனவர்களும், கடல் மீனவர்களும் விபத்தில் இறக்கும்போது ரூ.1 லட்சம் பெற்று வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, மீனவப் பெண்கள் வியாபார நிமித்தமாக வெளியிடங்களுக்குச் சென்று வரும்போது அவர்களுக்கும் விபத்து ஏற்படுகிறது என்புதை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு, இந்த ஆண்டிலிருந்து அவர்களும் இந்தத் திட்டத்திலே பங்கு பெறலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். வருடம் ரூ.60 செலுத்தி ரூ.1 இலட்சம் பெறலாம் என்பதை இங்கு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பாக் ஜலசந்தியில் மீன்பிடிக்கும்போது மீனவர்கள் துப்பாக்கிச் சூட்டினால் இறக்கும்போது, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து இதற்கு முன்பு ஒவ்வொரு மீனவருக்கும் எந்தவித அளவுகோலும் இன்றி விருப்பமான தொகையை அளித்து வந்தார்கள். ஆனால், நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 12-8-1997 அன்று, நியாயமான முறையில், யாராக இருந்தாலும், 1 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையில், அதற்கான ஆணை பிறப்பித்து, இப்போது அந்தத் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

அதுமட்டுமல்லாமல், பாக் ஜலசந்தியில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் மீனவர்களை, சிங்கள இராணுவத்தினர் இலங்கைக்குக் கடத்திக் கொண்டு சென்றுவிட்டால், அவர்களை மீட்டுக் கொண்டு வரும்வரை, அந்த மீனவக் குடும்பம் அல்லலுறும் என்பதைக் கருத்தில கொண்டு— மீனவ மக்களின் குடும்பங்களோடு நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் வாழ்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்—அந்த மீனவக் குடும்பத்திற்கு, ஒரு நாளைக்கு ரூ.50 வீதம் அவர்கள் திரும்பி வரும் வரையில் நிவாரணம் அளிக்க நமது முதல்வர் அவர்கள் நேற்று எங்களுக்கு உறுதி அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



1998 மே 15] [திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்]

நமது முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் மீனவர்கள் மேல் பற்றும் பாசமும் கொண்டிருப்பதால் பல திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். மத்தியில் இதற்கு முன்னால் இருந்த ஐக்கிய முன்னணி அரசில், இந்தியா முழுவதிலும் உள்ள மீனவர்களுக்கு ஐந்தாயிரம் Ice Boxes வழங்கப்பட்டன. அதாவது, மீன்களை மீனவ மகளிர் வேறிடத்திற்குக் கொண்டு செல்லும்போது, அந்த மீன்களைப் பக்குவமாக எடுத்துச் செல்ல வேண்டுமென்பதற்காக, Ice Boxes வழங்கப்படுகின்றன. இந்த Ice Box-களையும், இந்தியாவிற்கே ஐந்தாயிரம் என்ற அளவில் மத்திய அரசு, ஐந்தாண்டுத் திட்டமாகத்தான் வைத்திருந்தது. ஆனால், நமது முதல்வரவர்கள், மீனவர்கள் மேல் கொண்டுள்ள பற்றாலும், இயக்குநர் அவர்களின் விடா முயற்சியாலும், நமது தமிழ்நாட்டிற்கு மட்டும் 2,400 Ice Boxes வழங்கப்படுகின்றன. இந்தக் குளிர்பதனப் பெட்டியின் விலையில் 75 சதவீதம் மானியமாகவும், 15 சதவீதம் கடனாகவும் 10 சதவீதம் மீனவ மகளிர் பயனாளிகளின் பங்காகவும் இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 60 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு பெட்டியின் விலை 2,000 ரூபாய். 100 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு பெட்டியின் விலை 3,850 ரூபாய்.

சில கிராமங்களுக்குச் சென்றபோது மீனவர்களுக்குரிய திட்டங்கள் என்னவென்று தெரியாமல் இருக்கும் கிராமங்கள் இருக்கின்றன என்பது தெரியவந்தது. அதைக் கருத்திற்கொண்டு, மீனவர்கள் அல்லலுறும்போது அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில், 12 கடலோர மாவட்டங்கள் இருந்தபோதும், மண்டல மீன் துறை உதவி இயக்குநர்களிடம் எந்தவித வாகனமும் இல்லையென்று நமது முதல்வரவர்களிடம் எடுத்துச் சொல்லியபோது, உடனடியாக 6 புதிய ஈப்புகளை இந்தத் துறைக்கு அவர்கள் வழங்கி இருக்கிறார்கள் என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மீன்களின் தரத்தை உயர்த்த வேண்டும் என்று இங்கே பல உறுப்பினர்கள் கூறினார்கள். மீனவர்கள் எடுத்துவரும் மீன்களை எல்லாம் சுத்தமாகக் கையாண்டு, வெளிநாட்டுத் தரத்திற்கு இணையாக உயர்த்த வேண்டுமென்று கருதி, 10 முக்கியமான இடங்களில் மீன் இறங்கு தளங்களை ஏற்படுத்தவும், ஒரு மீன் இறங்கு தளத்திற்கு ரூ. 1.5 கோடி வீதம் செலவு செய்து அந்தத் தளங்களை அமைப்பதற்காகவும், நமது முதல்வரவர்கள் உடனடியாக 7.5 கோடி ரூபாயைத் தருவதாக ஒப்புதல் அளித்துள்ளார்கள். மீதம் 7.5 கோடி ரூபாயை மத்திய அரசு தரவிருக்கிறது. ஆக, பத்து இடங்களில் இந்த மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. ஆற்காட்டுத்துறை,

வீரபாண்டியபட்டினம், பழவேற்காடு, தேங்காய்ப்பட்டினம், முடசல் ஓடை, பாம்பன், ஜெகதாப்பட்டினம், புன்னக்காயல், அனுமந்தை, சேதுபாவாசத்திரம் ஆகிய இடங்ககளில் இவை அமையவிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, விசைப்படகு மீனவர்களுக்கு டீசல் மானியம் வழங்குவதுபோல, வள்ளம் மற்றும் கட்டுமரங்கள், கண்ணாடி நார் இழைப் படகு இவற்றில், உட்பொருத்தும்/வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கு 20 ஆயிரம் கலன்களுக்கு, மாதம் ஒரு கலத்திற்கு மண்ணெண்ணெய் அல்லது டீசலுக்கு மானியமாக ரூ. 125 வீதம், வருடத்திற்கு ரூ.1500 வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்பதையும், இதற்கு ஆகும் செலவு ரூ.3 கோடி என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிடும்போது, மீனளத் துறைக்கு ஒதுக்கிய தொகை போதாது என்றார். நேற்றுமட்டும் நாங்கள் 16 கோடி ரூபாய்க்கு மேல் இந்தத் துறைக்காகப் பெற்றிருக்கிறோமென்றால், மீனவ மக்கள் மீது நமது முதல்வர் டாக்டர் கலைஞரவர்கள் எவ்வளவு பற்று கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் எல்லோரும் அறிந்து கொள்ள முடியும்.

*பிற்பகல் 12-25*

அதுமட்டுமல்லாமல், இங்கே நீங்கள் நல்ல பல அரிய கருத்துக் களைக் கூறியிருக்கிறீர்கள். நமது மாநில மீனவர்களுக்கு ஆலோசனைக் குழு என்று ஒன்று இருக்கிறது, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இருக்கின்றன. இவையெல்லாம் மீன் வளத் துறைக்குப் பல ஆலோசனை களைக் கூறியிருக்கின்றன. அந்த ஆலோசனைகளின் அடிப்படையில், வருங்காலத்தில் நமது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் அரசு நல்ல பல திட்டங்களை இயற்ற இருக்கிறது. என்பதை மனதிற் கொண்டு—இங்கே 64 பேர் வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். இந்த—வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த அரசு கோரிய தொகையைத் தருமாறு கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் மீனவ மக்களுக்கு நல்ல பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அவற்றை மனப்பூர்வமாக



வரவேற்கிறேன். முன்பெல்லாம் மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வந்தது; தற்போது அது தொடர்ந்து வழங்கப்படவில்லை; டீசல் மட்டும் வழங்கப்படுகிறது. இப்போது நவீனமாக மோட்டார் வைத்து மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதால், மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் உடனடியாக வழங்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் மானியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பைத்தான் கடைசியில் சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞரவர்களின் தலைமையில், 11 ஆண்டுகாலமாக தமிழகத்தின் முதல்வராக இருந்து சாதனை படைத்த சாதனையாளராக விளங்கக்கூடிய தலைவர் கலைஞரவர்கள் தலைமையில், இந்தப் பேரவையில் 1998-99 ஆம் ஆண்டிற்கான வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கின்ற வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு முதல்வரவர்களுக்கும், தங்களுக்கும், இந்தப் பேரவைக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈரேழு வயதினிலே போராடக் களம் புகுந்து (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வருடத்திற்கு ஒரு முறைதானே வாய்ப்பு கிடைக்கிறது. ஆகவே பேசவிடுங்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரேழு வயதினிலே போராடக் களம் புகுந்து, எழுபத்து நான்கு வயதினிலும் தமிழருக்கு தான் உழைத்து, ஈரோட்டுப் பெரியாரின் போராட்ட வழி நடந்து, அண்ணாவின் வழியினிலே அயராது உழைத்துக்கொண்டு, கண்ணொளியை இழந்தவர்கட்குக் கண்ணொளி தந்த சூரியனாய், காதொலியை இழந்தவர்க்குச் சேதி சொல்லும் 'முரசொலி'யாய், ஊனமுற்றோர் நடப்பதற்கு ஊன்று கோலாய் தானிருந்து, உடல் பிணியில் நொந்தவருக்கு தாயாகத் தானிருந்து, அரசாங்க ஊழியருக்கும் அள்ளித் தரும் வள்ளலாக, விவசாயத் தொழிலாளிக்கு வேண்டியதை தான் தந்து, கோடியில் ஒருவராக தமிழ்க்

குலம் தழைக்க வந்தவராக, தேடி நிற்கும் தமிழர்களின் தென் திசைத் தீபமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞரவர்கள் அளப்பரிய திட்டங்களை அனைத்துத் துறைகளுக்கும் தந்து, வழிகாட்டி, செயலாற்றி வரலாற்றுச் சாதனைகளைப் படைத்திருக்கிறார்கள்."

அவருடைய ஆலோசனையின்பேரில் வீட்டு வசதி வாரியம் இன்றைக்குச் சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறது. 'குடும்பத்திற்கு ஒரு வீடு' என்ற கொள்கையை அடையக்கூடிய வகையில் தமிழக முதல்வரால் வழங்கப்பட்ட கடந்தாண்டு அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றி வாரியம் சாதனை படைத்திருக்கிறது.

ஆடையில்லாத மனிதனை அரைமனிதன் என்று சொல்வார்கள், வீடில்லாத மனிதனை வாழ்க்கையில் குறைமனிதன் என்றே சொல்லலாம். அந்தக் குறைமனிதனை நிறைமனிதனாக மாற்றும் குறிக்கோளைக் கொண்ட துறைதான் வீட்டு வசதித் துறை.

வீட்டு வசதி வாரியம் உருவாக்கப்பட்ட பின் 37 ஆண்டுகளில் 3,50,027 குடியிருப்புக்களை உருவாக்கித் தந்திருக்கிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். 1970-71-ல் ரூபாய் 4.83 கோடியாக இருந்த முதலீட்டுச் செலவு 1998-99 ஆம் ஆண்டில் ரூபாய் 252 கோடி அளவிற்கு அதிகரித்து வளர்ச்சி பெற்றுள்ளது என்பதையும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தன் செயல்பாடுகளால் இந்தியாவிலேயே சிறந்த வீட்டு வசதி வாரியத்திற்கான பரிசினைப் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் நடந்த ஒப்பந்தப்புள்ளி முறைகேடு களைக் களையும்பொருட்டு மாண்புமிகு முதல்வர் கலைஞரவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு நடைமுறைப் படுத்தப்பட்ட திறந்தமுறை ஒப்பந்தப்புள்ளி முறையின் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூபாய் 40 கோடி அளவிற்கு மிகைப்படுத்தப்பட்ட செலவினத்தைத் தவிர்த்ததோடு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி மூலமாக ரூபாய் 11 கோடி சேமித்துள்ளது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கி.பி. 2011 ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு 175 இலட்சம் வீடுகள் தேவையென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதில் 80 விழுக்காடு பொருளாதாரத்தில் நலிவுற்றவர்கள் மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினர்களாக இருப்பார்கள். அவர்களுடைய பணவசதிக்கேற்ப குடியிருப்புகளைக் கட்டித்தர வேண்டுமென்ற நிலையிலே மாண்புமிகு



முதல்வர் கலைஞரவர்களுடைய அறிவுரைக்கேற்ப இன்றைக்கு வீடுகளைக் கட்டும் பணிகளை வீட்டு வசதி வாரியம் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறது. பாதாளச் சாக்கடைத் திட்டம், குடிநீர், சாலைகள் ஆகிய வசதிகளுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட மனைகள் அவர்கள் விரும்பும்படியான வடிவமைப்பில் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக்கூடிய வகையிலே இன்றைக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-30

இங்கே நம்முடைய ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. வெங்கடசாமி அவர்கள் பேசும்போது சொன்னதுபோல, ஓசூரிலே இருக்கின்ற தொழிலாளர்களுக்காக வீடுகளை மட்டும் கட்டித் தராமல், அவர்கள் தாங்களாகவே வீடுகள் கட்டிக்கொள்வதற்காக மேம்படுத்தப்பட்ட மனைகள் வேண்டும் என்பதற்காகச் சாக்கடை வசதிகள், சாலைகள் மற்றும் உள்ள எல்லாம் அமைத்து இன்றைக்கு வாரியம் அந்தப் பணியைச் செயலாற்றி தமிழகம் முழுவதும் விரிவுபடுத்த இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே வீட்டு வசதி வாரியம் 1998-99 ஆம் ஆண்டில் ரூபாய் 252 கோடி செலவில் 15 ஆயிரம் வீடுகள் கட்டித் தரும் என்று அறிவித்து இருந்தார்கள். அதை இந்தத் துறை, கடந்த ஆண்டைப் போலவே செய்து சாதனை படைத்துக் காட்டும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலம் கையகப்படுத்தும் சட்டப்படி வீட்டு வசதி வாரியம் மிக அதிக அளவில் நிலங்களைக் கையகப்படுத்துகிறபோது காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கின்ற வகையில் தனியாரிடம் சுமுகமாகப் பேசி நிலங்களைக் கையகப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, புதிய முறையில், நிலச் சொந்தக் காரர்கள் வாரியத்திற்கு நிலத்தைத் தந்தால், அதில் சாக்கடைத் திட்டம், சாலைகள், விளக்குகள், பூங்காக்கள் அமைத்து ஒரு பகுதியை அந்த நிலச் சொந்தக்காரர்களுக்கே வழங்கி, அவர்களே அதை விற்றுக்கொள்கின்ற வாய்ப்பு இந்த ஆண்டு முதன் முதலாக உருவாக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 28-10-1997 அன்று இவ்வாரியத்தின் பணிகளை ஆய்வு செய்து, வாரியத்தின் செயல்பாடுகளில் தொழில் ரீதியாக முன்னேற்றம் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, இன்றைக்குத் தொழில் முறை ஆலோசனை வழங்குபவர்களை இந்த வாரியம் நியமித்து இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், வீடுகள் புதிய அமைப்பில் கட்டப்பட வேண்டும் என்றும், மக்களைக் கவரக்கூடிய வகையில் இருக்க வேண்டும் என்றும், முகப்புகளும் தோற்றங்களும் வண்ணங்களும் நல்ல முறையில் இருக்கவேண்டும் என்றும் வழங்கிய அறிவுரையை ஏற்று, தற்போது கட்டப்படும் வீடுகள் நல்ல தோற்றத்துடன், அழகிய தோற்றத்துடன், நல்ல தரத்துடன் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வீட்டு வசதி ஒதுக்கீடுதாரர்களுடைய கணக்குகள்—அவர்கள் கட்ட வேண்டிய பணம், அவர்கள் வாங்கிய கடன்கள்—இவைகள் எல்லாம் தெள்ளத் தெளிவாகத் தெரியவேண்டும் என்பதற்காக, அவர்களுடைய கணக்குகள் எல்லாம் இன்றைக்குக் கணிப்பொறி மூலம் கணக்கிடப்பட்டு அவர்களுக்கு நேரடியாக அனுப்பக்கூடிய முறையை வாரியம் உருவாக்கி இருக்கிறது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையமானது சென்ற ஆண்டு நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்காக 381.97 கோடி ரூபாய் வழங்கி உள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நிதி அளிப்பதிலே இருந்த மிகுந்த சிரமங்களை எல்லாம் வங்கிகளிடம் பேசி, அதிக அளவிலே கடன் பெற்று, இந்தக் கடன்களைத் தங்குதடையின்றி வழங்கிய சாதனையை இன்றைக்கு இந்த இணையம் பெற்று இருக்கிறது. இன்றைக்கும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம்தான் இந்தியாவிலே கட்டப்படும் வீடுகளிலே 50 சதவீதத்திற்கும் மேல் வீடுகளுக்குக் கடன் கொடுத்துச் சாதனை படைத்து, அதற்கான பரிசினைப் பெற்று இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரக வீட்டு வசதி மூலம் ஆண்டுதோறும் 14 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கும் நிலையில், ஹட்கோ நிறுவனம், 9 சதவீத வட்டி வழங்கிய நிலையில், வட்டி அதிகமாக இருந்தாலும் அதற்காக நிதி உதவி பெற்று, மாண்புமிகு முதல்வரவர்கள் தாயுள்ளத்தோடு அந்த வட்டி, பயனீட்டாளர்கள் மீது விதிக்கப்படாமல், சுமார் 89 இலட்சம்



ரூபாய் வரை, அதை, அரசே ஏற்று, பழைய வட்டி வீதத்திலேயே கிராமப்புற மக்களுக்காக 45 ஆயிரம் வீடுகளை முதன் முதலாகக் கட்டித் தர உத்தரவிட்டு, இந்த ஆண்டு அதற்கான கடன்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கட்டட மையங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் பல மாவட்டங்களில் செயல்படுகின்றன. அதன்காரணமாக பஞ்சாயத்துக்களிலே கட்டப்படுகிற கட்டடங்கள் இன்றைக்கு கட்டட மையத்தின் மூலம் கட்டப்படுவதன் மூலம் பல கோடி ரூபாயை அரசாங்கம் சேமித்து இருக்கிறது. அப்படிப்பட்ட கட்டட மையங்கள் இன்னும் பல மாவட்ட மையங்களிலே புதிதாகத் தோற்றுவிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியம், ஊரக வீட்டு வசதி கழகம், கட்டட மையம், கூட்டுறவு இணையம் ஆகியவை இணைந்து ஊரகப் பகுதிகளில் குறைந்த செலவில் வீடுகள் கட்டும் பணிகளைத் துவக்கி இருக்கின்றன. நகர அமைப்புத் துறையின் மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து நகரங்களில் உள்ள வசதிகளையும் வாய்ப்புகளையும் மிகத் தெளிவாக அறிந்து திட்டம் தீட்டி விரைவில் செயல்படுத்துவதற்கான ஒப்புதல்களை வழங்குகின்ற மகத்தான செயல்பாடுகளைக் கொண்ட துறையாக இத்துறை செயல்பட்டு வருகிறது. இத்துறை நகரங்களில் கட்டுப்பாட்டுடனும் விரும்பத்தக்க வளர்ச்சியை துரிதப்படுத்தவும் நகரங்களுக்கு முழுமையான திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்துவதில் முனைப்புடன் செயல்படுகிறது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், குடிசைகளிலும் தெரு ஓரங்களிலும் சாலைப் பகுதிகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்குக் கோபுரம் போன்ற குடியிருப்புகளைக் கட்டிட, 1970 ஆம் ஆண்டு குடிசைமாற்று வாரியம் என்ற அமைப்பினை இந்தியாவிலே முதன் முதலாக உருவாக்கி வரலாற்றுச் சாதனை ஏற்படுத்தி இருந்தார்கள்.

பிற்பகல் 12-35

இவ்வாரியத்தின் மூலம் சென்னை, மதுரை, கோவை போன்ற பெருநகரங்களில் எல்லாம் தீப்பிடிக்காத, வெள்ளத்தால் பாதிக்கப்படாத அடிப்படை வசதிகளோடுகூடிய அடுக்கு மாடிக் குடியிருப்புகளைக் கட்டித் தந்து, அவர்களுடைய இன்னல்களை அகற்றினார்கள் என்பதற்காக, மறைந்த சர்வோதயத் தலைவர் ஜெயபிரகாஷ் நாராயண்

[திரு. கு. பிச்சாண்டி] [1998 மே 15

மற்றும் அப்போதைய மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் பாபு ஜெகஜீவன்ராம் போன்ற தலைவர்களெல்லாம் தமிழகத்தின் முதல்வர் கலைஞர் அவர்களை மனமுவந்து பாராட்டியிருக்கிறார்கள். கடந்த 18 ஆண்டுகளில் இவ்வாரியம் ரூ. 92.90 கோடி செலவில் 63,468 அடுக்கு மாடிக் குடியிருப்புக்களைக் கட்டித் தந்திருக்கிறது. 1998-ல் சென்னையில் மக்கள் தொகை 40 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டு இந்தியாவின் பெருநகரமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்நகரத்தின் மக்கள் தொகையைக் கணக்கிட்டு அவர்களுக்கு வசதிகளை மேம்படுத்துவதற்காகப் புறவழிச்சாலைகள், சுரங்கப் பாதைகள், அங்காடிகள், விற்பனை வளாகங்கள், பூங்காக்கள், சுற்றுப்புறச்சூழல், பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற அனைத்தையும் ஏற்படுத்தவும், திட்டமிடவும் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் அதற்கான பணிகளைச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செய்துவருகிறது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா வழியில் அயராது உழைக்கும் மாண்புமிகு முதல்வரவர்களின் அடிச்சுவட்டில் வளர்ந்து வருகிற நாங்கள் 'செய்வதைச் சொல்வோம், சொல்வதைச் செய்வோம்' என்ற கோட்பாட்டின்படி கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிட நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்து, ஒருசில புதிய திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிக்க விரும்புகிறேன்.

வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குறைந்த வருவாய்ப் பிரிவு மக்களுக்கு வீடுகள் கட்ட மனைகளை உருவாக்கி வழங்குவதற்கு, சென்னை மாநகரத்தில், தண்டையார்பேட்டை சேனியம்மன் கோயில் திட்டத்தில் குடிநீர் வசதி, கழிவு நீர் வசதி, சாலை வசதிகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட 242 மனைகள் வழங்கப்படும்.

அதேபோல் செங்கல்பட்டு அருகே உள்ள ஆலப்பாக்கத்தில் ரூ. 70 இலட்சம் மதிப்பீட்டில் 163 மனைகள் வழங்கப்படும். நாமக்கல், திருவள்ளூர், தேனி, பெரம்பலூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் 30 கோடி ரூபாய் செலவில் அரசு ஊழியர்களுக்கான வாடகை வீடுகள் கட்டப்படும்.

அதுமட்டுமல்லாமல், இந்த நிதியாண்டில், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்காக 6.50 கோடி ரூபாய் செலவில் 3021 குடியிருப்புகளும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு 65.91 கோடி ரூபாய் செலவில் 4800



1998 மே 15] [திரு. கு. பிச்சாண்டி]

குடியிருப்புகளும் கட்டித் தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலூர் சத்துவாச்சாரியில் 15.25 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு ரூ.1.96 கோடி மதிப்பீட்டில் அதனை மேம்படுத்தி குறைந்த, நடுத்தர, உயர் வருவாய்ப் பிரிவினர்களுக்கான 258 குடும்பங்களுக்கு மனைகள் வழங்கப்படும்.

அதேபோல ஈரோடு முத்தம்பாளையத்தில் மேலும் 623 குடும்பங்களுக்கு ரூ. 4.13 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட மனைகள் வழங்கப்படும். இது குறைந்த, நடுத்தர மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினருக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை துடியலூர், ஓசூர் புறநகர், இராமநாதபுரம் சரகத்தில் பட்டினம்காத்தான், காரைக்குடி அருகில் உள்ள கழனிவாசல் ஆகிய இடங்களில் மேம்படுத்தப்பட்ட மனைகள் வழங்கப்படும்.

சென்னையிலே ரூ. 34 கோடி மதிப்பீட்டில் கோயம்பேடு தெற்காசிய விளையாட்டுக் கிராம நுழைவுப் பகுதியில் வணிக வளாகம், அலுவலகங்களுடன்கூடிய 12 மற்றும் 18 மாடிகள் கொண்ட கோபுரக் கட்டடம் புதிதாக முதன்முதலாகக் கட்டப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை நகரைப் பொறுத்தவரையில் அண்ணா நகர் மையப் பகுதியில் அமைந்துள்ள பெரியார் திருமண மண்டபத்திற்கு அருகில் ரூ. 12.80 கோடியில் 128 உயர் வருவாய்ப் பிரிவினருக்கான அடுக்குமாடிக் குடியிருப்புகளும், முகப்பேரில் 16.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 248 உயர் வருவாய்ப் பிரிவினருக்கான அடுக்குமாடிக் குடியிருப்புகளும், அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம் பகுதியில் 8.62 கோடி மதிப்பீட்டில் 84 உயர் வருவாய்ப் பிரிவினருக்கான அடுக்குமாடிக் குடியிருப்புகளும், மேற்கு விரிவு பகுதியில் ரூ. 6.73 கோடி மதிப்பீட்டில் நான்கு மாடிக் கட்டடம் ஒன்றும் தரைத்தளம் மற்றும் கடைகள் கொண்டதாகவும், மூன்றாவது மாடியில் அலுவலகங்கள் மற்றும் கடைகள் கொண்டதாகவும் கட்டப்படும்.

கோயம்பேடு தெற்காசிய விளையாட்டுக் கிராமத்தில் 5 ஏக்கர் நிலத்தில் 384 உயர் வருவாய்ப் பிரிவினருக்கான அடுக்குமாடி வீடுகளும், கலைஞர் கருணாநிதி நகரில் 3.73 ஏக்கர் நிலத்தில் 27.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வணிக வளாகம், அலுவலகம் ஆகியவற்றுடன் கூடிய

[திரு. கு. பிச்சாண்டி] [1998 மே 15

கோபுரக் கட்டடம் மற்றும் தரைத்தளம் உள்ளிட்ட 13 மாடிகள் கொண்ட கட்டடம் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டு பராமரிக்கப்படும். அங்கே சமுதாயக்கூடங்கள், திருமணக்கூட மண்டபங்கள் விரிவுபடுத்தப்பட்டு மேல்மாடிகள் கட்டப்பட்டு நவீன வசதிகள் கொண்டதாக மாற்றியமைக்கப்படும்.

அதேபோல், வில்லிவாக்கத்தில் 3.5 ஏக்கர் நிலப் பரப்பில் ரூ. 22.40 கோடி மதிப்பீட்டில் 332 உயர் வருவாய்ப் பிரிவினருக்காக வீடுகள் கட்டப்படும். அதேபோல் காஞ்சிபுரம் செவிலிமேடு, திருவண்ணாமலை புறநகர், சேலம் புறநகர் பகுதி ஐயம்பெருமாள்பட்டி, ஈரோடு முத்தம்பாளையம், கரூர் சனப்பரெட்டி ஆகிய இடங்களில் எல்லாம் இந்த ஆண்டு வீடுகள் கட்டப்படும்.

அதுமட்டுமின்றி, முகப்பேரில் கூவம் ஆற்றின் கரையில் உள்ள பகுதியில் வாரியத்தால் உருவாக்கப்பட்ட குடியிருப்புகள் மூலம் 20,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் வாரியத்தின் சுழல் நிதியிலிருந்து ரூ. 4 கோடி செலவில் பாலம் ஒன்றினைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு ஊழியர் குடியிருப்புகளைப் பழுது பார்க்க ரூ. 4.29 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைச் சிறப்பு இனமாகப் பழுதுபார்க்க தலைவர் கலைஞர் அவர்கள் 5 கோடி ரூபாயை இன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள். வாணியம்பாடி, செய்யாறு, கடையநல்லூர், பேரையூர் மற்றும் சில ஊர்களில் வீட்டு வசதி வாரியத்தால் வீடுகள் கட்ட நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ள வாரியம் முயற்சிகள் எடுத்துள்ளது. வாரியப் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது இறந்தால் அவர்களுடைய வாரிசுகளுக்குக் கொடுக்கப்படும் கருணைத்தொகை ரூ. 60,000லிருந்து ரூ. 1 இலட்சமாக உயர்த்தி 1-7-1996 முதல் வழங்கப்படும்.

பிற்பகல் 12-40

வாரியத்தால் கட்டப்பட்டுவரும் கட்டடங்களின் வடிவமைப்பு, வீடுகளின் தரம் ஆகியவற்றைக் கண்காணிக்க வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் ஒரு தலைமைப் பொறியாளரின்கீழ் 2 மேற்பார்வைப் பொறியாளர்கள், 4 செயற்பொறியாளர்கள் நியமிக்கப்பட உள்ளார்கள். வீட்டு வசதி வாரிய ஒதுக்கீட்டாளர்களின் சிரமத்தைக் கருத்திலேகொண்டு அவர்கள் செலுத்த வேண்டிய முன்பணத் தொகை 40 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது. மாதத்



1998 மே 15] [திரு. கு. பிச்சாண்டி]

தவணைகளின் அளவை எளிமைப்படுத்தும்பொருட்டு, பணம் திருப்பிச் செலுத்தும் காலம் 15 ஆண்டுகாலமாக நீட்டிக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மேலாண்மையில் இயங்கும் தக்கைக் கல் பணியாளர்களை வாரிய விதிகளின்கீழ் இணைத்து, அவர்களுக்குக் குடும்ப நலத் திட்டத்தின்கீழ் உரிய தொகை வழங்கப்படும். தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் முழுவதுமாக கணினிமயம் ஆக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் வீடுகள் பழுது பார்க்கவும் விரிவுபடுத்தவும் ரூபாய் 25,000-த்திலிருந்து ரூபாய் 50,000 வரை கடன் வழங்கப்படும். முதன்முதலாக இதற்காக ஹட்கோ நிறுவனம் ரூபாய் 10 கோடி வழங்கவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1,20,000-க்கு மேற்பட்ட கடன் தொகைக்கு பிரதம கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்கு 1/2 சதவீத நிதி ஆதாயம் என்பதை 1 சதவீதம் என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மேலும் வீட்டு வசதிக் கடன் திட்டங்களைச் சிறந்த முறையில் செயல்படுத்தவும், கடன் வசூல் பணியைத் துரிதப்படுத்தும் நோக்கத்தோடும் தமிழ்நாடு வீட்டு வசதி இணையத்திலுள்ள ஒவ்வொரு கூட்டுறவு வீட்டு வசதி மண்டலத்திற்கும் ஒரு ஈப்பு வழங்கப்படும்.

வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கு கடன் அனுமதிக்க சம்பந்தப்பட்ட சங்கத்தின் தவணைப் பாக்கியைப் பார்க்காது கடன் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிரதமக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்குச் சொந்தமான இடம் இருந்தால் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு அதிகபட்சமாக ரூபாய் 5 இலட்சம் வீட்டுவசதி இணையம் கடன் வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு வழங்கப்படும் ரூபாய் 25,000-ஐ நகரப் பகுதிகளிலும் விரிவுபடுத்த உத்தரவிடப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமப்புறங்களில் வீடு கட்டத் தற்போது வழங்கப்படும் கடன் தொகை ரூபாய் 55,000, ரூபாய் 70,000 ரூபாயாகவும் 80,000 ரூபாய் 1,20,000 ரூபாயாகவும் உயர்த்தப்படுகிறது.

[திரு. கு. பிச்சாண்டி] [1998 மே 15

இந்த நிதியாண்டில் 81,500 புதிய வீடுகள் கட்ட 438.33 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது சென்ற ஆண்டைவிட 81.31 கோடி ரூபாய் அதிகம். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிதியாண்டில் நலிவடைந்த பிரிவினருக்கு 45,000 வீடுகள் கட்டுவதற்கு மானியத்துடன்கூடிய கடன் வழங்குவதற்காக 65.23 கோடி ரூபாய் இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரகப் பகுதிகளில் 81.50 கோடி ரூபாய் நிதியுதவியுடன் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 6500 வீடுகளும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு 3000 வீடுகளும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. புற நகர்ப் பகுதியில் வாழும் நலிந்த பிரிவினர் வீடு கட்ட, தலா 25,000 ரூபாய் வீதம் 12,000 நபர்களுக்குக் கடன் உதவி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடன் பெறுபவர்கள் 31 ஆண்டுகளுக்கு வில்லங்கச் சான்று பெற வேண்டுமென்று இருப்பதை 14 ஆண்டுகளாகக் குறைக்கப்படுகிறது.

நகர ஊரமைப்புத் துறையைப் பொறுத்தவரையில் சில வரலாற்றுச் சூழல்கள் கெட்டுவிடாமல் காப்பாற்றுவதற்கு, மதுரை, ஸ்ரீரங்கம், ஸ்ரீபெரும்புதூர், திருவில்லிப்புத்தூர், தஞ்சாவூர், பத்மனாபபுரம், காரைக்குடி, சித்தன்னவாசல், திருச்செங்கோடு, பவானி, செஞ்சி ஆகிய 11 நகரங்களில் நடப்பு நிதியாண்டில் ரூபாய் 25 இலட்சம் செலவில் வசதிகளைப் பெருக்குதல், வரலாற்றுச் சிறப்பினைக் காப்பாற்றுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மிகக் குறைந்த வளர்ச்சியுள்ள நகரங்களான செய்யூர், ஊத்துக்கோட்டை, ஊத்தங்கரை, பெண்ணாகரம், கள்ளக்குறிச்சி, பல்லடம், அரியலூர், நன்னிலம், வாடிப்பட்டி, விளவங்கோடு, சேத்துப்பட்டு ஆகிய நகரங்களில் வசதிகள் அளிக்க இந்த ஆண்டு ஆய்வு மற்றும் திட்டங்கள் தயாரிப்பதற்கு ரூபாய் 20 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, மாநில ஒருங்கிணைப்பு நகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பத்து நகரங்களுக்கு ஒரு திட்டத்திற்கு ரூபாய் 35 இலட்சம் வீதம் ரூபாய் 350 இலட்சம் நடப்பு நிதியாண்டில் நிதியுதவி வழங்கப்படும். நகர் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு நவீன முறைகளான புவியியல் தகவல் முறையும் வான்வழிப் புகைப்படங்களும் தயாரிப்பதற்கு நடப்பு நிதியாண்டில் காரைக்குடி, திண்டிவனம் ஆகிய இரண்டு நகரங்களுக்கு ரூபாய் 10 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.



1998 மே 15] [திரு. கு. பிச்சாண்டி]

நடப்பாண்டில் திருவாரூர், இராமநாதபுரம் ஆகிய நகரங்களில் கூட்டு உள்ளூர்த் திட்டக் குழு ஒன்று செயல்படுத்தப்படும். மேலும் நடப்பாண்டில் சேலம், குளித்தலை, போளூர், திருத்துறைப்பூண்டி, பல்லடம் ஆகிய நகரங்களுக்குப் புதிதாக முழுமைத் திட்டம் அமல்படுத்தப்படும்.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் 1998-99ஆம் ஆண்டு ரூபாய் 30 கோடி செலவில் 3000 குடியிருப்புகள் ரூபாய் 9 கோடி அரசு மானியத்துடன் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நகர்ப்புறக் குடிசைப்பகுதி சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர்க் குழாய், கழிப்பிட வசதி ஆகிய பணிகளுக்காக குடும்பம் ஒன்றிற்கு ரூபாய் 2,000 செலவில் 30,000 குடும்பங்களுக்கு ரூபாய் 6 கோடி அரசு மானியத்துடன் வழங்கப்படும்.

சென்னை மாநகரில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களை மாற்றிடங்களில் குடியமர்த்தும் பகுதியில் 3,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படவுள்ளன. இவ்வாண்டில் ரூபாய் 18 கோடி செலவில் 1500 அடுக்குமாடிக் குடியிருப்புகள் குடிசை மாற்று வாரியத்தால் கட்டி முடிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

10,000 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ரூபாய் 4 கோடி செலவில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

அடுக்குமாடித் திட்டப்பகுதிகளின் கழிவு நீர் வெளியேற்றும் அமைப்புகளை மேம்படுத்தும்பொருட்டு சேப்பாக்கம் தொகுதியில் சிந்தாதிரிப்பேட்டை, பெரம்பூர் தொகுதியில் வியாசர்பாடி, மயிலாப்பூர் தொகுதியில் ஏகாம்பரம்பிள்ளை முனுசாமிப்பிள்ளைத் தோட்டம், ஆலந்தூர் தொகுதியில் இராணி அண்ணாநகர் ஆகிய திட்டப்பகுதிகளில் 3200 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூபாய் 70 இலட்சம் செலவிடப்படவுள்ளது.

பிற்பகல் 12-45

துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் இரண்டு தடத்தில் சென்னை மயிலை-தரமணிக்கு இடைப்பட்ட பகுதியில் வாழும்

[திரு. கு. பிச்சாண்டி] [1998 மே 15

குடிசைவாழ் குடும்பங்களை, சென்னை நகருக்கு அருகில் ரூ. 18 கோடி செலவில் 1500 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி மாற்றி அமைத்துக் குடியமர்த்தப்படும். சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்தால் ரூ. 366 கோடி செலவில் சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத் துறை, மாநகரக் காவல் துறை ஆகியவற்றோடு இணைந்து நகரப் பகுதிகளில் 13 சிறு சாலை மேம்பாலங்கள் மற்றும் 4 பெரிய சாலை மேம்பாலங்கள், 11 இடங்களில் சாலை சந்திப்புகள், 3 இடங்களில் சிக்னல் விளக்குகள், 4 இடங்களில் சுரங்கப்பாதை கட்டுதல், 4 இடங்களில் வாகனங்கள் நிற்குமிடம் அமைத்தல் மற்றும் 11 இடங்களில் சாலைகளைப் புதுப்பித்தல், அண்ணா மேம்பாலத்திற்கு அருகே தொடர் இணைப்புத் தொலைக்காட்சி மூலம் போக்குவரத்து நெரிசலை முறைப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

10.8 கிலோ மீட்டர் நீளமுள்ள பரங்கிமலை-பூவிருந்தவல்லி சாலை ரூபாய் 11.7 கோடி செலவில் மேம்படுத்தப்படவுள்ளது. மேலும், சென்னை பெருநகரப் பகுதிக்குள்ளும் அதன் அருகிலுள்ள 250 கிலோ மீட்டர் நீளமுள்ள 8 சாலைகள் ரூபாய் 212 கோடி செலவில் மேம்படுத்தப்படும். ரூபாய் 605 கோடி செலவில் திருமயிலை-வேளச்சேரி துரித இரயில் போக்குவரத்து இரண்டாம் பகுதித் திட்டம் செயல்படுத்தப்படும். சென்னை-திருச்சி நெடுஞ்சாலை, சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலை, சென்னை—நெல்லூர் நெடுஞ்சாலை மற்றும் திருவொற்றியூர், பொன்னேரி மற்றும் பஞ்செட்டி சாலைகளை இணைத்து ரூபாய் 317 கோடி செலவில் வெளிவட்டச் சாலை அமைக்கப்படும்.

கோயம்பேடு வணிக வளாகத்தில் ரூபாய் 20 கோடி செலவில் மேலும் 325 கடைகள் கட்டப்படும். சென்ற ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு ஊரக வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் வேலூர் அருகே உள்ள கழிஞ்சூர், தாரப்படவேடு திட்டப் பகுதியில், பண வசதி இல்லாத ஒதுக்கீடுதாரர்களின் சம்மதத்தின்பேரில், வேலூர் கட்டட மையத்தின் உதவியுடன் 50 மாதிரி வீடுகள் கட்டித் தரப்படும்.

இப்படிப்பட்ட அற்புதத் திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் வழி நடத்தப்படும் இந்த அரசை, சிலர் குறை கூறுகிறார்கள். 'சிட்டுக் குருவிக்குப் பட்டம் கட்டிவிட்டால் அது சட்டி பானை எல்லாம் சென்று லொட்டு லொட்டு என்று தட்டும்' என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதுபோல, தற்போது இந்த நாட்டிலே சிலர் தற்காலிக



1998 மே 15] [திரு. கு. பிச்சாண்டி]

வெற்றியைப் பெற்றுவிட்டு இந்த அற்புத ஆட்சியைக் குறை சொல்வதும், கூக்குரலிடுவதும் தத்து பித்து என்று தாறுமாறாகப் பேசுவதுமாக இருக்கிறார்கள். அந்தச் சிட்டுக் குருவிகளின் குறை கூறும் போக்கையும் கூக்குரலையும் இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடியிருக்க சொந்தமான வீடுகளை வழங்குகின்ற குறிக்கோளோடு வீட்டு வசதித் துறையும், திட்டமிட்ட நகரங்களை உருவாக்கிட நகர்ப்புற வளர்ச்சித் துறையும், ஆக்கபூர்வமான பணிகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலோடு நிறைவேற்றிக் கொண்டு இருக்கின்றன என்பதைப் பேரவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கையின்மீது தந்த கருத்துக்களை, ஆலோசனைகளாக ஏற்றுக் கொள்வதோடு அவர்கள் அள்ளித் தந்த கருத்துக் குவியல்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெட்டுத் தீர்மானங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் அரசு ஊழியர்களுக்குக் குடியிருப்புகள் கட்டக் கோரியுள்ளனர். மாவட்டத் தலைமையிடம் மற்றும் வருவாய்க் கோட்டத் தலைமையிடங்களிலேதான் கட்ட முடியும் என்ற நிலை இருந்தாலும், இடம் கிடைத்தால், மற்ற தாலுக்கா தலைமையிடங்களில் கட்டுவதற்கு பரிசீலிக்கப்படும். சோடியம் விளக்குகள் அமைத்தல், சாக்கடை வசதிகளை மேம்படுத்துதல், பேருந்து நிலையம் உருவாக்குதல் போன்ற கோரிக்கைகள் எல்லாம் நகராட்சிகளில்தான் செய்யப்பட வேண்டியிருக்கிறது. அதை நகர்ப்புற வளர்ச்சித் துறை, நகராட்சியின் மூலமாகச் செய்வதற்கு, கேட்டுக் கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்த வெட்டுத் தீர்மானங்களின் மூலம் சுட்டிக்காட்டியவைகளைப் பரிசீலித்து, உரிய வகையில் பதில் அளித்துள்ளேன் என்று கருதுகிறேன். நம்முடைய மணி அவர்களுடைய கோரிக்கையும் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் எனது பதில் உரையை ஏற்று வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையை முழுமையாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருவான்மியூரில் இருக்கக்கூடிய பத்திரிகையாளர் காலனிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிலம் வாங்குவதற்காக மானியம் தந்து, அங்கே 134 பத்திரிகையாளர்களுக்கு ஏற்கெனவே வீடுகள்

எல்லாம் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், கட்டடம் கட்டுவதிலே ஏற்பட்ட தாமதத்தினுடைய விளைவாக இன்று பத்திரிகையாளர்கள் எல்லாம் ஒரு இலட்சம், 2 இலட்சம், 3 இலட்சம் என்று வட்டி கொடுக்க முடியாமல், அவர்கள் பாவம், தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சம்பளம், 2 ஆயிரம், 3 ஆயிரம், 4 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவிற்கு வருகிறீர்களா? இல்லை உங்களை உட்காரச் சொல்லவா? மற்றவர்கள் கேட்கிற கேள்வியை உங்களைக் கேட்க விட்டேன். அதுவே தப்பு, இதிலே நீங்கள் பேச முடியாத வாய்ப்பு, ஆனால் ஒரு சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருக்கிறீர்கள். சீக்கிரம் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உரையை முடித்து விட்டேன். ஆகவே, அவர்கள் வட்டி கட்ட முடியாமல் சிரமப்படுகின்ற காரணத்தினாலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிலம் வாங்க எப்படி மானியத்தை அளித்து, அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தாரோ, அதேபோல ஒவ்வொரு பத்திரிகையாளருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் மானியம் அளித்து அந்த வட்டியை ஈடு கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை தங்கள் வாயிலாக அமைச்சரிடம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வரிடம் அவர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா எம்.எல்.ஏ.க்களுக்கும், அந்தந்தத் தொகுதியிலே வீடுகள் வேண்டும் என்று கேட்டோம்; request செய்தோம். எனவே, அதைப்பற்றி தயவுசெய்து ஏதாவது சொல்லவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.எல்.ஏ.க்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு முதலில் இடம் அங்கங்கே கிடைப்பது கடினமாக இருக்கும். இடங்களைப் பெற்றுத்



தந்தால் வீடுகளைக் கட்டுவதற்கு வீட்டு வசதித் துறை கடன் வழங்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990 லே திருப்பூர் நகரத்திலே வீட்டு வசதி வாரியத்தின் வாயிலாக வீடுகள் கட்டித் தருவதாக ஆயிரம் ரூபாய் பணம், முதல் தவணையாக வாங்கியும், இதுவரையில் அதற்கான எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை என்பதை ரசீது மூலமாக நண்பர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இது தெரியுமா? தெரிந்திருந்தால், அதற்குரிய நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரிலே இடம் மிகவும் அதிக விலையிலே இருக்கிற காரணத்தால், இடம் கிடைப்பது மிகவும் கடினமாக இருந்தது. நான் நேரடியாகச் சென்று, இப்போது அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உள்ள அதிகாரிகளைச் சந்தித்ததன் விளைவாக, விரைந்து இடத்தைப் பெற்று அவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தருவதற்கான முயற்சிகளை வாரியம் மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன வினா நேரமா? (குறுக்கீடு) டைம் இருக்கிறது என்றால் நான் கொடுக்க வேண்டுமா? நீங்கள் பேசாமல் உட்காருங்கள். திரு. இரா. மணிமாறன்.

***திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. ஆனால், மதுரையிலே இருக்கக்கூடிய நிருபர்கள் மட்டுமே, அந்தக் குறியீட்டளவைப் பெற்றுக் கொள்கிறார்கள். திண்டுக்கல், தேனி, பழனி போன்ற நகரங்களில் இருக்கக்கூடிய நிருபர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைப்பதில்லை. எனவே, அந்தக் குறியீட்டளவை உயர்த்தி, அந்தந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய, வீட்டு வசதி வாரியத்திலே இருக்கக்கூடிய வீடுகள் நிருபர்களுக்கு வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வரே ஒரு பத்திரிகையாளர். பல

இடங்களிலேயிருந்து வந்த கோரிக்கை இது. ஆகவே, அவர்கள் பரிசீலித்து விரைவிலே அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, நீங்கள் ஏற்கெனவே திரு. ஞானசேகரனுக்காகப் பேசிவிட்டீர்களே, இப்போது என்ன விளக்கம் வேண்டும் உங்களுக்கு? (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** சத்துவாச்சாரி பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சத்துவாச்சாரி பற்றி என்றால் நான் அனுமதிக்கமாட்டேன். திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வெங்கடசாமி அவர்கள் கேட்டதைப் போல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்குத் தயாராக இல்லை என்றாலும்கூட, அந்தந்தத் தொகுதியிலே இருக்கிற வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வாடகைக் குடியிருப்புகளிலே அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(திரு. வை. சிவபுண்ணியம் நின்று கொண்டே இருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்வி கேட்ட பிறகு, ஏன் நிற்கிறீர்கள்? உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இங்கே சென்னையிலே ஒரு இடம் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால், வேறு ஒரு இடத்திலே கொடுப்பது விதியின்படி சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை சிஐடி நகரில், 1956ஆம் ஆண்டு, காமராஜர் அவர்கள் காலத்தில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட 40 வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு இன்னும் பெயர் மாற்றம் செய்து கொடுக்கப்படவில்லை. ஆகவே, அதைச் செய்து கொடுப்பீர்களா என்று அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது குடிசைப் பகுதியை அவர்களுக்கே உரிமையாக்கும் திட்டத்தை தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வழங்கி, அவை எல்லாம், உரிமையாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் மனு செய்தால் அவை உரிமையாக்கித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 32—வீட்டு வசதி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 32 - வீட்டுவசதி. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



219397
N211, 31 N 98
N98·532

[பேரவைத் தலைவர்] [1998 மே 15

திரு. நா. பெரியசாமி, இருக்கையில் இல்லை. திரு. நா. பெரிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வீட்டு வசதி பற்றிய *32* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. *47,17,20,000*-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.



1998 மே 15] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 33—நகர்ப்பகுதி வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33-நகர்ப்பகுதி வளர்ச்சி. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. ஐ கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 10,38,66,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

பிற்பகல் 12-55

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (இ) கோரிக்கை எண் 21—மீனளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 21-மீனளம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுதப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஐ. கணேசன் இருக்கையில் இல்லை. திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.





**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. நா. பெரியசாமி, இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பநத்ம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1998 மே 15

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 42,70,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (18-5-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

147. உள் துறையின் 29-09-1987ஆம் நாளிட்ட II(2)HO/5710(q)87ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து உள் (போ-3) துறையின் 5-3-1998ஆம் நாளிட்ட 238ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

188. மானியக் கோரிக்கை எண் 21, மீன் வளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

189. மீன் வளத் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

190. மீன் வளத் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்)

191. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கை, 1997-98.

192. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கை, 1997-98.

193. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தைந்தாவது அறிக்கை, 1997-98.



## இணைப்பு-I

[203 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி

### மானிய கோரிக்கை எண் 32

### " வீட்டுவசதி "

### கொள்கை விளக்கக் குறிப்பு-1998-99

**முன்னுரை**

வீட்டுவசதி அளிப்பது, அரசின் தீவிர ஊக்குவிப்புடன் செயலாக்கப்பட வேண்டியதோர் முக்கியமான இன்றியமையாத அம்சமாகும். அதிகரித்துவரும் மக்கட்தொகை மற்றும் கிராமப்பகுதியிலிருந்து நகர்ப்பகுதிக்கு மக்களது குடிமாற்றம், ஆகியன வீட்டுவசதி பற்றாக்குறையினை அதிகப்படுத்துகிறது. இப்பிரச்சினையினை ஈடுகட்ட, "ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வீடு" என்ற குறிக்கோளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. இக்குறிக்கோளை அடையும் வகையில் பல்வேறு வருமானப் பிரிவைச் சார்ந்தவர்களும் தகுந்த வசிக்குமிடம் பெறும் வண்ணம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் ஆகியவை திட்டங்கள் தயாரித்து செயல்படுத்தி வருகின்றன.

2. ஒன்பதாவது திட்ட காலத்தில், தேவையான அளவிற்கு வீட்டுவசதி குடியிருப்புகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதன் அவசியத்தினைத் தேசிய வீட்டுவசதிக் கொள்கை வலியுறுத்தியுள்ளது. வீட்டு வசதித் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுவதற்கு நிதிநிறுவனங்கள், வங்கிகள் போன்ற பல்வேறு முகமைகளும் பெரும் பங்கு வகிக்க வேண்டும். பொருத்தமான கட்டடப் பொருட்கள் மற்றும் விலை குறைந்த தொழில்நுட்பம் ஆகிய பிரச்சினைகள் ஆராயப்பட வேண்டும். வருங்காலத்தில் பெரிய அளவில் வீட்டுவசதித் திட்டங்கள் தயாரித்துச் செயல்படுத்துவது, அரசின் முக்கியச் செயல்பாடுகளில் ஒன்றாக இருக்கும்.

3. பல்வேறு வருமானப் பிரிவில் உள்ள மக்களுக்கு அத்தியாவசியமான அடிப்படை வசதிகளுடனும், வாங்கக்கூடிய விலையிலும் வீட்டுவசதி செய்து கொடுப்பது என்ற கொள்கையில் அரசு முழு நாட்டம் கொண்டுள்ளது. மக்கள், குறிப்பாக ஏழைகள் மற்றும் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளோர் விரைவில் சொந்தமாக வீடுகள் பெறுவதற்கு இது வழிவகுக்கிறது. வீட்டுவசதியினைப் பெருக்கவும், பாதுகாக்கவும் மற்றும் மேம்படுத்தவும் மக்கள் வீட்டு வசதிக்கென முதலீடு செய்ய ஊக்குவிக்கப்படுகின்றனர்.

## 1.0 தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

### 1.1 முன்னுரை

சமுதாயத்திலுள்ள நடுத்தர வருவாய் மற்றும் அதற்கு மேம்பட்ட வருவாயுள்ள மக்களின் வீட்டு வசதித் தேவையை நிறைவு செய்வது மட்டுமின்றி ஏழைகள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள், பொருளாதாரத்தில் நலிவுற்றோர், குறைந்த வருவாயினர், நடுத்தர வருவாயினர் மற்றும் உயர் வருவாயினர் என சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவு மக்களுடைய வீட்டு வசதித் தேவைகளை நிறைவு செய்தவதே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலையாய நோக்கமாகும். நல்ல தரம் வாய்ந்த வீடுகளை கட்டித் தருவதின் மூலம் மேற்கூறிய நோக்கத்தை அடைய முடிகிறது. மேலும் எல்லா வருவாய்ப் பிரிவினருக்கும் வேண்டிய அனைத்து வசதிகளையும் கொண்ட குடியிருப்புகளை அவர்கள் வாங்கும் திறனுக்கு ஏற்ப உருவாக்கித தருவதை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், சலவைத் தொழிலாளர்கள், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டோர், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டோர், தமிழக அரசு ஊழியர்கள், மத்திய அரசு ஊழியர்கள், பத்திரிகையாளர்கள், சமூக சேவகர்கள், விதவை மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் ஆகியோருடைய வீட்டு வசதித் தேவைகளை அரசு நிர்ணயித்த ஒதுக்கீட்டு விகிதாச்சாரப்படிக் குடியிருப்புகளை அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் சிறந்த பணியினை வாரியம் மேற்கொண்டு வருகிறது.

கடந்த 37 ஆண்டுகளாகத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் குடியிருப்புகளை வழங்குவதில்





குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. மாநிலத்திலுள்ள அனைத்து நகரங்களிலும் இதுவரை 3,50,027 குடியிருப்புகளை வாரியம் உருவாக்கியுள்ளது. 1970-71ஆம் ஆண்டில் ரூ.4.83 கோடியாக இருந்த வாரியத்தினுடைய முதலீட்டுச் செலவு 1998-99 ஆம் ஆண்டில் ரூ.252 கோடி என்ற அளவில் அதிகரித்துள்ளது. மாநிலம் முழுவதுமாக வாரியம் தனது திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. வீடுகளுடைய தோற்றம் மற்றும் உபயோகத் தன்மைகளை உயர்த்துவதற்காக வாரியம் நன்மதிப்புப் பெற்றக் கட்டட வல்லுனர்களைத் தன் திட்டங்களில் ஈடுபடுத்துகிறது. பொருளாதாரத்தில் நலிவுற்றோர், குறைந்த வருவாய்ப் பிரிவினர், நடுத்தர வருவாய்ப் பிரிவினர் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர் ஆகியோருக்கான வீட்டுவசதித் திட்டங்களுக்கு வாரியம் தனது முதலீட்டில் குறிப்பிட்ட விகிதப்படி செலவு செய்வதைக் கொள்கையாகக் கொண்டுள்ளது. தேசிய வீட்டு வசதிக் கொள்கையின்படி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் "வீட்டுவசதி செய்து கொடுப்பவர்" என்ற முறையில் நிலம், கட்டடப் பொருட்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவு ஆகியவற்றைப் பொதுமக்களுக்கு வழங்கும் வகையில் தனது பணிகளை விரிவாக்கிக் கொள்ள உள்ளது. இதன்படி வாரியம் அதிக அளவு நில மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி சமுதாயத்திலுள்ள எல்லாப் பிரிவு மக்களுக்கும் வீட்டு வசதிகளைச் செய்து கொடுக்கத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறது.

### 1.2 வீட்டு வசதி அளிப்பவர் மற்றும் ஊக்குவிப்பவர் என்ற முறையில் வாரியத்தின் பங்கு

தமிழ்நாட்டில் வீட்டு வசதித் தேவை கி.பி. 2011 ஆம் ஆண்டில் 175 இலட்சம் குடியிருப்புகள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதிக அளவிலான இந்த வீட்டு வசதித் தேவையை நிறைவேற்ற சமுதாயத்தில் உள்ள எல்லாப் பிரிவு மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். மேற்குறிப்பிட்ட வீட்டு வசதித் தேவையில் 80% பொருளாதாரத்தில் நலிவுற்றோர் மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு மட்டும் தேவைப்படுகிறது. இந்த வீட்டு வசதித் தேவையில் மிகக் குறைந்த அளவில் மட்டுமே தனியார் துறையால் நிறைவேற்ற முடிகிறது. எனவே, அதிக அளவிலான வீட்டு வசதி தேவையை அரசு சார்ந்த நிறுவனங்கள் நிறைவேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தத் தேவைகளைக் கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளாக அளிப்பது கடினமான ஒன்றாக இருக்கிறது. ஆகவே பொருளாதாரத்தில் நலிவுற்றோர் மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு எல்லா

அடிப்படை வசதிகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட மனைகளை அளிக்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதன் மூலம் மக்கள் தேவைகளை நிறைவு செய்கின்ற வகையில் மட்டுமில்லாது, தங்கள் விருப்பத்திற்கேற்ற வடிவமைப்பில் வீடுகளைக் கட்டிக் கொள்ள வாய்ப்பு கிடைக்கிறது.

இத்தருணத்தில் தேசிய வீட்டுவசதிக் கொள்கையின் குறிக்கோள்களைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடலாம்.

1. வீட்டு வசதி தேவையுள்ள பொது மக்களுக்கு மேம் படுத்திய மனைகள், கட்டடப் பொருட்கள், தொழில் நுட்பம் ஆகியவற்றை வழங்குவதுடன் பணியாளர்களின் திறமையை அதிகரித்தல்.
2. வீட்டு வசதிக்கான தனியார் துறையின் முதலீட்டை ஊக்குவித்தல், கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் ஏற்படுத்துதல் மற்றும் வீட்டு வசதிக்கான அடிப்படை வசதிகளை உருவாக்குவதில் பொது மக்களை ஈடுபடுத்துதல்.
3. வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படக்கூடிய தடைகளைக் களைதல்.

கடந்த பல ஆண்டுகளாக வீட்டு வசதி வாரியம் அதிக அளவில் வீட்டுமனைகள் உருவாக்கும் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது.

'அட்கோ' நிறுவனத்தின் நிதியுதவி மற்றும் முயற்சிகளினால் மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டட மையப் பணிகளில் வீட்டு வசதி வாரியம் பங்கேற்று கட்டடத் தொழிலாளர்கள் மற்றும் கொத்தனார் ஆகியோருடைய திறமைகளை அதிகரிக்க ஆவன செய்து வருகிறது. மேலும் வீட்டு வசதி வாரியம், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் வீடு கட்டுவதற்குத் தேவையான நிதியுதவி அளிக்க ஆவன செய்து வருகிறது.

## 1.3 நிலப் பங்கீட்டுத் திட்டம்

நிலம் கையகப்படுத்தும் சட்டப்படி, வீட்டு வசதி வாரியம், அதிக அளவில் நிலங்களைக் கையகப்படுத்துகிறது. ஆனால் இந்த முறையில் அதிக அளவில் கால தாமதமேற்படுகிறது. இதனால் தனியாரிடமிருந்து பேச்சு வார்த்தை மூலம் நிலங்களைக் கையகப்படுத்த வாரியம் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. மேற்கூறிய இரண்டு முறைகளில், நிலங்களைக் கையகப்படுத்துவதுடன் நிலப்பங்கீட்டு முறையிலும் நிலங்களைக் கையகப்படுத்த வாரியம் முயற்சிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட நிலத்தில் மக்களின் வாங்கும் திறனுக்கு ஏற்ப எல்லாவித அடிப்படை வசதிகளையும் உருவாக்கி ஒரு பகுதி நிலத்தைப் பொதுமக்களுக்கு ஒதுக்கீடு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. மறுபகுதி நிலத்தில் ஒரு பகுதியினை சாலை வசதி, கழிவுநீர் வசதிகள், தெரு விளக்கு, பூங்காக்கள் போன்ற பொது வசதிகளுக்காக ஒதுக்கப்படுகிறது. மீதமுள்ள நிலத்தை நிலச் சொந்தக்காரருக்கு வழங்குவதால் அந்நிலத்தை அவர் சந்தை விலையில் விற்க ஏதுவாகிறது. மேற்கூறியபடி நிலப்பங்கீடு செய்யும்போது நிலத்தின் விலை மற்றும் மேம்படுத்தப்பட்டதற்கான செலவு என்ற விகிதத்தில் நிலச் சொந்தக்காரருக்கும் வீட்டுவசதி வாரியத்திற்கும் மேம்படுத்தப்பட்ட நிலம் வழங்கப்படுகிறது. இந்த முறையினால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் "வீட்டுவசதி செய்பவர்" என்ற பணியினை நிறைவேற்ற முடிகிறது. மேலும் காலியாகக் கிடந்த நிலம் மேம்படுத்தப்படுவதால் நிலச் சொந்தக்காரர் பயனடைய முடிகிறது. சமீபத்தில் நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து இத்திட்டத்திற்கான தங்களது விருப்பத்தைத் தெரிவித்திடுமாறு செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டது. விரைவில் திட்டங்கள் தயாரிக்கப்படும்.





## 1.4 இதர கொள்கை விளக்கக் குறிப்புகள்

*1.4.1* சமுதாயத்தில் பல்வேறு நிலையிலுள்ள மக்களின் வீட்டுவசதித் தேவைகளை நிறைவேற்றும் முகத்தான் மக்களின் வாங்கும் திறனுக்கு ஏற்ற தரமுள்ள வீடுகளை வழங்குவதுடன் கலை நுட்ப வேலைத்திறன் கொண்டவையாகவும் அமைய ஆவன செய்தல்.

*1.4.2* பல்வேறு வகையான வடிவமைப்புக் கொண்ட அனைவரையும் கவரக் கூடிய, கலைநயமுடைய முன் தோற்றம் கொண்ட வீடுகளை உருவாக்குவதுடன் பூங்காக்கள் விளையாட்டுச் சாதனங்களுடன் கூடிய குழந்தைகள் விளையாடுமிடம் மற்றும் காற்றோட்டமுள்ள வீடுகளை உருவாக்குதல்.

## 1.5 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் மேற்கொள்ள உள்ள சில நிர்வாகச் சீர்திருத்தங்கள்

***1.5.1*** இதன்படி வாரியத்தால் கட்டப்படவிருக்கும் கட்டடங்களில் வடிவமைப்பு மற்றும் வீடுகளின் தரத்தினைக் கண்காணிப்பதற்காக

[1998 மே 15

வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் இரண்டு மேற்பார்வைப் பொறியாளர்கள் மற்றும் நான்கு செயற்பொறியாளர்களோடு ஒரு தலைமைப் பொறியாளர் நியமிக்கப்படுவார்.

செங்கல்பட்டினைத் தலைமையிடமாக கொண்ட சரகத்திற்குப் பதிலாக வேலூரைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு சரகம் உருவாக்கப்படும். மேலும் திருவண்ணாமலையில் ஒரு கோட்டம் உருவாக்கப்படும்.

வாரியத்திலுள்ள 28 கோட்டங்களிலும் ஒதுக்கீடுதாரர்களின் கணக்குகள் கணிப்பொறியில் கணக்கிடப்பட்டு கணக்கீட்டுக் குறிப்புகள் எல்லா ஒதுக்கீடுதாரர்களுக்கும் வழங்கப்படுகிறது.

### 1.5.2 பொது மக்களின் குறைகளைத் தீர்த்தல்

வாரியத்தில் உள்ள எல்லா கோட்டங்கள், சரகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்திலும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் பொது மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக ஒரு முழு முயற்சி எடுக்கப்படுகிறது. இதுவரை 62,166 விற்பனை ஒப்பாவணங்கள் ஒதுக்கீடுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.3 தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அமைப்பில் சில மாறுதல்கள்

28-10-1997 அன்று மாண்புமிகு முதலமைச்சருடன் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், வாரியத்தின் பணிகள் ஆய்வு செய்யப்பட்டன. அப்போது வாரியத்தின் செயல்பாடுகளில் தொழில் ரீதியான அணுகுமுறை இருக்க வேண்டும் என்று எடுத்துக் கூறப்பட்டது. இதன்படி நவீன காலத்திற்கு ஏற்றபடி தனது செயல்பாடுகளை மாற்றி அமைப்பதற்கான தொழிற்முறை ஆலோசனை வழங்குபவர்களை நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வாரிய செயல்பாடுகளை மாற்றியமைக்கும் பணியினால் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் திறமைப் பாட்டுடனும், ஏற்புத் தன்மையுடனும், மற்ற நிறுவனங்களுடன் போட்டியிடும் அளவிலும் தனது பணிகளை செயல்படுத்த முடியும். இந்த செயல்முறையினால் கீழ்க்கண்ட கொள்கை ரீதியான செயல்களை வாரியம் மேற்கொள்ள வேண்டிவரும் :

1. புதிய குறிக்கோள்கள்
2. அமைப்பு



1998 மே 15]

3. பல நிலைகளில் வாரியத்தின் அமைப்பு
4. நிதி ஆதாரங்களைத் திரட்டுதல் மற்றும் நிதியை திட்டங்களுக்குச் செலவிடுதல்
5. மாநில அரசு மற்றும் அதன் நிறுவனங்களுடன் ஒத்துழைத்து திட்டங்களை நிறைவேற்றுதல்

## 1.6 தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின் விரிவாக்கம்

தமிழ்நாடு அரசின் புது மாவட்டங்களை உருவாக்கும் கொள்கையின்படி, புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டத் தலைநகரங்களில் தமிழக அரசு ஊழியர்களின் வீட்டு வசதித் தேவைகளை நிறைவேற்ற வீட்டுவசதி வாரியம் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. 1998-99ம் ஆண்டில் புதிய மாவட்ட தலைநகரங்களான நாமக்கல், திருவள்ளூர், தேனி மற்றும் பெரம்பலூர் ஆகிய நகரங்களில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

புதிய முயற்சியாக தமிழக அரசு, அரசு ஊழியர்களின் வாடகை வீட்டுவசதித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக வீட்டுவசதி மேம்பாட்டு நிதிக் கழகத்திடமிருந்து ரூ.30 கோடி அளவில் நிதியுதவி பெற அனுமதி அளித்துள்ளது.

## 1.7 1998-99-ம் ஆண்டில் நிறைவேற்றப்படவுள்ள திட்டங்கள்

### 1.7.1 வேலூரில் மனை அபிவிருத்தித் திட்டம்

வேலூரிலுள்ள சத்துவாச்சாரி கிராமத்தில் சுமார் 15.25 ஏக்கர் நிலம் தற்போது கையகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலத்தில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய மனைகள் மேம்பாடு செய்யப்படவுள்ளன. இதன் மூலம் 123 குறைந்த வருவாய்க் குடும்பங்களும் 102 நடுத்தர வருவாய்க் குடும்பங்களும் மற்றும் 33 உயர் வருவாய்க் குடும்பங்களும் ஆக மொத்தம் 258 குடும்பங்கள் மேம்படுத்தப்பட்ட மனைகள் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.1.96 கோடியாகும். 'அட்கோ' நிறுவனம் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கவுள்ளது.

[1998 மே 15

### 1.7.2 ஈரோடு முத்தம்பாளையத்தில் வீட்டு மனைகளை உருவாக்கும் திட்டம்.

ஈரோடு நகரத்தில் உள்ள வீட்டு வசதி தேவைகளைக் கருத்தில் கொண்டு, ஈரோடு அருகே உள்ள முத்தம்பாளையம் என்ற இடத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வீட்டு மனைகளை மேம்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்தவுள்ளது. இத்திட்டத்தில் 125 குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான மனைகள், 139 நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான மனைகள் மற்றும் 50 உயர் வருவாய்ப் பிரிவினருக்கான மனைகளைக் கொண்ட மொத்தம் 314 மேம்படுத்தப்பட்ட வீட்டு மனைகள் உருவாக்கப்படவுள்ளன. இதன் திட்ட மதிப்பீடு ரூ.2.09 கோடியாகும்.

மற்றுமொரு நில மேம்பாட்டுத் திட்டமாக முத்தம்பாளையம் பகுதி 2-ன் கீழ் 309 வீட்டு மனைகள் உருவாக்கப்பட உள்ளன. இதில் 63 குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான மனைகள், 142 நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான மனைகள் மற்றும் 104 உயர் வருவாயினருக்கான மனைகளும் அடங்கும். இதன் திட்ட மதிப்பீடு ரூ.2.34 கோடியாகும். 'அட்கோ' நிறுவனம் இத்திட்டத்திற்கான நிதியுதவி அளிக்கும்.

### 1.7.3 கோயம்புத்தூரில் நில மேம்பாட்டுத் திட்டம்

கோயம்புத்தூர் மாவட்டம் துடியலூரில் பகுதி 2-ல் மேம்படுத்தப்பட்ட வீட்டு மனைகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 11.45 ஹெக்டேர் நிலப்பரப்பில் 230 குறைந்த வருவாய்ப் பிரிவினரின் குடும்பங்கள், 233 நடுத்தர வருவாய்ப் பிரிவினர் மற்றும் 69 உயர் வருவாய் பிரிவினரின் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 532 மனைகள் இத்திட்டத்தில் உருவாக்கப்பட உள்ளன. இதன் திட்ட மதிப்பீடு ரூ.2.35 கோடியாகும்.

மற்றுமொரு நிலமேம்பாட்டுத் திட்டம் கோயம்புத்தூரில் உள்ள துடியலூர் பகுதி 3-ல் வீட்டு மனைகளை மேம்படுத்தும் திட்டமாக உருவாக்கப்பட உள்ளது. இத்திட்டம் 9.75 ஹெக்டேர் நிலப்பரப்பில் 242 குறைந்த வருவாய்ப் பிரிவினரின் குடும்பங்கள், 132 நடுத்தர வருவாய்ப் பிரிவினர் மற்றும் 79 உயர் வருவாய்ப் பிரிவினரின் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 453 மனைகள் உருவாக்கப்பட உள்ளன. இதன் திட்டமதிப்பீடு ரூ.2.25 கோடியாகும். இத்திட்டத்திற்கு 'அட்கோ' நிறுவனம் நிதியுதவி அளிக்கும்.



1998 மே 15]

### 1.7.4 ஒசூர் பகுதி 15-ல் நிலமேம்பாட்டுத் திட்டம்

ஒசூர், தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாக இருப்பதால் வீட்டு வசதித் தேவை இங்கு அதிகம் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பல தரப்பட்ட நிலைகளில் இங்கு புறநகர்த் திட்டங்களை உருவாக்கியுள்ளது. இதற்கான வீட்டுவசதித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் புறநகர்ப் பகுதி 15-ல் 52.87 ஹெக்டேர் நிலப் பரப்பில் ரூ.16.59 கோடி செலவில் மனைகள் உருவாக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 1,781 குடும்பங்கள் பயன்பெற உள்ளன. இதில் 767 குறைந்த வருவாய்ப் பிரிவின் குடும்பங்களும் 652 நடுத்தர வருவாய்ப் பிரிவின் குடும்பங்களும் 362 உயர் வருவாய்ப் பிரிவின் குடும்பங்களும் அடங்கும். இத்திட்டம் எல்லா உள்ளமைப்பு வசதிகளும் உடையதாயிருக்கும். 'அட்கோ' நிறுவனம் இத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்கவுள்ளது.

### 1.7.5 திருநெல்வேலியில் வீட்டு மனைகள் மேம்படுத்தும் திட்டம்

திருநெல்வேலி நகருக்கு அருகே உள்ள கீழநத்தம் என்ற இடத்தில் நிலமேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் 225 நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான மனைகளும் 196 உயர் வருவாய்ப் பிரிவினருக்கான மனைகளுமாக மொத்தம் 421 மனைகள் உருவாக்கப்பட உள்ளன. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.2.52 கோடியாகும். இத்திட்டத்திற்கு 'அட்கோ' நிறுவனம் நிதியுதவி அளிக்கும்.

### 1.7.6 இராமநாதபுரம் மாவட்டத்தில் பெருமளவிலான நில மேம்பாட்டுத் திட்டம்.

இராமநாதபுரம் நகரத்தின் பட்டினம்காத்தான் என்ற புறநகர்ப் பகுதியில் 37.28 ஹெக்டேர் நிலத்தை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கையகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கருத்துரு 1,694 மனைகளை உருவாக்கி 828 குறைந்த வருவாய்க் குடும்பங்களும், 629 நடுத்தர வருவாய்ப் பிரிவின் குடும்பங்களும், 237 உயர் வருவாய்ப் பிரிவின் குடும்பங்களும் பயன்பெறச் செய்வதாகும். இத்திட்டம் சாலை வசதிகள் தெருவிளக்கு, குடிநீர் குழாய்கள், கழிவு நீர் குழாய்கள், பூங்கா மற்றும் திறந்த வெளியிடங்கள் போன்ற எல்லாவித உள்ளமைப்பு வசதிகளும் கொண்டதாக இருக்கும். இதன் திட்ட மதிப்பீடு ரூ.6.44 கோடி. 'அட்கோ' நிறுவனம் இத்திட்டத்திற்கு நிதியுதவியளிக்க முன் வந்துள்ளது.

[1998 மே 15

**1.7.7 சென்னை, கோயம்பேட்டிலுள்ள தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டு கிராமத்தில் வணிக மற்றும் அலுவலக வளாகத்துடன் கூடிய அடுக்கு மாடி கோபுர கட்டடம் கட்டுதல்**

சென்னை கோயம்பேட்டில் தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டு கிராமத்தின் நுழைவாயிலில் ஜவகர்லால் நேரு சாலையை ஒட்டி உள்ள காலி நிலத்தில் வணிகம் மற்றும் அலுவலக வளாகம் அமைக்க பயன்படுத்தப்படவுள்ளது. இத்திட்டப்படி, 2 கோபுரக் கட்டடங்கள் கட்டப்படவுள்ளன. 12 அடுக்குமாடிகள் கொண்ட ஒரு கட்டடமும், 18 அடுக்கு மாடிகள் கொண்ட மற்றொரு கட்டடமும் இதில் அடங்கும் 4925 சதுர மீட்டர் பரப்பளவுள்ள மனையில் 11099 ச.மீ. பரப்பளவில் 12 அடுக்கு மாடி கொண்ட கோபுரக் கட்டடம் ஒன்று கட்டப்படும். 8179 சதுர மீட்டர் பரப்பளவுள்ள மனையில் 20,448 சதுர மீட்டர் பரப்பளவில் கோபுரக் கட்டடம் கட்டப்படவுள்ளது.

மேற்கூறிய 2 கோபுரக் கட்டடங்களும் வணிக வளாகங்கள் மற்றும் அலுவலகங்கள் கொண்டவையாக அமையும்.

**1.7.8 சென்னை, கோயம்பேட்டில் தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டு கிராமத்தில் உயர் வருவாயினருக்காக 384 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்**

சென்னை, கோயம்பேட்டில் தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டு கிராமத்தின் பின்பகுதியிலுள்ள 5 ஏக்கர் நிலத்தில் 61.50 சதுர மீட்டர் கட்டுமான பரப்பளவில் உயர் வருவாயினருக்காக 384 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டப்படவுள்ளன. அனைத்து கட்டடப் பகுதிகளிலும் பளு தூக்கும் (Lift) எந்திரத்துடன் 24 மணி நேரமும் குடிநீர் வசதிகள் கொண்டதாக இருக்கும். இந்த கட்டடப் பகுதிகளைச் சுற்றியுள்ள மனைப் பகுதிகள் அனைத்தும் புல்தரை, மரங்களுடன் மேம்படுத்தப்பட்டிருக்கும்.

இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.24.10 கோடி நிதியை, வீட்டுவசதி மற்றும் நகர அபிவிருத்திக் கழகத்திடமிருந்து பெறப்படும்.

**1.7.9 சென்னை கலைஞர் கருணாநிதி நகரில் வணிக மற்றும் குடியிருப்பு வளாகம் கட்டுதல்**

அபிவிருத்தி அடைந்து வரும் அசோக் நகர் மற்றும் கலைஞர் கருணாநிதி நகர் பகுதிகளின் வணிகம் மற்றும் குடியிருப்புத் தேவைகளை



1998 மே 15]

கருத்தில் கொண்டு, கலைஞர் கருணாநிதி நகரில் வணிக மற்றும் குடியிருப்புத் திட்ட வளாகம் ஒன்றைச் செயல்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான 3.73 ஏக்கர் நிலம் இத்திட்டத்திற்கு பயன்படுத்தப்படவுள்ளது.

இதன்படி 450 சதுர மீட்டர் பரப்பில் அங்காடி வளாகமும் மற்றும் 2700 சதுர மீட்டர் அலவலக வளாகமும் கட்டப்படும். மேலும் தரை தளத்துடன் 13 அடுக்குகள் கொண்ட குடியிருப்புப் பகுதிகளடங்கிய ஒரு கோபுரக் கட்டடமும் கட்டப்படவுள்ளது. இந்த பல அடுக்கு மாடிக் குடியிருப்பில் 98.79 சதுர மீட்டர் பரப்பு கொண்ட 112 'எ' மாதிரி அடுக்கு மாடி வீடுகளும் 89.26 சதுர மீட்டர் பரப்பு கொண்ட 112 'பி' மாதிரி அடுக்கு மாடி வீடுகளும், 71.29 சதுர மீட்டர் பரப்பு கொண்ட 112 'சி' மாதிரி அடுக்கு வீடுகளும் கட்டப்படும். இத்திட்டத்தின் தோராய மதிப்பீடு ரூ.27.50 கோடியாகும்.

**1.7.10 வில்லிவாக்கத்தில் உயர் வருவாயினருக்கான 332 அடுக்கு வீடுகள் கட்டுதல்**

வில்லிவாக்கத்தில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுள்ள மனை மற்றும் சேவைத் திட்டத்தில் காலியாக உள்ள 3.5 ஏக்கர் மனையில் வீட்டுவசதி மற்றும் நகர அபிவிருத்திக் கழகத்தின் நிதி உதவியுடன் உயர் வருவாயினருக்காக 332 அடுக்கு வீடுகள் கட்டப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.22.40 கோடியாகும்.

**1.7.11 முகப்பேரில் கூவம் ஆற்றின் குறுக்கே பூவிருந்தவல்லி நெடுஞ்சாலைக்கு பாலம் கட்டும் பணிகள்**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் உருவாக்கப்பட்ட அண்ணா நகர் (மேற்கு) விரிவாக்கம், முகப்பேர் (கிழக்கு), முகப்பேர் (மேற்கு) முகப்பேர் ஏரி, நொலாம்பூர் பகுதி 1 மற்றும் 2, அம்பத்தூர், பாடி ஆகிய வீட்டு வசதித் திட்டங்களில் குடியேறி இருக்கும் சுமார் 20,000 குடும்பங்கள் தற்போது பூந்தமல்லி நெடுஞ்சாலையிலிருந்து தங்கள் பகுதிக்குச் செல்ல கூவம் ஆற்றின் குறுக்கே உள்வட்டச் சாலையில் கட்டப்பட்டுள்ள பாலம் ஒன்றினை மட்டும் நம்பியுள்ளனர். கோயம்பேடு வணிகவளாகம் செயல்படத் தொடங்கியவுடன் உள்வட்டச் சாலையின் நெருக்கடி காரணமாகப் பயணநேரமும், பயணச் செலவும் அதிகமாகிறது.

[1998 மே 15

இப்பகுதி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, முகப்பேர் அருகில் கூவம் ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்றினைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தப் பாலத்தினை, வீட்டு வசதி வாரியத்தின் தன்னிறைவு வீட்டு மனைத் திட்டங்களுக்காக அமைக்கப்பட்டுள்ள சுழல் நிதியிலிருந்து சுமார் ரூ.4 கோடி ஒதுக்கப்பட்டு பாலம் அமைக்கும் பணியினை நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறையினர் மூலம் நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் அரசாணை வழங்கப்பட்டு பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 1.8 இதர திட்டங்கள்

### 1.8.1 பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம்

இத்திட்டமானது ஆண்டொன்றுக்கு ரூ.25,200 வரை வருமானம் பெறும் குடும்பத்தினர்களுக்கு உருவாக்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் ஒவ்வொன்றிற்கும் நிர்ணயிக்கப்பட்ட விலை மதிப்பீடு ரூ.35,000 ஆகும். முழுத் தொகையில் 10 விழுக்காட்டினை முன் பணமாகவும், மீதித் தொகையை 9 விழுக்காடு வட்டியுடன் கூடிய மாதாந்திர தவணையாக 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும்படியும் அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1971-72ஆம் ஆண்டிலிருந்து ஜனவரி 98 முடிய பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு 1,17,706 குடியிருப்புகள் ஏற்படுத்தியுள்ளது. ரூ.25.27 கோடி இதற்காகச் செலவிட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் தமிழ்நாடு நில வங்கித் திட்டத்தின் கீழ் 2466 மனைகளை உருவாக்க ரூ.148 லட்சம் மதிப்பீடு செய்துள்ளது.

### 1.8.2 குறைந்த வருவாயினருக்கான வீட்டுவசதித் திட்டம்

இத்திட்டமானது ஆண்டொன்றுக்கு ரூ.25,201 முதல் ரூ.54,000 வரை வருமானமுள்ள குடும்பத்தினர் பயன் பெறுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் ஒவ்வொன்றிற்கும் அதிகபட்ச விலை மதிப்பீடு ரூ.1,00,000 ஆகும். முழுத் தொகையில் 30 விழுக்காடு முன் பணமாகவும், மீதித் தொகையை 13 விழுக்காடு வட்டியுடன் கூடிய மாதாந்திரத் தவணையாக 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும்படி அமைக்கப்பட்டுள்ளது.



1998 மே 15]

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 31-1-98 முடிய 81432 குடியிருப்புகள் (மனைகள் மற்றும் வீடுகள்) ஏற்படுத்தியுள்ளது. ரூ.135.82 கோடி இதற்காகச் செலவிட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் (1998-99)ல் 3021 குடியிருப்புகள் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்காக இத்திட்டத்தின் கீழ் கட்டிமுடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. ரூ.6.50 கோடி இதற்காக செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 1.8.3 நடுத்தர மற்றும் உயர் வருவாயினருக்கான வீட்டு வசதித் திட்டங்கள்

நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம் ஆண்டொன்றிற்கு ரூ.54,001 முதல் ரூபாய் 90,000 வரை வருமானமுள்ள குடும்பத்தினர் பயன் பெறுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. குடியிருப்பு விலையில் முழுத் தொகையில் 35 விழுக்காடு முன் பணமாகவும் மீதமுள்ள தொகையை 15.5 விழுக்காடு வட்டியுடன் கூடிய மாதாந்திர தவணையாக 10 ஆண்டுகளில் (கட்டுமானக் காலம் இரண்டு ஆண்டுகள் உட்பட) திருப்பிச் செலுத்துமாறு அமைக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் (1998-99) 3649 குடியிருப்புகள் இத்திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்படவுள்ளன. ரூ.42.00 கோடி இதற்காகச் செலவிடப்படும்.

உயர் வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டமானது ஆண்டொன்றிற்கு ரூ.90,000க்கு மேல் வருமானமுள்ள குடும்பத்தினர் பயன் பெறுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. குடியிருப்பு விலையின் முழுத்தொகையில் 40 சதவிகிதம் முன் பணமாகவும் மீதித் தொகை 16 விழுக்காடு வட்டியுடன் கூடிய மாதாந்திரத் தவணையாக 10 ஆண்டுகளில் (கட்டுமானக் காலம் இரண்டு ஆண்டுகள் உள்பட) திருப்பிச் செலுத்தும்படியாக அமைக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் (1998-99) 4800 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படவுள்ளன. ரூபாய் 65.91 கோடி இதற்காகச் செலவிடப்படும்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 31-1-98 முடிய நடுத்தர மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினருக்காக 97071 குடியிருப்புகள் (மனைகள், வீடுகள், அடுக்குமாடி வீடுகள்) ஏற்படுத்தியுள்ளது. ரூ.708 கோடி இதற்காகச் செலவிட்டு உள்ளது.

### 1.8.4 தமிழ்நாடு அரசு ஊழியர்கள் வாடகை வீட்டுவசதித் திட்டம்

இத்திட்டம், மாநிலத் தலைநகர், மாவட்டம், வருவாய்க் கோட்டம் தலைமையிடங்களில் அரசு ஊழியர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள்

[1998 மே 15

அளிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. அரசின் சார்பில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இத்திட்டத்தை நிறைவேற்றி குடியிருப்புகளைப் பராமரித்து வருகின்றது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 31-1-98 முடிய 27055 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டியுள்ளது. இதற்காக ரூ. 171.05 கோடி செலவிட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் (1998-99) 1057 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி முடிக்கத் திட்டமிட்டுள்ளது. ரூ.31.05 கோடி இதற்காகச் செலவிடப்படும்.

### 1.8.5 சிறிய மற்றும் நடுத்தர நகர வீட்டுவசதித் திட்டம்

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீட்டு வசதிகளை ஏற்படுத்துவதற்காக மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீடுகள் கட்டுவதற்கான இத்திட்டத்தை அரசு ஏற்படுத்தி உள்ளது.

**முதல் கட்டம்**

முதல் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட 77 நகரங்களில் வாரியத்தால் வீட்டுவசதித் திட்டங்கள் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டது. 46 நகரங்களில் ரூ.135.49 கோடி செலவில் 4828 மனைகளும் 9771 வீடுகளும் ஆக மொத்தம் 14599 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. இக்குடியிருப்புகளின் ஒதுக்கீட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 6 நகரங்களில் உள்ள திட்டத்திற்கு ரூ.31.70 கோடி செலவில் 587 வீடுகள் கட்டும் பணியும் 1795 மேம்படுத்தப்பட்ட மனைகள் உருவாக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

1998-99ல் ஏற்கெனவே முடிந்துள்ள திட்ட நகரங்களான விழுப்புரம், தாராபுரம், தேவகோட்டை, வள்ளியூர் மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய நகரங்களில் பகுதி 2 திட்டங்கள் மூலம் ரூ.7.14 கோடி செலவில் 148 வீடுகள் மற்றும் 234 மனைகள் கட்டும் பணிகள் தொடங்கப்படவுள்ளன. கோவில்பட்டி மற்றும் அறந்தாங்கி ஆகிய இரண்டு நகரங்களிலும், பகுதி 2-ல் கும்பகோணம் மற்றும் திருவாரூர், பகுதி 3-ல் விழுப்புரம் பகுதி 5 திட்டமான தாராபுரம் ஆகிய நகரங்களில் ரூ.14.02 கோடி செலவில் 235 குடியிருப்புகள் மற்றும் 1257 மனைகள் கட்டப்பட உள்ளன. நிலம் கையகப்படுத்தும் பணிகள் எஞ்சிய 23 நகரங்களில்



1998 மே 15]

நடைபெற்று வருகின்றன.

**இரண்டாம் கட்டம்**

இரண்டாம் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 85 நகரங்களில் வீட்டுவசதி ஏற்படுத்த வாரியம் திட்டமிட்டது. 29 நகரங்களில் மட்டும் போதுமான வீட்டுவசதி தேவை பதிவு செய்யப்பட்டதால், 29 நகரங்களில் மட்டும் திட்டங்கள் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது. பெருந்துறை, தூத்துக்குடி, கண்ணன்குறிச்சி மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய நான்கு நகரங்களில் ரூ.13.46 கோடி செலவில் 1538 மனைகளும் 259 வீடுகளும் கட்டி முடித்து ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன. சோளிங்கர், திருநகர் மற்றும் பெரியநாயக்கன்பாளையம் ஆகிய மூன்று நகரங்களிலும், பகுதி 2-ல் பெருந்துறை மற்றும் தூத்துக்குடியிலும் ரூ.37.15 கோடி செலவில் 3651 மனைகளும் 197 வீடுகளும் கட்டப்பட்டு வருகின்றன. சின்னாளப்பட்டி மற்றும் செங்கல்பட்டிலும் பகுதி 2 அருப்புக்கோட்டையிலும் ரூ. 1.92 கோடி செலவில் 460 மனைகளும் 96 வீடுகளும் கட்ட திட்டம் தயார் செய்யப்படுகிறது. மீதமுள்ள 20 நகரங்களில் நிலங்கள் ஆர்ஜிதம் செய்ய நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன.

### 1.8.6 தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்

"தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம்" என்பது பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, பாதாளச் சாக்கடை, சாலைகள், மழை நீர்க் கால்வாய் மற்றும் தெருவிளக்குகள் போன்ற அடிப்படை வசதிகள் கொண்ட மனைகள் ரூ.1300க்கு கீழ் மாத வருமானம் பெறும் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு அவர்களது வாங்கும் திறனைக் கருத்தில் கொண்டு, தவணை முறையில் வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். இத்திட்டம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டது.

பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களும், குறைந்த வருவாய் மக்களும் வீடுகட்டிப் பயன்பெறும் வகையில், இத்திட்டத்தின் ஒரு பகுதியாக பண உதவித் தொகை வழங்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொரு திட்டத்திலும் ஆரம்பிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் முடுக்கி விடப்படுகின்றன.

[1998 மே 15

இந்த திட்டங்கள் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், வேலூர், ஈரோடு, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் திருப்பூர் ஆகிய 10 நகரங்களில் உலகவங்கியின் நிதி உதவியுடன் ரூ.216.41 கோடி செலவில் 70,000 மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்கும் இலக்காகக் கொண்டு செயல்படுத்தப்பட்டது.

70,000 மேம்படுத்தப்பட்ட மனைகள் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்பே முடிக்கப்பட்டதால் கூடுதலாக 18728 மனைகளையும் சேர்த்து ரூ.304.73 கோடி செலவில் 88,728 மனைகள் உருவாக்கப்பட்டன.

இந்தத் திட்டத்தின் அனைத்துப் பணிகளும் 31-12-1997-வுடன் சரிவர முடிக்கப்பட்டன.

### 1.9 நிதி ஆதாரங்கள்

வாரியத்தால் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கான பெருமளவு நிதி ஆதாரங்கள் பெறப்படும் நிறுவனங்களின் விவரம் கீழ் வருமாறு:

1. வீட்டுவசதி மற்றும் நகர அபிவிருத்திக் கழகம்
2. மாநில அரசு கடன்/மானியம் பெறுதல்
3. வீட்டுவசதி அபிவிருத்தி நிதிக்கழகம்/ தேசிய வீட்டுவசதி வங்கி/ஒருங்கிணைந்த அபிவிருத்திக் குழுமம்
4. வங்கிகள்
5. பத்திரக் காப்பீட்டு மூலம் கடன் பெறுதல்
6. வாரியச் சொத்துக்கள் மூலம் வருவாய் பெறுதல்
7. பொது மக்களிடமிருந்து வைப்பு நிதி பெறுதல்

### 1.10 1998-99-ம் ஆண்டிற்கான திட்டம் (பகுதி 2)

1.10.1 1998-99-ம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின் கீழ் மதுரை, கோவை, சேலம், திருச்சி போன்ற நகரங்களில் உள்ள குடிசை மாற்று குடியிருப்புகளின் மேம்பாட்டு பணிகளுக்கென ரூ.34.00 இலட்சத்தை அரசு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு அளிக்க உள்ளது.

1.10.2. 1998-99-ல் 9707 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளும் 5291 வீடுகள்/அடுக்கு மாடி வீடுகளும் வாரியத்தால் கட்டி முடிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. ரூ. 252 கோடி இதற்காக 1998-99-ல் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ரூ.8.27 கோடி அரசின் வரவு செலவு நிதி ஒதுக்கீடு மூலம் கிடைக்கவுள்ளது.



1998 மே 15]

1.11. வாடிக்கையாளர் வசதிக்காக, பின்வரும் "குடி மக்கள் சாசனத்தை" தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிறைவேற்றி வருகிறது:

| வரிசை எண் | செயல்பாடுகள் | மொத்த நாட்கள் |
|---|---|---|
| 1. | மறுப்பின்மைச் சான்றிதழ் (நில எடுப்பு) வழங்குவது | 45 நாட்கள் |
| 2. | விற்பனைப் பத்திரம் வழங்குவது | 30 நாட்கள் |
| 3. | சரியான கோரிக்கையின் பேரில் ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தப் புள்ளி அட்டவணை வழங்குவது | 1 நாள் |
| 4. | ஒப்பந்தங்களை முடிவு செய்தபின் ஒப்பந்தக்காரர்களுக்கு, அவர்கள் கோரிக்கைகள் பேரில், வைப்பு நிதியைத் திருப்பி அளித்தல் | 15 நாட்கள் |
| 5. | தவணைமுறைக் கட்டடங்களை தொழில் நுட்ப அலுவலர்கள் ஆய்வு செய்தபின், அக்கட்டடங்களின் சிறு பழுதுப் பார்ப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் | 90 நாட்கள் |
| 6. | கட்டடங்களைத் தொழில்நுட்ப அலுவலர்கள் ஆய்வு செய்த பின், அக்கட்டடங்களின் பெரிய பழுது பார்ப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் | 180 நாட்கள் |

## 2. கூட்டுறவு வீட்டுவசதி

### 2.1 வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள்

வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளில் வீட்டுவசதி ஒரு முக்கியமான அடிப்படைத் தேவையாகும். இந்தியாவில் இப்பிரச்சினை மிகவும் தலையாயது. ஏனெனில் இங்குள்ள மக்களின்

பெரும்பாலானோர் வறுமைக் கோட்டிற்கும் கீழுள்ள ஏழை எளியோர் ஆகும். வீட்டுவசதித் தேவைக்கும் இதனைப் பூர்த்தி செய்வதில் தரம் மற்றும் சக்திக்குட்பட்ட விலையில் வழங்கப்படுகின்ற வீட்டுவசதிக்கும் உள்ள பெரிய இடைவெளியினை சரிக்கட்ட வீட்டுவசதிக் கூட்டுறவு இயக்கமானது தமிழ்நாட்டில் வீட்டுவசதித் தேவையினை பூர்த்தி செய்ய முக்கியப் பங்காற்றி வருகின்றது. **"குடும்பத்திற்கு ஒரு வீடு"** என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த மாநில வீட்டுவசதிக் கொள்கையின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் எய்துவதில் அதிலும் குறிப்பாக, சமுதாயத்தில் கீழ்த்தட்டிலுள்ள ஏழை எளியோரின் வீட்டுவசதித் தேவையினைப் பூர்த்தி செய்வதில் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் முனைப்புடன் செயலாற்றி வருகின்றன.

நகர்ப்புற மக்களின் வீட்டுவசதித் தேவையினை பூர்த்தி செய்ய 859 கூட்டுறவுச் சங்கங்களும், கிராமப்புறங்களில் குறிப்பாக ஏழை எளியோர் பயனடையும் பொருட்டு 185 வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களும் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. வீட்டுவசதிப் பிரச்சினையினைத் தீர்க்கும் பொருட்டு நிலத்தினை கையகப்படுத்துதல், அதனை மனைப் பிரிவு செய்து உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்தல் மற்றும் ஒதுக்கப்பட்ட மனைகளில் வீடுகட்ட கடனுதவி செய்தல் போன்ற பணிகளையும் வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் செய்து வருகின்றன. இரட்டை அடுக்கு முறையில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், மாநில அளவில் தலைமை நிறுவனமாகச் செயல்பட்டு இதன் சார்புச் சங்கங்களாக இணைக்கப்பட்டுள்ள தொடக்க நிலை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நிதியுதவி கிடைப்பதற்கு ஒருங்கிணைப்பு முகவராகப் பணியாற்றி வருகிறது.

## 2.2 மேலாண்மை

தேர்தல் தாவாவினால் தேர்தல் நடத்த இயலாத சில சங்கங்களைத் தவிர அனைத்து வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டு மக்களாட்சி முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவிடம் சங்க மேலாண்மை திரும்ப ஒப்படைக்கப் பட்டுள்ளது.

## 2.3 தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்

இம்மாநிலத்திலுள்ள அனைத்து வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தலைமை அமைப்பாக விளங்கும் தமிழ்நாடு கூட்டுறவு



வீட்டுவசதி இணையமானது சார்புச் சங்கங்களான இணைக்கப்பட்ட கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்ட கடன்களைத் திரட்டித் தருகிறது. தொடக்க நிலை வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மாநில அரசின் பங்கு மூலதன முதலீடுகள், ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், ஹட்கோ நிறுவனம், தேசிய வீட்டுவசதி வங்கி, வீட்டுவசதி மேம்பாட்டு நிதிக் கழகம், வணிகம் மற்றும் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றிடமிருந்து பெறப்படும் கடன்கள் ஆகியவையே தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் நிதி ஆதாரங்களாகும்.

இந்திய நாட்டில் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களின் நிதியுதவி மூலம் இதுவரை கட்டப்பட்டுள்ள 15 இலட்சம் வீடுகளில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமான வீடுகள் அதாவது சுமார் 8 இலட்சம் வீடுகள் கட்ட வீட்டுவசதி இணையம் ஆரம்ப காலத்தில் இருந்து 1998 வரை சார்புச் சங்கங்களாக இணைக்கப்பட்ட சங்கங்களின் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கியுள்ளது. மனித வசிப்பிடங்களுக்குத் தேவையான சுகாதார வசதிகளுடன் கூடிய அடிப்படை வசதி கொண்ட வீடுகளை அதிக எண்ணிக்கையில் கட்டுதல் மற்றும் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குதல் ஆகிய பணிகளில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், நாட்டிலுள்ள மற்ற மாநில வீட்டுவசதி இணையங்களைக் காட்டிலும் முதலாவது இடத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## 2.4 வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் எய்தப் பெற்ற சாதனை

### 2.4.1. ஊரக வீட்டுவசதித் திட்டம்

ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மக்களுக்கு வழங்கப்படுகின்ற கடனுதவி சமவெளிப் பகுதியில் ரூ.10,000/- மற்றும் மலைப் பிரதேசங்களில் ரூ.12,000/- ஆகவும் உள்ளது. மாநில அரசின் உதவித் தொகை ரூ.2,000/- ஆக உள்ளது. பயனீட்டாளர் ஒவ்வொருவரும் தங்களது சொந்தப் பங்களிப்பாக ரூ.2,000/- முதலீடு செய்யவும் இத்திட்டம் வகை செய்கிறது. மாநில வீட்டுவசதி இணையம் பெரிய அளவில் ஊரக வீட்டுவசதித் திட்டத்தினை 1978-79-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வருகிறது. ஆரம்ப காலத்திலிருந்து பிப்ரவரி 1998 திங்கள் வரை ஊரக வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மக்களுக்கு மொத்தம் ரூ.315.11

[1998 மே 15

கோடி நிதியுதவி வழங்கப்பட்டு 5,28,195 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதில் கடந்த ஆண்டில் (1997-98) மட்டும் இத்திட்டத்தின் கீழ் ரூ.30.59 கோடி கடன் வழங்கப்பட்டு, மொத்தம் 43,513 குடும்பங்கள் பயன்பெற்று உள்ளார்கள். இதைத் தவிர தொடக்க காலத்திலிருந்து வீடுகள் பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற பணிகளுக்கு மட்டும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு பிப்ரவரி 1998 வரை 56,677 வீடுகளுக்கு ரூ.36.77 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

### 2.4.2 கிராமப் புறங்களில் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம்.

கிராமப் புறங்களில் குறைந்த வருவாய்ப் பிரிவினர் வீடு கட்ட அதிகபட்சமாக ரூ.55,000/-மும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர் வீடு கட்ட அதிகபட்சமாக ரூ.80,000/-மும் கடன் வழங்கப்பட்டு வந்தது. இவ்வாண்டு முதல் கிராமப் புறங்களில் குறைந்த வருவாய்ப் பிரிவினர் வீடுகட்ட ரூ.70,000/- ஆகவும், நடுத்தர வருவாய்ப் பிரிவினர் வீடு கட்ட ரூ.1,[illegible],000/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்ட ஆரம்ப காலத்திலிருந்து இம்மாநிலத்தில் உள்ள வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான திட்டத்தின் கீழ் 1998 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 ஆம் தேதி வரை 37815 வீடுகள் கட்ட ரூ.156.25 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

### 2.4.3 நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம்

நகர்ப்புற மக்களின் வீட்டுவசதித் தேவையினைக் கருத்தில் கொண்டு உறுப்பினர் கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனைப் பொறுத்தும், கட்டப்படும் வீட்டின் மதிப்பீட்டினைப் பொறுத்தும் ரூ.2 இலட்சம் முதல் ரூ. 3 இலட்சம் வரை தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தால் கடன் வழங்கப்படுகிறது. மேலும், சென்னை, மதுரை, கோவை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிப் பகுதிகளில் கட்டப்பட்ட அடுக்கு மாடி வீடுகள்/புதிதாக கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை வாங்க ரூ.5 இலட்சமும் மற்றும் மேற்படி மாநகராட்சிப் பகுதிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் அடுக்குமாடி வீடுகள்/புதிதாகக் கட்டப்பட்ட வீடுகள் ஆகியவற்றை வாங்க ரூ. 4 இலட்சமும் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் கடனுதவி அளித்து வருகின்றன.



1998 மே 15]

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தொடங்கப்பட்ட 1959 ஆண்டில் இருந்து 1998 பிப்ரவரி வரையில் நகர்ப்புறப் பகுதிகளில் 2,17,215 வீடுகளைக் கட்டுவதற்கு ரூ.1,263 கோடி கடனுதவி வழங்கியுள்ளது.

### 2.4.4. கிராமப் பகுதிகளுக்கு வீட்டுவசதி மேம்பாட்டுத் திட்டம் (சுப்ரா)

கிராமப் பகுதிகளைச் சேர்ந்த பொருளாதார ரீதியில் நலிந்த பிரிவினர்களின் ஓலை வேய்ந்த வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்றுதல், சுவர்களை வலுப்படுத்துதல், துப்பரவு, குடிநீர் வழங்கல் வசதிகள் முதலியன போன்றவற்றின் மூலம் தங்கள் வீடுகளின் நிலையை உயர்த்திக் கொள்ள கடன் தொகை ரூ.2,080/- மாநில அரசு உதவித் தொகை ரூ.500 உட்பட வீடு ஒன்றுக்கு ரூ.2,580/- என்ற வீதத்தில் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, பயனீட்டாளரின் பங்குத் தொகை ரூ.500/- ஆகும். இதுவரையில் இத்திட்டத்தின் கீழ் 40,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

### 2.5. 1998-99 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

2.5.1. 1998-99 ஆம் ஆண்டில் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகச் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளுக்கான முதலீட்டுத் தொகை ரூ.356.97 கோடியில் இருந்து ரூ.438.33 கோடியாக உயர்த்தி 81,500 புதிய வீடுகள் கட்ட நிதியுதவி அளிக்கப்படும்.

2.5.2. பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 1998-99 ஆம் ஆண்டில் 45,000 பயனீட்டாளர்களுக்குக் கடன் மற்றும் அரசு மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் கடன், அரசு மானியம் மற்றும் பயனீட்டாளர்கள் பங்களிப்பு ஆகியவற்றோடு மொத்தம் ரூ.65.23 கோடி செலவிடப்படும்.

2.5.3. ஊரகப் பகுதியில் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 6,500 வீடுகள் கட்டவும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு 3,000 வீடுகள் கட்டவும் ரூ.81.50 கோடி நிதியுதவி அளிக்கப்பட உள்ளது.

2.5.4. நகர்ப்புற வீட்டுவசதி திட்டத்தின் கீழ் 12,000 வீடுகள் கட்ட கடந்த ஆண்டு வழங்கப்பட்ட தொகை ரூ.200/- கோடி ஆகும். 1998-99 ஆம் ஆண்டில் 15,000 வீடுகள் கட்டுவதற்கு ரூ.260/- கோடி கடனுதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2.5.5. புறநகர்ப் பகுதிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினரின் வீட்டுவசதி மேம்பாட்டினை ஊக்குவிக்கும் பொருட்டு

[1998 மே 15

1998-99-ம் ஆண்டில் புறநகர்ப் பகுதிகளில் 12,000 பயனீட்டாளர்களைத் தெரிந்தெடுத்து ஒவ்வொருவருக்கும் ரூ.25,000/- வீதம் கடனுதவி வழங்கப்படும். இத்திட்டத்திற்கு ரூ. 30 கோடி செலவிடப்படும்.

## 2.6 வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களின் "குடிமக்கள் சாசனம்" மக்கள் சேவைக்கு நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு

| | |
|---|---|
| 1. வீட்டுவசதிக் கடன் அனுமதி | காலக்கெடு |
| அ. தொடக்க நிலை வீட்டுவசதிச் சங்கங்கள் அளவில் | உறுப்பினர்/பயனீட்டாளரிடமிருந்து கடன் மனு பெறப்பட்ட 21 நாட்களில் கடன் மனுவினைப் பரிசீலனை செய்தும், அனுமதித்தும் வீட்டுவசதி இணையத்திற்குப் பரிந்துரைக்க வேண்டும். |
| ஆ. வீட்டுவசதி இணைய அளவில் | தொடக்க நிலைச் சங்கங்களிடமிருந்து கடன் மனுக்கள் பெறப்பட்ட 15 நாட்களில் அனுமதிக்கப்பட்டுள்ள கடன் தொகையினைப் பட்டுவாடா செய்துவிட வேண்டும் அல்லது தொடக்க நிலைச் சங்கங்கள் தங்களது சொந்த நிதியிலிருந்து கடன் வழங்க மறுப்பின்மைச் சான்றிதழாவது வழங்க வேண்டும். |
| 2. வீட்டுவசதி இணையம் பத்திரங்களை திருப்பியனுப்புதல் | தொடக்கநிலை வீட்டுவசதிச் சங்கங்களிடமிருந்து கடன் தீர்க்கப் பட்ட சான்றிதழ் கிடைக்கப்பெற்ற 10 நாட்களுக்குள் வீட்டுரிமைப் பத்திரங்களை திருப்பி அனுப்ப வேண்டும். |



1998 மே 15]

## 3. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

### 3.1 முன்னுரை

நமது நாட்டில் அதிகமான நகரமயமாக்கப்பட்ட மாநிலங்களில் தமிழ்நாடு முக்கியமான மாநிலமாகும். நகரங்களில் பொருளாதார நடவடிக்கைகள் செறிந்துள்ளதன் காரணமாக, தங்கள் வாழ்க்கையினை நடத்தும் பொருட்டு வேலைவாய்ப்பினைத் தேடி கிராமங்களிலிருந்து மக்கள் நகரங்களுக்குக் குடிபெயர்கின்றனர். இம்மக்கள் பெரும்பாலும் அரசு மற்றும் தனியார் வெற்றுமனைகளை ஆக்கிரமித்து சேவைப்பிரிவுகளில் பணிபுரிந்து வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதிகளில் கழிவு நீர் வெளியேற்றும் வசதியின்மை காரணமாக இங்கு வாழும் குடும்பங்கள் ஆரோக்கியமற்ற சூழ்நிலைகளில் வாழ பழகிக் கொண்டுள்ளனர். குறைந்த வருமானத்தின் காரணமாக இது போன்ற குடியமைப்புகள் நகர வறுமையின் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி வருகின்றன. இக்குடியமைப்புகள் பின்னர் குடிசைப் பகுதிகளாக உருவாகின்றன. இயற்கையான மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் துரித நகரமயமாக்குதல் பொருட்டு ஏற்படும் குடிபெயர்தல் காரணமாகக் குடிசைப் பகுதிகள் நகரங்களில் பெருகி வருகின்றன.

ஓர் உன்னதமான அடிப்படை வசதியுடன் கூடிய வீட்டுவசதி மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகும். மாநகர் மற்றும் நகரங்களில் குடிசைகள் அமைந்திருப்பது ஒரு குறிப்பிட்ட சதவிகித மக்கள் ஏழ்மை நிலையில் வாழ்வதைக் கோடிட்டுக் காட்டுகிறது. நகர நிலங்களை சமத்துவமற்ற முறையில் பகிர்தல் மற்றும் நிலச்சந்தையின் உண்மையற்ற நிலை போன்றவை காரணமாக குடிசைப் பகுதிகளை உருவாக்குவதுடன் ஏழை மக்களுக்கு உரிய விலையில் நிலங்கள் கிடைப்பது மறுக்கப்படுகிறது. இந்த அவல நிலையினைக் கருத்தில் கொண்டு குடிசைப் பகுதிகள் பொது மக்களுடைய நலத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஊறு விளைவிக்காவண்ணம், குடிசைப் பகுதிகளை மாற்றி அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டவும், குடிசைப் பகுதிகளை மேம்படுத்தவும் 1970-ம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது.

### 3.2 நோக்கங்கள்

முதன்மையாக வெள்ளத்தால் பாதிக்கப்படும் மற்றும் இதர பாதிப்புகளுக்கு உள்ளாகும் பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதிகளை

மாற்றி தன்னிறைவு பெற்ற சுகாதாரமான அடுக்கு மாடிக் குடியிருப்புகளைக் கட்டுதல் அல்லது பாதுகாப்பான இடங்களில் மேம்படுத்தப்பட்ட மனைகள் அமைத்தல்.

குடிசைகளில் வாழும் மக்களை தனியார் நிலச் சொந்தக்காரர்களால் வெளியேற்றுவதை தவிர்த்து அக்குடிசைப் பகுதி வாழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளித்தல்.

எல்லா குடிசைப் பகுதிகளுக்கும் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, மின் விளக்குகள், மழை நீர் கால்வாய், சாக்கடை வசதிகள் போன்ற பணிகள் அமைத்தல்.

### 3.3 குடிசைப் பகுதியினை பற்றிய கொள்கை

மேலே குறிப்பிடப்பட்ட கொள்கைகளைத் திட்டங்களாக உருவாக்குவதற்கு கீழ்க்காணும் உத்திகள் கையாளப்படுகின்றன:-

1. குடிசைப் பகுதிகளுக்கான பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டிய அவசர நிலையினைக் கருத்தில் கொண்டும், நிதிநிலையினைக் கருத்தில் கொண்டும் குடிசை மாற்று/குடிசை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2. குடிசைப் பகுதி வாழ் மக்களுக்கு அவர்களது திருப்பிச் செலுத்திடும் சக்திக்கேற்ப குடியிருப்புகள் அமைத்தல் அல்லது மேம்படுத்துதல்.

3. குடிசைப் பகுதி வாழ் மக்களை குடிசை மாற்று மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுத்துதல்.

4. கள மேம்பாட்டுப் பணிகளுக்கேற்ப அமைந்துள்ள குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் அமைத்தல்.

5. சுகாதாரமற்ற மற்றும் நெரிசலான இடங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களை மாடிக் குடியிருப்புகள் அமைத்து குடியமர்த்துதல்.

6. மாடிக் குடியிருப்புகள் அல்லது கள மேம்பாட்டுப் பணிகள் அமைக்க இயலாத இடங்களில் மேம்படுத்தப்பட்ட மனைகள் அமைத்துக் குடியமர்த்துதல்.





7. மேம்படுத்தப்பட்ட மனைகள் அமைக்கும் திட்டங்களில் மனை உரிமம் வழங்குதல்.

8. இருப்பிடத்தினை மேம்படுத்திக்கொள்ள அட்கோ போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்று கடனுதவி வழங்குதல்.

மேலே குறிப்பிடப்பட்ட கொள்கைகளைத் திட்டங்களாக உருவாக்குவதற்கு கீழ்க்காணும் உத்திகள் கையாளப்படுகின்றன:-

1. மிகவும் நெரிசலான மற்றும் சுகாதாரமற்ற நிலையில் நகரங்களில் அமைந்துள்ள குடிசைகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின்கீழ் கட்டுதல்.

2. குடிசைகள் “உள்ளது உள்ளபடி” மேம்படுத்துவதற்கு ஏற்ற சூழ்நிலையில் அமைந்திருந்தால் அப்பகுதிகளில் அடிப்படை வசதிகளை அமைத்து அம் மக்கள் வசிக்கும் இருப்பிடத்திற்கு மனைப்பட்டா வழங்குதல்.

3. நகரில் சாலையின் மருங்குகள், பொதுமக்களின் திட்டங்களுக்குத் தேவைப்படும் இடங்கள் மற்றும் சென்னை துரித இரயில் போக்குவரத்துத் தடங்கள் போன்ற பகுதிகளில் வாழும் குடிசைப் பகுதி மக்களை நகருக்கு அருகாமையில் மாற்றிடங்களில் மேம்படுத்தப்பட்ட மனைகள் அல்லது அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டி அப்பகுதிகளில் குடியமர்த்துதல்.

அரசின் இக்கொள்கை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் செயல்படுத்தப்படுகிறது. இவ்வாரியம் தற்போது அதன் தலைவர், நிர்வாக இயக்குநர் மற்றும் பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களைச் சார்ந்த 10 பிரதிநிதிகளைக் கொண்ட நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

மேற்காணும் கொள்கைகளைக் கருத்திற்கொண்டு ‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்’ என்ற இலட்சியத்துடன் வாரியம் கீழே குறிப்பிட்டுள்ள பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:-

1970-ம் ஆண்டு நிறுவப்பட்ட குடிசைப் பகுதி மாற்று வாரியம் குடிசைப் பகுதி வாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த பல்வேறு குடிசை மாற்று மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இதுகாறும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திலிருந்து மாற்றப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புக்களையும்

சேர்த்து 74,140 அடுக்குமாடிக் குடியிருப்பகள்/வீடுகள்/மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன. 1,61,860 குடும்பங்களுக்கு நில உரிமத்துடன் கூடிய குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் அமைக்கப்பட்டுள்ளன. குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் 2,04,565 குடும்பங்களுக்கு அமைக்கப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் வாரியத்தின் மூலதனச் செலவினம் ரூ.51.40 கோடியாக உயர்த்தப்படவுள்ளது. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் செயல்படுத்தப்படும் முக்கியமான திட்டப் பணிகள் விவரம் பின்வருமாறு:-

### 3.4 குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் நெரிசலான குடிசைப் பகுதிகளில் சுகாதாரமற்ற நிலையில் அமைந்துள்ள குடிசைகளை மாற்றி அப்பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. இவ்வாறு கட்டப்பட்ட குடியிருப்புகள் முன்பு அப்பகுதியில் குடியிருந்த குடிசைவாழ் மக்களுக்கு குலுக்கல் முறை மூலம் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இத்திட்டம் அரசிடம் இருந்து பெறப்படும் 30 சதவீத தொடக்க மானியத்தையும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறப்படும் 70 சதவிகித கடன் தொகையையும் கொண்டு நிறைவேற்றப்படுகிறது. இக்கடன் உதவி 15 ஆண்டுகளில் 13 சதவிகித வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஜனவரி 1998 வரை 63,468 அடுக்கு மாடிக் குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. இத்திட்டப் பணிகளுக்காக அரசு மானியம் ரூ.92.90 கோடி இதுகாறும் செலவிடப்பட்டுள்ளது. தற்போது, ஒரு குடியிருப்பின் கட்டுமானச் செலவு ரூ. 1 இலட்சமாகும்.

### 3.5 தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக செயல்படுத்தப்படும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அடிப்படை வசதிகளான சாலைகள், குடிநீர் வசதி, கழிவு நீர் வெளியேற்றும் வசதி மற்றும் சமுதாயப் பணிகள் போன்றவை அமைக்கப்பட்டு பின்னர் குடிசைவாழ் மக்களுக்கு மனைப் பட்டா வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதிகளில் “உள்ளது உள்ளபடி” நிலையில் உலக வங்கியின் நிதி உதவியுடன் மேம்படுத்தப்



படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், வேலூர், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 நகரங்களில் வாழும் 94,000 குடிசைப் பகுதி மக்களுக்கு ரூ.46.40 கோடி செலவில் 6 ஆண்டுகளில் மேம்பாட்டுப் பணிகள் அமைக்கத் திட்டமிடப்பட்டது. இத்திட்டம் 1988-89-ல் தொடங்கப்பெற்று அடிப்படை வசதிகள் அமைக்கும் பணிகள் 76,722 குடும்பங்களுக்கு ரூ.32.21 கோடி செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 3.6 நகர்ப்புற குடிசைப் பகுதி சுற்றுச் சூழல் மேம்பாட்டுத் திட்டம்

சுகாதாரமற்ற குடிசைப் பகுதிகளின் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தும் பொருட்டு ஒரு குடும்பத்திற்கு ரூ.2,000 செலவில் கீழே குறிப்பிட்டுள்ள அடிப்படை வசதிகள் அமைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1. 40 மீட்டருக்கு ஒரு தெரு மின் விளக்கு
2. 20 குடும்பங்களுக்கு ஒரு குடிநீர்க் குழாய்
3. 10 குடும்பங்களுக்கு ஒரு குளியலறை
4. 10 குடும்பங்களுக்கு ஒரு கழிவறை
5. சாலைகள், நடைபாதைகள், கழிவு நீர் வெளியேற்றும் அமைப்புகள் அமைத்தல்

இத்திட்டப் பணிகளுக்கான செலவினம் அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. பொதுவாக, இத்திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படாத நகரங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1998 ஜனவரி மாதம் வரை ரூ.25.82 கோடி செலவில் 2,04,565 குடும்பங்களுக்கு குடிசைப் பகுதி மேம்பாட்டுப்பணிகள் அமைக்கப்பட்டுள்ளன.

### 3.7 ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப் பகுதி மக்களை மாற்றுக் குடியமர்த்துதல்

சென்னை நகரில் சாலையின் மருங்குகள், நதிக்கரைகள் மற்றும் பொதுத் திட்டப் பணிகளுக்கு தேவைப்படும் இடங்களான சென்னை துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் போன்ற ஆட்சேபகரமான

இடங்களில் சுமார் 65,000 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இவ்விடங்களின் ஆட்சேபகரமான தன்மையைக் கருத்திற் கொண்டு இக்குடிசைப் பகுதிகளை "உள்ளது உள்ளபடி" நிலையில் மேம்படுத்த இயலவில்லை. இப்பகுதிகளில் வாழும் குடும்பங்களைச் சென்னை நகருக்கு அருகாமையில் மாற்றிடங்களில் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அமைத்து குடியமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கான நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. சென்னை நகரின் குடிசைப் பகுதி மேம்பாட்டிற்காக 10-வது நிதிக்குழு பரிந்துரை செய்துள்ள சிறப்பு மான்யம் ரூ.60 கோடியினைக் கொண்டு 1998-2002-க்குள் 6,500 குடும்பங்களை மாற்றிடங்களில் குடியமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் தற்போது தொடங்கப் பட்டுள்ளன.

## 3.8 பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட 61,900 குடியிருப்புகளில் 17,500 குடியிருப்புகளை மக்கள் வாழ்வதற்கு உகந்தவையாக மேம்படுத்த உடனடியாக பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இப்பழுது பார்ப்புப் பணிகளை படிப்படியாகச் செயல்படுத்த ரூ.14.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது இத்திட்டத்தின்கீழ் மாடிப் படிகள் மற்றும் மாடி முகப்புகளை சீர் செய்தல், மழை நீர்க் கசிவினைத் தடுக்கும் பொருட்டு தளத்தின் மீது ஓடுகள் அமைத்து சீர் செய்தல், குடிநீர் மற்றும் கழிவு நீர் அமைப்புகளை சீர் செய்தல், வெளிப்புறச் சுவர்களைப் பூசுதல், தளங்களைச் சரி செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1998 ஜனவரி மாதம் வரையில் ரூ.8.50 கோடி செலவில் 30,000 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு பழுதுபார்ப்புப் பணிகள் செய்து முடிக்கப் பட்டுள்ளன. மேலும் 1998-99-ம் ஆண்டில் இத்திட்டப் பணிகளுக்காக ரூ.4.00 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.9 1998-99-ம் ஆண்டின் திட்டங்கள்

### 3.9.1 குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம்

ரூ.30.00 கோடி செலவில் 3000 குடியிருப்புகள் ரூ. 9.00 கோடி அரசு மானியத்துடன் கட்டப்படும்.





### 3.9.2 நகர்ப்புற குடிசைப் பகுதி சுற்றுச் சூழல் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் நகர்ப்புற குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகளான சாலைகள், தெரு மின் விளக்குகள், குடிநீர்க் குழாய், கழிப்பிட வசதி போன்ற மேம்பாட்டுப் பணிகள் குடும்பம் ஒன்றிற்கு ரூ.2,000 செலவில் 30,000 குடும்பங்களுக்கு ரூ.6.00 கோடி அரசு மானியத்துடன் அமைக்கப்படும்.

### 3.9.3 ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைவாழ் குடும்பங்களை மாற்று இடங்களில் குடியமர்த்துதல்

சென்னை மாநகரில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களை மாற்றிடங்களில் குடியமர்த்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக 1998-99-ம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 3,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் தொடங்கத் திட்டமிட்டுள்ளது. இவ்வாண்டில் ரூ.18.00 கோடி செலவில் 1,500 அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டி முடிக்கப்படும்.

### 3.9.4 பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்

10,000 அடுக்கு மாடிக் குடியிருப்புகளுக்கு ரூ.4.00 கோடி செலவில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் அமைக்கப்படும்.

### 3.9.5 அடுக்குமாடித் திட்டப் பகுதிகளில் கழிவு நீர் வெளியேற்றும் அமைப்புகளை மேம்படுத்துதல்

1970-ம் ஆண்டுகளில் அமைக்கப்பட்ட சில அடுக்கு மாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் கழிவுநீர், நச்சு நீர்த் தொட்டிகள் மூலம் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்த நச்சு நீர்த் தொட்டிகளிலிருந்து (Septic tanks and Oxidation ponds) வெளியேற்றப்படும் உபரி கழிவு நீர், நகரில் செல்லும் கால்வாய்களில் விடப்படுவதன் மூலம் அவை மாசுபடுகின்றன. இத்திட்டப் பகுதிகளில் கழிவு நீர் வழிந்து செல்வதைத் தடுக்கவும், நகரக் கால்வாய்கள்

[1998 மே 15

மாசுபடுவதைத் தடுக்கும் பொருட்டும் சில அடுக்குமாடித் திட்டப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் வெளியேற்றும் அமைப்புகளை மேம்படுத்த தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது. இப்பணிகளுக்காக 1998-99 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் 3,200 குடியிருப்புகள் பயன்பெறும் வண்ணம் கழிவுநீர் அமைப்புகளைக் கீழ்க்காணும் திட்டப் பகுதிகளில் ரூ.70 இலட்சம் செலவில் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

1. சேப்பாக்கம் தொகுதியில் அமைந்துள்ள சிந்தாதிரிப்பேட்டை திட்டம்.
2. பெரம்பூர் தொகுதியில் அமைந்துள்ள வியாசர்பாடித் திட்டம்.
3. மயிலாப்பூர் தொகுதியில் அமைந்துள்ள ஏகாம்பரம்பிள்ளை முனுசாமிப்பிள்ளை திட்டம்.
4. ஆலந்தூர் தொகுதியில் அமைந்துள்ள இராணி அண்ணாநகர் திட்டம்.

## 3.10 எதிர்கால செயல்முறைத் திட்டங்கள்

3.10.1 சென்னை மாநகரில் ஆட்சேபகரமான பகுதிகளான ஆற்றோரங்கள், சாலையின் மருங்குகள் மற்றும் பொதுமக்களுக்குப் பயன்படும் திட்டங்களான துரித இரயில் போக்குவரத்துத் தடங்கள் போன்ற இடங்களில் சுமார் 65,000 குடிசை குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இக்குடிசைப் பகுதிகளின் ஆட்சேபகரமான தன்மையினை கருத்தில் கொண்டு, இக்குடும்பங்களுக்கு அவ்விடத்திலேயே "உள்ளது உள்ளபடி" நிலையில் வீடுகள் அல்லது மேம்பாட்டுப் பணிகள் அமைக்க இயலவில்லை. கடல் கடந்த நாடுகளின் மேம்பாட்டு அமைப்பு (ODA) போன்ற அயல் நாட்டு நிதிநிறுவனங்களின் நிதியுதவியினைக் கொண்டு இக்குடும்பங்களை சென்னை நகருக்கு அருகில் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மாற்றுக் குடியமர்த்த தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக துரித இரயில் போக்குவரத்துத் திட்டம்-2 தடத்தில் சென்னை மயிலை-தரமணிக்கு இடைப்பட்ட பகுதியில் வாழும் குடிசை வாழ் குடும்பங்களை சென்னை நகருக்கு அருகில் ரூ.25.00 கோடி செலவில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து மாற்றுக் குடியமர்த்தப்படும்.



1998 மே 15]

## 3.11 "குடிமக்கள் சாசனம்"

### தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

| வ. எண் | கோரிக்கை | வாரியத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை | பதில் அனுப்பப் படும் கால அவகாசம் |
|---|---|---|---|
| 1. | வீடு ஒதுக்கீடு | குடிசைப் பகுதியில் வசிக்கும் குடும்பங்கள் புள்ளி விவரம் சேகரித்து, அதனடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எனவே, வீடு ஒதுக்கீடு கோரும் விண்ணப்பதாரர்களுக்கு இவ்விவரம் தெரிவிக்கப்படுகிறது. | 10 நாட்கள் |
| 2. | வாரிசு அடிப்படையில் பெயர் மாற்றம் செய்தல் (குடியிருப்பு மற்றும் மனைகள்) | வாரிசுச் சான்று மற்றும் இறப்புச் சான்றிதழ்களை பரிசீலனை செய்து உத்தரவு வழங்கல் | 7 நாட்கள் |
| 3. | குடியிருப்பு மற்றும் மனைகளுக்கு கிரையப் பத்திரம் வழங்குதல் | முழுத் தொகை வசூல் செய்த விவரம் தணிக்கை செய்த பின் கிரையப் பத்திரம் வழங்குதல் | 15 நாட்கள் |
| 4. | காலி இடம் பங்க் நடத்த ஒதுக்கீடு செய்தல் | வாரிய குடியிருப்பில் வசிக்கும் மக்களின் கோரிக்கை மற்றும் இடவசதியின் அடிப்படையில் வேலை வாய்ப்பை அளிக்கும் நோக்கத்தில் ஒதுக்கீடு செய்தல் | 15 நாட்கள் |

| வ. எண் | கோரிக்கை | வாரியத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை | பதில் அனுப்பப் படும் கால அவகாசம் |
|---|---|---|---|
| 5. | அடிப்படை வசதிகளில் குறைகள் | புகாரின் அடிப்படையில் உடன் ஆய்வு செய்து மேற்கொள்ளுதல் | 15 நாட்கள் |
| 6. | ஆக்கிர மிப்புகள் | ஆக்கிரமிப்பாளர்களுக்கு நோட்டீஸ் வழங்கி பின் அகற்றப்படுதல் | 30 நாட்கள் |
| 7. | நில அளவு | கோரிக்கையின் அடிப்படையில் அளவு செய்வதற்கான கட்டணம் வசூல் செய்து எல்லைக்கல் பதிந்து கொடுத்தல் | 7 நாட்கள் |
| 8. | மின்வசதி பெற தடையின்மை சான்று வழங்கல் | ஒதுக்கீடுதாரர்கள் நிலுவையின்றி செலுத்தியுள்ளனரா என்பதை சரிபார்த்து வருவாய் அலுவலரால் வழங்கப்படுகிறது. | 7 நாட்கள் |
| 9. | குடியிருப்பு களில் பழுது பார்த்தல் | புகாரின் அடிப்படையில் ஆய்வு செய்து மேற்கொள்ளல் | 21 நாட்கள் |

## 4. ஊரக வீட்டுவசதிக் கழகம்

***4.1*** தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ஊரக வீட்டு வசதியினை செயல்படுத்த "ஊரக வீட்டு வசதிக் கழகம்" என்ற தனி அமைப்பினை நிறுவுவதற்கான ஆணையினை தமிழக அரசு ஆணை எண் 133, வீட்டு வசதி (கூட்டுறவு) துறை நாள் 25-3-1997-ன் மூலம் பிறப்பித்துள்ளது.

மேற்படி கழகம் தற்சமயம் சென்னை - அறிஞர் அண்ணா நகரில் மனை எண் சி-48, 2 வது நிழற்சாலையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.



இக்கழகத்தினை 1956-ம் ஆண்டு கம்பெனிச் சட்டப் பிரிவு 25-ன் கீழ் பதிவு செய்ய இக்கழகத்தின் தனி அலுவலர் அனைத்து முயற்சிகளையும், ஏற்பாடுகளையும் எடுத்து வருகிறார். பதிவு செய்தவுடன், இக்கழகம் தன் செயல்பாட்டினைத் தொடங்கும்.

### 4.2 இக்கழகத்தின் முக்கிய குறிக்கோள்கள்

அ. பல்வேறு கட்டட மையங்களிலோ அல்லது வேறு எந்த துறையிலோ விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்பட்டு வரும் தரம் வாய்ந்த கட்டுமானப் பொருட்களைப் பயன்படுத்தி மலிவு விலை வீடுகள் கட்டித் தருவது;

ஆ. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ள கட்டட மையங்களின் செயல்பாடுகளை கண்காணித்து இந்நிறுவனங்கள் அமைக்கப்பட்ட நோக்கங்கள் நன்கு வெற்றிகரமாக நிறைவேறிட இக்கட்டட மையங்களின் உயர் அமைப்பாகச் செயல்படுவது;

இ. தமிழகத்தின் அனைத்து ஊரகங்களிலும் படிப்படியாக அனைத்துப் பிரிவு மக்களும் தாங்களே வீடுகளை கட்டிக் கொள்ளவோ/புது வீடுகளை வாங்கவோ/பழைய வீடுகளை புதுப்பித்துக் கொள்ளவோ நிதி உதவியினை, நிதி நிறுவனங்களிடமிருந்து குறைந்த வட்டியில் கடனாகப் பெற்றுத் தர ஏற்பாடு செய்து தருவது;

ஈ. தமிழக அரசால் செயல்படுத்தப்படும் அனைத்து வீட்டுமனை மேம்பாடுத் திட்டங்களை ஏற்பாடு செய்வதும், திறம்பட செயல்படுத்த உதவுவதும் ஆகும்.

***4.3*** இக்கழகம், பல்வேறு கட்டட மையங்களுடன் தொடர்பு கொண்டு, இக்கட்டட மையங்களின் உதவியுடன் மலிவு விலையில் வீடு கட்டும் திட்டத்தினைச் செயல்படுத்தும்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் செயல்படுத்தப்பட்டுள்ள தன்னிறைவு வீட்டு மனைத் திட்டங்களில் மனை ஒதுக்கீடுதாரர் பல ஆண்டுகளுக்கு முன் ஒதுக்கீடு பெற்றும், குறிப்பிட்டுள்ள கால கெடுவுக்குள் வீடு கட்டத் தவறி உள்ளார்கள் என அறியப்படுகிறது. பண வசதியில்லாத இந்த ஒதுக்கீடுதாரர்கள் சம்மதத்தின்பேரில் இக்காலி மனைகளில் அனைத்துப் பிரிவினருக்கும் இக்கழகம் வீடு கட்டித் தரும்.

[1998 மே 15

முதற்கட்டமாக, இந்நடப்பாண்டில் இத்திட்டம் சென்னை அருகாமையில் அமைந்துள்ள திருநர், வேளச்சேரி, மாதவரம், காக்களூர், பெருமாள்பட்டு, ஆவடி, அம்பத்தூர், மணலி, கும்மிடிப்பூண்டி, திருக்காச்சூர் திட்டப் பகுதிகளிலும் வேலூர் அருகில் களஞ்சூர், தாரப்படைவீடு, திருச்சி அருகே நாவல்பட்டு, திருநெல்வேலி அருகில் சங்கரபேரி, தூத்துக்குடி அருகே மீளவிட்டான், திருப்பூர் அருகே முதலிப்பாளையம், கோவை அருகே காளப்பட்டி, மதுரை அருகே குலவாணிகபுரம் மற்றும் அவனியாபுரம், சேலம் அருகே சீலாவாரி/தளவாய்ப்பட்டி திருமலைகிரியிலும் குறைந்த வட்டியில் சுலபத் தவணை முறையில் திரும்ப செலுத்த ஏதுவான திட்டமாக செயல்படுத்த ஆவன செய்யப்படும்.

## 5. கட்டட மையங்கள்

5.1 மைய அரசும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகமும் சேர்ந்து கட்டடத் தொழில்நுட்பத்தை "ஆய்வுகூட" நிலையிலிருந்து "கட்டட மனை" நிலைக்குக் கொண்டுவரும் பொருட்டு 470 கட்டட மையங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நிறுவப்பட்டுள்ளன. கட்டட மையங்கள் தொழில்நுட்ப மாற்றம் மற்றும் ஒப்படைப்பு முறைகள் (Delivery system) ஆகியவற்றைக் கொண்டு சேர்க்கும் வாகனமாகத் திகழ்கின்றன.

5.2 கட்டட மையங்கள் (Building Centres) பின்வரும் பணிகளை ஆற்றுகின்றன:

அ. செய்த செலவுக்கேற்ப பயன்தரும் தொழில்நுட்பங்களில் உள்ளூர் கட்டுமானப் பணியாளர்களின் தொழில் திறனை உயர்த்துதல் மற்றும் அவர்களுக்குப் பயிற்சியளித்தல்.

ஆ. கட்டுமானப் பொருட்கள், துணைப் பொருட்கள் ஆகியவற்றைப் பல்வேறிடங்களில் உற்பத்தி செய்து விற்பனை செய்தல்.

இ. பயிற்சி பெற்ற கட்டுமானப் பணியாளர்களையும், உற்பத்தி செய்த பொருட்களையும் பயன்படுத்தி கட்டுமானப் பணியை மேற்கொள்ளுதல்.



1998 மே 15]

ஈ. வீட்டுவசதி குறித்த வழிகாட்டிக் குறிப்புகளையும், ஆலோசனைகளையும் தகவல்களையும் வழங்குதல், பொதுமக்களும், அரசும் தனியார் துறை நிறுவனங்களும்/அரசு சாரா நிறுவனங்களும் (N.G.Os) தனிப்பட்டவர்களும் செய்த செலவுக்கேற்ப பயன்தரும் கட்டுமானப் பணி குறித்தும், அவர்களது வட்டாரங்களில் கட்டப்படும் பொருத்தமான வீட்டுவசதி கட்டடங்கள் குறித்தும் தகவல்களைப் பரப்புதல்.

5.3. மேற்படி பணிகள் கீழே கூறப்பட்டுள்ள ஆதாரங்களை வைத்து செய்யப்படுகின்றன:

அ. உள்ளூர் நிதி வாயில்கள்;

ஆ. பொருத்தமான தொழில்நுட்ப இடுபொருட்களுடன் உள்ளூரில் தயாரிக்கப்படும் கட்டடப் பொருட்கள்

இ. நிலை உயர்த்தப்பட்ட உள்ளூர் தொழில் திறன் மற்றும் கட்டுமானப் பணியாளர்கள்.

ஈ. நவீன எரிசக்தி மற்றும் சுற்றுச் சூழல் ஆதாரங்கள்.

மத்திய அரசின் "அட்கோ திட்டத்தின் கீழ்" தேசிய கட்டட மைய அமைப்பு என்கிற ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு, மாவட்டத் தலைமை இடங்கள் ஒவ்வொன்றிலும் "கட்டட மையம்" ஒன்றை அமைப்பது என முடிவு செய்துள்ளது. மேலும், இத்தகைய கட்டட மையங்கள் ஆரோவில், திருப்பூர் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட சில இடங்களிலும் காந்தி கிராமம், ஊரக நிலையம் போன்ற நிறுவனங்களிலும் அரசு சார்பற்ற சில அமைப்புகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 32 கட்டட மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

இருபத்தி ஐந்து கட்டட மையங்கள் மாவட்ட நிர்வாக கட்டுப்பாட்டில் செயல்படுகின்றன. புதிய மாவட்டங்களில் கட்டட மையங்கள் தொடங்குவது பற்றி மாவட்ட ஆட்சியாளர்களால்

அனுப்பப்படும் செயற் குறிப்புகளின் அடிப்படையில் பரிசீலித்து ஆணை வழங்கப்படும். இவை தவிர அரசு சாரா நிறுவனங்களின் கட்டுப்பாட்டின் கீழ் ஒன்பது கட்டட மையங்கள் செயல்படுகின்றன.

5.4 தமிழ்நாடு ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் நேரு வேலைவாய்ப்பு திட்டம் (கட்டுமானத்தைத் தரமுயர்த்துதல்) ஆகியவற்றின்கீழ் கிராமம் மற்றும் நகர்ப்புற இளைஞர்களுக்கு செலவுக்கேற்ப பயன்தரும் கட்டடத் தொழில்நுட்பம், உற்பத்தி, கட்டுமானம் ஆகியவற்றில் இக்கட்டட மையங்கள் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றன. இதுவரை 4538 கை வினைஞர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். ரூ.38.18 கோடி மதிப்புள்ள வீடுகள் இத்திட்டத்தின் மூலம் கட்டப்பட்டுள்ளன. இதில் பள்ளிக் கட்டடங்கள், மதிய உணவுக் கூடங்கள், அங்கன்வாடிகள், பால்வாடிகள் (Balwadies), டொக்ராஷெட்டுகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவ இல்லங்கள் அடங்கும். இவை பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டங்களின்கீழ் (Decentralised District Planning) கட்டப் பட்டவையாகும். புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களிலும் கட்டட மையங்கள் தொடங்கப்பட உள்ளன.

5.5 முன்னரே வடிவமைக்க சாத்தியமான செலவுக்கேற்ற பயன்கிட்டும் வகையில் கட்டுமானப் பொருட்களைத் தயாரித்து அரசுத் துறைகளுக்கும், பொதுமக்களுக்கும் இக்கட்டட மையங்கள் வழங்குகின்றன.

இக்கட்டட மையங்கள் புதிய முறையில் திட்டமிட்டு கட்டடங்கள் வடிவமைக்கப்படுகின்றன. மேலும், இத்திட்டத்தின்கீழ் கட்டடங்களைக் கட்டுவதில் செலவுக்கேற்ப பயனளிக்கக் கூடிய சாத்தியமான அனைத்து கட்டட தொழில்நுட்ப உத்திகளையும் பின்பற்றி வருகின்றன. இதன் காரணமாக, கட்டுமானச் செலவு 15 சதவீதம் முதல் 25 சதவீதம் வரையில் குறைந்துள்ளது. இவ்வாறு கட்டுமானச் செலவு குறைந்ததன் வாயிலாக கிடைத்த மீதித் தொகை இதே திட்டத்திற்கு கூடுதல் வசதிகளை ஏற்படுத்துவதில் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது.





5.6 கீழ்க்கண்ட கட்டட மையங்கள் தொடங்குவதற்கான கருத்துரு அட்கோவின் பரிசீலனையில் உள்ளது.

1. பொதுப்பணித் துறை கட்டடமையம், அழகியமண்டபம், கன்னியாகுமரி மாவட்டம்.
2. ஊரக கட்டட மையம், இகரிபாளையம் கிராமம், கும்மிடிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்.
3. வைகை கட்டடமையம், விளாங்குடி, மதுரை மாவட்டம்
4. அரசு அளவிலான கட்டட மையம்
5. கட்டடமையம், பெரம்பலூர்.
6. கட்டடமையம், காஞ்சிபுரம்.
7. செருகட்டடமையம், வடமதுரை, திண்டுக்கல் மாவட்டம்.
8. பொள்ளாச்சியில் துணை மையம்.
9. வீட்டுவசதி, ஊரக சுற்றுச் சூழல் மற்றும் தொடர்புடைய வளர்ச்சி ஆகியவற்றின் பொறுப்பாட்சி கட்டட மையம், பவானி.
10. கட்டட மையம், நாமக்கல் மாவட்டம்.
11. கட்டட மையம், தேனீ மாவட்டம்.
12. கட்டட மையம், திருவாவூர் மாவட்டம்.
13. கட்டட மையம், திருவள்ளூர் மாவட்டம்.

## 6. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம்

6.1 அரசு அலுவலர்கள் வீடு கட்ட முன் பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் அரசு அலுவலர்களுக்கும், அனைத்திந்திய பணித் தொகுதி உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் மனை வாங்கவதற்கு அல்லது அதில் வீடு கட்டுவதற்கு அல்லது ஏற்கெனவே கட்டப்பட்ட வீடு/ அடுக்ககம் வாங்குவதற்கு அல்லது கட்டப்பட்டு வரும் வீடு/அடுக்ககம்

[1998 மே 15

வாங்குவதற்கு, மொத்த உச்ச வரம்புத் தொகையான ரூ.4.00 இலட்சம் வழங்கப்படுகிறது. ஏற்கெனவே கட்டப்பட்ட வீட்டு வசதியினை விரிவாக்கவும் மேம்படுத்தவும் ரூ.2.00 இலட்சம் உச்சவரம்பிற்கு உட்பட்டு அரசினால் கடனுதவி வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் கடன் தொகையானது மொத்த உச்சவரம்புத் தொகையான ரூ.4.00 இலட்சத்திற்கு உட்பட்டும், அரசு ஊழியர்களின் திரும்பச் செலுத்தும் திறனுக்கு ஏற்றவாறு இருக்கும்.

இத்திட்டத்திற்கு 1998-99ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.47.25 கோடி கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| அரசு அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| அனைத்திந்திய பணி அலுவலர்கள் | | 0.50 |
| தலைமைச் செயலக ஊழியர்கள் | | 4.25 |
| பிற அரசு ஊழியர்கள் | | 41.00 |
| ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆசிரியர்கள் | | 1.50 |
| மொத்தம் | .. | **47.25** |

## 6.2 வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனம் (HDFC) இந்தியன் வங்கி (Ind Bank) வீட்டு வசதி நிறுவனம்/கனரா வங்கி வீட்டு வசதி நிறுவனம் (Canfin Homes Limited)

வீடு கட்டுவதற்கான வசதியை மேலும் பல அரசு ஊழியர்களுக்கு நீட்டிக்கும் நோக்கத்துடன் வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனம், கனரா வங்கி வீட்டு வசதி நிறுவனம், இந்தியன் வங்கி வீட்டு வசதி நிறுவனம், ஆகிய நிறுவனங்கள் மூலமாக நேரடியாக நிதியுதவி வழங்கும் திட்டத்தை அரசு கொண்டு வந்தது. அந்நிறுவனங்கள் முறையே ரூ.15 கோடி/ரூ.5 கோடி/ரூ.5 கோடி கடனுதவி வழங்கியுள்ளது.



1998 மே 15]

## 6.3 தமிழ்நாடு அரசு ஊழியர் வீடு கட்டும் முன்பணம் சிறப்பு குடும்ப பயனளிப்பு நிதித் திட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் வீடு கட்டும் முன் பணம் சிறப்பு குடும்ப பயனளிப்புத் திட்டம் 1-4-1986 முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வீடு கட்ட முன்பணம் பெற்ற அனைத்து அரசு ஊழியர்களுக்கும் கடன் தொகையினை திரும்பச் செலுத்தும் தொகையில் 1 விழுக்காடு தொகையை மாத சந்தாவாக கடன் பெற்ற மாதத்திற்கு அடுத்த மாதம் முதல் செலுத்த வேண்டும். ஓய்வு பெறுவதற்கு முன் 5 ஆண்டுகளுக்கு மேலே பணிக்காலம் உள்ள அலுவலர்கள் மட்டுமே இத்திட்டத்தின்கீழ் பயன்பெற முடியும். கடன் பெற்றவர் பணிக்காலத்தில் மரணமடைந்தால் அவரது கடன் முழுவதுமாக செலுத்தப்படாமலிருப்பின் இத்திட்டத் தொகையினால் மீதக் கடன் தொகைக்கு சரிக்கட்டப்படும்.

## 7. இடவசதிக் கட்டுப்பாடு

7.1 குடியிருப்பு மற்றும் பிற கட்டிடங்களை வாடகைக்கு விடுவது அவற்றுக்கான வாடகை நிர்ணியிப்பது முதலியவற்றை முறைப்படுத்தும் பொருட்டும், குடியிருப்பவர்கள் நியாயமற்ற முறையில் வீட்டு உரிமையாளர்களால் வெளியேற்றப்படுவதிலிருந்து அவர்களை பாதுகாக்கும் நோக்குடனும், தமிழ்நாடு (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுபாடு) சட்டம் 1960-ம் ஆண்டு இயற்றப்பட்டது. சென்னை மாநகரில் மாவட்ட ஆட்சியரும், தமிழ்நாட்டின் இதர மாவட்டங்களி மாவட்ட கோட்ட ஆட்சியர்களும், இச்சட்டத்தின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரிகளாவர்.

7.2 இச்சட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட கட்டடங்கள், இட வசதி நோக்கங்களுக்காக தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கும், அரசுத் துறை அலுவலகங்களுக்கும் வாடகைக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. மேற்படி கட்டட உரிமையாளர், அவரது சொந்தப் பயனுக்காக, அக்கட்டடத்தைப் பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்வதற்காக அல்லது அக்கட்டடத்தை இடிப்பதற்காக, மாற்றிக் கட்டுவதற்காக அக்கட்டடத்தைத் திருப்பிக் கேட்பாராயின், வாடகைக்காக எடுத்துக்

[1998 மே 15

கொள்ளப்பட்ட அக்கட்டடத்தை மீண்டும் அதன் உரிமையாளர்களுக்குத் திரும்பக் கொடுக்க, இச்சட்டத்தின் விதி முறைகளின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளது.

7.3 வீட்டு உரிமையாளர்கள் மற்றும் குடித்தனக்காரர்களிடமிருந்து நியாய வாடகையை இரண்டாம் முறை நிர்ணயிக்கவும், நியாய வாடகை நிர்ணயிக்க விண்ணப்பித்த `தேதிக்குப் பதிலாக, நீதிமன்றம் தீர்ப்பளித்த நாளிலிருந்து நியாய வாடகையை நடைமுறைப்படுத்தக் கோரியும், மற்றும் முன்னாள் இராணுவத்தினருக்கு அரசுக் கட்டுப்பாட்டின் கீழுள்ள வீடுகளை, சுலபமாக விடுவித்துத்தர கோரியும், ஏராளமான முறையீடுகள் அரசிற்கு வரப்பெற்றுள்ளன. இதற்கிடையில், மத்திய அரசு மாதிரி வாடகைக் கட்டுப்பாடு சட்ட நகல் ஒன்றை இவ்வரசிற்கு அனுப்பி, அதில் உள்ளாற்போல் மாநிலச் சட்டத்திலும் தகுந்த மாற்றங்கள் செய்ய பரிசீலிக்குமாறு கோரியுள்ளது. வீட்டு உரிமையாளர்களுக்கும், குடித்தனக்காரர்களுக்கும் ஏற்படுகின்ற சில நடைமுறை இடர்பாடுகளை கருத்திற் கொண்டும், மேலும் மேற்குறிப்பிட்டுள்ள அனைத்துக் காரணங்களையும் கருத்திற்கொண்டும், தற்போது அமலிலுள்ள சட்டத்திற்குத் தேவையான மாற்றங்களை அரசு பரிசீலித்துள்ளது. அதே சமயத்தில், இச்சட்டத்தில் மேற்கொள்ளவிருக்கும் மாற்றங்களால் பொது மக்களிடம் ஏற்படக் கூடும் விளைவுகளை அறிய, சில குறிப்பிட்ட மாவட்ட ஆட்சியர்களது கருத்து கோரப்பட்டுள்ளது. இவற்றையும் கருத்திற் கொண்டு, தற்போதைய தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட உள்ளன.

7.4 இடவசதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட்ட பணியாளர்களது செலவிற்கென 1998-99-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.19.72 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யபட உள்ளது.

1998 மே 15]

## இணைப்பு-II

[203 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## நகர்ப்புற வளர்ச்சி

### மானியக் கோரிக்கை எண் 33

### கொள்கை விளக்கக் குறிப்பு 1998-99

**1. முன்னுரை:**

1.1 `நகர்மயமாதல்' என்பது உலகளாவிய ஒன்று. மிக வேகமாக நகர்மயமாகிவரும் மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்று. பல நகர் பகுதிகளில் பெருகிவரும் நகர்ப்புற மக்கட் தொகை காரணமாக இப்பகுதிகளில் உள்ள நிலத் தேவைகளையும் அவற்றை முழுமையாகப் பயன்படுத்துவதிலும் பல பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. தமிழ்நாட்டில் சராசரியாக ஒருவருக்கு 0.20 எக்டேர் நிலப்பரப்பே உள்ளது. இதனால் கிடைக்கப்பெறும் நிலங்களை நன்கு பாதுகாக்கவும் இவற்றை முழுமையாகப் பயன்படுத்தவும் தேவையேற்பட்டுள்ளது.

1.2 உலகில் வளர்ந்து வரும் நாடுகளில் நகர் வளர்ச்சி வேகமாக உள்ளது. இந்தியாவில் சுமார் 25.71 சதவீதம் மக்கள் நகர்களில் வாழ்கின்றனர். தமிழ்நாட்டில் சுமார் 34.15 சதவீதம் மக்கள் 469 நகர்களில் வாழுகின்றனர். இந்நகர்கள் மாநிலம் முழுவதும் நன்கு பரவலாக அமைந்துள்ளன. இருப்பினும் இந்நகர்கள் முக்கிய போக்குவரத்து வழிகளான சென்னை-மதுரை, சென்னை-கோயம்புத்தூர், கோயம்புத்தூர்-மதுரை, மதுரை-நாகர்கோவில், மதுரை-ராமேஸ்வரம், மதுரை-செங்கோட்டை, விழுப்புரம்-தஞ்சாவூர் போன்ற திசைகளில் அமைந்துள்ளன. சில பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவில் நகர்கள் இல்லை. கிராம மக்களுக்கு நகர்கள் மூலம் பெறப்பட வேண்டிய முக்கிய வசதிகள் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெறும் அளவிற்கு இருந்தாலும், இவ்வசதிகள் மேலும் பலப்படுத்தப் படவேண்டும்.

1.3 இன்று மாநில மக்கள் தொகை 5.58 (1991) கோடியாக உள்ளது. இது 2011 ஆம் ஆண்டில் 7.32 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதே காலத்தில் இன்றுள்ள நகர் மக்கள் தொகை 1.9 கோடி என்பது இரண்டு மடங்காக கூடி 3.8 கோடியாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. 2011 ஆம் ஆண்டில்

[1998 மே 15

மக்கள் தொகையில் 50 சதவீதம் நகர்களில் வாழ்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இன்றுள்ள நகர் மக்கள் தொகை 34.15 சதவீதம் என்பது 50 சதவீதம் என்று மாறும்பொழுது நகர் வசதிகளை உண்டாக்கும் பொறுப்பு அரசிற்கும் அதன் துறைகளுக்கும் மிக அதிக அளவாக இருக்கும்.

**1.4** பெருகி வரும் மக்களுக்கும் நகர்களுக்கும் உறைவிட வசதிகளை அதிகப்படுத்த வேண்டும். இதில் உணவு உற்பத்தியை பாதிக்காமல் விவசாய நிலங்கள் தக்க வைக்கப்பட வேண்டும். இந்திய நாட்டில் சராசரியாக ஒருவருக்கு 0.50 ஹெக்டேர் நிலப்பரப்பு உள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் இது 0.20 ஹெக்டேராக உள்ளதால் தேவைக்குரிய நிலப்பரப்பு அரிதாக உள்ள நிலையில் இது மேலும் குறைந்து 2011 ஆம் ஆண்டில் 0.15 ஹெக்டேர் என்று குறையும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, விளை நிலங்களைப் பாதுகாத்தல் மற்றும் இதர இன நிலங்களைப் பாதுகாத்தல் நடவடிக்கைகளை விரைந்து எடுத்தல் வேண்டும்.

மேலும், தமிழ்நாட்டில் உள்ள மலைப்பகுதி நிலங்களையும் சுமார் 1,000 கி.மீ. நீளமுள்ள கடற்பகுதி நிலப்பரப்பினையும் அதன் மென்மைத் தன்மை மற்றும் சுற்றுச் சூழல் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு பேணி பாதுகாக்கப்பட வேண்டும்.

**1.5 மேற்குறிப்பிட்ட பொறுப்பு நிலையில்**

(அ) பெருகி வரும் மக்கள் தொகை

(ஆ) விரைந்து வளரும் நகர்மயமாதல்

(இ) அதிகரிக்க இயலாத நிலப்பரப்பும் மிக குறைந்த தனிநபர் நிலப்பகுதியும்

(ஈ) நன்கு விளையும் நிலங்களை பாதுகாத்தலும் மற்றும்

(உ) சுற்றுப்புற சூழலைப் பாதுகாத்தல் அவசியமும் திட்டமிடுவோருக்கும் குறிப்பாக நகர் வளர்ச்சி திட்டமிடும் வல்லுநர்களுக்கும் ஒரு சவாலாக அமைகின்றது. எனவே இப்பணிகளை சமாளித்திட மாநில நகர் வளர்ச்சி கொள்கை மற்றும் அதன் வழிமுறைகள் ஒன்று புதிய நிலைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்படுகின்றது.



1998 மே 15]

**2. இந்த வழிமுறைகளின் நோக்கங்களாவன:**

I. மக்கள் தொகை பரவலாக நகர்களில் இருக்க வேண்டும் என்பதால் மண்டல அளவில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த பெரிய நகர் மையங்களை அமைக்க திட்டமிடுதல்.

II. தற்போதுள்ள போக்குவரத்து வழித் தடங்களை மேலும் சீரிய முறையில் பயன்படுத்தி, அப்பகுதி நகர்களில் மக்கள் தொகை அடர்த்தியை மிகுதியாக்கி உயர குறைவான கட்டடங்கள் வளர ஏதுவாக்கி பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகைகள் செய்தல்.

III. மாநிலத்தின் போக்குவரத்து வழித்தடங்களில் தேவைப்படும் இணைப்புகளைக் கண்டறிந்து மாநிலத்தில் சமச் சீரான வளர்ச்சிகள் ஏற்பட வழிகோலுதல்.

IV. நகர் வசதிகள் இல்லாத வட்டாரங்களைக் கண்டறிந்து அப்பகுதிகளில் 20,000 முதல் 50,000 வரையான மக்கள் தொகை கொண்ட நகர்கள் ஏற்பட செய்து கிராமப்புற மக்கள் தம் அருகிலேயே நகர் வசதிகளைப் பெற்றிட வழிவகை செய்தல்.

V. சுற்றுப்புற வளப் பகுதிகளைப் பாதுகாத்தல். இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், விவசாய நிலங்கள் நகர் பகுதிகளாக மாறாது இருத்தல் மற்றும் பல நில உபயோக பாதுகாத்தலுக்கு வளர்ச்சிக் கொள்கைகள் மற்றும் வழிமுறைகள் தயாரித்தல்.

VI. எதிர்கொள்ளவிருக்கும் நகர்மயமாதலை சந்திக்கும் வகையில் சட்டம், நிதி மற்றும் நிர்வாக அமைப்புகளைக் கண்டறிதலும் மத்திய திட்டக்குழு பாராட்டு தெரிவித்துள்ள வளர்ச்சிக் கொள்கைகளை அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம் 73 மற்றும் 74க்கு ஏற்பவும் மாநில அரசின் நகராட்சிகளுக்கான புதிய சட்டத்திற்கேற்பவும் புதுப்பித்தல்.

**3. நகர் ஊரமைப்புத் துறை:**

**3.1 நகர் ஊரமைப்புத் துறையின் பணிகள்:**

நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ஐ அமல்படுத்துதல் நகர் ஊரமைப்புத் துறையின் பொறுப்பாகும். உள்ளூர் திட்டக் குழுமங்களினால் சட்ட

[1998 மே 15

பூர்வமாக தயாரிக்கப்பட வேண்டிய முழுமைத் திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அதனைச் செயல்படுத்த உதவுதல் மற்றும் அதன்படி குடியிருப்புப் பகுதி, வணிகப் பகுதி, தொழில் பகுதி போன்ற பல்வேறு நிலப்பயன்பாடுகள் ஏற்பட வழிவகைகள் செய்தல் கட்டட வளர்ச்சிகளை ஒழுங்குப்படுத்துதல், நகர் வளர்ச்சித் திட்டங்களை செயலாக்கம் செய்தல் ஆகியவைகள் இத்துறையினால் செய்யப்படுவதினால் நகர் வளர்ச்சிகள் திட்டமிட்டபடி ஏற்படவும், நகர்களில் தூய்மையான சுற்றுபுற நிலைகள் ஏற்படவும், இத்துறை உறுதுணையாக செயல்படுகின்றது.

***3.2*** நகர் ஊரமைப்புத் துறை பின்வரும் சட்டபூர்வமான திட்டங்களையும் இதர திட்டங்களையும் தயாரித்து வருகின்றது:

**3.3 முழுமைத் திட்டம்:**

சிறு நகர்களுக்கு அதன் எல்லைக்குள்ளும் பெரிய நகர்களுக்கு அதன் எல்லை மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளுக்கும் முழுமைத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. நகர் நிலங்களின் உபயோகங்களை நெறிப்படுத்தி சாலைகள் வளர்ச்சி, கட்டட வளர்ச்சி ஆகியவைகள் ஏற்பட்டு அவைகள் போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புகளுடன் சரியாக இணைவதை இம்முழுமைத் திட்டங்கள் நோக்கமாக கொண்டுள்ளன. ஒவ்வொரு நகரின் தேவைக்கு ஏற்ப நிலப் பயன்பாடுகள், குடியிருப்புப் பகுதி, வணிகப்பகுதி, கல்விப்பகுதி, தொழில்பகுதி, சிறப்பு உபயோகப்பகுதி போன்ற பகுதிகளை முழுமைத் திட்டத்தின் மூலம் ஏற்படுத்தி அவை சரியான முறையில் ஒன்றுடன் மற்றொன்று சாலைகள் மூலம் இணைக்கப்படுகின்றன. இத்திட்டங்கள் 110 நகர்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ளன.

**3.4 விரிவு அபிவிருத்தித் திட்டம்**

வளர்ந்து வரும் நகர்களின் குறிப்பிட்ட பகுதிகளுக்கு விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. நகரத்தில் வேகமாக வளர வாய்புகள் உள்ள பகுதிகளைத் தெரிவு செய்து இப்பகுதிகளுக்கு விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் திட்டமிடப்படுகின்றன. தற்பொழுதுள்ள நிலப்பயன், உத்தேச நிலப்பயன் பல்வேறு பயன்களுக்கு தேவைப்படும் நிலங்கள், மற்றும் கல்வி, பொழுதுபோக்கு செய்தி தொடர்பு, சாலைகள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகளுக்கான நில ஒதுக்கீடு செய்வதே இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும்.



1998 மே 15]

இதுவரை 1491 திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றிற்கு இசைவு அளித்தல், இறுதி ஒப்புதல் அளித்தல் போன்ற நிலைகளில் உள்ளன.

**3.5 புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள்:**

இத்தகைய திட்டங்கள் பழம் பெருமை கொண்டுள்ள மாமல்லபுரம் நகர் மற்றும் தொழில் வளர்ச்சியினால் விரைவாக வளரும் ஒசூர் போன்ற நகர்களுக்கு தயாரிக்கப்படுகின்றன. இதுகாறும் ஐந்து புதிய நகர்களுக்கு இத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன்படி தயாரிக்கப்பட வேண்டியவை ஆகும்.

**3.6 திட்டங்கள்:**

நகர் ஊரமைப்புத் துறையினால் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படும் திட்டங்களாவன:

(அ) ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டங்கள்.

(ஆ) பூங்காக்கள் மேம்பாடுத் திட்டங்கள்.

(இ) முழுமைத் திட்டம், புதுநகர் வளர்ச்சித் திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்ட சாலைகள் அமைத்தல்.

**3.7 ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டங்கள்:**

மாநில அரசினால் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் சிறிய நகர்கள் மற்றும் பேரூராட்சிகளுக்கு ஒரு திட்டத்திற்கு, ரூ.30.00 இலட்சம் வீதம் நிதி உதவி அளிக்கப்படுகின்றது. இதன் மூலம் பேருந்து நிலையம், வாரச் சந்தை அபிவிருத்தி, வணிக வளாகங்கள் போன்ற வருவாய் தரத்தக்க திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளாட்சிகளுக்கு வருவாயைப் பெருக்க வகை செய்யப்படுகின்றது. கடந்த 1997-98-ம் ஆண்டில் இத்திட்டத்தில் 13 நகர்களுக்கு ரூ.284.38 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்டது.

**3.8 முதல் மற்றும் இரண்டாம் நிலை நகர்களில் பூங்காக்கள் மேம்பாடு:**

மக்கள் நெரிசல் நிறைந்த பகுதிகளில் பூங்காக்களும் விளையாட்டுத் திடல்களும் முதன்மையான மனமகிழ்வு இடங்களாக விளங்குகின்றன.

அநேகமாக அனைத்து நகர்களிலும், பூங்காக்கள் இருப்பினும்., நிதி ஆதாரம் இன்மையால் அவை செவ்வனவே பராமரிக்கபடாமல் உள்ளன. இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு பூங்காவிற்கும் ரூபாய் 2.50 இலட்சம் மொத்த மதிப்பீட்டில் ரூ.1.25 இலட்சம் அரசு மானியமாக அளித்து, அவற்றை மேம்பாடு செய்து உபயோகத்திற்கு கொண்டு வருகின்றது. கடந்த 1997-98ல் ஐந்து நகர்களுக்கு பூங்கா மேம்பாட்டிற்கு நிதி உதவி செய்யப்பட்டது.

### 3.9 சிறப்புத் திட்டங்கள்:

முழுமைத் திட்டம், புதுநகர் வளர்ச்சித் திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்ட சாலைகள் அமைத்தல்:

முழுமைத் திட்டம், புதுநகர் வளர்ச்சித் திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் இதர பொது உபயோக வசதிகளைச் செயலாக்கம் செய்ய ரூ.175.38 இலட்சங்கள், எட்டு நகர்களுக்கு நிதி உதவி செய்யப்பட்டது.

### 3.10 நகர்களுக்கு வான்வழிப் புகைப்படங்கள்:

திட்டங்கள் தயாரிக்க தேவையான விவரங்களை அதி நவீனமானதும் துல்லியமாகவும் தர வல்லதுமான வான்வழி புகைப் படங்களை இத் துறை பலவகைளில் பயன்படுத்திக் கொள்கின்றது. உலக வங்கி திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு நகர் வளர்ச்சித் திட்ட நிதி உதவிமூலம் 30 நகர்களுக்கு புகைப்படங்கள் பெறப்பட்டன. இப்புகைப்படங்களைப் பயன்படுத்தி நகர்களுக்கு நில உபயோக வரைபடங்கள் தயாரிக்கப்படுகின்றன.

### 3.11 கடலோரப் பகுதி மேலாண்மைத் திட்டம்:

கடலோரப் பகுதிகளில் இயற்கையாக அமைந்துள்ள நில இயல் வனங்களான தில்லை வனம் (சதுப்பு நிலக்காடுகள்) பவளப் பாறைகள் மற்றும் இயற்கை எழில் கொஞ்சும் பகுதிகள் ஆகியவற்றினைப் பாதுகாத்திடும் பொருட்டு கடலோரப் பகுதி மேலாண்மைத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியை இத்துறை மேற்கொண்டுள்ளது. மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டும் முறைகளின்படி இத்திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசால் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மத்திய அரசு தெரிவித்துள்ள சில





மாற்றங்களைச் செய்திட இந்திய கடல் இயல் மையம் மற்றும் மத்திய தொல்பொருள் பாதுகாப்புத் துறையின் ஆலோசனையுடன் மேற்படி மாற்றங்களைச் சேர்த்து திருத்திய திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

### 3.12 போக்குவரத்து இயக்கம் மற்றும் மேலாண்மைத் திட்டம்:

நகரங்களில் உள்ள போக்குவரத்து பிரச்சினைக்குரிய பகுதிகளை ஆய்ந்து அவற்றினைச் சீராக்க இத்துறை போக்குவரத்துச் செயல்முறை மற்றும் மேலாண்மைத் திட்டங்களைத் தயாரித்து வருகின்றது.

இதுகாறும் 38 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கும் ஐந்து பெரு நகரங்களுக்கும் ரூ.58.95 இலட்சம் செலவில் பல்லவன் போக்குவரத்து ஆலோசனை நிறுவனத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இதுகாறும் 27 நகரங்களுக்கு போக்குவரத்து செயல்முறை மற்றும் மேலாண்மைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு திட்டங்களைச் செயலாக்கம் செய்ய விரிவான உத்தேச அறிக்கைகள் தயாரிக்கப் பட்டுள்ளன.

### 3.13 நகர்புற தகவல் அமைப்பு:

முழுமைத் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள், பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள், தொழிற் பகுதிகள் மற்றும் நகர் அளவிலான புள்ளி விவரங்கள், வட்டாரத் திட்டங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கிய நகர்ப்புறத் தகவல் மையம் இத்துறையில் அமைக்கப்பட்டு உள்ளது. இதில் 110 முழுமைத் திட்டங்கள் மற்றும் 1,400 விரிவு அபிவிருத்தித் திட்டங்களுக்குரிய புள்ளி விவரங்கள் கணிப்பொறியில் பதியப்பட்டுள்ளது. இவற்றின் தொழில் தொடர்பான தகவல்கள், மாவட்ட தொழில் மையங்களுக்கும், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கும் ஏனைய உபயோகதாரர்களுக்கும் பயனுள்ள வழிகாட்டியாக அமைகின்றது. ஒவ்வொரு ஆண்டும் இத்தகவல்கள் புதுப்பிக்கப்படுகின்றன.

### 3.14 மாநகர மத்திய பகுதிகளில் மறு அமைப்பு:

பின்வரும் நோக்கங்களைச் செயலாக்கம் செய்ய மாநகரங்களின் மத்திய பகுதிகளை மறு அமைப்பு செய்யும் திட்டங்கள் மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி நகர்களுக்கு தயாரிக்கப்பட்டது.

[1998 மே 15

I மையப் பகுதியில் நெரிசலைக் குறைத்து அவற்றின் செயல் திறனை மேம்படுத்துதல்.

II. மொத்த வணிக மையங்களை புறநகரப் பகுதிகளுக்கு மாற்றி அமைத்தல்.

III. ஆக்கிரமிப்பு கட்டுமானங்களை நீக்கி சாலைகளை அகலப்படுத்துதல்.

IV. சாலைகளை அகலப்படுத்துதல், சாலைகளை நீட்டித்தல், தேவைப்படும் சாலை இணைப்புகளை அமைத்தல் மற்றும் உள் நகரில் மொத்த சாலைகளையும் மேம்படுத்தல்.

V வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மற்றும் மரபுச் சிறப்புள்ள கட்டடங்களையும் பகுதிகளையும் பராமரித்தல்.

VI. நகரின் பகுதிகளில் காணப்படும் நெரிசலைக் குறைக்க வழிவகைகள் காணுதல்.

VII அரசுத் துறைகளும் தனியார் துறைகளும் இணைந்து செயல்பட வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்தல்.

### 3.15 மாமல்லபுரம் கடற்கரைப் பகுதியில் வளர்ச்சிப் பணிகளை நெறிப்படுத்த சிறு குழு:

மத்திய அரசு அறிவிப்பு செய்துள்ள கட்டுபாட்டு விதிகளுக்கு புறம்பாக அனுமதியின்றி ஏற்பட்டு வருகின்ற வளர்ச்சிகளை நெறிமுறைப்படுத்தவும், கண்காணிப்பு செய்யவும், மேற்கண்ட பணிகளை முன்னுரிமை முறையில் ஆற்றிட சிறு குழு அமைக்கப்பட்டு முட்டுக்காடு முதல் சலவண்குப்பம் வரை பதினோரு கிராமங்களில் பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணி வருகின்ற ஆண்டிலும் தொடர்ந்து செய்யப்படும்.

## 4. 1998-99 ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்:

***4.1*** நகர்களில் கட்டுப்பாட்டுடன் விரும்பத்தக்க வளர்ச்சியை உறுதிப்படுத்த இத்துறை நகர்களுக்கு முழுமைத் திட்டங்களும் விரைந்து வளரும் வாய்ப்புள்ள நகரின் பகுதிகளுக்கு விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிப்பதிலும், தனிக் கவனம் செலுத்தி வருகின்றது. தொழில் முனைவோர் மற்றும் தனி நபர்களின் பல்வேறு தன்மையுடைய



1998 மே 15]

கோரிக்கைகளினால் முழுமைத் திட்டங்களையும் விரிவு அபிவிருத்தித் திட்டங்களையும் செயலாக்கம் செய்வதில் இடையூறுகள் தோன்றுகின்றன. எனவே, இதனைக் கருத்தில் கொண்டு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தயாரிக்கப்பட்ட முழுமைத் திட்டங்களையும் பத்து ஆண்டுகளுக்கு முன்பு தயாரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித் திட்டங்களையும் கூர்ந்து ஆராயவும், திருத்தி அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய கூர்ந்து ஆராய்வுக்கு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ல் வழிகள் உண்டு. தற்பொழுது சுமார் 60 முழுமைத் திட்டங்களும் 500 விரிவு அபிவிருத்தித் திட்டங்களும் இத்தகைய மறு ஆய்வுக்குத் தகுதி வாய்ந்ததாக உள்ளது. வல்லுநர்களுடனும் உள்ளாட்சி உறுப்பினர்களுடனும் கலந்தாலோசித்து மறு ஆய்வு செய்யப்படும். வருகின்ற 1998-99 ஆம் ஆண்டில் ஐந்து முழுமைத் திட்டங்களும் 75 விரிவு அபிவிருத்தித் திட்டங்களும் மறு ஆய்வு செய்யப்படும். மேலும், ஐந்து புதிய முழுமைத் திட்டங்களும், 50 புதிய விரிவு அபிவிருத்தித் திட்டங்களும் தயாரிக்கப்படும். புதிய முழுமை திட்டங்கள், சேலம், குளித்தலை, போளூர், திருத்துறைப்பூண்டி மற்றும் பல்லடம் ஆகிய நகர்களுக்கு தயாரிக்க பரிசீலிக்கப்படுகின்றன.

### 4.2 புதுநகர் திட்டம், முழுமைத் திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டம் செயலாக்கம்:

புதுநகர் திட்டம், முழுமைத் திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தி திட்டங்களில் குறிப்பிட்டுள்ள உத்தேசங்களைச் செயலாக்கம் செய்ய புதுநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் உள்ளூர் திட்டக் குழுமங்களுக்கு அரசு நிதி உதவி அளிக்கின்றது. நகர்களில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் திட்டங்களுக்கு வருகின்ற நிதி ஆண்டில் ரூ.220.00 இலட்சங்கள் நிதி அனுமதி அளிக்கப்படும்.

### 4.3 தொன்மை மற்றும் வரலாற்றுச் சிறப்பு நகர் திட்டங்கள்:

தொன்மை மற்றும் வரலாற்றுச் சிறப்புள்ள நகர்களில் திட்டமின்றி ஏற்படும் வளர்ச்சிகளினால் உண்டாகும் சுற்றுப்புறச் சீர்கேட்டை அரசு கவனித்து அந்நகர்களை "தொன்மை மற்றும் வரலாற்றுச் சிறப்பு" நகர்களாக அறிவித்துள்ளது. இந்நகர்களுக்கு அழகூட்டும் வளர்ச்சிகளை திட்டமிடுதல், கட்டுமானங்களைக் கட்டுப்படுத்துதல், அடிப்படை வசதிகளைப் பெருக்குதல், வரலாற்றுச் சிறப்புப் பகுதிகளைப் பாதுகாப்பு செய்தல் ஆகிய பணிகள் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 1997-1998 ஆம் ஆண்டு இத்திட்டங்கள் 11 நகர்களுக்கு

தயாரிக்கப்பட்டன. வருகின்ற 1998-99 ஆம் ஆண்டும் இப்பணி தொடர்ந்து மேலும் 11 நகர்களுக்கு ரூ.25.00 இலட்சங்கள் நிதி அனுமதியில் செய்யப்படும். இந்நகர்கள் பின்வருமாறு:

1. மதுரை
2. ஸ்ரீரங்கம்
3. ஸ்ரீவில்லிபுத்தூர்
4. தஞ்சாவூர்
5. பத்மநாபபுரம்
6. ஸ்ரீபெரும்புதூர்
7. காரைக்குடி
8. சித்தன்ன வாசல்
9. திருச்செங்கோடு
10. பவானி
11. செஞ்சி

தொன்மை மற்றும் வரலாற்றுச் சிறப்பு நகர் பகுதிகளைப் பாதுகாக்கவும், அவைகளை மேம்படுத்தவும் வகை செய்யும் ஒரு தனிச்சட்டத்தை ஏற்படுத்த இத்துறை பரிசீலனை மேற்கொண்டுள்ளது.

### 4.4 மிகக் குறைந்த நகர் வளர்ச்சியுள்ள வட்டங்களில் நடுநிலை நகரங்கள் அமைத்தல்:

இத்துறையால் தயாரிக்கப்படுகின்ற மாநில நகர் வளர்ச்சி வழிகாட்டி செயல் திட்டம் மாநிலத்தில் போதிய நகர் வளர்ச்சிகள் இல்லாத ஊரகப் பகுதிகளைக் கண்டறிந்துள்ளது. கடந்த 1997-98 ஆம் ஆண்டு 10 வட்டங்களில் சிறு நகர்களை ஏற்படுத்த ஆய்வுகள் மேற்கொண்டு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளுக்கு நகர் வசதிகள் அளிக்க வருகின்ற 1998-99 ஆம் ஆண்டு இந்த ஆய்வு மற்றும் திட்டம் தயாரித்தல் பணி மேலும் 11 வட்டங்களுக்கு ரூ.20.00 இலட்சங்கள் நிதி அனுமதியில் மேற்கொள்ளப்படும். அவ்வட்டங்கள் பின்வருமாறு:

1. ஊத்துக்கோட்டை .. திருவள்ளூர் மாவட்டம்
2. செய்யூர் .. காஞ்சிபுரம் மாவட்டம்
3. ஊத்தங்கரை .. தர்மபுரி மாவட்டம்
4. பெண்ணாகரம் .. தர்மபுரி மாவட்டம்
5. கள்ளக்குறிச்சி .. விழுப்புரம் மாவட்டம்
6. பல்லடம் .. கோயம்புத்தூர் மாவட்டம்



7. அரியலூர் .. பெரம்பலூர் மாவட்டம்
8. நன்னிலம் .. திருவாரூர் மாவட்டம்
9. வாடிப்பட்டி .. மதுரை மாவட்டம்
10. விளவன்கோடு .. கன்னியாகுமரி மாவட்டம்
11. சேத்துபட்டு .. திருவண்ணாமலை மாவட்டம்

திட்ட உத்தேசங்களைச் செயலாக்கம் செய்ய நிதி உதவிகளையும் திட்டத்தில் ஆய்வு செய்யப்படும்.

### 4.5 மாநில ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டம்:

வருகின்ற 1998-99 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 10 நகர்களுக்கு ஒரு திட்டத்திற்கு ரூபாய் 30.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 350.00 இலட்சங்கள் நிதி உதவி செய்யப்படும். இந்நகர்களில் உள்ள அடிப்படை வசதிகள் பலப்படுத்தப்பட்டு அவற்றை நகர் வாழ் மக்களும் ஊரக மக்களும் பயன்படுத்த ஏதுவாக்கப்படும்.

### 4.6 நகர் வளர்ச்சித் திட்டங்களுக்கு புவியியல் முறைகள்:

நகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிப்பதற்கு நவீன முறைகளான புவியியல் தகவல் முறையும் வான்வழிப் புகைப்படங்களும் வருகின்ற 1998-99 ஆம் ஆண்டில் இரண்டு நகர்களுக்கு ரூ.10.00 இலட்சங்கள் நிதி அனுமதியில் உபயோகம் செய்யப்படும். இம்முறைகளின்படி நிலம் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களான சர்வே எண், நில உரிமம், மண் தன்மை, மக்கள் அடர்த்தி மற்றும் நிலம் சம்பந்தப்பட்ட பல்வேறு விவரங்கள் ஒரே வரைபடத்தில் உபயோகத்தின் தேவைகளுக்கேற்ப காண்பிக்கப்படும். இம்முறையின்படி திட்டங்கள் காரைக்குடி மற்றும் திண்டிவனம் நகர்களுக்கு தயாரிக்கப்படும்.

### 4.7 திருவாரூர், நாமக்கல் மற்றும் இராமநாதபுரம் நகர்களுக்கு புதிய கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்கள்:

மாவட்ட தலைநகர்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன. இவைகளின் வளர்ச்சியை நெறிப்படுத்தவும், புதிய வளர்ச்சிகளை விரும்பத் தக்க வகையில் ஏற்படுத்திடவும், நகர் ஊரமைப்புச் சட்டத்தின்படி புதிய

கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கடந்த 1997-98-ல், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை நகர்களுக்கு கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்கள் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வருகின்ற 1998-99ம் ஆண்டு திருவாரூர், நாமக்கல் மற்றும் இராமநாதபுரம் நகர்களுக்கு கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்கள் ஏற்படுத்தப்படும். நகர் ஊரமைப்பு நிதி பெற்று இந்தப் புது குழுமங்கள் இந்நகர்களில் விரும்பத்தக்க புது வளர்ச்சிகளை ஊக்குவிக்கும்.

**4.8 மக்கள் சாசனம்:**

கட்டடம் கட்டுதல் மற்றும் மனைகள் வளர்ச்சி குறித்த உத்தேசங்களை உள்ளூர் திட்டக் குழுமங்கள் பரிசீலித்து, உத்தேசங்கள் விதிகளை நிறைவு செய்யும்படியாக இருக்கையில், மேற்படி குழுமங்களினால் நகர் ஊரமைப்பு சட்டத்தின்படி திட்ட அனுமதி 30 தினங்களுக்குள் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 5. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்:

*5.1.* மக்கட்தொகை பெருக்கம் இயற்கையாக நடைபெறும் நிகழ்வு. கிராம மக்கள் வேலைவாய்ப்பினைத் தேடி சிறிய மற்றும் பெரிய நகரங்களை நாடி அதிக அளவில் குடியேறுகிறார்கள். பெருநகரங்களை நோக்கி கிராம மக்கள் மட்டுமில்லாமல் சிறிய மற்றும் பெரிய நகரங்கள் மற்றும் வேறு மாநிலங்களிலிருந்து குடிபெயர்வது அதிக அளவில் நடைபெறுகிறது. இதற்கு சென்னை நகரமும் விதிவிலக்கல்ல. ஏனென்றால் சென்னை நகரத்திலுள்ள மேலான வேலை வாய்ப்பு வசதிகள், உயர்கல்வி, மருத்துவம் மற்றும் சமுதாய வசதிகள் அதிகமாக இருப்பதால் தமிழ்நாடு முழுவதிலிருந்தும் இந்தியாவின் மற்ற பகுதிகளிலிருந்தும் சென்னை மாநகரை நோக்கி மக்கள் திரளாக வந்து கொண்டிருக்கின்றனர்.

*5.2* 1993-ல் சென்னையின் மக்கட்தொகை 40 இலட்சங்கள் என மதிப்பிடப்பட்டு இந்தியாவின் ஒரு பெரு நகரமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 1991-ல் 38 இலட்சங்களாக இருந்த மக்கட்தொகை 2001-ல் 50 இலட்சங்களாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2011-ல் சென்னைப் பெருநகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நகர்ப்பகுதிகளிலும் சேர்ந்து மக்கட்தொகை 95 இலட்சங்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்னைப் பெருநகர் எல்லைக்குள் அமைந்துள்ள பகுதிகள் அதிக அளவில் நகரங்களாக மாறி வருவதால்



நகர வசதிகள் மற்றும் நகர அடிப்படை வசதிகள் ஆகியவற்றிற்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மேற்கூறிய குறைபாடுகளை கருத்திற்கொண்டு சென்னை பெருநகர வளர்ச்சிக்கான கோட்பாடுகள் வகுக்கப்பட வேண்டும்.

*5.3* எதிர்வரும் காலங்களில் இந்தியப் பொருளாதாரத்தைச் சீர்திருத்தி அமைக்க பலவழிகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று தேசிய நகர் மயமாக்குதல் குழு கூறியுள்ளது. உள்நாட்டு மொத்த உற்பத்திப் பெருக்கம் மற்றும் தேசிய பொருளாதாரம் ஆகியவற்றின் பங்கினைக் கருத்திற் கொண்டு தேசிய நகர் மயமாக்குதல் குழு, 5 பெரிய பெரு நகரங்களை தேசிய முக்கிய நகரமாக தேர்ந்தெடுத்ததில் சென்னை நகரமும் ஒன்றாகும். அரசு தற்பொழுது எடுத்துள்ள தொழிற்துறை முதலீடு முயற்சியின் பலனாக பன்னாட்டு நிறுவனங்கள் சென்னையிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பெரும் வாகன உற்பத்தி தொழிற்சாலைகளில் முதலீடு செய்ய முன்வந்துள்ளதன் காரணமாகவும், தகவல் தொழில்நுட்ப நகரமாக மாறி வருவதாலும் மக்கட் தொகை பெருக்கம் அதிகமாவதை முன்னிட்டு அதிக அளவில் நடைமுறை திட்ட அணுகுமுறைகளைக் காண அவசியம் ஏற்பட்டுள்ளது.

*5.4* அரசின் பொருளாதாரக் கொள்கைகள் தாராளமயமாக்கப்பட்டுள்ளதால் பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடுகள் அதிகரித்து உள்ளதை கருத்திற் கொண்டு சென்னை மாநகர அபிவிருத்தி திட்டங்கள் உரியபடி ஒருங்கிணைக்கப்படுதல் வேண்டும்.

*5.5.* அரசின் கொள்கைகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இரண்டாவது விரிவான திட்டத்தின் மூலமாக சென்னைப் பெருநகர வளர்ச்சியினை வரைமுறைப்படி நடைமுறைக்குக் கொண்டுவர பெருமுயற்சி எடுத்து வருகிறது. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நகர அபிவிருத்திப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவற்றில் உள்ள குறைபாடுகளைத் தீர்க்கும் வகையில் கீழ்க்கண்ட திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகிறது:

## 6. போக்குவரத்து அடிப்படை வசதிகள்:

*6.1* தற்போது நிலவிவரும் கடுமையான போக்குவரத்துப் பிரச்சனைகளைக் குறைக்கவும், சென்னைப் பெருநகரத்தின் எதிர்காலப் போக்குவரத்துத் தேவைகளைக் கருத்திற்கொண்டும், 20 ஆண்டுக் காலத்திற்கு செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் விரிவான போக்குவரத்து ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

இத்திட்டங்கள், தமிழ்நாடு நகர நிதி மற்றும் அடிப்படை வசதி நிறுவனம், நகர்புற வீட்டு வசதி அபிவிருத்தி நிறுவனம், தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் மற்றும் நிதி உதவி நிறுவனம் வழங்கும் நிதி உதவி மற்றும் தமிழக அரசின் மானிய நிதி உதவியுடன் செயலாக்கப்பட்டு வருகின்றன. செயலாக்கத்திலிருக்கும் சில பெரிய திட்டங்களாவன:-

1. பரங்கிமலை-பூவிருந்தவல்லி சாலை மேம்பாட்டுப்பணி.
2. சென்னைப் புறநகர்ச் சாலைகளின் மேம்பாட்டுப்பணி.

**6.2 பரங்கிமலை-பூவிருந்தவல்லி சாலை மேம்பாடு:**

இத்திட்டத்தில் 10.8 கி.மீ. நீளம் உள்ள பரங்கிமலை பூவிருந்தவல்லி சாலை அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்படவுள்ளது. இந்தக் கருத்துரு ஒவ்வொரு திசையிலும் இச்சாலையை இரட்டை வண்டித் தடங்களாக அகலப்படுத்துதல், தடங்களைப் பிரிக்கும் நெடுமையத் தடுப்பு அமைத்தல் மற்றும் மேம்படுத்திய தெருவிளக்குகள் அமைத்தல் போன்றவற்றை உள்ளடக்கும். ஒப்பந்தப்புள்ளிகள் முடிவுச் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் உத்தேச செலவு ரூ. 11.7 கோடியாகும். இத்திட்டம் இரண்டு வருடத்தில் முடிக்கப்பட உள்ளது.

**6.3. சென்னைப் புறநகர் சாலைகளின் மேம்பாடு:**

இத்திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் பகுதிக்குள்ளும், அதன் அருகாமையிலுமுள்ள 250 கி.மீ. நீளமான எட்டு பாதைகள் மேம்படுத்தப்படவுள்ளன. இதன் மூலமாக இந்தச் சாலைகளின் அடித்தளம் வலிமைப்படுத்தப்பட்டு, கட்டடங்கள் அமைந்துள்ள பகுதிகளில் சாலை விளக்குகள் பொருத்தப்படும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 212 கோடிகளாகும்.

இதில் 30 சதவீதத் தொகையை வரவு-செலவுத் திட்ட நிதி உதவி மூலமாக அரசு அளிக்கும். மீதமுள்ள தொகையான ரூ. 147 கோடி. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்து கடனுதவியாகப் பெறப்படும். வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி நிறுவனம் இக்கடனுதவிக்கு ஏற்கனவே ஒப்புதலளித்துள்ளது. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இக்கடனை அந்நிறுனவத்திடமிருந்து பெற்று, இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்



பணி துறையினருக்கு அளிக்கும். இக்கடனுக்காக வருடந்தோறும் செலுத்தப்பட வேண்டிய கடன் மற்றும் வட்டி ஆகியவற்றைக் கடனைத் திருப்பி செலுத்தும் காலம் வரை, தமிழ்நாடு அரசு இதற்குத் தேவையான வருடாந்திர நிதி மானியம் மூலமாக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு வழங்கும். இத்திட்டம் இந்நிதியாண்டில் (1998-99) தொடங்கப்பெறும்.

**6.4. போக்குவரவு செயல்முறைத்திட்டம்:**

தமிழக அரசு, சாலை சந்திப்பு மேம்பாடு, தெருவிளக்குகள் பொருத்துதல், சைகை விளக்குகள் பொருத்துதல், பாதசாரிகளுக்கான கீழ்பாலங்கள் அமைத்தல், மற்றும் பாலங்கள் அமைத்தல் போன்ற போக்குவரவுத் திட்டங்களை ரூ. 366 கோடி செலவில் உள்ளடங்கிய போக்குவரவு செயல்முறைத் திட்டங்களுக்கும் கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத்துறை மற்றும் மாநகரக் காவல் துறைகளால் செயல்படுத்தப்படவுள்ளன. நெடுஞ்சாலைத்துறை மற்றும் காவல் துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெற்று அளிக்கவும், இத்திட்டங்களின் செயலாக்கத்தை ஒருங்கிணைத்து செயல்படுத்தவும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒரு மைய நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது. ரூ. 30 கோடி செலவிலான பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டு விட்டன. பெரிய திட்டங்களுக்கு விரிவான செயல் திட்டம் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு ஆய்வாளர்களை தெரிவு, செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் அனைத்துப் பணிகளும் மூன்று முதல் ஐந்து வருடத்திற்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**7. திரளான துரித இரயில் போக்குவரத்து முறை -II-ம் பகுதி:**

துரித இரயில் போக்குவரத்து முறை சென்னை கடற்கரையிலிருந்து திருமயிலை வரை ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. இந்திய அரசு இத்திட்டத்தினை வேளச்சேரி வரை நீட்டிக்கும் இரண்டாம் பகுதிக்கான பணியினை மேற்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளது. திருமயிலை முதல் வேளச்சேரி வரையிலான 10.306 கி.மீ. நீளப்பகுதிக்கான திட்டச் செலவு ரூ. 605 கோடிகளாகும். இதில் தமிழக அரசு மூன்றில் இரண்டு பங்கு செலவினையும் இந்திய அரசு மூன்றில் ஒரு பங்கு

செலவினையும் ஏற்க உள்ளது. இத்திட்டத்திற்காக 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 50 கோடியை தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டம் 6.5 கி.மீ. வழித்தடத்திற்கு ஒப்புதல் பெற்று ரூ. 48 கோடி அளவில் கட்டுமான பணியினை பெருநகர் இரயில் போக்குவரத்துத் திட்டக் குழு மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் செயலாக்கத்தை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒருங்கிணைத்து மேலாண்மை செய்து வருகிறது.

**8. வெளிவட்டச் சாலை:**

8.1. நகர எல்லைக்குள் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு சென்னைப் பெருநகர எல்லையில் வெளிவட்டச் சாலை அமைப்பதற்காக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் திட்டம் தீட்டியுள்ளது. இத்திட்டத்தின்படி சென்னை-திருச்சி நெடுஞ்சாலை, சென்னை- பெங்களூர் நெடுஞ்சாலை, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, சென்னை-நெல்லூர் நெடுஞ்சாலை மற்றும் திருவொற்றியூர்-பொன்னேரி பஞ்சட்டி சாலைகளை இணைத்து வெளிவட்டச் சாலை அமைப்பதற்காக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தெற்கில் வண்டலூரையும் வடக்கில் மீஞ்சூரையும் இணைக்கும் இவ்வெளிவட்டச் சாலையின் நீளம் சுமார் 62 கி.மீ. ஆகும். இதற்கு 1995-ம் ஆண்டின் விலை நிர்ணயப்படி ரூ. 317 கோடி செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டது. பிரிவு ஒன்றிற்காக சென்னை-திருச்சி மற்றும் சென்னை-திருவள்ளூர் சாலைகளுக்கிடையே நில எடுப்பு ஆயத்தப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

8.2. வெளிவட்டச் சாலை திட்டத்தை "அமைத்து - இயக்கி - மற்றும் உரிமை மாற்றம்" செய்து கொடுக்கும்படியான அடிப்படையில் செயலாக்க தற்பொழுது உத்தேசிக்கப்பட்டு உள்ளது. அவ்வாறு உத்தேசிக்கப்பட்டுள்ளபடி செய்யத்தக்கமைக்கான சாத்தியக்கூறு அறிக்கையினை வணிக ரீதியிலான நிறுவனங்களிடமிருந்து பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. அறிக்கைகளைத் தயாரித்துத்தர 50 நிறுவனங்கள் விண்ணப்பித்துள்ளன. அவர்களுள் தொழில்நுட்ப அளவில் தகுதியானவர்களைத் தேர்வு செய்ய தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கிடையே மேற்படி சாலையை அமைப்பதற்கான நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நில எடுப்புப் பணிகள் போதுமான அளவு முன்னேற்றம் அடைந்த பிறகு ஆலோசகர்களை அமர்த்தும் பணி மேற்கொள்ளப்படும்.



**9. சென்னைக்கான நீடித்த நிலையான வளர்ச்சித் திட்டம்:**

9.1. அரசுத் துறைகள் மற்றும் சென்னைக்கான நீடித்த நிலையான வளர்ச்சியை மேம்படுத்த சுற்றுச் சூழல் திட்டமிடல் மற்றும் மேலாண்மை துறையில் உள்ள தனியார் மற்றும் தன்னார்வ துறைகளின் திறனை வலிமைப்படுத்துவதே சென்னைக்கான நீடித்த நிலையான வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இது ஒரு தொழில்நுட்ப உதவித் திட்டமாகும்.

9.2. ஐக்கிய நாடுகள் மனிதக் குடியேற்ற மையத்தால் (UNCHS) நடைமுறைப்படுத்தப்படும் நகரங்களுக்கான நீடித்த நிலையான வளர்ச்சித் திட்டத்தில் தெற்காசியாவிலேயே இணைக்கப்பட்ட ஒரே மாநகரம் சென்னையாகும். சென்னைக்கான நீடித்த நிலையான வளர்ச்சித் திட்டத்திற்கு, ஐக்கிய நாடுகள் மேம்பாடுத் திட்டம் (UNDP) மற்றும் தமிழக அரசு (GTN) கூட்டாக நிதி உதவி செய்கின்றன.

9.3. இத்திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின் பங்கு 6,05,000 அமெரிக்க டாலராகும் (ரூ. 2.00 கோடி). முதலில் திட்டமிட்டபடி 1995 அக்டோபர் முதல் தேதியிலிருந்து 1997 செப்டம்பர் திங்கள் 30 ஆம் தேதி வரையிலான இரண்டாண்டு காலத்திற்கு தமிழக அரசின் பங்கு ரூ. 45.70 இலட்சங்களாகும். இத்தொகை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சென்னைக்கான நீடித்த நிலையான வளர்ச்சித் திட்ட அலுவலக விரிவாக்க செலவினங்களுக்காகும். இத்திட்டத்தின் காலம் மேலும் 1998 அக்டோபர் திங்கள் முடிய நீட்டிக்கப்பட்டுள்ளது. திட்டத்தின் இந்நீட்டிப்பு காலத்திற்காக தமிழக அரசின் பங்கில் மேலும் ரூ. 7 இலட்சங்கள் கூடுகிறது.

9.4. முன்னுரிமைப்படுத்தப்பட்ட மூன்று சுற்றுச் சூழல் பிரச்சனைகள் முறையே (அ) நீர்வசதிகளைச் சுத்தப்படுத்துதல், (ஆ) துப்புரவு நிலை மேம்பாடு மற்றும் (இ) போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல் போன்றவை ஏற்கெனவே கலந்துரையாடல் முறைமையில் முன்னுரிமைப்படுத்தப்பட்டு 1997 செப்டம்பர் திங்கள் 4 முதல் 6 வரை நடைபெற்ற மாநகர கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரச்சினைக்கும் முறையே தனித்தனியாக செயற்குழுக்களும் அவற்றின் கீழ் பல பணிக்குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. இப்பணிக்குழுக்கள் மேற்காணும் பிரச்சினைகளை கையாள்வது குறித்தும், செயல் திட்டங்கள் உருவாக்குவது தொடர்பான

[1998 மே 15

வினைமுறைத் திறன்களையும், சார்பு வினைமுறைத் திறன்களையும் விவாதித்து வருகின்றன.

*9.5.* மாநகர கலந்தாய்வுக் கருத்தரங்கின் தொடர் நடவடிக்கையாக "நலிந்தோர் வாழ் நகர் பகுதிகள் மற்றும் புறநகர் பகுதிகளுக்கான துப்புரவு மேம்பாடு" குறித்து பிரச்சனை அடிப்படையிலான கருத்தரங்கு *29-1-98* அன்று நடைபெற்றது. போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல் சம்பந்தமான பிரச்சினை அடிப்படையிலான கருத்தரங்கினை விரைவில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*9.5.* ஒவ்வொரு பிரச்சினையிலிருந்தும் ஒன்று அல்லது இரண்டு முன்னணித் திட்டங்களுக்கான செயலாக்க திட்டங்கள் இக்கருத்தரங்குகளில் நடைமுறைப்படுத்துவதற்காக இறுதியாக்கப்படும். இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலிருந்து கிடைக்கப்பெறும் அனுபவத்தின் அடிப்படையில் திட்ட முடிவின் போது நகரங்களுக்கான நீடித்த நிலையான வளர்ச்சித்திட்ட முறைமையை வலிமைப்படுத்த நிறுவன வினைமுறைத்திறனை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மேலும் மெருகூட்டி மற்ற நகரங்களில் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இது எதிர்கால முதலீடு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொகுப்பு திட்டங்களை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் மற்ற நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் திட்ட முடிவிற்குப் (1998 அக்டோபர் திங்கள்) பின், விரிவாக விளக்க இது அடிப்படையாக அமையும்.

## 10. 2025-ம் ஆண்டில் புதிய சென்னை நகரை உருவாக்குதல்:

*10.1.* சென்னைப் பெருநகரின் வெளிப்பகுதியில் எதிர்காலப் போக்குவரத்தினைக் கணக்கில் கொண்டு 62 கி.மீ. நீளத்தில் வண்டலூரிலிருந்து மீஞ்சூர் வரையிலும் வெளிவட்டச் சாலை ஒன்று அமைக்கப்பட உள்ளது. அரசு இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, இதற்கான நிலம் கையகப்படுத்தும் வேலைகள் துவங்கப்பட்டு விட்டன. மேலும் நெடுஞ்சாலைத் துறையினரால் தாம்பரத்திற்கும் புழலுக்கும் இடையில் ஒரு தேசிய புறவழிச் சாலை அமைக்கப்பட உள்ளது.

*10.2.* புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாகவும் அமெரிக்க நாட்டு வாகனத் தொழிற்சாலை ஒன்று மறைமலை நகரிலும், தென்கொரிய நாட்டு வாகனத்தொழிற்சாலை ஒன்று



1998 மே 15]

இருங்காட்டுக்கோட்டையிலும் அமைக்கப்பட்டு வருவதாலும் இவ்விரு முக்கியமான சாலைகள் இவற்றின் இருமருங்கிலும் நகர்ப்புற வளர்ச்சியை ஊக்குவிக்கும். இவ்விரு வாகனத் தொழிற்சாலைகளும் நேரடியாகவும் முறைமுகமாகவும் ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்கும். தொழிற்சாலை மற்றும் குடியிருப்பு வளர்ச்சிகள் இப்பகுதியில் ஏற்பட்டு சென்னை நகரத்தின் நெரிசலைக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடமானது இவ்வாகனத் தொழிற்சாலைகளுக்கு மிக அருகில் இருப்பதாலும் சென்னைப் பெருநகர எல்லைக்குள் இருப்பதாலும் இவ்வளர்ச்சிகள் அனைத்தையும் உள்வாங்கிக் கொள்ளும் தன்மையும் திறனும் உடையதாக இருக்கிறது.

*10.3.* ஆகவே இதனால் ஏற்படப் போகும் நகர்ப்புற வளர்ச்சிகள் தாறுமாறாகச் செல்லாமல் விரும்பிய வண்ணம் வடிவமைக்கப்பட புதிய சென்னை என்ற பெயரில் மிகப் பிரம்மாண்டமான ஒரு புதுநகர் உருவாக்கப்பட இருக்கிறது. இத்திட்டம் தொலைநோக்குப் பார்வையில் 20 இலட்சம் மக்கள் குடியேறுவதற்குத் தேவையான அடிப்படை வசதிகளுடன் வடிவமைக்கப்படவுள்ளது. இது சென்னைப் பெருநகர் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும். இத்திட்டம் 20-25 ஆண்டு காலத்திற்குச் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தைத் தொடங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

*10.4.* இத்திட்டத்திற்கான ஆய்வறிக்கையும் சமர்பிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. இதன்மூலம் நில உடைமையாளர்கள், நிலம் கையகப்படுத்தாமல், தாமாகவே நிலத்தை அளிக்க ஆர்வம் காட்டுவர்.

## 11. துணிவகைகள் அங்காடி வளாகம்:

*11.1.* சென்னைப் பெருநகரில் மையப் பகுதியின் நெரிசலைக் குறைக்கும் நோக்குடன் ஜார்ஜ் டவுன் பகுதியில் நடைபெற்று வரும் மொத்த விற்பனை வியாபார நடவடிக்கைகளை நகரின் விளிம்பில் உள்ள பகுதிகளுக்கு இடமாற்றம் செய்வதென்பது அரசின் முடிவாகும். இச்செயல் திட்டத்தின் அடிப்படையில், கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம் உருவாக்கத் திட்டமிடப்பட்டது.

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம் சுமார் 120 ஹெக்டேர் (295 ஏக்கர்) நிலப்பரப்பில் அழுகும் பொருட்கள்,

[1998 மே 15

துணிவகைகள் மற்றும் தானிய வகைகள் ஆகியவற்றிற்கான மொத்த விற்பனை வியாபார நடவடிக்கைகளுக்காக அதற்குத் தேவையான இதர வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

11.2 இதன் முதற்கட்டமாக, அழுகும் பொருட்களுக்கான (அதாவது மலர், கனி, மற்றும் காய்கறி) அங்காடி வளாகம் கட்டி முடிக்கப்பட்டு, வியாபாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இதன் இரண்டாவது கட்டமாக, துணிவகைகள் அங்காடி வளாகம் நவீனமுறையில் கட்டுவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணிகளுக்கு சுமார் 9 ஹெக்டேர் (21.50 ஏக்கர்) நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு கையகப்படுத்தப்பட்டுள்ளது.

11.3 இத்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட தொகை சுமார் ரூ.195 கோடி. இவ்வளாகத்தில் மொத்தம் சுமார் 1.5 இலட்சம் சதுர மீட்டர் தளப் பரப்பளவிற்கு சுமார் 1700 கடைகள் கொண்ட கட்டடங்கள் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் இதர வசதிகளான உணவகங்கள், தொலைபேசி மையங்கள், மருத்துவ நிலையம், சிறு கடைகள் மற்றும் வங்கிகள் ஆகியவை அடங்கும். தொடக்க நிலை உருவரைப்படம் வணிகர்களோடு ஆலோசித்து இறுதி செய்யப்படும்.

11.4 இத்திட்டம் அரசின் அனுமதி பெற்றபின் 4 ஆண்டு காலத்திற்குள் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

*12. பள்ளிக்கரணையில் பேருந்து மற்றும் சரக்கு முனையம் அமைத்தல்*

12.1. சென்னை நகரின் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டும் மாசுப்படுதலின் அளவைக் குறைக்கும் பொருட்டும், பேருந்து மற்றும் சரக்கு முனையங்களை நகர் நோக்கு முக்கியப் பாதைகளை ஒட்டியுள்ள மூன்று இடங்களில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

12.2. இதற்கென சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பள்ளிக்கரணையில் 44 ஏக்கர் நிலப்பரப்பில் தெற்கு நோக்கி செல்லும் பேருந்து மற்றும் சரக்கு ஊர்திகளுக்கான முனையம் அமைப்பதற்குத் தெரிவு செய்துள்ளது. இப்பகுதி தாம்பரம்-வேளச்சேரி சாலை மற்றும் புதிதாக நிர்மானிக்கப்படவுள்ள 200 அடி சென்னைப் பெருநகரச் சாலையை ஒட்டியும் அமைந்துள்ளது. இது அரசுக்குச் சொந்தமான நிலமாகும். உரிமம் மாற்றம் குறித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



1998 மே 15]

12.3 நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தில் பேருந்து மற்றும் சரக்கு ஊர்திகளின் போக்குவரத்தினைக் கருத்திற்கொண்டு ஓர் ஆய்வறிக்கை தயாரிக்க ஆலோசகர்களை நியமிக்க சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

## 13. சென்னைப் புறநகர் பேருந்து முனையம், கோயம்பேடு

சென்னை மாநகரின் வணிக மையப்பகுதியில் உள்ள போக்குவரத்து நெரிசல்களைத் தவிர்ப்பதற்காகவும், பொது மக்கள் மற்றும் கோயம்பேடு மொத்த வணிக அங்காடி வியாபாரிகளின் தேவைகளைத் தீர்க்கும் பொருட்டும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தற்போது இயங்கி வரும் பேருந்து முனையங்களான பிராட்வே, எஸ்பளனேட், பேசின்பாலம் மற்றும் எம்.யூ.சி. ஆகியவைகளை கோயம்பேட்டில், உள்வட்டச் சாலையை ஒட்டி அமைக்க உத்தேசித்துள்ளது. இத்திட்டத்திற்கு அரசு கொள்கையளவில் 1995-ம் ஆண்டில் ஒப்புதல் அளித்துள்ளது. இப்புறநகர் பேருந்து முனையத் திட்டம் பேருந்து முனையக் கட்டடம் மற்றும் வணிக வளாகம் ஆகியவைகளைக் கொண்டிருக்கும். இதைத் தவிர பேருந்து நிறுத்தக் கட்டடங்கள், பாதசாரிகளுக்கான வசதிகள், அறிவிக்கை அமைப்புகள் மற்றும் பயணிகளுக்கான வசதிகளைக் கொண்டிருக்கும். இத்திட்டச் செலவினம் சுமார் ரூ.100 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதியை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அபிவிருத்திக் கழகம் ஆகியவை வழங்க இசைந்துள்ளன. இப்பேருந்து முனையத்திற்காக ஒரு சிறந்த வடிவமைப்பினை பெறும் நோக்கத்துடன், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. ரைட்ஸ் நிறுவனம் ஆலோசக நிறுவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டது. இம்முனையத்திற்கான உள்வரைபடம் மே திங்கள் 1998-ஆம் ஆண்டிற்குள் இறுதி செய்யப்பட்டு அரசின் அனுமதி கோரப்படும்.

## 14. முக்கியச் சாலைகள் அகலப்படுத்தும் திட்டம் மற்றும் பெட்டக ஊர்தி முனையம் பற்றிய ஆய்வறிக்கை

14.1. சென்னைப் பெருநகரத்தின் சாலை நெரிசலைக் குறைக்கும் பொருட்டு முக்கியச் சாலைகளை விரிவுபடுத்தும் சாத்தியக் கூறுகளைக் கண்டறியும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சாலை விரிவுபடுத்தத் தேவையான நிலத்தை எடுத்துக் கொண்டு அதற்குப்பதிலாக நில

[1998 மே 15

உரிமையாளருக்கு மாற்றத்தக்க வளர்ச்சி முறை சான்றிதழ் வழங்கும் திட்டத்தின் மூலம் சாலையை விரிவுபடுத்த, பிளவர்ஸ் சாலை, மாதிரித் திட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் நில உரிமையாளர்கள், தங்களின் மீதி நிலத்தில் கூடுதல் கட்டடம் கட்டிக் கொள்ளவும், சில வரம்புகளுக்கு உட்பட்டு இவ்வுரிமையை வேறு ஒருவருக்கு மாற்றம் செய்ய வழிவகை செய்ய இயலும். இத்திட்டக் கூறுகளுக்கு அரசின் ஒப்புதல் பெற்று 1998-99 ஆம் நிதியாண்டில் இம்முன்னோடித் திட்டத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கப்படும்.

14.2. சென்னைத் துறைமுக விரிவாக்கத்தின் காரணமாக பெட்டகங்களில் அடைக்கப்பட்டு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யும் போக்கு விரிவாக அதிகரித்து உள்ளது. இதன் மூலம் பெட்டகங்களை ஏற்றிச் செல்லும் பெருநகரில் இந்தப் பெட்டகப் போக்குவரத்தை எளிதாக்க மேம்பாட்டுப் பணிகளைக் கண்டறியும் ஒரு முன்னோடித் திட்டம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பணியின் முடிவில், பெட்டகப் போக்குவரத்து சம்பந்தமாக தற்சமயம் நிலவும் பிரச்சினைகளைக் கண்டறிவதுடன் அவற்றை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளும் கண்டறியப்படும்.

## 15. சென்னைப் பெருநகருக்கான பூகோளத் தகவல் அமைப்பு

15.1. பூகோள அமைப்பின்படி நகர்ப்புற வளர்ச்சி குறித்த முடிவுகள் எடுப்பதற்காக பூகோளத் தகவல் அமைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது. இதில் நகர்வளர்ச்சித் துறைகளுக்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் தகவல்களைத் தயார் செய்யவும், பெறவும், பாதுகாக்கவும் மாற்றுதல் செய்யவும் வகைசெய்யப்படும். அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலைதூரத் தொடர்பு மையம், மயிலை பகுதியில் சிறிய அளவிலான மாதிரி ஆய்வை நிலம் மேலாண்மை சம்பந்தமான தகவல் அமைப்புப்பற்றி ஏனைய நிறுவனங்களான சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், சென்னை தொலைபேசித் துறை போன்றவற்றுடன் கலந்தாலோசித்து போதுமான ஆவண அமைப்பை உருவாக்கிச் செயல்படுத்தியுள்ளது. நிலஉபயோகம், மனைப்பிரிவுகளின் விவரம், மின் இணைப்பு விவரம், தொலைபேசிக் கம்பி அமைப்பு விவரம், தொலைபேசி எண்களின் இணைப்புப்புள்ளி, பெயர் மற்றும் முகவரி, குடிநீர் மற்றும் வடிகால் விவரம், தெருவிளக்குகள், தெருவின் பெயர் போன்ற விவரங்கள்



1998 மே 15]

சேகரித்து கணிப்பொறி மூலம் பெற இந்த ஆய்வறிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆராய்வின் முக்கிய நோக்கமானது பூகோளத் தகவல் மையம் அனைத்து நிறுவனங்களுக்கும் தேவையான விவரங்களைச் சேகரித்து மாற்றி அமைக்கும் பொருட்டும், தேவையான நிறுவனங்களுக்கும் மேற்படி விவரங்களைப் பகிர்ந்தளித்தும் சென்னைப் பெருநகருக்குண்டான பொதுவான பூகோளத் தகவல் மையத்தை உருவாக்க வேண்டும் என்பதாகும். இந்த மாதிரி ஆய்விற்கான தொழில்நுட்ப உதவி ஜெர்மனியிடமிருந்து பெறப்பட்டது.

15.2. இந்தத் திட்டத்தை தொடர்ந்து சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தை முக்கிய வழிகாட்டி அமைப்பாக ஏற்றுக்கொண்டு மற்ற நிறுவனங்களும் சேர்ந்து அண்ணா பல்கலைக்கழக தொலைதூரத் தகவல் மையத்துடன் இணைந்து சென்னை நகருக்கு பூகோள ரீதியிலான தகவல் அமைப்பை உருவாக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்துவதற்காக பயிற்சி பெற்ற அலுவலர்களும், கணிப்பொறிகளும் அவசியமாகிறது. தமிழக அரசு இப்புதிய திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து 1998-99 ஆம் ஆண்டில் தொடங்குவதற்காக தொடராச் செலவினங்களுக்கான மானியமாக ரூ. 16.50 இலட்சங்களை ஒதுக்கியுள்ளது. மிகுதி செலவுகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்றுக்கொள்ளும்.

## 16. பள்ளிக்கரணை பகுதி வளர்ச்சித் திட்டம்

சென்னை மாநகர் மழைநீர் வடிகால் மேம்பாடு மற்றும் வெள்ள நிவாரண திட்டத்தின்கீழ் சென்னை மாநகரின் தெற்கில் அமைந்துள்ள பள்ளிக்கரணையில் தாழ்வான பகுதியில் சுமார் 800 ஹெக்டேர் பரப்பளவு உள்ள இடம் தேர்வு செய்யப்பட்டு, உரிய வடிகால்கள் மற்றும் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் இந்த நிலத்தில் வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் ஏற்படும் சுற்றுப்புறச் சூழலின் பாதிப்புத் தன்மை ஆராயப்பட்டு வருகிறது.

[1998 மே 15

## இணைப்பு - III

[207-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## மீன்வளத் துறை

## மானியக் கோரிக்கை எண் - 21

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 1998-99

### முன்னுரை

தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தில் மீன்வளம் ஓர் இன்றியமையாத பங்கு வகிக்கின்றது. இம்மாநிலம் 1,000 கி.மீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதியையும் 1.9 இலட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள பிரத்தியேக பொருளாதார மண்டலத்தையும் கொண்டுள்ளது. தமிழகக் கடற்கரைப் பகுதியானது கோர மண்டலம், பாக் ஜலசந்தி, உயிருள்ள பவழங்களுடைய 21 பவழத்தீவுகளைக் கொண்ட மன்னார் வளைகுடா, மேற்குக் கடற்கரையோரம கடற்கரைக் காயல்கள் மற்றும் கழிமுகங்களை உள்ளடக்கியதாகும். தமிழ்நாட்டில் 442 கடல் மீனவக் கிராமங்கள் உள்ளன. ஏறக்குறைய 8.53 இலட்சம் கடல் மீனவர்கள் உள்ளனர். இவர்களில் 2.62 இலட்சம் மீனவர்கள் கடல் மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மீன்வளத்தில் உள்நாட்டு மீன்வளம் முக்கியப் பங்கு வகிக்கின்றது. உள்நாட்டு மீன்வளப் பகுதியில் 54 நீர்த்தேக்கங்கள் (மீன்வளத் துறை மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் முறையே 45 மற்றும் 9 நீர்த்தேக்கங்கள்) ஏராளமான பெரிய ஏரிகள் மற்றும் குளங்களில் மீன்வள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏறக்குறைய 1.62 இலட்சம் உள்நாட்டு மீனவர்கள் உள்ளனர். இவர்களில் ஏறக்குறைய 50,000 மீனவர்கள் உள்நாட்டு மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மீனவர் நலப் பணிகளில் அக்கறை செலுத்துவதோடு மட்டுமின்றி மாநிலத்தில் ஒட்டு மொத்தமாக மீன்வளத்தைப் பெருக்கிட அனைத்து நடவடிக்கைகளிலும் அரசு கவனம் செலுத்தி வருகிறது.



1998 மே 15]

சம்பந்தப்பட்டவர்களின் ஈடுபாட்டுடன் ஆதாரங்களை நிர்வகிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. 1998-99-ம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு கீழ்க்கண்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது:

### மீன் துறையின் கொள்கை

(1) மீனவர்களின் ஈடுபாட்டுடன் நிலைநிறுத்தக்கூடிய அதிக அளவு மீன் உற்பத்தியைப் பெருக்குதல், அதன் மூலம் மக்களுடைய ஊட்டச்சத்து தரத்தை உயர்த்துதல்.

(2) கடல் மீன்பிடிப்பில் குறிப்பாக அண்மைக்கடல் பகுதிகளில் நிலைநிறுத்தக்கூடிய அதிக அளவு மீன்பிடித்தல் மற்றும் சிறந்த நிர்வாக வழிமுறைகளை ஏற்படுத்துதல்.

(3) அறிவியல் முறையில் மீன்வள தொழில்நுட்பங்களைக் கையாண்டு நீர்த்தேக்கங்கள், பாசனக் குளங்கள், கிராமியக் குளங்கள் மற்றும் குட்டைகளில் கூடுதலான நீர்ப்பரப்பை உள்நாட்டு மீன்வளத்துக்குக் கொண்டு வந்து உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்வளத்தை மேம்படுத்துதல்.

(4) கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தி வருவாயை அதிகரிக்கச் செய்தல்.

(5) மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் நன்கு இயங்கிட உதவுதல்.

(6) மீனவச் சமுதாயத்தின் சமூக மற்றும் பொருளாதார நலன்களை மேம்படுத்துதல்.

1998-99-ம் ஆண்டில் செயல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களின் விவரங்கள் கீழே சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன:

### I கடல் மீன் வளம்

#### (அ) கடல் மீன்வளக் கொள்கை

அரசின் கடல் மீன்வளக் கொள்கை கடந்த 30 ஆண்டுகளாக கடலில் அதிக மீன்களைப் பிடிப்பதில் கவனம் செலுத்தி வந்துள்ளது. மீன்பிடி விசைப் படகுகளை அறிமுகப்படுத்தி அவற்றுக்குக் கூடுதலான மானியச் சலுகைகள் வழங்கியதன் காரணமாக இந்த நிலை

[1998 மே 15

உருவாகியுள்ளது. தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியில் 8,900 மீன்படி விசைப் படகுகளும், 37,000 நாட்டுப் படகுகளும் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. இன்றைய நிலையில், 9832 மீன்படிக் கலன்கள் இயந்திரமயமாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியில் அண்மைக்கடல் மீன்பிடிப்புப் பகுதிகளில் அதிகபட்சமாக மீன்பிடிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே தற்போதுள்ள வளம் மிகுந்த மீன் கிடைக்கும் இடங்களை நன்கு பாதுகாத்து நிலை நிறுத்தக்கூடிய அளவில் கடல் மீன்பிடிப்பு மேற்கொள்ள வேண்டும் என்பது நமது கடல் மீன்வளக் கொள்கையாகும். இதுவரையிலும் மீன்பிடிப்பு மேற்கொள்ளப்படாத தூரக்கடல் பகுதிகளில் பல்வகையான மீன்பிடிச் சாதனங்களைக் கொண்டு பல நாட்கள் தங்கி மீன்பிடிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**(ஆ) வங்காள விரிகுடா திட்டத்துடன் இணைந்து செயல்படுதல்**

உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் உதவியுடன் 10 தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்காக வங்காள விரிகுடாத் திட்டம் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

மீன் துறை இத்திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு கொள்கை வகுப்பதிலும் திட்டச் செயலாக்கத்திலும் அதனுடைய அனுபவம் மற்றும் சிறந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வருகின்றது.

**(இ) பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்குதல்**

இத்திட்டம் பாரம்பரிய மீன்பிடிக் கலன்களான வல்லம் மற்றும் கட்டுமரங்களில் உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்களைப் பொருத்தி, மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்கிட மீனவர்களுக்குத் துணைபுரிகின்றது. மத்திய அரசும் மாநில அரசும் சமமாக இந்த மானியத் தொகையைப் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தின் கீழ்இயந்திரத்தின் விலையில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. உட்பொருத்தும் இயந்திரங்களைப் பொருத்தவரை மீனவருக்கு அதிகபட்சம் ரூ.12,000-மும் வெளிப்பொருத்தும் இயந்திரங் களுக்கு ரூ.10,000-க்கு மிகாமல் மானியமாக வழங்கப்படுகின்றது. 1987-88-ம் ஆண்டு முதல் 1997-98-ம் ஆண்டு முடிய (31-3-1998-ல் உள்ளவாறு) பாரம்பரிய மீனவர்களுக்கு 9,832 இயந்திரங்கள் இத்திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் மீன்பிடி வலைகளை வாங்கும் பாரம்பரிய மீனவர் ஒவ்வொருவருக்கும் ரூ.6,000 வீதம்



1998 மே 15]

மானியம் வழங்கப்படுகின்றது. இத்திட்டம் கடலில் இதுவரையிலும் மீன்பிடிப்பு நடத்தப்படாத தொலைதூரப் பகுதியில் உள்ள மீன்வளம் நிறைந்த பகுதிகளில் நீண்ட நேரம் தங்கி மீன்பிடிப்பு மேற்கொள்ளவும் கரைக்கு விரைவாகத் திரும்பி வரவும் மீனவர்களுக்கு உதவுகின்றது. இத்திட்டம் 1998-99-ம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மேலும் 1997-98-ம் ஆண்டில் பாரம்பரிய மீனவர்கள் பயன்படுத்தும் உள்நாட்டு இயந்திரம் மற்றும் அயல்நாட்டு இயந்திரங்களுக்கு முறையே ரூ.2,000 மற்றும் ரூ.3,000 கூடுதல் மானியமாக வழங்கிட ரூ.45 இலட்சத்தை அரசு ஒப்பளித்துள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு மாநில முதன்மை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்றது.

**(ஈ) கடலூர் மற்றும் சின்னமுட்டத்தில் கரையோரத் தகவல் தொடர்பு நிலையம் அமைத்தல் மற்றும் தகவல் தொடர்புச் சாதனங்களை வழங்குதல்**

1997-98-ம் ஆண்டில் சென்னை மீன்பிடித் துறைமுகம் கடலூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டத்தில் முறையே 850, 450 மற்றும் 200 மீன்பிடி விசைப்படகுகளுக்கு தொலைத் தொடர்புச் சாதனங்கள் வாங்க 25 விழுக்காடு தொகை மானியமாக வழங்குவதற்கு அரசு ரூ.75 இலட்சத்தை ஒப்பளித்துள்ளது. மேலும் கடலூர் மற்றும் சின்னமுட்டத்தில் இரண்டு தகவல் தொடர்பு நிலையங்களை அமைத்திட ரூ.8.65 இலட்சத்திற்கு அரசு ஒப்பளித்துள்ளது. இவற்றுக்குரிய தொழில்நுட்ப அளவு மற்றும் மாதிரி ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலனைக்குழு பரிசீலித்துள்ளது. தகவல் தொடர்புச் சாதனங்களின் செயல் திறனை கிழக்கு மண்டலத்தின் கடலோரக் காவற்படைச் சோதனை செய்துள்ளது. சின்னமுட்டம் மற்றும் கடலூர் தகவல் தொடர்பு நிலையங்களை நிறுவுவதற்கும், தகவல் தொடர்புச் சாதனங்களை வாங்குவதற்கும் ஆணைகள் விரைவில் வழங்கப்பட உள்ளன.

**(உ) மீன் கிடைக்கும் பகுதி மற்றும் கடல் வழியையும் ஒருங்கிணைத்து காட்டும் கருவி**

பெங்களூரிலுள்ள மத்திய அரசு நிறுவனமான பாரத் மின்னணு நிறுவனம் கடலில் மீன் கிடைக்கும் பகுதிகளையும் கடல் வழியையும் ஒருங்கிணைத்துக் காட்டும் கருவியை உருவாக்கியுள்ளது. இது "எதிரொலிக் கோட்பாடு" அடிப்படையில் அமைக்கப்பட்டு கடலில்

மீன்கள் கிடைக்கும் பகுதிகளையும் பூமிக்கு உயரே நிலை நிறுத்தப்பட்டுள்ள "நவஸ்டார்" செயற்கைக் கோளிலிருந்து பெறப்படும் அறிவிப்புக் குறியினால் கடல் வழிகாட்டுவது ஆகிய இரண்டு செயல்களை ஒருங்கிணைத்து இக்கருவி செயல்படுகின்றது. இக்கருவியினை கேரள மாநிலத்தில் சோதனை செய்ததில் கடலில் அதிகமாக மீன் கிடைக்கும் பகுதிகளைக் கண்டறியவும் குறுகிய பாதையில் தேவைப்படும் இடத்தைச் சென்றடைவதிலும் மீனவர்களுக்குப் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இதன் மூலம் எரியெண்ணையின் சிக்கனம், குறைந்த மீன்பிடி நேரம் மற்றும் குறைவான மீன்பிடி முயற்சிகள் ஆகிய நன்மைகள் மீனவர்களுக்குக் கிடைக்கின்றன.

தமிழ்நாட்டைச் சேர்ந்த விசைப்படகு மீனவர்களுக்கு இதுவரையிலும் கடலில் மீன்பிடிப்பு நடத்தப்படாத பகுதிகளிலும்/குறைவாக மீன்பிடிக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மீன்பிடிக்க ஏதுவாக இக்கருவிகளை ஒவ்வொன்றும் ரூ.65,000 விலையில் 25 விழுக்காடு மானியமாக 50 கருவிகள் வாங்கி வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 50 பயனாளிகளுக்கு ரூ.8.13 இலட்சம் செலவில் இத்திட்டம் அமல்படுத்தப்படவுள்ளது.

**(ஊ) கண்ணாடி நார் இழை படகுகள் வாங்கிட மீனவர்களுக்கு உதவுதல்**

கட்டுமரங்கள் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் அல்பீசியா மரத்திற்குப் பதிலாக மாற்றுப்பொருளை உபயோகிப்பதை ஊக்குவிப்பதன் அவசரத்தேவையைக் கருத்தில்கொண்டு கண்ணாடி நார் இழைப் படகுகளைப் பயன்படுத்த முன்வரும் மீனவர்களுக்கு அதன் விலையான ரூ.0.50 இலட்சத்தில் பத்து விழுக்காடு மானியமாக வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயனடையும் ஒரு மீனவருக்கு ரூ.5,000 வீதம் 100 மீனவர்களுக்கு ரூ.5 இலட்சம் வழங்கப்படும். நீண்டகாலம் உழைக்கக்கூடிய மற்றும் பராமரிப்புச் செலவு குறைவாக உள்ள கண்ணாடி நார் இழைப் படகுகளைப் பயன்படுத்துவதால் கிடைக்கக்கூடிய நன்மைகளையும், அல்பீசியா மரத்தின் தேவையைக் குறைத்திடுவதையும் மற்ற மீனவர்கள் அறிந்திட செய்யப்படும். அடிக்கடி கட்டுமரங்களை மாற்றுவதால் ஏற்படும் செலவினம் தவிர்க்கப்படுதல் மற்றும் குறைந்த பராமரிப்புச் செலவினம் ஆகியவற்றால் மீனவர்கள் நன்மை பெறுவார்கள்.





**(எ) பாக் ஜலசந்திப் பகுதியில் மீனவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள்**

பாக் ஜலசந்திப் பகுதியில் இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது மிகவும் கவலைக்குரிய பிரச்சினையாகும். தமிழ்நாட்டிலுள்ள மீனவச் சமுதாயத்தினரிடையே இந்த நிகழ்வுகள் மிகுந்த கொந்தளிப்பையும், எதிர்ப்புகளையும் உருவாக்கியுள்ளது. 1997-ம் ஆண்டில் நடந்த இவ்வாறான 16 நிகழ்வுகளில், 18 படகுகள் தாக்குதலுக்கு உள்ளாயின. இவற்றில் 2 படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. 16 மீனவர்கள் காயமடைந்தனர். 9 மீனவர்கள் உயிரிழந்தனர். 1998-ம் ஆண்டில் 31-3-1998 முடிய நடந்த ஒரு தாக்குதலில் ஒரு மீனவர் உயிர் இழந்துள்ளார். இவ்வாறு ஒவ்வொரு முறையும் தாக்குதல் நிகழும்போது, இச்சம்பவம் குறித்து மத்திய அரசின் மூலம் இலங்கை அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இத்தகைய துப்பாக்கிச் சூட்டில் இறக்கும் மீனவர் குடும்பத்துக்கு உடனடி நிவாரணமாக தமிழக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயை தமிழக அரசு அளிக்கிறது. இப்பிரச்சினைகள் குறித்து மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவும், தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீண்டும் பெறுவதற்குமான தகுந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

**(ஏ) ஐந்து ரோந்துப் படகுகள் வாங்குதல்**

கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டத்தினை மீன் துறை மூலம் அமல்படுத்துவதற்கு ஐந்து ரோந்துப் படகுகளை வாங்க ரூ.450 இலட்சத்தை அரசு ஒப்பளித்துள்ளது. படகுகள் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. இவ்வாண்டு இறுதிக்குள் இப்படகுகள் இயக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**(ஐ) அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்**

**(i) மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்கள் அமைத்தல்**

கடற்கரையோரப் பகுதிகளில் பயன்படுத்தப்படும் மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் பாரம்பரிய மீன்பிடிக் கலன்களைப் பத்திரமாக நிறுத்தி வைப்பதற்கும் மீன்களை இறக்குவதற்கும் மீன்களைச் சுகாதார முறையில் கையாளவும் படகுகளைப் பழுதுபார்க்கவும் பராமரிப்பதற்கும் அடுத்து மீன்பிடிக்கச் செல்லுவதற்குத் தேவையான எரிபொருள்,

[1998 மே 15

தண்ணீர், பனிக்கட்டி மற்றும் இதர சாதனங்களை ஏற்றுவதற்கும் வசதிகள் தேவைப்படுகின்றன. மீன்பிடிக் கலங்களின் மேற்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்கள் அமைத்திட போதுமான முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 362 மீன் இறங்கு தளங்கள் உள்ளன. மூன்று பெரிய மீன்பிடித் துறைமுகங்களும், நான்கு நடுத்தர மீன்பிடித் துறைமுகங்களும் மற்றும் ஆறு மீன் இறங்கு தளங்களும் உள்ளன. தேர்வு செய்யப்பட்ட முக்கிய மீன் இறங்கு தளங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் கட்ட ஒரு பெருந்திட்டம் பெங்களூரிலுள்ள கடலோர மீன்வள மத்தியப் பொறியியல் மையத்தால் தயாரிக்கப் பட்டுள்ளது. ரூ.38 கோடி செலவில் இராமேஸ்வரத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் கருத்துரு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் இதற்கான ஆணை எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு மீன் இறங்கு தளத்திற்கு ரூ.1.5 கோடி செலவில் 10 மீன் இறங்கு தளங்களில் வசதிகளை மேம்படுத்துவதற்குரிய கருத்துரு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. தமிழகத்திலுள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களை மேம்படுத்தவும் அபிவிருத்தி செய்யவும் உலகத் தரத்திற்கு இணையாகக் கொண்டு வரவும் துறை தொடர்ந்து மத்திய அரசின் வேளாண்மை அமைச்சகம், வர்த்தகத் துறை மற்றும் கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம் ஆகியவற்றுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு வருகின்றது. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கடல் பொருள்களில் நான்கில் ஒரு பகுதி ரூ.1,000 கோடிக்கு தமிழ்நாட்டிலிருந்து அனுப்பப்படுகின்றது.

நாகப்பட்டினம் மாவட்டம், ஆற்காட்டுத்துறையில் ரூ.10 இலட்சம் செலவில் மாதிரி மீன்பிடித் துறைமுகம் அமைக்க விரிவான ஆய்வுகள் நடத்தப்படவுள்ளன.

**(ii) பழையாறு மீன்பிடித் துறைமுகத்தினை ஆழப்படுத்துதல்**

பழையாறு மீன்பிடித் துறைமுகம் 1986-ம் ஆண்டு கட்டப்பட்டது. தற்போது 300-க்கும் மேற்பட்ட மீன்பிடி விசைப்படகுகள் இந்தத் துறைமுகத்தில் இயங்கி வருகின்றன. இத்துறைமுகம் தூர்ந்து போய்விட்டது. 1997-98-ம் ஆண்டில் இத்துறைமுகத்தில் மணலை அகற்றிட அரசு ரூ.8 இலட்சம் ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணி நடைபெற்று வருகிறது.



1998 மே 15]

**(iii) தூத்துக்குடி மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி**

தற்போது, 400 மீன்பிடி விசைப்படகுகள் இத்துறைமுகத்தை பயன்படுத்தி வருகின்றன. 1997-98-ம் ஆண்டில், தூத்துக்குடி துறைமுக வளாகத்தில் பிடிக்கப்படும் மீன்களைச் சுகாதாரமான முறையில் ஏலம் விடுவதற்கு ரூ.13.20 இலட்சம் செலவில் ஒரு கூடுதல் ஏலக்கூடம் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பணி முடிக்கப்பட்டுவிட்டது.

**(iv) மல்லிப்பட்டினத்தில் உள்ள ஆர்.சி.சி. படகுத் துறையில் சிறப்புப் பழுதுகள் நிறைவேற்றுதல்**

மல்லிப்பட்டினத்தில் உள்ள ஆர்.சி.சி. படகுத் துறையில் ஏற்பட்டுள்ள பழுதுகளைச் சீர் செய்ய 1997-98-ம் ஆண்டில் ரூ.17.30 இலட்சத்திற்கு அரசு ஒப்பளிப்பு அளித்துள்ளது. இப்பணி முடிவடைந்து விட்டது.

**(v) செயலாக்க அறிக்கை தயாரித்தல்**

தமிழக கடற்கரைப் பகுதியில் தற்போது 8900 மீன்பிடி விசைப் படகுகளும், 37,000 இயந்திரமயமாக்கப்படாத பாரம்பரிய மீன்படிக் கலங்களும், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளன. மீன்பிடித் துறைமுகம், மீன் இறங்கு தளம்/மேடைகள் போன்ற கூடுதல் வசதிகள் மீன்பிடிக் கலங்களுக்காக ஏற்படுத்தப்பட உள்ளன. புதிதாக மீன்பிடித் துறைமுகங்கள்/மீன் இறங்கு தளங்கள் கட்ட விரிவான தொழில்நுட்ப பொருளாதார ஆய்வினை நடத்தி செயலாக்க அறிக்கையினைத் தயாரித்து வழங்கும், பெங்களூரிலுள்ள மத்தியக் கடலோர மீன்வளப் பொறியியல் ஆய்வு மையம் தற்போது போதுமான மனித ஆற்றல் இல்லாமையால் தமிழகத்தில் பிற இடங்களில் ஆய்வு நடத்தி அறிக்கை தயாரித்து ஆலோசனை வழங்க இயலவில்லை என்று தெரிவித்துள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு, இது போன்ற பணிகளை விரைவில் முடிக்க இதர நிறுவனங்களிடம் இப்பணியை ஒப்படைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரண்டு இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள்/மீன் இறங்கு தளங்கள் அமைப்பதற்காக ரூ.5.00 இலட்சம் செலவில் ஆய்வுகளை மேற்கொள்ளவும், செயலாக்க அறிக்கை தயாரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(vi) மீன் இறங்கு தளங்களில் சோடியம் விளக்குகள் அமைத்தல்**

மாநிலத்திலுள்ள கடலோர மீனவர்கள் தாம் பிடித்த மீன்களை 362 மீன் இறங்கு தளங்களில் அவர்கள் உபயோகிக்கும் மீன்பிடி

[1998 மே 15

வலைகளின் தன்மைக்கு ஏற்ப அதிகாலையிலோ, நள்ளிரவிலோ கரைக்குக் கொண்டு வருகின்றார்கள். இந்தக் கடலோர மீன் இறங்கு தளங்களில் போதிய விளக்கு வசதி இல்லை. இதனால் மீனவர்கள் இந்த இடங்களுக்கு வந்து சேரவும் மீன்களை வண்டிகளில் ஏற்றிச் செல்லவும் சிரமப்படுகின்றனர். மீன்களைச் சுகாதார முறையில் கரையில் இறக்கவும் வியாபாரம் செய்வதற்கு வசதியாக மீன்களை தரம் மற்றும் அளவு வாரியாகப் பிரிப்பதற்கும் இறங்கு தளங்களில் போதுமான விளக்கு வசதி அவசியமாகும். ஆகவே 12 கடலோர மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 5 மீன் இறங்கு தளங்களில், தளம் ஒன்றுக்கு இரண்டு சோடியம் விளக்குகள் வீதம் மொத்தம் 120 சோடியம் விளக்குகளை ஒவ்வொன்றும் ரூ.11,000 வீதம் ரூ.13.20 இலட்சம் செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(vii) மீன் இறங்கு தளங்கள் கட்டுதல்/மேம்படுத்துதல்**

மாநிலத்தில் பத்து மீன் இறங்கு தளங்களை மேம்படுத்த ரூ.15 கோடி செலவில் மத்திய அரசின் ஒப்புதலுக்காக முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. ஒவ்வொரு இறங்கு தளத்திலும் கீழ்க்கண்ட வசதிகள் செய்யப்படவுள்ளன. இவை உலகத் தரத்திற்கு நிகராக சுகாதார முறையில் கரையில் மீன்களை இறக்கிக் கையாளும் வகையில் அமைக்கப்படும்.

1. ஓர் ஏலக்கூடம்
2. இரண்டு மீன் இறங்கு மேடைகள்
3. ஒரு கழிவறை
4. வெளிப்புற நீர் விநியோகம்
5. மின்சாரம்/விளக்கு வசதி
6. குளோரின் கலந்த நீர் வசதி
7. உட்சாலை அமைத்தல். மற்றும்
8. ஆர்.சி.சி. இறங்குதளம்/கரையோரச் சுவர் அமைத்தல்

**II உள்நாட்டு மீன் வளம்**

52,000 ஹெக்டேர் நீர்ப்பரப்புடைய பெரும் நீர்த்தேக்கங்கள், 32,000 ஹெக்டேர் நீர்ப்பரப்புடைய பெரிய சிறிய குளங்கள் மற்றும் 5,000 ஹெக்டேர் நீர்ப்பரப்புடைய கிராமியக் குளங்கள் குட்டைகளில் மீன்



1998 மே 15]

உற்பத்தியைப் பெருக்குவதற்கு மீன் துறை பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருகின்றது.

கூடுதலான மீன் உற்பத்திக்கு தரமான மீன் குஞ்சுகள் மிகவும் இன்றியமையாததாகும். மீன் துறை, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் கட்டுப்பாட்டில் உள்ள மீன்குஞ்சு உற்பத்தி மையங்களில் 10 மில்லியன் இருப்பு செய்யத்தக்க மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனைத் தவிர, தனியார்த் துறையில் மீன்குஞ்சு உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு மீன் துறை மானிய திட்டங்களைச் செயல்படுத்துகின்றது. இதனால் மாநிலத்தில் 84 மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணைகள் தனியார் துறையில் அமைக்கப்பட்டு ஏறக்குறைய 60 மில்லியன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**(அ) மிதவைக்கூடுகள் வாங்குதல்**

உள்நாட்டு மீன்பிடிப்பை அதிகரிக்கச் செய்திட மிதவைக் கூடுகளில் நுண்மீன்குஞ்சு பருவத்திலிருந்து விரலளவு மீன்குஞ்சு வரை வளர்க்கும் முறை பிரசித்திபெற்றது, நடைமுறைப்படுத்தக்கூடியதும் ஆகும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1997-98-ம் ஆண்டில் 50 மிதவைக் கூடுகள் ரூ.2.50 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

**(ஆ) லால்பேட்டையில் மீன் பண்ணை கட்டுதல்**

விழுப்புரம், கடலூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் மீன் குஞ்சுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 1997-98-ம் ஆண்டில் லால்பேட்டையில் 10 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு சினை மீன் குளம் கட்டுவதற்கு அரசு ஆணை வழங்கியுள்ளது. இப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

**(இ) நன்னீர் இறால் வளர்ப்புப் பண்ணை கட்டுதல்**

நன்னீர் இறால் வளர்ப்பில் தனியார்களை ஊக்குவித்திட, குளங்கள் வெட்டவும் மற்றும் உள்ளீட்டுப் பொருட்கள் வாங்கவும் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.30,000 வீதம் மானியம் வழங்கிட 1997-98-ம் ஆண்டில் அரசு 15 இலட்சம் ரூபாய் ஒப்பளித்துள்ளது. இதுவரையிலும் 30 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1998 மே 15

**(ஈ) மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்**

தொழில்நுட்பப் பரிமாற்றம், நவீன மீன் வளர்ப்பில் மீன் வளர்ப்போருக்குப் பயிற்சியளித்தல், மீன் பண்ணைகளை நிர்வகித்தல் மற்றும் உள்நாட்டு நீர்நிலைகளைத் திறமையாகப் பயன்படுத்தி மாநிலத்தில் நன்னீர் மீன்வளர்ப்பு வளர்ச்சி பெற்றுள்ளதற்கு, மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளே முன்னோடிகளாகும். எல்லா மாவட்டங்களையும் உள்ளடக்கி, மாநிலத்தில் 12 மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் உள்ளன. அவை கீழ்க்கண்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன:

1. காஞ்சிபுரம்
2. வேலூர்
3. கடலூர்
4. தஞ்சாவூர்
5. திருச்சிராப்பள்ளி
6. புதுக்கோட்டை
7. மதுரை
8. திருநெல்வேலி
9. நாகர்கோவில்
10. தர்மபுரி
11. ஈரோடு
12. திண்டுக்கல்

மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் இதுவரையிலும் 7070 மீன் வளர்ப்போர்களுக்குப் பயிற்சியளித்து, 6161 ஹெக்டேர் நீர்ப்பரப்பை நவீன நன்னீர் மீன் வளர்ப்புக்குக் கொண்டு வந்துள்ளன. ஒரு ஹெக்டேரில் 1250 கிலோ மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன.

**(உ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 1997-98ம் ஆண்டில் நீலகிரி மாவட்டம், மசினகுடியில் ஏரி மீன்பிடிப்பை மேம்படுத்துவதற்காக அரசு ஐந்து லட்சம் ரூபாய் ஒப்பளித்துள்ளது.

1998-99-ம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் மீன்வளப் பணிகளை மேம்படுத்துவதற்காக ரூ.37.55 இலட்சம் செலவிடுவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு:



1998 மே 15]

| வ. எண் | பணியின் விவரம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வெலிங்டன் ஏரியை மேம்படுத்துதல் | 4.00 |
| 2. | அவலாஞ்சியில் ட்ரவுட் மீன்பண்ணை அமைத்தல் | 10.50 |
| 3. | அவலாஞ்சியில் பொம்மீன் பொரிப்பகம் அமைத்தல் | 5.65 |
| 4. | உதகமண்டலத்தில் வண்ண மீன் உற்பத்தி மையம் அமைத்தல் | 17.40 |
| | மொத்தம் | **37.55** |

**(ஊ) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்**

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1998-99-ம் ஆண்டில் கோவை மாவட்டம், சோலையாரில் ரூ.33.53 இலட்சம் செலவில் பொம்மீன் குஞ்சு உற்பத்தி நிலையம் அமைத்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றது.

## III. ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் விரிவாக்கம்

**(அ) ஆராய்ச்சி**

**(i) பழவேற்காடு ஏரியில் இறால் குஞ்சுகளை விடுதல்**

இந்தியாவிலுள்ள மிகப்பெரிய உவர்நீர் ஏரிகளில் இரண்டாவதாக உள்ள பழவேற்காடு ஏரி 450 சதுர கிலோ மீட்டர் நீர்ப் பரப்புள்ளது. அதைச் சுற்றியுள்ள 52 கிராமங்களில் 30,000 மீனவர்கள் உள்ளனர். அங்குள்ள 41 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் 29 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக பிரத்தியேகமாக பழவேற்காடு ஏரியை நம்பியுள்ளனர். அதிக இறால் மீன்பிடிப்பின் காரணமாக இந்த ஏரியில் உள்ள இறால் வளம் குறைந்து வருகின்றது. இறால் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில்

[1998 மே 15

பழவேற்காடு ஏரியினைச் சார்ந்துள்ள மீனவர்களின் நலன் காக்க இறால் மீன்குஞ்சுகளை அடைப்புகளில் விட்டு வளர்த்தெடுத்து ஏரியில் விடும் ஒரு முன்னோடித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இதனால் 4.5 டன் இறால் கூடுதலாகப் பிடிக்கப்படும் என்றும், அதன் மதிப்பு ஏறக்குறைய ரூ.19.25 இலட்சம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் வெற்றி பெற்றால், இறால் மீன் குஞ்சுகளை வளர்க்கும் இத்தகைய சமூக பொருளாதார மதிப்பு வாய்ந்த திட்டத்தை மீனவர்கள் தாங்களாகவே மேற்கொள்ள முற்படுவார்கள். இத்திட்டத்திற்கு ரூ.14.11 இலட்சம் செலவாகும்.

**(ii) உண்ணும் ஆளி வளர்ப்பு செயல் விளக்கம்**

தமிழ் நாட்டில் வாலிநோக்கம் குடாவில் உள்ள மீனவர்களை ஈடுபடுத்தி பல்வகை கடல் உயிரினங்களான முத்து, உண்ணும் ஆளி, மட்டிகள், கடல் காய்கள், கடல் வெள்ளரிக்காய், இறால் மற்றும் கடல் பாசி ஆகியவற்றை ஒருங்கிணைத்து வளர்க்கும் "கூட்டின கடல் பண்ணை" என்ற ஒரு திட்டத்தை மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டது. இந்த ஆராய்ச்சியில் உண்ணும் ஆளி வளர்ப்பானது தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ரீதியில் இலாபம் தரக்கூடியது என்பதை செயல் விளக்கம் செய்வதன் மூலம் கடல் மீன்பிடிப்பையே நம்பியிருக்கும் மீனவர்களில் சிலரை வேறு தொழில்களில் ஈடுபடுத்த இயலும். தூத்துக்குடியில் ஐந்து மீனவர்களை ஈடுபடுத்தி இம்முன்னோடி திட்டத்தை ஒரு ஹெக்டேரில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**(iii) செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல்**

சனவரி 1998-ல் இரண்டு செயற்கை மீன் உறைவிடங்களை அமைப்பதற்காக 100 விழுக்காடு மானியமாக ஒவ்வொன்றிற்கும் ரூ.4 இலட்சம் வீதம் ரூ.8 இலட்சத்தை மத்திய அரசு விடுவித்துள்ளது. செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்கும பணி, உள்ளூர் மீனவ சமுதாய மக்கள் பங்கேற்கும் அடிப்படையில் செயலாக்கப்படும். செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்க இடம் தேர்வு செய்யப்படும். உள்ளூர் மீனவர்கள் மத்திய கடல் வள மீன் ஆராய்ச்சி நிலையம், வங்காள விரிகுடாத் திட்டம் மற்றும் அரசு சாரா தனியார் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்க இடம் தேர்வு செய்யப்படும். அந்தப் பகுதியில்



1998 மே 15]

அமைக்கப்படவிருக்கும் மீன் உறைவிடங்களுக்கு அங்குள்ள உள்ளூர் மீனவர்களே பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வார்கள். இந்தக் கடல் வளப் பராமரிப்புக்கான புதிய தொழில்நுட்பத்தை மீனவர்களுக்குக் கற்பிக்க துறை விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்தும்.

**(ஆ) பயிற்சி**

(i) விசைப் படகுகளை இயக்கவும் பராமரிப்புச் செய்திடவும் மற்றும் நவீன மீன்பிடி வலைகளைக் கையாளவும் மீனவ மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நோக்கத்துடன் மீன் துறை மாநிலத்தில் ஆறு இடங்களில் மீனவர் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொரு நிலையத்திலும் 50 முதல் 60 மீனவ மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வசதி உள்ளது. இது தவிர மூன்று இடங்களில் "சிறுதர கம்மியர் பயிற்சி" அளிக்கப்படுகிறது.

நாகப்பட்டினம் மீனவர் பயிற்சி நிலையக் கட்டடத்தில் சிறப்புக் பழுது பார்க்கும் பணிக்காக அரசு 1997-98-ம் ஆண்டில் ரூ.10 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பணி முடிக்கப்பட்டுள்ளது.

(ii) நிலமும் நீரும் சிறந்த வளங்களாக இருப்பதால் அவற்றைத் திறம்பட பயன்படுத்தப்படும் நோக்கத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சியின்கீழ் "நன்னீர் மீன்வளர்ப்பு அபிவிருத்தி" ஒரு முக்கிய பகுதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த நன்னீர் மீன்வளர் அபிவிருத்தியின் நோக்கம் இவ்விரண்டு வளங்களிலிருந்து அதிக அளவு பயன் பெறுவதேயாகும். இதற்கு விரிவாக்க அலுவலர்கள் மற்றும் மீன்வளர்ப்போருக்குத் திறமையானப் பயிற்சி தேவைப்படுகிறது. அதனால் தொழில் நுட்பம் மாநிலத்தில் எல்லா இடங்களிலும் பரவும். எனவே மத்திய அரசின் 100 விழுக்காடு நிதி உதவி திட்டத்தின் பயிற்சி மற்றும் விரிவாக்கத்தில், விரிவாக்க அலுவலர்கள் மற்றும் மீன் வளர்ப்போருக்குப் பயிற்சி அளித்திட மாநில அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் பயற்சிச் செலவுக்கு ரூ.1.23 இலட்சமும், சாத்தனூர் அணையில் ஒரு பயிற்சி நிலையம் அமைக்க ரூ.2.50 இலட்சமும் ஆகும்.

**(இ) விரிவாக்கம்**

விரிவாக்கத் திட்டத்தின்கீழ் கருத்தரங்குகள் மற்றும் பொருட்காட்சிகள் மாநில மற்றும் மாவட்ட அளவில் மட்டும்

[1998 மே 15

நடத்தப்படுவது மட்டுமல்லாமல் மீனவச் சமுதாயம் பயனடைவதற்காக தகவல் தெரிவித்தல், தொழில்நுட்ப மாற்றம் ஆகியவற்றை அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி வாயிலாக மீன் வளர்ப்பதைப் பிரச்சாரம் செய்து வருகிறது. கைப்பிரதிகள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் விரிவாக்க நிகழ்ச்சிகள் மூலமாக பலவகையான முன்னேற்றங்கள் பற்றியும் அரசு மற்றும் இதர நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் குறித்தும் மீனவர்களுக்குத் தகவல் அளிக்கப்படுகின்றன. மீன்வள விஞ்ஞானத்தின் சமீபத்திய முன்னேற்றங்கள் பற்றி மீனவர்களுக்கும் பொது மக்களுக்கும் பிரச்சாரம் செய்ய மீன்வளத் துறையில் 4 விரிவாக்கம் மற்றும் பிரச்சாரப் பிரிவுகள் செயல்படுகின்றன.

## IV. வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டம்

*1998-99*-ம் ஆண்டில் உலக வங்கி நிதியுதவியுடன் இத்துறை வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்தும், பிலிப்பைன்ஸ் நாட்டில் மீன்வள அறிவியல் களத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதே முக்கிய நோக்கமாகும். நடப்பு ஆண்டில் மேலும் 15 அலுவலர்கள் இத்திட்டத்தின்கீழ் பயிற்சிக்காக அனுப்பப்படுவார்கள்.

இதைத் தவிர சென்னை மீன்துறை பணியாளர் பயிற்சி நிலையத்தை வலுப்படுத்த, பயிற்சி மற்றும் ஆய்வுக் கூடத்திற்குத் தேவையான சாதனங்களை வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. புத்தகங்களும், பத்திரிகைகளும் கூட இத்திட்டத்தின்கீழ் வாங்கப்படும்.

*1998-99*-ம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.7.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## V. சென்னை மெரினா மீன் காட்சியகத்தினை நவீனப்படுத்துதல்

இந்தியாவில் உள்ள பழமை வாய்ந்த மீன் காட்சியகங்களில் மெரினா மீன் காட்சியகமும் ஒன்றாகும். தற்போதையக் கட்டடம் கட்டப்பட்டு 88 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதால் அதனைப் பழுது பார்த்து நவீனப்படுத்துவது உடனடித் தேவையாகும். பொதுமக்களுக்காகவும் கல்வி மற்றும் அறிவியல் நோக்கங்களுக்காக மாணவ சமுதாயத்திற்காகவும் இந்த மீன் காட்சியகத்தை நடத்துவதன்



1998 மே 15]

மூலம் மீன்வள உலகின் அதிசயங்களை மக்களுக்கு விளக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும். ஆண்டு தோறும் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் மக்கள் இந்த மீன்காட்சியகத்தினைக் கண்டு களிக்கின்றனர். கடல் நீரை உள்ளே கொண்டு வரவும், நீர் விநியோகிக்கும் சாதனத்திற்கும், மீன் இனவிருத்தி வசதிகளை ஏற்படுத்துவதற்கும் மொத்தம் ரூ. 10 இலட்சம் 1998-99-ம் ஆண்டில் செலவிடப்படவுள்ளது.

## VI. மீனவர் நலவாழ்வு

இந்தியாவிலேயே மீனவர் நலத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழக அரசு முன்னோடியாகத் திகழ்கின்றது. மாநில அரசைப் பொறுத்தமட்டிலும் மீனவர் நலத்திட்டங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்கு அரசு எல்லாவிதமான முயற்சிகளை மேற்கொள்ளும். முக்கிய திட்டங்களின் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்.
2. மீனவர் வீடுகளைப் பழுது பார்த்தல்
3. தெரு விளக்குகள் அமைத்தல்
4. இணைப்புச் சாலைகள் அமைத்தல்
5. குழு காப்புறுதித் திட்டம்
6. சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்
7. டீசல் எரியெண்ணெய் மீதான ஆயத்தீர்வையைத் திரும்ப அளித்தல்

### 1. தமிழ்நாடு ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்

*1996-97*-ம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், "தமிழ்நாடு ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்" என்ற சிறப்புத் திட்டத்தை சட்டமன்றத்தில் அறிவித்தார்கள். ஐந்தாண்டுகளில் 20,000 வீடுகள் கட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பின் அடிப்படையில் கடற்கரையோரக் குடிசைகளில் வாழும் மீனவர்களுக்கு 1996-97-ம் ஆண்டில் ஒரு மின் விளக்குடன்

[1998 மே 15

கூடிய 4,000 வீடுகளை (வீடு ஒன்றுக்கு ரூ. 32,000 செலவில்) கட்டுவதற்கு அரசு ஒப்பளித்துள்ளது. 1997-98-ம் ஆண்டில் 4,000 வீடுகள் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், 1998-99-ம் ஆண்டிலும் 4,000 வீடுகள் கட்டப்படும்.

**(2) மீனவர் வீடுகளைப் பழுதுபார்த்தல்**

முந்தைய ஆண்டுகளில் மீனவர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகளைப் பழுதுபார்க்க வீடு ஒன்றுக்கு ரூ. 5,000 வீதம் 2,000 வீடுகளைப் பழுது பார்ப்பதற்கு 1996-97-ம் ஆண்டில் ஒரு கோடி ரூபாயை அரசு ஒப்பளித்துள்ளது. இத்திட்டம் 1998-99-ம் ஆண்டிலும் தொடரப்படும்.

**(3) தெரு விளக்குகள் அமைத்தல்**

1996-97-ம் ஆண்டில் 158 மீனவ கிராமங்களில் 1,205 தெரு விளக்குகளை அமைக்க அரசு ரூ. 49.28 இலட்சம் ஒப்பளித்துள்ளது.

1997-98-ம் ஆண்டில் 165 மீனவ கிராமங்களில் 1,188 தெரு விளக்குகளை அமைத்திட அரசு ரூ. 48.97 இலட்சம் ஒப்பளித்துள்ளது. இத்திட்டம் 1998-99-ம் ஆண்டிலும் தொடரப்படும்.

**(4) இணைப்புச் சாலைகள் அமைத்தல்**

1996-97-ம் ஆண்டில், மீனவ கிராமங்களில் 34 இணைப்புச் சாலைகளை அமைக்க ஒரு கோடி ரூபாய் அரசால் ஒப்பளிக்கப்பட்டு இப்பணி 1997-98-ம் ஆண்டில் முடிவடைந்துள்ளது. 1997-98-ம் ஆண்டிற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**(5) குழு காப்புறுதித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் 25-3-1997 முதல், ஒரு மீனவருக்கு ஆண்டுச் சந்தாவாக பன்னிரண்டு ரூபாய் வீதம் புதுடெல்லியில் உள்ள தேசிய மீனவர் கூட்டுறவு சம்மேளனத்திற்கு தமிழக அரசு செலுத்தி வருகின்றது. இந்த சந்தா தொகையை மத்திய அரசும் மாநில அரசும் சமமாக ஏற்றுக்கொள்கின்றன. மீனவரிடமிருந்து எந்த ஒரு தொகையும் வசூலிக்கப்படுவதில்லை. மீனவர் இறப்பு மற்றும் முழு ஊனமுற்ற நிகழ்வுகளில் வழங்கப்பட்டு வந்த ரூ. 25,000-ஐ ரூ. 35,000 ஆகவும், பகுதி நிரந்தர ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ. 12,500-ஐ ரூ. 17,500 ஆகவும் காப்பீட்டுத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டம்



1998 மே 15]

தொடங்கப்பட்டதிலிருந்து, இது வரையிலும் 1962 மீனவர் குடும்பங்களுக்கு ரூ. 3.45 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மத்திய அரசு நிதி உதவியுடன் அமல்படுத்தப்படும் விபத்துக் காப்புறுதி திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வழிகாட்டு முறைகளின் அடிப்படையில், மீனவர் ஒருவருக்கு மாநில அரசின் சார்பாக கூடுதலாக ரூ. 15,000 வழங்கும் திட்டம் சென்னை யுனைடெட் இன்சூரன்ஸ் கம்பெனி மூலம் அமல்படுத்தப்படுகின்றது. காப்பீட்டு சந்தா தொகை ஒரு மீனவருக்கு ரூ. 4.05 ஆகும். இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரையிலும் 61 மீனவக் குடும்பங்களுக்கு ரூ. 9.52 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

1997-98-ம் ஆண்டிலிருந்து ஒரு மீனவருக்கு ரூ. 12 வீதம் 2,91,697 மீனவர்களுக்கு, புது டெல்லியில் உள்ள தேசிய மீனவர் கூட்டுறவு சம்மேளனத்துக்கு ரூ. 17.50 இலட்சம் மாநில அரசு செலுத்தியுள்ளது. இதே போன்று, மாநிலத் திட்டத்தின் கீழ், சென்னை யுனைடெட் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு ரூ. 11.81 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

**(6) சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்**

வருடத்தில் மீன்பிடிப்பு இல்லாத 4 மாத காலங்களில் கடல் மீனவர்களுக்கு பிழைப்பூதியம் வழங்கிடும் பொருட்டு சேமிப்பு மற்றும் நிவாரணத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மீனவரும் 8 மாத காலங்களுக்கு, மாதம் ஒன்று ரூ. 45 வீதம் ரூ. 360 செலுத்த வேண்டும். மத்திய அரசு ரூ. 360-ஐயும், மாநில அரசு ரூ. 360-ஐயும் தங்களுடைய பங்குத் தொகையாக அளிக்கின்றன. மொத்த தொகை ரூ. 1,080 மீன்பிடிப்பு இல்லாத 4 மாத காலங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படுகிறது. 1997-98-ம் ஆண்டில் ரூ. 8.57 கோடி அரசின் பங்காக அளிக்கப்பட்டுள்ளது. 1.19 இலட்சம் மீனவர்கள் தமிழ்நாட்டில் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டம், 1998-99-ம் ஆண்டிலும் தொடரப்படும்.

**(7) டீசல் எரியெண்ணெய் மீதான ஆயத்தீர்வையைத் திரும்ப அளித்தல்**

மீன்பிடி விசைப்படகுகள் டீசல் எரியெண்ணெய் மீது செலுத்தும் மத்திய ஆயத்தீர்வை அவர்களுக்குத் திரும்ப அளிக்கும் மத்திய நிதியுதவித் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்

கீழ் மத்திய அரசு 80 விழுக்காடு நிதி உதவியும், மாநில அரசு 20 விழுக்காடு நிதி உதவியும் அளிக்கிறது. 1996-97-ம் ஆண்டில் ரூ. 75 இலட்சத்திற்கு அரசு ஒப்பளித்தது. இந்த மானியத் தொகை 1,750 பயனாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

1997-98-ம் ஆண்டில் 21,500 கிலோ லிட்டர் டீசல் எரியெண்ணைய்க்கு ஆயத் தீர்வையை திரும்ப அளிக்கும் 20 விழுக்காடு செலவினத்திற்காக அரசு ரூ. 36.55 இலட்சத்தை ஒப்பளித்துள்ளது. மத்திய அரசின் 80 விழுக்காடு நிதியுதவி கிடைக்கப்பெற்றவுடன் அமலாக்கம் செய்யப்படும்.

## VII. கூட்டுறவுச் சங்கங்கள்

### (அ) மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்

இச்சங்கங்கள் மீனவர் சமுதாயத்தின் நிலையினை உயர்த்திடும் முக்கிய அமைப்புகளாக திகழ்கின்றன. தற்போது 448 கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்களில் 2,24,920 உறுப்பினர்களும், 251 உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்களில் 52,887 உறுப்பினர்களும் உள்ளனர். அரசின் அனைத்து நல்வாழ்வுத் திட்டங்களும் இச்சங்கங்கள் வாயிலாக அமல்படுத்தப்படுகின்றன.

### (ஆ) மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்

நல்ல தரமான மீன்களுக்கு கூடுதலான விலை கிடைக்கும். இதனைக் கருத்தில் கொண்டு, பிடிக்கப்படும் மீன்களை, மீன் இறங்கும் இடங்களிலிருந்து சந்தைக்கு உடனடியாக ஏற்றிச் செல்லுவதற்கு உதவிடும் வகையில் 1996-97 மற்றும் 1997-98-ம் ஆண்டுகளில் 25 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 25 ஆட்டோ டிரைலர்கள் வழங்குவதற்கு ரூ. 31.80 இலட்சம் அரசு ஒப்பளித்துள்ளது.

## VIII. தமிழ்நாடு மாநில முதன்மை மீன்வளக் கூட்டுறவு இணையம்

தமிழ்நாடு மாநில முதன்மை மீன்வளக் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் 1983-ன்படி பதிவு செய்யப்பட்டு 19-10-1992 முதல் பிரதம மீன்வள கூட்டுறவு சங்கங்களுடைய முதன்மைக் கூட்டுறவு இணையமாக இயங்கி வருகின்றது. இவ்விணையத்தின் முக்கிய நோக்கம் கூட்டுறவு சங்கங்கள் மூலம் மீன்வளம் மேம்படச் செய்வதும், தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிதியுதவி பெற்று கடலோர





மீனவ கிராமங்களில் ஒருங்கிணைந்த கடல் மீன்வள அபிவிருத்தித் திட்டத்தினை செயல்படுத்துவதுமாகும். இதுவரை 127 மீனவர் கூட்டுறவு சங்கங்களும், 9 மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையங்களும் இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. முதன்மை இணையத்தின் பங்கு மூலதனத்தில் மாநில அரசும் பங்கேற்றுள்ளது. 31-3-1998-ல் உள்ளவாறு இந்த இணையத்தின் பங்கு மூலதனம் ரூ.281.28 இலட்சமாகும்.

### ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம், முதல் கட்டம்

இத்திட்டம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் தமிழ்நாடு மாநில முதன்மை மீன்வள கூட்டுறவு இணையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதலீடு ரூ. 15.88 கோடியாகும். 1993-94-ம் ஆண்டு முதல், ஐந்து ஆண்டு காலத்திற்கு இத்திட்டம் காஞ்சிபுரம், திருவள்ளூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய கடலோர மாவட்டங்களில் 63 மீனவ கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதுவரையிலும் தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்கு ரூ. 12.10 கோடி விடுவித்துள்ளது. 31-3-1998 முடிய ரூ. 9.49 கோடி மதிப்புள்ள 1,432 மீன்பிடி சாதனங்களான கட்டுமரம், வள்ளம், இயந்திரம், பிளைவுட் படகுகள், மீன்பிடி வலைகள் 3,100 மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 1998-99-ல் ரூ. 2.93 கோடி செலவில் 320 மீன்பிடி சாதனங்கள் 860 பயனாளிகளுக்கு வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவு சம்பந்தப்பட்ட அனைத்து அம்சங்கள், மீன்பிடி ஒழுங்குமுறைகள் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரப் பராமரிப்பில் பயிற்சி ஆகியவற்றில் இத்திட்டம் அமல்படுத்தப்படும் கிராமங்களில் 2,756 மீனவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில முதன்மை மீன்வளக் கூட்டுறவு இணைய நடவடிக்கைகளில் கடல் மீனவர்கள் மத்தியில் தீவிர ஈடுபாட்டை உருவாக்குவதற்காக 310 மக்கள் தொடர்பு முகாம்களும், 4 கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளன.

### ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம், இரண்டாவது கட்டம்

ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தில் இரண்டாவது கட்டப் பணிகளை ரூ. 45 கோடி செலவில் 13

கடலோர மாவட்டங்களில் 100 மீனவர் கூட்டுறவு சங்கங்களில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் ரூ. 35 கோடி செலவில் சுமார் 3,000 அலகு மீன்பிடி சாதனங்கள் சுமார் 10,000 மீனவ பயனாளிகளுக்கு மீன்பிடி படகுகள், வலைகள் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஏலக்கூடம், மீன் உலர்த்தும் மேடை, மீன் ஏற்றிச் செல்லும் தானியங்கி ஊர்தி, குளிர்பதனப் பெட்டி, பழுது பார்க்கும் பணி நிலையங்கள் ஆகிய அடிப்படை வசதிகள் ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் ஒரு ஆண்டுக்கு மீன்பிடிப்பு சுமார் 35 ஆயிரம் டன் கூடுதலாகும் எனவும், இதனால் சுமார் ரூ. 83 கோடி கூடுதல் வருவாய் ஈட்ட இயலுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**மீனவர்களுக்கு எஃப். ஆர்.பி.பனிக்கட்டிப் பெட்டிகள் விநியோகித்தல்**

தமிழ்நாடு மாநில முதன்மை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் மூலம் 1997-98-ம் ஆண்டில் 25 விழுக்காடு மானியத்துடன் 100 எஃப்.ஆர்.பி. பனிக்கட்டிப் பெட்டிகளை விநியோகிப்பதற்காக அரசு ரூ. 62,500-க்கு ஒப்பளித்துள்ளது.

**தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், 1974-ம் ஆண்டில் அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக நிறுவப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 500 இலட்சம், செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 435.52 இலட்சமாகும்.

**1. நடவடிக்கைகள்**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் தற்போது கீழ்க்கண்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

1. கிழக்குக் கடற்கரைப் பகுதியில் விசாகப்பட்டினத்தில் ஆழ்கடல் மீன்பிடிப்பில் நான்கு மீன்பிடி டிராலர்களை இயக்குதல்.
2. ஒன்பது நீர்த்தேக்கங்களில் தரமான மீன்குஞ்சுகளை இருப்பு செய்து வர்த்தக ரீதியாக மீன்பிடித்தல்.



3. நீர்த்தேக்கங்கள் உள்ள இடங்களில் இயங்கும் தூண்டுதல் முறை மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் நுண்மீன்குஞ்சுகளை நீர்த்தேக்கங்களிலும், குளங்களிலும் இருப்பு செய்தல் மற்றும் மீன்வளர்ப்போருக்கு விற்பனை செய்தல்.
4. சென்னை, மண்டபம் மற்றும் தூத்துக்குடியில் உள்ள பனிக்கட்டி நிலையங்கள், குளிர்சாதன அறைகள் மற்றும் பதப்படுத்தும் நிலையங்களை நிர்வகித்தல்.
5. மீன்பிடித்துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குத் தளங்களில் டீசல் சில்லறை விற்பனை நிலையங்கள் அமைத்து மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்குதல்.
6. சென்னை நகரம் மற்றும் இதர முக்கிய நகரங்களில் பொது மக்களுக்கு நியாயமான விலையில் தரமான மீன்களைச் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக வழங்குதல்.
7. இராயபுரத்தில் உள்ள வலை பின்னும் நிலையத்தை நிர்வகித்தலும், மீனவர்களுக்குத் தரமான மீன்பிடி வலைகள் வழங்குதலும்.
8. சென்னை அருகில் உள்ள நீலாங்கரையில் இறால் குஞ்சு பொரிப்பகத்தில் இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்து இறால் வளர்ப்போருக்கு இறால் குஞ்சுகளை வழங்கிடும் பொரிப்பகம் நிர்வகித்தல்.
9. முத்து வளர்ப்புத்திட்டம் மற்றும் முத்துச்சிப்பி பொரிப்பகத்தை நிர்வகித்தல்.
10. காரங்காட்டில் உள்ள மாதிரி இறால் பண்ணை மற்றும் செயல்விளக்கப் பயிற்சி நிலையத்தை நிர்வகித்தல்.

**2. கடல் மீன்வளம்**

**ஆழ்கடல் மீன்பிடிப்பு**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகம், ஆந்திர மாநிலத்திலுள்ள விசாகப்பட்டினத்தைத் தளமாகக் கொண்டு 4 ஆழ்கடல் மீன்பிடி நாவாய்களை இயக்கி வருகிறது. இத்திட்டம் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்

[1998 மே 15

கழகத்தின் சிறந்த திட்டமாகும். 1997-98-ம் ஆண்டில் 51.46 டன் இறால் மற்றும் 241.9 டன் மீன்பிடிக்கப்பட்டு ரூ. 199.85 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. நாவாய் பிரிவின் வெற்றி குறிப்பிடத்தக்கது. மேலும், இரண்டு ஆழ்கடல் மீன்பிடி நாவாய்களை வாங்குவதற்கான வழி முறைகள் ஆராயப்பட்டு வருகின்றன.

### 3. உள்நாட்டு மீன்வளம்

#### (i) நீர்த்தேக்கங்கள்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகப் பராமரிப்பில் உள்ள கீழ்க்கண்ட நீர்த்தேக்கங்கள் முறைப்படியாக மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு 1/3 பங்கு மீன்பிடிப்பு முறையில் உள்ளூர் மீனவர்களைப் பணியமர்த்தி மீன்பிடிப்பு நடத்தப்படுகிறது.

(1) சாத்தனூர் அணை

(2) பவானிசாகர்

(3) அமராவதி

(4) ஆழியார்

(5) திருமூர்த்தி

(6) உப்பார்

(7) மஞ்சளார்

(8) பாலார் பொரந்தலார்

(9) பெரும்பள்ளம்

1997-98-ல் 426.73 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு, ரூ. 94.62 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. 1998-99-ம் ஆண்டில் 616 டன் மீன் பிடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

#### (ii) மீன் குஞ்சு உற்பத்தி

சாத்தனூர் அணையில் மீன்குஞ்சு உற்பத்தி நிலையமும், அமராவதி, ஆழியார், திருமூர்த்தி, மஞ்சளார், பாலார் பொரந்தலார் மற்றும் உப்பார் ஆகிய இடங்களில் மீன்குஞ்சு வளர்ப்புப் பணிகளையும் இக்கழகம் நிர்வகித்து வருகிறது. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகள் இக்கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள



1998 மே 15]

நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுகிறது. மேலும், அவை மீன்துறை மேம்பாட்டு முகமைகள் மற்றும் - மீன்வளர்ப்போர் மீன்வளர்ப்போருக்கும் வழங்கப்படுகின்றது. 1997-98-ம் ஆண்டில் 235.67 இலட்சம் நுண் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன. 1998-99-ம் ஆண்டில் 415 இலட்சம் நுண் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 4. மீன் பதப்படுத்துதல்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 6 பனிக்கட்டி நிலையங்களையும், 4 மீன் பதப்படுத்தும் நிலையங்களையும் நடத்தி வருகின்றது. பவானிசாகரில் 3 டன் பனிக்கட்டி நிலையம் நீங்கலாக கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்துப் பனிக்கட்டி நிலையங்களையும், பதப்படுத்தும் நிலையங்களையும் தனியார் தொழில் முனைவோருக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. 1997-98ம் ஆண்டில் ரூ. 17.32 இலட்சம் குத்தகைத் தொகையாக வசூலிக்கப்பட்டது.

### 5. டீசல் விற்பனை நிலையங்கள்

இக்கழகம் சென்னை, மல்லிப்பட்டினம், தூத்துக்குடி, பழையாறு உட்பட 17 இடங்களிலுள்ள மீன்பிடித் துறைமுகங்களில் மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகு இயக்குபவர்களின் நலன் கருதி டீசல் விற்பனை நிலையங்களை இயக்கி வருகின்றது. 1997-98-ம் ஆண்டில் 35,821 கிலோ லிட்டர் டீசல் எண்ணெய் விற்பனை செய்யப்பட்டு ரூ. 47.22 இலட்சம் தரகுத் தொகை ஈட்டப்பட்டுள்ளது. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் கூடுதல் டீசல் விற்பனை நிலையங்கள் நடத்துவது குறித்துப் பரிசீலித்து வருகின்றது.

### 6. மீன் விற்பனை

இக்கழகம் சென்னை, மதுரை, கோவை, மற்றும் ஈரோடு மாவட்டங்களில் சில்லரை விற்பனை நிலையங்கள் மூலமாக புதிய மீன் மற்றும் வறுத்த மீன் விற்பனை செய்து வருகின்றது. 1997-98-ல் 556.75 டன் மீன் ரூ. 219.22 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 7. மீன்வலை பின்னும் நிலையம்

இராயபுரத்தில் ஆண்டொன்றுக்கு 75 டன் மீன் வலை பின்னும் திறனுடன் மீன் வலை பின்னும் நிலையம் ஒன்று இயங்கி வருகின்றது.

[1998 மே 15

1997-98-ம் ஆண்டு 21.88 டன் நைலான் வலைகளும் HDPE வலைகளும் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு ரூ. 61.39 இலட்சம் வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

**8. இறால் பொரிப்பகம்**

நீலாங்கரை கடல் இறால் குஞ்சு பொரிப்பகத்தை இக்கழகம் இயக்கி வருகிறது. ஒரு ஆண்டுக்கு 16 மில்லியன் இறால் குஞ்சுகள் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. 1997-98-ம் ஆண்டில் 13.98 இலட்சம் இறால் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 5.81 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**9. தூத்துக்குடி உலர்மீன் கிடங்கு**

தூத்துக்குடியில் உள்ள ஏற்றுமதியாளர்களுக்கு உதவிடும் வகையில் கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையத்தால் கட்டப்பட்ட உலர்மீன் கிடங்கு, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டு செயல்பட்டு வருகிறது. 1997-98-ம் ஆண்டில் ரூ. 1.19 இலட்சம் வாடகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**10. செயற்கை முத்து மற்றும் முத்துச் சிப்பி உற்பத்தி செய்தல்**

**(அ) முத்து வளர்ப்புத் திட்டம்**

அரசால் அமைக்கப்பட்ட மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின்படி மண்டபத்தில் முத்து வளர்ப்புத் திட்டத்தை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டமாகக் கருதி, 1-8-1990 முதல் இக்கழகம் இயக்கி வருகிறது. 30-01-1995 முதல் முத்து வளர்ப்புத் திட்டம் தனியாருக்கு 5 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு குத்தகைத் தொகை ரூ. 1.5 இலட்சம் ஆகும்.

**(ஆ) முத்துச்சிப்பி பொரிப்பகம்**

புதுடில்லியிலுள்ள உயிரியல் தொழில்நுட்பத் துறையால் ஒப்பளிக்கப்பட்ட மானியத்தைக் கொண்டு மண்டபத்தில் முத்துச்சிப்பி பொரிப்பகம் நிறுவப்பட்டது. இந்தப் பொரிப்பகம் முத்துச்சிப்பிகளை உற்பத்தி செய்வதற்காக 1995-96-ம் ஆண்டு தொடக்கத்திலிருந்து இயங்கி வருகிறது. 1997-98-ம் ஆண்டு 6.8 இலட்சம் முத்துச்சிப்பி குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன. 1998-99-ம் ஆண்டில் 10 இலட்சம் முத்துச்சிப்பி குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



1998 மே 15]

**11. காரங்காடு மாதிரி இறால் பண்ணை மற்றும் செயல் விளக்கப் பயிற்சி மையம்**

காரங்காட்டில் ஒரு மாதிரி இறால் பண்ணை மற்றும் செயல் விளக்கப் பயிற்சி மையம் நிறுவப்பட்டுள்ளது. 24 இறால் வளர்ப்போருக்கு இறால் வளர்ப்பில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

**12. வண்ண மீன் உற்பத்தி**

உலகமெங்கும் ரூ. 200 கோடி அளவிற்கு வண்ண மீன் வணிகம் நடைபெறுகிறது. இம்மீன் வளர்ப்பில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் ஈடுபட நல்ல வாய்ப்புள்ளது. இதற்குத் தகுந்த அமிலம் கலந்த மென்மையான நீர் மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகக் கட்டுப்பாட்டில் உள்ள ஆழியார் மற்றும் திருமூர்த்தி நீர்த்தேக்கங்களில் உள்ளது. இதற்குத் தேவையான தொழில்நுட்பங்களை கூட்டு நிறுவனங்களின் உதவியுடன் பெற்று கழகத்தின் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்ய தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

**13. அந்தமான் தீவுகள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மீன்பிடிப்பு மற்றும் மீன் வளர்ப்பு**

துடுப்பு மீன்களான சூரை வகை மீன்களை அகன்ற வாய்த்திறப்பு இழுவை வலைகள் மூலம் அதிக அளவில் பிடிப்பதற்கு சிறந்த வாய்ப்புள்ளது. இத்தகைய மீன்பிடிப்பினை மேற்கொள்வதற்குத் தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், அந்தமான் தீவு வளைகுடாக்களில் மீன் வளர்ப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. கொடுவா, மடவை, பால் மீன், சிங்கி இறால் மற்றும் சிப்பிகள் வளர்ப்பதற்கும் நல்ல வாய்ப்புகள் உள்ளன.

219397

**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing. Chennai-600 002.